உ

சற்குருநாதன் துணை.

மோனானந்த மதியோக
பூரண தீபம்.

இஃது

திருத்தருப்பூண்டி தாலுக்கா உம்பலச்சேரி

அருணாசல சுவாமிகளால்

இயற்றப்பட்டு,

(முதற் பதிப்பு.)

பேரளம் திருமீயச்சூர்

பிர்ம்ம வித்தியா அச்சுக்கூடத்தில்

அச்சிடப்பெற்றது.

1918.

இதன் விலை] [ரூபா 2.

இந்நூலை அச்சியற்றும்படி பொருளுதவிசெய்த

மாணாக்கர்களின் பெயர்.

தலைஞாயர்.	நா. சுப்பிரமணிய அய்யர்.
,,	கி. மு. சுப்பிரமணிய அய்யர்.
,,	இராமச்சந்திர அய்யர்.
கீழக்கொறுக்கை.	ச. குமாரஸாமி ராயர்.
வடுகூர், மடாலயம்.	ஆ. துரைஸாமி ராயர்.
,,	விநாயகமூர்த்தி ராயர்.
கோயில்பத்து.	சிதம்பரதேவர்.
திருவாரூர்.	வேதாந்தம், வெங்கிட்டராமய்யர்.
விஜயபுரம்.	நூல்கடை, சுப்பையா பிள்ளை.
பல்லவரம்.	கிருஷ்ணராயர்.
புதுப்பத்தூர்.	கோபாலசாமி ரெட்டியார்.
தஞ்சைநகரம்.	துரைசாமி.
இராயனல்லூர்.	இராமகிருஷ்ணசாமி.
நெடுஞ்சேரி.	பசுபதிபிள்ளை.
திருப்பாதிரிப்புலியூர்.	கோபாலசாமி ராயர்.
சென்னை.	வ. சம்பந்தமூர்த்தி.

☞ இந்நூல் கிடைக்குமிடம்: — திருத்தருப்பூண்டி தாலுக்கா வடுகூர், மடாலயம், ஆ. விநாயகமூர்த்தி ராயர் அவர்களிடத்தில் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

நூலினுட்பிரிவு.

பிழை திருத்தம்.

பக்கம்.	செய்யுள்.	வரி.	பிழை.	திருத்தம்.
2	4	3	சுாதனமதியையு	சாதனமதியையு
,,	6	2	லெனின்ற	லேநின்ற
3	9	2	நடந்தர்மந்துள்ளமற	நடக்தமர்ந்துள்ளமற
4	15	5	சுழிதிறக்தகலவு	சுழிதிறந்தகலவு
46	1	1	விருவிழியின்	விருவிழியான்
,,	,,	10	லாட்குவிடுந்திருநன	லாட்டிவிடுந்திருநடன
99	7	13	ஆவிலகப்பட்ட கரும்[பது	ஆலேயிலகப்பட்ட கரும்பு
109	4	7	கல்லுமென	கல்லுமன
110	8	8	வெகுசுருக்க	வெகுசுருக்கம்
205	சரணம் 1	2	மட்டும்படியாய்	மட்டுப்படும்படியாய்
216	3	5	மதிவிளக்கேற்றிய	மதிவிள்க்கேற்றியே
218	5	2	வீதி	விதி

முகவுரை.

நெடிய கடல்சூழ்ந்த இவ்வுலகின்கண் வியாபித்துள்ள சகல ஜீவர்களிடத்திலுங் கண்ணிறைந்த ஞானச்சோதியில் கற்பசமாதியாய் பரமான்மா விளங்குவதாக ஜீவகாருண்ணியம், ஈஸ்வரபக்தி, பாசவைராக்கியம், பிரமஞானமுடைய மகான்களால் கருணையுடன் கூறிய சுருதியாதிகளில் முறையிடுவதுணராது, பாசபந்தமாகிய சம்சாரக் கடலுளாழ்ந்து எண்ணிக்கையற்ற ஜனனமரணமெனுந் துக்கத்தில் வருந்துகின்ற, பந்தமற்ற மோட்சவிசாரமில்லாத என்போலியர்களும் மோட்சாபேட்சையால் சாஸ்திர விசாரணை செய்யவாரம்பித்து அதிற்கூறிய ஆத்மஞான வாக்கிய பரிபாஷைகளின் அர்த்தத்தை சுருதி யுக்தி அநுபவத்திற்கு முரணாது பொருத்தமாக போதிக்கு மாசாரியருக்கு ஆப்தம், அங்கம், தானம், சத்பாவமென்னும் நான்கு பணிவிடைகளையும் மனஞ்சலிப்பின்றி குறைவற நடத்தி, அவர் மனமிரங்கி யருள்புரியும் வரையிலுஞ் சாயல்போல் காத்திருந்து, சதுர்வேத வாக்கியார்த்த முடிவை ஐயந்திரிபற மதியெனுங் கால்மேலுற வலநோக்குற்றுயனவிளக்கென்னும் பூரணத்தை சற்குருநாதன் றிருக்கரமுறையினல் அருட்பெற்று தில்லைப்பதியிலேறி ஆனந்தக்கடலி லமிழ்ந்து நானெனு மகந்தைநீக்கி அறிவே தானுகிநிற்கும் பிர்மவஸ்துவை யுணராது அஞ்ஞானவசத்தாகி பிறப்பெனும் பவக்கடலை கடந்துவிட்டேனென்று வாசாக் ஞானத்தால் ஞானிகளைப்போற் பகட்டி நடித்துக்காட்டும் வேஷதாரிகளும் நித்திய

குமரக் குருவெனக் கருள்தரு ஞான
மதாய் விளங்கக் கொடுத்துஞ்
சமய னெறிகளையுஞ் சாதன மதியையு
மோதியு மெனை யருள
வமயவாயக் காடரம் புலஞ் செட்டிய
குத்தகை தனிலடங்கி நின்ற
தமர் திறக்கவுமதி யோதி மொட்டை குருவின்
ருள் வணங்கினேன் காப்பாம். (4)

ஓதிய மதியையு முள்ளுறத் தாக்கியு
முகந்து ருகவும் ரவியில்
வீதியிற் செல்லவு மதிமுகக் கண்ணினில்
வீற்றிருக் கவு மெனையு
மாதியின் வாசலி லுள்ளுறப் புகவே
யகார மதாகி நிற்பா
யோதினேன் யோக மிது வெனமொட்டை
மொழிந்தவ னடியிணை காப்பாம். (5)

திருத்தியே யருள்பூண் டிருத்தருப் பூண்டியின்
றெரு நடுவினி லெனின்ற
கருத்தழிந் தொழியக் கனலொளி தாண்டி
யகப்பர வெளியி லேதா
லுருத்திரன் டோடியு மொருவனுப் நின்றெனையு
முகந்து கண் ணுற நோக்கி
குருத்தெரியவுஞ் சுழி திறந்து பூரணங்
கொடுத்தவ னடியே காப்பாம். (6)

பணிந்தெழுந் தழுதும் பனிமலர் தூவ
நன்னிலந் தனிலே யமர
வணிந்தொரு காலா லட்டமா சித்தியு
மாடியு நின்ற திலே
மணித்திரன் டுருளவு மதி கலத்தையும்
ரவியாலேயும் வெட்டி நின்ற
துணித்தருள் பூண்ட சின்னன் குருவடி
துதி பெறவுமே யெனைகாப்பாம். (7)

கட்டியு மெனையுங் கண்ணகத் திருத்தி
யென் கண்மணியே நீயும்
பெட்டியைத் திறந்தும் பெரு மதிதனைப்
பிடித் தேறியு னீயருளை
யொட்டிய முனைதனிற் பிறவியை மாற்றியு
முணர் வறிவாய் மகனென்
றட்டியில்லா தடைவாய் சின்னு னருளிற்
றந்தா னவன் பதங்காப்பாம் (8)

நாகையி னீலா தாட்சியின் கோயினி
னடந் தர்மந் துள்ளமா
பாகமதாய் மதி யோகமே மோனத்தின்
பதி யிருத்தவுஞ் சுழியிற்
சாகர மில்லாச் சசிபா லமுதமுந்
தனை யுணர்ந் தறிவிலேதா
னேகனுகப் படுத் திருந்ததை யானறிந்
திடம் புகுந்தேன் காப்பாம். (9)

படுத்திருந் தறையி லடுத்தருள் வேத
மென்பதைக் கொடுத்துமே நின்றே
னெடுத்ததையும் பிரித் தருளிற் கண்ணுேக்கி
யென்மன முருகவு முகந்துந்
தடுத்திடா தென்மன மவன்மன மிரண்டுஞ்
சார்ந்து மொன்ருய்ப் போக
வடுத்திட மதிகாலானந் தத் தையு
மடைந்தே னமுதேன் காப்பாம். (10)

சுகர்முதன் முனிவோர் யாவரு மெனக்குட்
டுணை யிருக்கவு முகந்து
அகரத் திருத்திய வப்பர் சுந்தர
மாணிக் கமுமுத லானோர்
சிகரத் தெரிசனஞ் செய்த சித்தர்களையும்
போற்றி நின்றே னெனையு
மகரக் குண்டலியிலே மௌன முற்றிருக்கவை
மாதவர்களே காப்பாம். (11)

அரூபியா யரூப மகண்டத்திற் பாய்ந்து
மடங்கா தடங்கியு நின்றுஞ்
சுருதியா முடிவினிற் றேன்றிய பூரணந்
துடர் பறிந்தே நீயும்
கருவி களெல்லா மருளினி லறவே
கலந்து மொன்றாய்க் கூட
பருதியின் மதியைப் பிடித்தருள் வெளி
பதஞ்சலி யுமேநீ காப்பாம். (12)

அத்தனுர் கைக்கனி யாண்டருள் கொண்டவென்
னருந் தவமே வையா
சித்தனைகத் திரிந்தரை நொடி யிற்சிரம்
பூமியுஞ் சுற்றி வலமாய்
வித்தனைய் விவேகத்தின் மெய்ப் பொருளே
விடுதி யெனக்குள் ளமர்ந்து
முத்தனைப் போகவு மோன சுப்பிர
மண்யமே நீயெனை காப்பாம். (13)

காயத்தின் சித்தியுங் கலைமதி யாலேநீ
கசடறுத் தவ் வெளியே
மாயத்தினுல் மதி கற்ப மதாக்கியு
மன தடக்கியு நின்றே
நேயம தாய்ப்பர வெளிதனி லேறிநின்
றேக ஞகியு மடுத்தே
சேயனைய்த் திரிந்தோர் வள்ளுவ னடியென்
சிர மணிந்தேன் காப்பாம். (14)

அருளி லானந்த மாடியு மருட்கவியாய்
நிறைத் துருக் கொண்டும்
பொருளி லாடியப் பூரண முதயமும்
பொழிந் தொளி வினிலேநிற்க
விருளை யாவர்க்குஞ் சுழிதிறக் தகலவு
மெடுத்து வுன்னூல் காட்டுங்
குருவதாய் வந்தருள் கொடுக்குந் தாயுமானவன்
குணங்குடி யருள் காப்பாம். (15)

சோதியி னிறையினிற் சுழிமுனை திறந்துந்
துரிய நின்றவ் வெளியிற்
பாதியா மதியையு மணிந்தமெய்ப் பரனையும்
பதிய மர்த்தியு நின்றும்
வீதியி லேறியும் விளக்கொளி தன்னிலே
வீடறச் செய் தமைத்து
மாதியின் பரவெளி யடைந்தருள் சொங்கணவ
னடிபணிந் தேன் காப்பாம். (16)

சித்தர்கள் முனிவர்க ளெத்தனை கோடியான்
செப்ப வொண்ணுப் பெருமை
முத்தர்க ளாகிய சிற்பரந் தனிலே
முடிந்தோ ரெலாம் புகழ
வெத்தனை குற்றந்தா னிருக்கினு மிளமதி
யாலெ னக்கே யருளும்
வத்தனே யெனையுன தருளுற வோடும்
வந்தருள் தந்தாள் காப்பாம். (17)

காப்பதாய்ச் சொன்னேன் கணக்கற வோதுமென்
கண்ணகந் தன்னிலே தான்
வார்ப்பது போலவு மதியதைப் பிடிக்கவும்
வர மளித்துமே வெளியிற்
காற்பதுக் கண்மதி யருளது தங்கவுங்
கலந்துமே ரவியில் வர
சேர்ப்பதுங்கள் கடமை யது வாகவுந்
திங்கள் ரவியாற் காப்பாம். (18)

உ

சற்குருபாதந்துணை.

மோனானந்த மதியோக பூரண தீபம்.

எழுசீரடி யாசிரிய விருத்தம்.

அண்ட பிண்ட சராசரமு மருளுமாகி
யகண்டபரி பூரணமு னீயுமாகி
மண்டபத்தி லாடுகின்ற மதிரவியு மாகி
மதியில்லா விடமாகித் தானுமாகி
தொண்டருக்கா மன்புதந்து துணையு மாகித்
துணையிழந்த பிரமமுமாய்த் தோன்றுநின்றுன்
தெண்டனிட்டுன் பதம்பணிந்தே னின்னூ றன்னைச்
சிறப்பித்துக் காப்பதுநின் கடமையாமே.

வேறு.

ஆதியா மரூபமாகி யரும் பொரு ளாகி யெங்குஞ்
சோதியா மூலா தாரச் சுடரொளி யதனிற் றோன்றி
வீதியாய் விளங்கச் செய்யும் விளக்கொளி யாய் நிறைந்த
பாதியா மதி யணிந்த பரம சற்குரு காப்பாமே. (1)

தெள்ளிய ஞானச் சோதித் தின கர னருளினாலே
பள்ளியா லுதித்த சேயன் பர னருணு சலன்று
ளெள்ளிய வழற் கண் வீச வொருபாதந் தூக்கி யாடும்
வெள்ளியங் கைலை வாசன் வேத நாயகனே காப்பாம். (2)

ஆலமே யமுதா யுண்ட வகத்திய முனியைப் போற்றி
சிலமா முலகோர்க் கெல்லாந் தெளிந்திட வுரைக்கு மின்னூல்
மூலமாம் வட்டந் தன்னில் முச்சுட ருதயங் காணக்
காலுமே லேற்றிக் கார்க்குங் கைக்கனி யானைப் போற்றுய். (3)

போற்றியே மதி வளைக்குள் பொல்லாத சாரை யொன்று
சாற்றியே ரவியிற் சென்றுத் தானதை பதனம் பண்ணி
மாற்றியே மதி யடங்க மதிரவி யிடையில் நின்றால்
காற்றினால் கண்ணி லாடுங் கைலையம் புத மிதாமே. (4)

வசமதி ரவியிற் பாய மாறியே யொருகால் நாட்டிக்
கசடறப் புடத்தி விட்டுக் கௌரி குண்டல மணிந்து
தசமதாம் வாயுத் தன்னிற் றங்கியே யோசை கேட்கு
ரசமதா மணியாய்ச் செய்து நடுநிலை தன்னில் வாங்கே. (5)

வாங்கியே ரவி புடத்தில் மாதள மலரைப் போலத்
தாங்கியே சந்த்ர வட்டந் தன்னிலை யதனிற் றோன்றும்
பாங்கிக ளனேகங் கோடிப் பதறியே மறிப்பா ளுன்னைத்
தூங்கியே போகாமற் றான் சுழினையிற் சொக்கு வாயே. (6)

சொக்குவாய் கருணை வீடு சுகர்முத லனைவோர் கட்கு
மிக்கதி யான தாலே யினிப்பிறப் பில்லை யாகுஞ்
சொக்கரைக் கண்டு நித்யஞ் சுந்தரச் சோதி யாலே
பக்குவந் தவறாமற் றான் பதன மாய்ப் பிடித்தேறுயே. (7)

யேறியே போகுங் காலே யேணிபோற் காணு மாங்கே
மாறியே யுருகி யொன்றாய் மன மெனும் பூட்டுடைத்துக்
கூறியே பலி கொடுத்துக் குருவருள் பெற்று நின்றான்
மீறியே வேகங் கொள்ளு மின்னொளி தன்னிற் பாய்வாய் (8)

பாயவே புரவி ரண்டும் பார்முனை தன்னில் வைத்துத்
தேயவே சந்த்ர வட்டந் தேர்வடம் பூட்டி நிற்கு
மாயவே மணி விளக்கு மண்டப மாடுஞ் சாலை
யாயவே யாட்ட னொட்ட மானந்தக் கூத்துத் தானே. (9)

வேறு.

தந்தைவிதி தனையறியத் தலையோட்டிற் குள்ளிருக்குந்
தலத்தைக் காணச்
சிந்தைதெளி வுறநோக்கிச் சின்மயத்தின் மேலேறித்
தெளிவு தேங்கப்

பந்தமதை யறுத்தளிக்கும் பரமானந் தத்தீபம்
பகற்போ லாக்கி
வந்ததொரு சூக்மமிது மௌனகுரு சாமியினால்
வாய்த்த தாமே. (10)

மதியமுர்தப் பாலுண்ண வந்து குணங்குடியானை
வணங்கிச் சென்று
விதியிருந்து விட்டகுறை பற்றிநின்றே யென்முடிமேல்
விளங்குஞ் சோதிப்
பதிதனிலே யாடுதிப்போ பஞ்சரத்னப் பரம்பொருளாய்ப்
படிகந் தோன்றிக்
கதிபெறவே வாங்களிரு கண்ணோக்கக் கமலபதங்
காண்பாய் நெஞ்சே. (11)

முச்சுடராய்த் திரைமூன்றாய் முடிச்சதுவா யடிமுடியாய்
மூல மாகிப்
பச்சைவயி டூரியமாய்ப் பளிங்கதுவாய் பலகோடியாயொளிப்
பாவித் தேதா
னிச்சயமாய் நிராமயமாய் நிட்களங்க மற்றதுவாய்
நின்ற சோதி
யச்சுடரி லரியயனு முருத்திரனு மமைந்தாயென்
னருள் செய்வாயே. (12)

பத்திநெறி தவறுமன் மனதுவந்து பரிதிமதி
தனைப்பிடித்தே யருள்புரிந்து
முத்திதருஞ் சுழிமுனையி னின்றுமோன முச்சுடரைக்
கடந்தப்பான் முறையாலேகச்
சித்திதருங் கணபதியைத் தெரிசித்தேபின் சிதம்பரத்தி
னொலிகேட்டுந் தியங்கிநின்றே
யெத்திசையுங் கருவிகள்வந் தெனைமறிக்க யிறையவனைத்
தொழுதிறைஞ்சி வணங்கினேனே. (13)

நில்வுமணி மண்டபத்தி னின்றிலங்கும் வாசியதை
நிறுத்தி யூதிக்
குலவியசற் குருவருளால் கொடுத்தருள்சின் முத்திரையைக்
கொண்டே யேற்றி
யிலவுகாத்திடுங் கிள்ளையென வென்னகப் பொருளனைத்து
மெடுத்துப் பார்க்கத்
தலையமுதம் பொழியச்சஞ்சலங் களெல்லாந் தீர்ந்து
மனஞ் சாதித்தேனே. (14)

அருமறைப்பொருளா யம்பலத் தாடு மகண்டமாஞ்
சோதியை யறிந்து
மருவுநற் சுழுத்தி யவத்தையைவிட்டு வான்கதிர்
பரந்ததைக் கண்டு
குருபரன்றன்னை யருளினல் வணங்கிக் கோதிலா
மணிமுடி யதனை
வருநெறி யிருந்து மனத்தகந் திருத்தி
வழுவிடா தருள்புரிவாயே. (15)

எட்டி ரண்டையும் பிடித்தேறிய காலை
யிடைவிடா விசாரத்திலிருந்து
கொட்டுதே ளவத்தை கொள்பவன்போலக் குண்டலி
சத்தியைப் பணிந்தாங்
கட்டமா சித்தியாடலா மதிலே யானந்த
பரவெளி தோன்று
நிட்டையி லிருந்துசுத்த நிற்குணத்தி னின்றிடும்
பொருடனைக் காண்பாய். (16)

கலைமதி தன்னை யூடுறத் தாக்கிக்
கதிரவன் மனைதனிற் புக்கி
மலைதனி லேறி மண்டபத் ததனுள்
மகிழும்பூ ரணத்தையுங் கண்டு

கொலைமுதற் பஞ்ச பாதக மனைத்துங்
கோலமாங் கனலினிற் கொளுத்தி
யலைகடற் றாண்டி யப்புறஞ் சென்றா
லானந்தப் பரவெளி தோன்றும் (17)

அரவது கடிக்க விஷமதே யேறு
மனலது கொண்டுமே கொளுத்தி
யரவது பொசிங்கிப் பரமது வாகு
மம்பலத் தாடுஞ்சோ தியேநீ
கரமது தன்னு லெட்டியே பிடிக்கக்
கதிரொளி கண்ணிலே காணும்
வரமது தருநம் பரமசற் குருவை
வணங்கிநீ யருள்புரி வாயே. (18)

வேறு.

கருவுதித்த போது சிவன் கலந்திருந்த
வடிவ மதைக் கண்டிருந்து
மருவுவன்னி யிருப்பிடத்தில் வந்து குணங்
குடியானை வணங்கிச் சென்றுந்
திருவுமயிர்ப் பாலமதில் சென்று கரை
யேறியபின் சிலம்பு கொஞ்சுஞ்
சருகுகளைத் தானரித்து தண றனையே
மூட்டிவிடத் தயங்கி னுயே. (19)

முத்திதருஞ் சுழிமுனையி லொன்று கேட்பாய்
மூலமதைத் தானறிந்தே யவற்றினிற்பாய்
சத்திசிறு வாலையவ ளிருந்த வீடு
ஜனகர்முதன் முனிவோர்க டிதிக்கநின்ற
பத்திசெய்து பதம்பணிந்து பாதம் போற்றிப்
பருதிமதியா லெழுந்தே யுருகியொன்றாய்
நத்தியிரு நமன்றனையே யோட்டி விக்கும்
நாசிநுனி மேனின்று நடனமாடாய். (20)

ஆடாயே யகாரமுதல் உகார மிரண்டு
மடங்கிநிற்கு மேருவரை யனந்தமாகு
நாடாயே நகரிலுள்ள மனுக்க ளெல்லா
நமன்றனக்கே யிரையாகப் போனாரந்தோ
தேடாயே பரமகுரு பாதங் காக்கச்
சென்றுவரும் வழிபிடித்து மனமொன்றானல்
வாடாயே மதியொளியுங் கண்டு வீசும்
வாய்பேசா மௌனமிது கண்டுதேருய். (21)

வேறு.

சந்திர காந்த மேடையிற் சென்று
சற்குரு பாதமலர் தொழுது
சுந்திரச் சோதிச் சுடரொளி தன்னிற்
சுத்தநிற் குணமதைப் பார்த்து
வந்ததோர் வழியைத் தந்தையாற் போக்கி
வல்லபன் சபையருளூடி
யந்தர மாக வகண்டபூ ரணத்தி
லறிவினுள் ளறிவதாய் நிற்பாய். (22)

அரன்சுடு காட்டி லதிலிருதவமே யந்தக
னினிவராச் செய்யும்
பரஞ்சுடர் மேவும் பற்றியதீபம் பங்க
யாசனர்முத லாவோர்
வரந்தருஞ் சுழியின் வாசலின் வழியே
வளர்மதி வட்டத்திற் சார்ந்து
தரந்தரமாக சமாதியி னின்று தங்குவார்
சாதனை யுள்ளோர். (23)

சென்றிரு வடிவஞ் செகந்தனிற் றெரியாத்
திருடனைப் போலவே யுறவா
யன்றிரு ளினிற்சென் றமரும் பூரணையி
லகமெனுஞ் சுவர்தனை யிடித்துக்

கொண்டிரு கோலங் கூர்முனை தன்னை
கூச்சமற்றிரு விழி நோக்கக்
கண்டிரு காட்சிக் கண்ணிலான் றனக்குங்
காணாருத் தனமெலாங் காணும். (24)

கலங்கிட வேண்டாங் கண்மணி மகனே
காமத்துக் குருடர்கள் காணார்
தலங்களி லாறு தலங்களே யுனக்குட்
டயங்கிடா மதியது மிருக்கப்
புலன்களைக் களைந்து புல்லறி வாலே
போய்ப்புகுந்தா லரன் கொலுவா
மலங்களு மறுமே மானசங் கையும்போய்
மதியமு துண்டிட வாராய். (25)

தலையது வணங்கித் தடுத்திட வேண்டுந்
தாய்மதி தன்னையு நோக்கி
வலையதுக் குள்ளே மயிர்முனைத் துவார
மாமணி வாயிலிற் புகுமே
கொலையது செய்துக் குருபரன் றன்னைக்
கோவிலாங் குடியதைக் கொண்டு
கலையது மாறிக் கானலிற் சென்று
கங்கையி னனமும் பண்ணாய். (26)

பண்ணிய பூசை பலம்பெறு துனக்குப்
பாவையர் மோகத்தை யறுத்துப்
புண்ணிய தீர்த்தம் புஷ்கரணியிற் போய்ப்
புல்லறி வாலேநீ வணங்கிக்
கண்ணினு லாடாய் கலந்துரு வாகி
கங்கையைத் தாண்டியப் பாலே
வெண்ணிலா முற்றந் தன்னக ருளத்தில்
விளங்குமே யன்னையின் கொலுவே. (27)

அன்னையு நீயு மருளுருவாகி
யணியொளித் தீபமு மேற்றிப்
பின்னையு மன்னைப் பிறப்பறுத் திடுவள்
பேசிலா மோன மாக்கிடவே
தன்னையும் வெளியே தாய்முலை காட்டித்
தன்யனுய் வெளியினிற் றிரிய
உன்னைநீ யறிய வுத்தமப் பொருடா
னுலகி லுனை யறியாரே. (28)

வேறு.

மக்கட்பெருஞ் சுற்றத்தார் மனையாட்டி யாசையெல்லா
மறந்து போகச்
சொக்கர்திரு வாசலது சுழிமுனையி லேயிருக்குத்
திறந்து பார்ப்பாய்
மிக்ககன லேற்றுமது விளக்கொளியைத் தான்கண்டால்
விட்டுப் போகுஞ்
சர்க்கரைதே னமுதமுண்டு சன்னிதியி னின்றுமிகத்
தலை வணங்காய். (29)

அமரமதி பாலுண்ண வம்மையெனுங் குண்டலியை
யடி வணங்கிக்
கமரலது வாராமற் காயசித்தி தான்செய்யக்
கருதிக் கேட்பாய்
சமரசமாய் வாயுவினைத் தானடக்கி ரவிமனையிற்
றுங்கி னோக்கக்
குமரகுரு பரனலே கோடிரவி யண்டமதிற்
குறிப்பாய்ப் பார்ப்பாய். (30)

வேறு.

நாசியிடை மேற்புருவ நேர்மையத்தி னலமான
வச்சிரமணிப் பலகை பாய்ச்சி
யூசிமுனைத் துவாரமது வோடச்செய்தே யுத்தமர்க்கு
வழியிதுவென் றுளித்து வைத்தாய்

வீசியது வெளிகாண வொளிதான்வீச மேலறைக்குள்
ளேயிருக்கும் வினோத மெத்த
மாசிலா வடிவமதாய் நின்றாய்நீயே மனந்தனையு
மதிரவியால் வாட்டு வாயே. (31)

கற்பமென்றான் மதியமுதக் கற்பமாகுங் கணக்கறிந்து
தின்றவர்க்கு ஞானங் கூடுஞ்
சொற்பமென்று நினையாதே சூதங்கட்டுஞ் சோதியருட்
பாதமதி லொளியாய் வீசு
முப்பொருளின் வர்க்கமெனப் பேருண்டாச்சு முடிகொண்டே
யண்டமதிற் சொக்கி நிற்கு
மற்பவுட றனைவிட்டா லறியமாட்டா யறிவுடைய
புத்திரர்க்குக் கற்பந் தானே. (32)

வேறு.

தெப்பமது மொன்றுண்டே யறிவுதனி லேறிமிகச்
சென்ற வர்க்குக்
கற்பமது மேதுக் கியோகமதைத் தானறியக்
கணக்க றிந்தான்
முற்பவங்க டருமது முதற்குணத்தி னடுநிலையா
முதலா ராய்ந்தாற்
சர்ப்பமது தான்பொசிங்கி சாரூப சாயுச்சியந்
தங்குந் தானே. (33)

வேறு.

செப்பாத பொருளிதுதான் றெளியச் சொன்னேன்
றேவரகசிய மிதுதான் யாருங் காணா
ரொப்பாத பிள்ளைகளுக் குபதே சித்தா
லோலையெம தூதருக்கே யாளாய்ப் போவா
யிப்பாதை யெனக் களித்த வீசன்றானு
மெளிதாகச் சொல்லவில்லை யின்னங் கேட்பாய்
முப்பாதை தனிலிருக்கு மோக்ஷ வீடு
முட்டினவர்க் கிட்டினதா முதலாம் பார்ப்பாய். (34)

பொய்யான வேடமது புரிந்தி டாதே
பூத்தமல ரெடுத்துவந்து தினமும் போற்றாய்
மெய்யான வெளி யதனில் வேதவீடு
விளங்குவது தன்னாலே வேறென் றில்லைக்
கையான கைமுறையை கண்டு நீயுங்
கண்மலரி லேதொடுத்துக் கனற்கொண் டேற்ற
வய்யானை யப்பானை யுன்மே லானை
யவனிவனு நீயவனு மொன்று வாயே. (35)

ஒன்றுவா யுபாயமது சொல்லக் கேட்பா
யொளிவதனில் வெளியதுபோல் வீசும் பின்னாற்
சென்றார்க்கு முண்டுபலன் றெளிவாய் நிற்குஞ்
சின்மயத்தி னுட்பொரு ளாய்ச் சேர்ந்தொன்றுகு
நன்றான நவநீத மெல்லாந் தோன்று
நாயகனு நீயாவாய் நானென் றற்றாற்
கன்றான கண்மணியே கருதி நின்று
கண்ணினிடை மேற்புருவங் கலந்து கொள்வாய். (36)

கலந்துருவ மானுனு மதினு மில்லை
காட்சி யெல்லாந் தள்ளிவிடு கனவைப்போல
மலர்ந்தவிழி மலர்ந்திருக்க மதியும் வேண்டு
மனமிறந்தாற் பிரமநிலை வாய்க்குங் கண்டா
யலர்ந்துவெளி சென்றவர்க்கே யெல்லாந் தோன்று
மப்பாலு மொருசெயலு மறிந்தோ ரில்லை
குலந்தவறி நடந்தவற்குப் பரம ஞானங்
கொள்ளை யென்று சொல்லிமிகக் கூறினேனே. (37)

நாடியே நகாரமதாய் மகார மிட்டு
நடுவணையி லேசென்று சிகாரந் தொட்டுத்
தேடியே வகாரமதா யகாரத் தோடு
சின்மயத்தி னுட்பொரு ளாய்ச் சேர்ந்தொன்றுகிக்

கூடியே கூடுவிட்டுப் பாயக் கண்டேன்
  கூச்சமற்றுப் பார்க்கையிலே வெளியி னின்றேன்
வாடியே வாட்டமற விருந்து கொண்டு
  மாளாமன் மாண்டிருந்து மதிகெட்டேனே. (38)

கெட்டேனே கெஜபுடத்தி லிருந்து கொண்டு
  கேடுண்ட நெஞ்சமதைப் பாழாய்ப் போக்கிப்
பட்டேனே பாடுமிகப் பாடு மிட்டேன்
  பாருலகிற் றூனறியார் பரந்து தானய்
விட்டேனே வீடுவிட்டு வெளியிற் சென்றேன்
  பிரமரகசிய மிதுதான் வெளியாய்ப் போச்சு
தொட்டேனே தொடர்பவங்க ளெல்லாம் போகத்
  துணையிழந்த பாவியெனச் சொல்ல லாச்சே. (39)

வேறு.

மூலமாங் குகையின் முச்சுட ராகி முடிவினி லொளிமிக வீசுஞ்
சாலமா மிந்த்ர சாலத்தி லிருந்து தன்வெளி கண்டவன் ஞானி
ஞாலமார்த் தண்டன் ஞாயிறு திங்க ளயந்துமே கூடிநின் றூடும்
வாலமாம் பருவ மாதுல னுவான் மதிநகர்க் கரசனு மவனே. (40)

மட்டிகள் வருவான் மாறுகண் ணீராய்
  வடியவு மனம்புகா நினைப்பன்
திட்டிவா சனுக்கே திறவுகோ லாகான்
  றிடமது மவனுக்கு மில்லை
பட்டினி யிருக்கான் பாவையர் மோகன்
  பார்த்துமே யவனுடன் பழகிக்
கட்டிநீ யாண்டு மனமதைத் தெரிந்து
  கண்டுப தேசஞ் செய்வாயே. (41)

செய்யவே பங்குனி காலமும் வேண்டுஞ்
  சித்திரை நாளுமே வைத்து
வெய்யவ னுதய மேலதாம் பார்வை
  வெண்மதிப் பழக்கமு மமைத்தே

வுய்யவே நித்ரை யகற்றிடும் படிசெய்
யுண்டிட் வொருபொழு தமுது
கையது முறையைக் கண்ணிலே தொடுத்துக்
கணக்கதாய் முத்திரை வைப்பாய். (42)

வேறு.

முத்திரை யென்று சொன்ன மொழி தவறுத வண்ணா
நித்திரை யற்றுநீயு நிலா மணி முற்ற மீதிற்
சித்திரை கோடைக் காற்றுச் சிறந்ததோ ரிடியு மின்ன
வித்தரை யதனை நீக்கி யேகமாம் வெளியி னிற்பாய். (43)

நில்லென்று மேயு ரைத்த நிமலதே சிகனே மூர்த்தி
வல்லவ னருளைப் பற்ற வரும் வரலா றுரைத்தாற்
சொல்லென்று சொல்லு முன்னே தொடர்பவந் தன்னை யெல்லாம்
வில்லின்மே ணணி பூட்டி வீசுவே னறிவின் வாளால். (44)

சாத்திர மெல்லாம் பார்த்துச் சதுர்மறை யேதுங் காணார்
மூத்திரக் குழியில் வீழ்ந்து முழுகியே யழிந்து போவார்
நேத்திரந் தன்னிலாடு நின்ற தோர் மதியி னாலே
யாத்திரப் படாம லேதா னருளடி வணங்கி நிற்பாய். (45)

வேறு.

விட்டகுறை வருமளவும் விழித்தி ருந்து
மோர்மனதாய் விமலர் பாதங்
கட்டையிட்டுப் போகு முன்னே கனமௌன
பீடமதிற் கருத்தை வைத்துத்
தொட்டவுடன் சோதியது சோம வட்ட
மாய்த் தோன்றுஞ் சுந்தரேசன்
பட்டதுய ரங்க ளெல்லாம் பரிகரித்தே
யோடியதோர் படமாய்த் தானே. (46)

தன்னை யல்லால் வேறொருவர் சாட்சியுற
தனக்காமோ சார்ந்து பார்ப்பா
யுன்னைப்போல் வந்துநிற்கு முற்ற பொருள்
வெளியதனி லோடிக் காட்டும்

பின்னை யொன்று மில்லையது பேசாத
மோனமிது பேசும் பார்ப்பாய்
தன்னிலையி னிற்கு மதாஞ் சாயுச்சிய
பதந்தருமிச் சனனம் போக்காய். (47)

வேறு.

பொதுவாகி நின்றிடும் பூரணமானது பொன்னிறமோ
மதுபா லமுதமோ மணியோ மதிமாநிறமோ
விதியாலமைந்த வெட்டாத சக்கரம் வெட்டுண்டதோ
பதியாலமைந்த பரம்பொருளைத் துதி பண்ணுநெஞ்சே. (48)

பிர்மமாமென்று சொன்னாற் பிரமமா வாயோநீயுங்
கர்மானுபவங்கள் போக்கக் கதிர்மதி தன்னைக்கொண்டு
வர்மமா மதிதலத்தின் மண்டப மாடுஞ்சாலைச்
சொர்னமாம் பிரமரூபஞ் சோதியி னின்றதாமே. (49)

நின்றதோ ரசில்லாம னிலையதாம் வெளியதாகக்
கண்டதை யவனார்சொல்வாய் காரண குருவேவையா
மண்டல மூன்றினுக்குண் மதிதல மிருந்ததெங்கே
சண்டனைச் செயிக்குமாறு சமரச மருளுவாயே. (50)

வேறு.

தன்னைப்போ லில்லையென்று சாத்திரங்கள் கற்றுணர்ந்த
சண்டா ளன்றான்
பின்னையொரு சென்மத்திற் போய்ப்பிறப்பன் பிறந்தாலும்
பின்பு மில்லை
வன்னமுலை மாதர்தங்சண் மயக்கமது தான்கொண்டே
மாண்டு போவான்
இன்னமொரு சென்மத்தி லெடுப்பான்காண் முக்திபெறு
னினிதுள் ளோனே. (51)

வேறு.

அறிந்துகொள் ளெழுத்ததனைச் சொல்லக் கேட்பா
யமரமொடு பூர்வபட்ச மிரண்டும்பார்த்து
மறந்துவிடு மோனமது தங்கும் பார்ப்பாய்
மகான்கள் சொன்னமுறை வகைதப்பாது

கறந்துவிடும் பாலதுவே கரை கொள்ளாது
கங்குல்பக லற்றிடத்தே காட்டியோடா
யிறந்துவிடு மிதயத்தி லிருக்கு மப்பா
விதையெடுத்துண் டிடுமவனே ஞானியாவான். (52)

வேறு.

ஒட்டிவைத்த துன்னுடலி லொளியிருந்த தறியாம
லோடிச் சென்றாய்
கட்டியுனைத் தட்டியின்மேற் பிணஞ்சுடுகா டெல்லையிற்
போய்க் கண்டதென்ன
தொட்டிலிட்ட வுன்னன்னை சுற்றத்தார் மற்றுளருந்
துணைவந் தாரோ
வட்டிக்குப் பட்டகடன் வீணாயிற் றென்றுமன
மதியிற் கொள்வாய். (53)

பூரணமே மதியாகும் பொருந்திநின்ற பேர்களுக்குப்
பூர்த்தி யாகுங்
காரணமே ஞானமதாங் கண்டுகளித் தோர்க்கதுவுங்
காட்சியாகு நேரிற்
றூரணைசெய் மந்தவிர தத்திருந்து மகிழ்ந்தார்களெலாஞ்
சார்வார் முத்தி
யாரணத்தின் முறையந்தக் கரணாதி களையகற்ற
வறிவாய் மாதோ. (54)

கார்மேகம் போலக் கறுத்திடு மாசைக் களங்க மறப்
பார்முனை மீதினின் மேலறை வீட்டிற் பளிங் கொளியைத்
தேர்வடம் பூட்டி யிருக்கின்ற மேடை சிம்மா சனத்தி
னேர்கடைக் கண்ணின் மனச்சங்கை நீக்கி நெருங்கு வையே. (55)

ஓங்கார கம்பத்தி னுச்சியின்கி ழமரோ ரெழுத்து முண்
டாங்கார கோப மகற்றிய பின்வந் தகப் படுங்கா
ணீங்காம லெப்போது நீடூழி காலங் நிலையிற் றங்கி
வாங்காச் சுழிமுனை வாசலுக் கேயது வண்மை யிதே. (56)

செல்லும் பொழுது மதிகாலஞ் சேர்ந்தபனி ரெண்டில் நின்றேற்றி
யல்லும் பகலு மதிபோக்கே யறிவா லெடுப்பா யானந்தஞ்
சொல்லும் பொருளும் யோகமுறை துடர்பா மிதுவே வழியாகுங்
கல்லுங் கரையு மனமுருகிக் காலையைக் கட்ட விதுவழியே. (57)

வழியே துக்க மிடர்வருமே மதியை விட்டால் மனம்வேறு
மழியாப் பொருளு மகப்படுமோ வாசான் முறையைத் தவறுதே
சுழியாற் றிறந்து பதியிலிரு சோதி யறியப் பூரணமாம்
விழியான் மிரட்டி மேனேக்க விளங்கும் வேத முறையிதுவே.(58)

வேறு.

உத்தமரைக் கண்டுமன முருகிநிற்க வுன்மனமுங்
கல்லலவோ வுகந்து சொன்னே
னத்தனருள் பெறுவதற்கு மடக்கம்வேணு மறிந்துகலை
மதிதெரிய வறிவும் வேணுஞ்
சுத்தமுறை கைவல்யப் பழக்கமீதிற் றாண்டிநின்ற
பூரணத்திற் சமாதி யோகம்
வித்தகனே யிம்முறையில் வெளியே நிற்பாய்
வேதாந்த வுண்மையிது வெளிவிட்டேனே. (59)

உரைசெய்யாப் பொருளிதுவே யுண்மையாகு முகந்தளித்தா
லொருகாலைத் தூக்கி வைப்பார்
திரையாகுஞ் சிதம்பரத்தி னடக்கமெல்லாந் தெரிசித்தா
லவர்க்கு முத்தித் தானேயெய்தும்
வரையாறுந் தாண்டிநிற்க மோனம்பாரு மங்கையபி
ராமியிடம் வரத்தைப் பெற்று
பரையாகும் பரையினிடம் பளிங்கதாகிப் பாரப்பிரம
மாவதற்கு நீதா னுமே. (60)

கலைபெருகி நின்றவிடங் கண்ணிருக்கக் கலக்கமுற்றாய்
மதிமயக்கந் தெரியா மற்று
னலைகடற்கு முலகமெல்லா மமைந்திருக்க வதில்மயங்கி
யுத்தமர்க ளனேகர் வாழ்ந்தார்

தலைபெருக்கத் துள்ளிருந்த சமாதியோகஞ் சாதித்த
பெரியோர்க்கு வடுமை யாகி
யுலைமெழுகா யுன்மனமு முருகிநின்று லுற்றபொருண்
மதிமயக்கம் வெளிய தாமே. (61)

வேறு.

சாதித்த பெரியோர்கள் பூரணையிற் சென்று
தப்பிதமில் லாமலமாம் வாசி மட்டுஞ்
சோதியென்ற பூரணத்தி லிருந்து நித்யந்
துரியநிலை கடந்துநின்று வெளியே சென்றுற்
பேதிக்கா திருந்துமனம் பெரியோர் பாதம்
பெற்றாலே சீவன்முத்தி தானே யெய்துஞ்
சாதியறி பேதமில்லை சமயம் பாரு
சாபல்யம் நீங்கிமிகச் சார்வாய் நீயே. (62)

வழியறிய மதியடக்க மாக வேணு
மானிலமெல் லாமிருந்து வாழ்ந்து மென்ன
விழியடங்கி வெளிமயக்க மாகா மற்றுன்
வீணைப் போக்கடித்து மாண்டு போறுய்
சுழிதிறந்து சுடரொளியைக் காண வேணுஞ்
சுரூபநிலை தானறிந்தா லவனே சித்தன்
பழிவந்து போகு முன்னே பாருபாரு
பார்ப்பதற்கு கண் கூசும் பதியினில்லே. (63)

வேறு.

அரிய பிரமமதைக் கண்டு கொள்ளவுநீ
யாசான் வேணுமுப தேசமே
தெரிய வேணுமென்றுற் பிரம மந்திரம
துரைத்த மாய்கையை நீதள்ளியே
யுரிய தானபொரு ளுத்த மர்களிட
முகந்துவாங்கி மதி பண்ணியே
பெரிய வானந்த பேரின் பத்தின்வழி
பெற்ற வர்க்கிது முத்தியே. (64)

வேறு.

குருமுறை தவறி நடந்தவரெவரோ
 கோளதைச் சொல்கிறேன் கேளு
கருவகங் காரக் கொடுமைகள் வந்து
 கடுநர கினிற்பட்டு மாய்வர்
மறுபடி யுலகில் வந்துமே பிறக்கார்
 மண்ணொடு மண்ணிலே மறைந்து
திருவரு ளில்லை யவனிலுங் கொடிய
 திருடர்க ளுலகிற் காணேனே. (65)

வேறு.

நாலைகட்ட வொரு காலாற் றூக்கிவிடு
 நடுவணை யில்வல நோக்கிசென்
மாலை கட்டிரவி யாலே சாத்திவிடு
 மாசிலாமணி மேல தாய்
மூலைகட்ட வொரு சாலை சந்துவரு
 முச்சந்தி கடந்தவ் வெளியிலே
பாலை யூட்டிபர வெளியைக் காட்டியுனை
 பாலரூப மாக்கி விடுவளே. (66)

வேறு.

வாட்டிட மனதுகந்து மங்களம் பாடிநிற்பா
யாட்டின வாட்டமெல்லா மம்பலம் வெளியாய்த் தோன்ற
கூட்டினிலிருந்த மூச்சை கும்பக மடக்கிவைத்தா
னீட்டியே யருளிலப்பிரம நிட்டைக்குள் ளாகுவனே. (67)

வேறு.

நேரம் வாரந்திங்க ளாரம் பத்திெனாடு
 நேர்த்தி யானமதி சரத்திலே
சாரங் கொண்டுமதி யோகஞ் செய்யவுமே
 சாரும்பாரும் ரவி புடத்திலே

காரசார நித்திரை கட்டி விலகவுங்
  கதிர்மதியி னல்வந்த வாழ்க்கையாம்
வாரமொன் றுய்வருங் காலம்பார்த்து நில்லு
  வாழ்பதியில் வந்து செல்லுமே. (68)

ஆகும் பாருமா னந்த வெள்ளமிது
  வாசான் வேணும் பிரகாசமே
சாகுஞ் செத்துச் சாகாம னீயுங்கண்டு
  சஞ்சலமு மற்ற வெளியிலே
நோகு நாசியி னுனிமே னின்றுநீ
  நுண்ணறி வினல் வணங்கியே
சாகுஞ் சர்ப்பமது தையல் வாசலுட்
  டமர் திறக்கவிது நேரமே. (69)

தூல சூக்குமக் காரணந் தனிற்
  றெட்ட தன்பிற்சோதி தட்டியே
காலனற் றுறவே யோக நிட்டையது
  காணலா மதனுள் வடிவிலே
மூலவாசலுற மேலே வைத்தமுறை
  மோன ஞானகுரு வேண்டுமே
சிலமான கரத் தாலே கண்ணினிறை
  செப்பொணு ததுவே முத்தியே. (70)

முத்தி யாகுமிது சத்தி விந்துவின்
  மூளைத்தெழுந்த நிர்வி கற்பமே
பத்தி நின்றுபர வெளிய தாமொளியிற்
  பாலமா மதுபா லுண்டிட
சித்தி யாகும்பார் சிதா காசமாய்
  சின்முத்ரை யென்றும் பேரதாய்
சத்தி யானவளு முத்தமர்க ளிடங்
  தங்குஞ் சாதனையு முள்ளதே. (71)

உள்ளே நீயுமுற வாடி நிற்குமது
  வூமை மந்திர முரைக்கொணு
கள்ள விந்த்ரியமதை யுள்ளே கட்டிநீயுங்
  கலந்து கொள்வது வுபாயமே

கொள்ளை யென்றுமதி காலைத் தொட்டுடன்
 கொடுத்திடுஞ் சின்மய சோதியே
வெள்ளை யாகும்வெளி தன்னிற் செல்லவுமே
 வேதம் பாடுந்தனி யாகுமே. (72)

வேறு.

திருவருள் ஞானம் ஜடந்தனி லிருக்கச்
 செத்தாரைப் போனீ யிருந்து
குருவருள் பெற்றுக் கோள்மதி யிடையிற்
 கூற்றுவ னிருப்பிடங் கண்டு
வருள்மறை பொங்கி யானந்த மாடு
 மம்பிகை வரமது பெற்று
விருளது நீக்கி யெல்லை யில்லாத
 வேகமாம் வெளியினி னில்லே. (73)

கண்ணிலே கனலதனைக் காணார் தானே
 கணக்கறிய வேணுமென்றாற் கைதான்முத்தி
விண்ணிலே தங்கிநின்று வேதம் பாடும்
 விதிமுறையை யறிவதற்குக் கெதிவேறில்லை
பெண்ணிலே போகின்ற விந்திரியந் தன்னாற்
 பேசாமற் பேசினதக் கினிதான்பாரு
மண்ணிலே போகாமன் மதிபா லுண்டு
 மனதடங்கி நின்றவர்க்கு முத்திதானே. (74)

ஈராழிக் கரைநடுவே யிருந்த பெருந்
 துறையதனி லிருக்கு மந்த
வோராழி மதியெ னுங்கோ லான்றிசுழி
 முனையினின் ஞெளியிற் றங்கி
நீராழிக் கதிர வன்றன் மனைபுகுந்து
 மதிகலத்தை நிறையால் வெட்டி
பேராழி தினில் வீழ்ந்தான் பேரின்ப
 பிரமமு மாய்ப் பேசலாமே. (75)

மலைநடுப் புருவ மதியருண் மேவ
மங்கைய ராசையை யொழித்தற்
கலைமதி யதனைக் கதிரினிற் றொடுத்துக்
கண்மல ரானந்தங் கொண்டு
வலைதனை யறுத்து வாசியி னிலையின்
மதியமு துண்டிடச் செய்து
தலையதிற் குள்ளே சமாதியின் கற்பந்
தானதைக் கண்டவர் தவமே. (76)

கடனடு புருவக் கரையுள ததுவிற்
கதிர்மதி யிடைதனி லிருக்க
மடக்கொடி யாளை மறந்துற மனதை
வாங்கியே சுழிமுனை யேறி
திடப்படப் பொருந்தி யிருக்குமவ் வீட்டின்
றிருடர்க ளுறவெலாந் தள்ளி
நடப்படுந் தில்லை நாதாந்த மாம்வெளியி
னமனணு காபணு டாயே. (77)

தீபதெரிசன வணக்கம்.

கைத்தலந் தன்னிலொரு நெல்லியங் கனியெனக்
கண்டுபார் சின் முத்திரை
காட்சிதரு மேஞான மாட்சிமை பொருந்தியது
கைவிடா தொரு நாளுமே
மெய்த்தவம் புரியுமது கைத்தவ மறுதது
விளங்குஞ் சுயஞ் சோதியாம்
வேதமொடு நாதசங் கீதமணி யோசையாம்
விரிகருணை யான பொருளாம்
வைத்ததவ மாறுமன் மாறியொரு காணுட்டி
மணிவாச லைத்தி றந்து
மதியிரவி யைப்பிடித் தண்ணாக்கி லேற்றியே
மனமொத்த சுழி முனையிலே

செய்தவத் தேநின்று செங்கதிரின் வீட்டிலே
தின்பண்ட முன்னரு ளதாந்
திருவருளை யனுதினமு மறவா தருள்புரியுந்
தீபதெரி சன வையனே. (1)

பாயுமே பனிரெண்டு கா லுள்ள புரவியது
பதினாறு மேயுள்ள தாம்
பார்மனச் சங்கைவிட் டாணிவல மேனோக்கிப்
பார்முனை யிலே நிறுத்தி
கூயுமே கம்பமதை நட்டுமண் குத்தியே
கூர்விழியை யதி லமைத்துக்
கோடையிடி போலே முழங்கிவரு மேநாத
சங்கீத மணி யோசையாங்
காயுமே யொருநாளுங் கையிலே யடங்காது
காணுமீ ராறங் குலங்
கட்டிப் பிடித்துப் பிடிக்காது மாய்நிற்குங்
கனகமணி முச்சு டருமே
தேயுமே சென்மவினை தொடாராம லனுபவந்
தின்பண்ட முன்னரு ளதாந்
திருவருளை யனுதினமு மறவா தருள்புரியுந்
தீபதெரி சன வையனே. (2)

என்னருள் விளங்கிய கண்ணொளியி லேவந்த
வேழைக் கிரங்கி யோனே
யேதுமறி யாதவனை சூதுவா துகட்செய்யி
லெப்படி கலந் துண்பனோ
சொன்னமொழி தவறிலேன் மனச்சங்கை மாறுநீ
சூறையிட் டோட்டி வைப்பாய்
சுத்தபொட் டலினின்று வட்டமிட் டோடிவா
சுந்தரப் பரம குருவே
கண்ணே கருத்தேயென் கற்பகத் துட்பொருளே
கபடிலா நெஞ்ச னென்னைக்
கசிந்துருகி வாடவோ வலையவிட் டாயினிக்
கட்டியொரு முத்த மிடுவாய்

தின்னே னிலைக்காய் கிழங்குவகை கனிகளைத்
 தின்பண்ட முன்னருளதாந்
திருவருளை யனுதினமு மறவா தருள்புரியுந்
 தீபதெரி சன வையனே. (3)

காவலிலிருந் தென்னைக் கண்ணகத் திருத்தியே
 கைகாட்டி யேனழைத்தாய்
கண்டிருந் துன்னையா மண்டைவிழி யிரண்டினாற்
 காட்டிக் கடக்க லாமோ
கேவலத் தேயார்ந்து துரியநிலை காட்டியுங்
 கேடில்கதி புணர்த்தி வைத்துங்
கெசபுடந் தன்னிலிட் டம்மைகுண் டலியையே
 கிளப்பிநீ யெழுப்பி விட்டு
மாவலொடு வந்தென்னை யாட்கொள்ள வல்லையோ
 வறுசுவையு மற்ற பாவி
யறிவையோ வறிந்துமறி யாமலு மிருந்தையோ
 வருள்புரிந் தாளு நிதியே
தேவதே வாலயந் தீர்த்தமது வேண்டிலேன்
 றின்பண்ட முன்னருளதாந்
திருவருளை யனுதினமு மறவா தருள்புரியுந்
 தீபதெரி சன வையனே. (4)

ஆலஞ் செழித்திலகும் வாலகுரு சாமியே
 யங்கமது நொந் துருகியே
யன்னமது தட்டியுஞ் சொன்னமொழி யொன்றன்றி
 யலையுதே நெஞ்ச மையோ
மூலந்தனி லமையு மோடிவரு முச்சுடரின்
 முடிகொண்ட வாசி தேவா
மும்மண் டலத்திலும் பரந்துவெளி காட்டியே
 மூதறி விலே நின்றவா
காலகா லனையுநீ கண்விழியி லேவேக
 கைகாட்டி யோட்டி வைத்துங்

கண்புருவ நடுவினி னின்றசுழி முனையிலே
கதவைத் திறந்த வறிவே
சேலகங் காரக் கொடுமைக ளெலாந்தீய்ந்து
தின்பண்ட முன்ன ருளதாந்
திருவருளை யனுதினமு மறவா தருள்புரியுந்
தீபதெரி சன வையனே. (5)

தேனருந் தும்பால் ருசிகண்டு யானுமே
திடமறிவி லாத வென்னைச்
சிந்தைகலி தீரவே வந்து விளையாடிவா
தீனனுக் கருளு வாயே
நானருந் தும்பாலை நீயருந் தெண்ணவோ
நாடா திருப்ப தேனோ
நாட்டியே தில்லைவன மூட்டியே வந்தருளு
நடன திரு மாளிகையிலே
வானுலக வானவரும் வந்தனடி மலர்பணியு
மன்னுசத் தாதி முதலாய்
மயக்கமது கொண்டதோ மடிபிடிப்பேன் வெளியில்
வரங்கொடுத் தருளு நிதியே
சேனருஞ் சேயருந் தனைவேண்டி லேன்மனந்
தின்பண்ட முன்னரு ளதாந்
திருவருளை யனுதினமு மறவா தருள்புரியுந்
தீபதெரி சன வையனே. (6)

என்செயலி லாவ தொன்றுமிலை யுன்செய
லிருக்கினுன் னரு ளுள்ளதா
மேதுமறி யாதவனைப் பாவியென் றேநினைத்
திழுத்தெனை யடிக்க லாமோ
தன்செயலி னல்லவோ தன்னருள் வெளிக்குளே
தானாகி நின்ற தலைவோ
சாருமெமைத் தீருமே வாருமிமை தாருமே
சங்கர சுயம்பு தேவே
யென்சொற் கிரங்கியே தன்பருவ மாகவு
மெட்டிப் பிடிக்க வருநா

ளிரங்கியே காங்குவித் துறங்கும் படிக்கமைத்
தேற்றுநற் றீப மதுபோற்
செஞ்செயற் கடம்பனே தில்லைநட ராஜனே
தின்பண்ட முன்னரு ளதாங்
திருவருளை யனுதினமு மறவா தருள்புரியுந்
தீபதெரி சன வையனே. (7)

அண்டமுடி தனிலோடி தொண்டரிடம் வந்துமே
யானந்த மே தந்தவா
அந்தரங் கத்திலே சுந்தரக் கனியையா
னறிந்து மறிவிற் சமாதி
மண்டலமோர் மூன்றுமே சண்டமாருதம் வீசி
வாய்மூடு மோன மாகி
மயக்கிப் பிடித்தென்னை யாட்கொள்ள வல்லையோ
மனநினைவு மற்ற வெளியிற்
கொண்டதோர் காலமதைக், கண்டமதிற் றூக்கியே
கொடுங்கனலில் வேக மூட்டிக்
கோடிப்ர காசமாய் மின்னிடுளி காட்டியே
கோதண்ட மேனி வருவாய்
தெண்டனிட வாருமே சேருமதி ரவியொன்றாய்
தின்பண்ட முன்னரு ளதாங்
திருவருளை யனுதினமு மறவா தருள்புரியுந்
தீபதெரி சன வையனே. (8)

ஆதிகுருவைத் தேடி சோதிமுடி நடுவிலே
யானந்த வெளி யதனிலே
யடியிலே முடியிலே வடிவிலே நீயணைந்
தணுதியுரு வாகி நின்றும்
வீதிவழி யோதியு மின்னொளியி னிற்சென்று
மேலறைக் குள்ளி ருந்து
மிக்கதொரு கனன்மூட்டி கைக்கனியி னுல்வந்த
வேதமுறை முடிவிலே தான்

போதிக்க வந்துமே நிர்மல ஸ்ரூபியாய்
போக்குவர வற்ற பொருளே
பொதிகைமா நகரினிற் குதிகொளுந் தேவனே
பொற்ப்ரபை யதனி லேதான்
தேதியது பாராமற் செய்கின்ற பூசையுந்
தின்பண்ட முன்னரு ளதாந்
திருவருளை யனுதினமு மறவா தருள்புரியுந்
தீபதெரி சன வையனே. (9)

காயக் குடந்தனின் மாயப்பொடி வைத்துங்
கற்பகத் தரு வமைத்துங்
கானலொளி வீசியும் வானத்தின் மீன்களைக்
கண்காட்டி யேன் மறைத்தா
யாயனே யன்பனரு ணேயனே யண்டமதி
லரசுரிமை யாளு நிதியே
யையனே பரமகுரு மெய்யனே வுனக்கபய
மறிந்துகொண் டெனை யாள்வையோ
மாயனே மாயப்ர பஞ்சனே மணிமகுட
மக்களுற வாடு வோனே
மணிமந்த்ர மருந்தாதி மன்னுகற் பாதிமுதன்
மலரடியில் வணங்க விலையோ
தீயனே தில்லைநட ராஜனே யெனைவிடுதி
தின்பண்ட முன்னரு ளதாந்
திருவருளை யனுதினமு மறவா தருள்புரியுந்
தீபதெரி சன வையனே. (10)

மதிநிலவின் குருவணக்கம்.

ஆசையெனுங் கடன்மீதி லக்கினி தனைமூட்டி
யன்பென்னு மழை சொரிந்
தகமெனு மோங்காரக் கோட்டையை யிடித்துமே
லறிவெனும் வாசி பூட்டித்

தேசியெனு நாதனே வாசிநிலே தன்னிலே
திருநடன மாடி வரவுஞ்
சிந்தைதவ ருமலே சுந்தரத் தேசிகனைச்
செங்கை யாலே யணைத்தே
ஊசிமுனை தன்னிலே யோடுந் துவாரமதி
லோங்கார சத்த மிட்டா
லூமையெனு மட்சரத் தோர்மொழியி னின்றாடு
மோனமசி வாய குருவே
வாசியெனுங் குதிரையை மதிரவியி லேபூட்டி
வளர்மதியி னூடு தாக்கி
மண்டல மெலாநிறைந் தகண்ட பரிபூரண
மதிநிலவி னின்ற குருவே. (1)

நிறையாகி யுலகெலாம் பொருளாகி நின்னுருவை
நின்றுவெளி காண்ப தெப்போ
நிலையாம னிற்குதே யலைகடலி னலையோ
நிலைக்க வைப்பாய் நினைவினி
லறையா யறைக்குளே யகண்டபரி பூரண
மறிவாஞ் சமாதி யாகி
யனலுவி மேற்பிடியென் னங்கமெல் லாநோக
வய்யனே கையின் முறையே
பிறையாகிப் பின்னுமொரு வெளியாகி யேகனுப்
பின்புவர வழி யமைத்தாய்
பேசாத மோனநிலை பேசவைத் தாயெனிற்
பேரின்பக் கடலை மூட்டி
மறையாகி மந்திர மிலாதாகி மனதையும்
வளர்மதியி னூடு தாக்கி
மண்டல மெலாநிறைந் தகண்ட பரிபூரண
மதிநிலவி னின்ற குருவே. (2)

மூலமெனுஞ் சோதியிற் பாதமெனுங் காற்றாக்கி
மூச்சைப் பிடித் தடைத்து
மும்மூலத் திடையிலே கண்மலர் சாற்றிவிடு
மூதண்டம் பாய்ந்து நிற்கு

மாலமது தீண்டினது போலவே யென்னறிவை
யாகாயந் தனி விருத்தி
யந்தரங் கந்தனிற் சுந்தரக் கனிபாலை
யமுதமது வாக மூட்டி
யோலமிடு வாயேநீ யோங்கார தொனிகாட்டி
யுற்றுப் பார்க்கும் வெளியினி
லோகோகோ வதிசய மெத்தவுண் டதுவிலே
யுரைக்கொணு பச்சை காட்டும்
வாலைநற் பருவமுள மாதாவைப் பூசிக்க
வளர்மதியி னூடு தாக்கி
மண்டல மெலாநிறைந் தகண்ட பரிபூரண
மதிநிலவி னின்ற குருவே, (3)

ஆழிசூழ் திரைகடந் தப்பாலே நின்றதோ
ரானந்த மான மூர்த்தி
யாராதா ரத்திலே மாருத் தியானமதை
யறிவிப்பை யென்னு ளத்தி
ஞழியிமை தவரும னடனமது புரிந்துவாழ்
நாட்சென்ற வழக்கை யெல்லா
நமனைப் பிடித்துய ருறுங்கௌன மாற்கக்குளிகை
நடுவணையி னின்று மாடு
மூழியெனுங் காற்றுமே யோரறிவி லேயுறையு
மொத்துநடு மைய நின்று
லொடுங்கியே போய்விடு மூமையெனு மட்சர
மோங்கார மாகி நிற்கும்
வாழியே யென்றுதினம் வாழ்த்திவிடு வாயெனை
வளர்மதியி னூடு தாக்கி
மண்டல மெலாநிறைந் தகண்டபரி பூரண
மதிநிலவி னின்ற குருவே. (4)

வெட்டாத சக்கரம் வெட்டுமே யுன்னருளின்
மெய்யனே கண்ணி ருக்க
வேகாத காலதுவுஞ் சாகாத் தலையதுவும்
வேறொன்றைச் சொல்லி நம்பே

னட்டாங்க யோகமுட னனந்தப் பேரொளியென்
னகத்தினிலும் வேறு முளதோ
அறியாத சிறுவ னுனது முன்னபய
மரன்காடு சொந்த மென்பே
னிட்டையிடு வேன்மதியிற் சுட்டுவிடு வாயென்னை
நிலாவு மணி முற்றமீதி
னிலைத்துவிடு முன்னருட் குலைத்துவிடு நாயெனை
நீடுருவிப் பாய்ந்து நிற்க
வட்டாரம் போட்டுமே மணிமேடை யுச்சியில்
வளர்மதியி னூடு தாக்கி
மண்டல மெலர்நிறைந் தகண்டபரி பூரண
மதிநிலவி னின்ற குருவே. (5)

அருளெனும் விழிபரவி யானந்த மழைசொரிய
வன்பின் வழியிலே சிறந்
தனற்கொண்டு வீசியே கனல்வாதை வந்தெய்தி
யள்ளிப் புசிக்க வருநாள்
குருவென்னு மொழிகாட்டிக் கோண்மதியி னிடையினிற்
கூறுகூ றுக வெட்டிக்
கோடையிடி போலவே மின்னலொளி காட்டியுங்
கோலமிடு வாய் வெளியினிற்
றிருவெனு மயிர்ப்பால மீதிலருட் குடிகொண்ட
சிதம்பரச் சிதா காசனே
சித்தமிகப் பித்தனுய் மெத்தவிளை யாடல்செய்
சிவலிங்க ரூப மெனவே
மருவெனுஞ் சுழிதனின் மனமதைப் புகட்டிவிடு
வளர்மதியி னூடு தாக்கி
மண்டல மெலாநிறைந் தகண்ட பரிபூரண
மதிநிலவி னின்ற குருவே. (6)

எட்டுரெண்டுங் கூடி யேழைமதி யாலாட
வேற்றி வைப்பாய் முனையினி
லேறியு மேருத பாவியாம் பேருடைய
தில்லா தெனக் களித்து

பொட்டுமிடு நெற்றியிற் புருவநடு மையத்திற்
புகுந்தறைக் குள்ளி ருத்திப்
போதமதைப் பூட்டியே வாதத்தி லாடியே
புல்லறிவி னின்ற குருவே
கட்டுமொரு காலினிற் கலைநாலுஞ் சேர்த்துமே
கார்க்கத் துவா தசத்திற்
கருத்தறிய வுருத்தெரியும் விரித்துவெளி யினில்வரக்
குருத்தெரிய நின்று காண்பேன்
மட்டுமித மில்லாமன் மானில மெலாம்புகழ
வளர்மதியி னூடு தாக்கி
மண்டல மெலாநிறைந் தகண்ட பரிபூரண
மதிநிலவி னின்ற குருவே. (7)

பாவியெனும் பேருடைய னானு முன்னருட்
பட்சமற வாது கண்டாய்
பாவிப்பை யென்றன்மேற் கோபமது கூடாமற்
பாலக னுள்த்தி னறிவே
ஆவிமிகச் சோருதே யங்கமிக வாடுதே
யண்ணலே கண்ணி னுருவே
யலையுதே நெஞ்சமது குலையுதே யலையாம
லாடவைப் பாய் மதியினிற்
றேவியெனு மம்பிகைச் சிர்பாத கமலமதிற்
றெரிசித்து முத்தி பெறவே
சின்மய சொரூபமாய்த் தன்மயம தாகுமுனைத்
தேடி யலைபாம னாளும்
வர்வியெனுங் கூடமு மண்டபத் தடியினில்
வளர்மதியி னூடு தாக்கி
மண்டல மெலாநிறைந் தகண்ட பரிபூரண
மதிநிலவி னின்ற குருவே. (8)

அறியாத சிறுவனது பாவமே யுனைத்தொடரு
மன்பிலா மூட னேனு
மறிவிப்பை யனற்பாவித் தெரிவிப்பை யெந்தனுட
லசடனு னாலும் வேகு

நெறியாகு நெறிதவறிப் போகாம னின்றுழல
　　நிற்குணச் சுத்த மதனி
னிற்குமே யென்மனங் கற்கின்ற போதெலா
　　நிலைகாட்டி யருள் புரிவையே
குறியாத நாளேது கூச்சமறவே கண்ணிற்
　　கொடுத்துக்கை காட்டி யீர்ப்பாய்
கொடும்பாவி யானாலுங் கூர்முனையி லேவேகுங்
　　கூண்டோடே வெந்து நீறாய்
மறியாணி யாற்சுற்றி மணிக்கதவின் பூட்டுடையும்
　　வளர்மதியி னூடு தாக்கி
மண்டல மெலாநிறைந் தகண்ட பரிபூரண
　　மதிநிலவி னின்ற குருவே. (9)

உனைத்தொடரு நாளிந்த நாளலால் வேறில்லை
　　யுற்றதுணை யாரு முண்டோ
வோம்சிவய வசியெனுங் காரணப் பொருளிலே
　　யொத்து நின்றாடு வோனே
யெனைத்தொடரு நாளுக்குப் பட்சமது கூடுதே
　　யென்செய்வேன் வாசி தேவா
யேகனாய் ரூபனாய் பாகமதி லோடியே
　　யெனைத்தடுத் தாட் கொள்வையோ
தனைத்தொடரு நாளுக்குத் தன்யனாய்ப் போகவுந்
　　தமியனுக் கருட் புரிவையே
சாற்றுமரு ணாசல மொழிக்கருளை யேதந்து
　　தன்மயம தாக்கி விடுவாய்
மனைத்தொடரு நாளுக்கு வந்துகை கூடுமே
　　வளர்மதியி னூடு தாக்கி
மண்டல மெலாநிறைந் தகண்ட பரிபூரண
　　மதிநிலவி னின்ற குருவே. (10)

பரமகுருவணக்கம்.

ஆலமமு துண்டவென் னையனே வுனதருளை
யறியாத பேர்க ளிலையோ
யடங்கவே யென்மன மடங்கட்டி வாழவு
மதிலமையுஞ் சோதி யாக
மாலயன் றேடரிய மௌனதே சிகமூர்த்தி
மந்திர மிலாத வாழ்வே
மதியைவல மாக்குவி ரவியிலே மனம்வாட
வரமது கொடுக்க வரிதோ
பாலமது தாண்டவும் பற்றியிழு சிற்றடியிற்
படர்மேகந் தொடரா தெனை
பரமோட்ச ஞானத்திற் சரமற்றுப் போகுமே
பாங்கிலய மாகும் வெளியிற்
சூலமது கொண்டுமே சூட்சாதி மோட்சமதை
சுத்தவெளி யாக்கி விடுவாய்
சொகுசான வமிர்தமெனு ஞானசஞ் சீவியே
சொல்லரிய பரம குருவே. (1)

ஓதரிய வேதமுறை யொன்றுமறி யாவெனை
யொரு மொழியி னின்றுமாய
வோலமிடு நீலனே பாலனெனைக் கைவிடா
தோங்கு பத்திய மளிப்பாய்
நீதமறி நாதவொலி காதலற நிர்மல
நித்தியா நித்திய வஸ்துவை
நிலைக்கவறி வினிலூட்டி நெஞ்சைப் பிளந்துவிடு
நிருவிகற் பாதி யமையுஞ்
சீதமதி தேயவே பாதமளி மெய்யினிற்
சிற்சபை பொற் சபையதாய்
சிங்கார கொலுமேடை சங்கர சுயம்புவுஞ்
சிவயகம வாக வெளியாஞ்
சூதறியு நானலேன் வாதவித்தைகள் காட்டுஞ்
சொல்லாத மோன ஞான
சொகுசான வமிர்தமெனு ஞானசஞ் சீவியே
சொல்லரிய பரம குருவே. (2)

காலிற்சிலம் பசைய கைகாட்ட வல்லநீர்
 கதித்த முக்கோண மதனிற்
கார்க்கவுங் கடனுனது பாசமெவர்க் குச்சொலுங்
 கனகசபை யான கொலுவே
மா லினுயர் சன்னிதியு மணியொளிவு தீபத்தை
 வஞ்சக மிலாமற் செய்வாய்
மாளாத யோனியில் நாளாகிப் போகுதே
 வாய்திறந் தருளு நிதியே
பாலினிற் பழுதுளதோ பற்றிக் குடித்தமுலை
 பாசந் தவிர்க்க விலையோ
பாசமுனக் கேவுளது சாரங்கொண் டேற்றிவிடும்
 பட்சமற வாது கண்டாய்
சூலில்வரு ஞானமிரு காலினடு யோனியிற்
 சொல்லாமற் போய்விட் டதோ
சொகுசான வமிர்தமெனு ஞானசஞ் சீவியே
 சொல்லரிய பரம குருவே. (3)

நீடுருவி நிற்கவோ நிலைக்குமோ யிக்காய
 நில்லாத தேக மாச்சே
நிச்சயமிலா வாழ்வு கைச்சரச லீலையி
 னெடுநா ளிருந்த தலவோ
பாடுபட்டது யானு நீயுமொரு பங்குமாய்
 பாரஞ் சுமக்க விலையோ
பாராத குற்றமெழ மாருத யோனியிற்
 படுந்துயர மெத்த வுண்டு
காடொழிய நாடளியுங் கனகசபை மண்டபங்
 கண்மணியி னின்று வாடக்
கதிர்காண மதியின்மே னதிதாண்டி யப்புறங்
 கலைமகளு முரு வாகுமே
சூடுண்ட மேனியா சுத்தவெளி தன்னிலே
 சொல்லாத மோன நிறைவே
சொகுசான வமிர்தமெனு ஞானசஞ் சீவியே
 சொல்லரிய பரம குருவே. (4)

ஆத்திரப் பட்டுநா னலேகின்ற வென்மனதி
லங்கை கொடு நெல்லிகனிபோ
லலேகின்ற பேயனேக் கலேயினி லடக்கமா
யந்தர மாக்கி விடுவாய்
மாத்திரைப் போதுவுன தன்பினி லுருகவு
மதியா விளக்க வரிதோ
மனம்வாக்கு மெட்டாத வஞ்சக லோலனே
வரும்வழியிற் குருவு மானுய்
நேத்திரந் தனிலாடு நிர்மல ஸ்ரூபனே
நித்ய சஞ்சார ஞான
நீயேழு பூமியுஞ் சுற்றிவல மாக்கியே
நெடுநா ளிருந்த வனுநீ
சூத்திர பாவைக்குட் சேத்திரந் தனேநாட்ட
சுக்கானே நீ திருப்பாய்
சொகுசான வமிர்தமெனு ஞானசஞ் சிவியே
சொல்லரிய பரம குருவே. (5).

எத்தனே பொய்க்களவு கட்காம மென்னிட
மிருக்கினு மன திரங்க
வேழையென பாராட் டிருந்தயோ வென்செய்வே
னிதுமோச மறிந்தி லேனே
பித்தனே பேயனே பேரின்ப வடிவிலே
பேசாத மோன வாழ்வைப்
பெற்றும் பெருதிலா துறும்படிச் செய்யவும்
பித்தேற்றி விட்டு விடுவாய்
வித்தனே விவேகனே வேதாந்த முடிவிலே
வெளியிற் ருனுகி நின்ருய்
விஞ்சைமந் திரமோதி நஞ்சையடை யென்னுளம்
விளக்கந் தெரிந்து வருவேன்
சுத்தனே சூதனே சுழிதிறந் தென்னிடஞ்
சுற்றி பம்பர மாடுவாய்
சொகுசான வமிர்தமெனு ஞானசஞ் சிவியே
சொல்லரிய பரம குருவே. (6)

ஆடிய சிதம்பரம் பாடிய திருக்கூத்தை
யறிவில்வச மாக்கி விடுவா
யகண்டபரி பூரணந் தானுகி யேநிற்கு
மவைதனி லடக்க முறுவேன்
கோடிதனி லொருவனுப் குதிகொண் டிருந்தயோ
கொள்ளியிடு கண்ணி னிறையிற்
கும்பக மடங்குமே யம்பிகையின் யோகமது
குதிகொளு மெந்நாளு மென்
னுடியி லடக்கநீர் வேடிக்கை பார்ப்பதுவு
ஞாயமல வுந்த னுக்கு
நாட்டியே குண்டலியைப் பூட்டிவிடு மென்னுளம்
நாயினுங் கடைய னலவோ
சூடியே யென்முடியிற் சோதியதிற் குள்வைத்து
சூட்சாதி மோட்ச முளனே
சொருசான வமிர்தமெனு ஞானசஞ் சீவியே
சொல்லரிய பரம குருவே. (7)

காலைப்பிடித் தனலை மூட்டுதற் கென்செய்வேன்
கைகாட்டி யொரு மொழியினிற்
கதித்தெழுந் தோடுமே முச்சுடரி னுலந்த
கற்பச் சமாதி யமையும்
வேலைப் பழித்தவிழி மடமாதர் வெட்டியுன்
வெள்ளையிடுங் கள்ள வழியில்
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலையெலாம்
விளையாடு மெய் யறிவிலே
கோலைப் பிடித்துநெடுங் கோபுர வாசலிற்
கொள்ளையிடும் வெண் மதியினுற்
கும்பக மடங்கியே கங்குல்பக லற்றதாய்க்
கூற்றனணு காமற் செய்யுஞ்
சோலைதனி லொளியதாய்ச் சுந்தரச் சோதிமயந்
தூண்டிவிடு பூரண மதாய்ச்
சொருசான வமிர்தமெனு ஞானசஞ் சீவியே
சொல்லரிய பரம குருவே. (8)

ஆராலு மறியாத பேரின்ப ஞான
மடைத்துவிடு மதி நகரினி
லறியாத பாவியா னுலுமுன தன்பினி
லருட்சுரந் தாடி நின்றேன்
சீரான மதியினுற் சிவராஜ யோகமுஞ்
சித்திபெற வே யளிக்குஞ்
சிங்கார மாகிநின் றன்கைநெல் லிக்கனியை
சிறுவாசற் குள் ளமையுமே
போராத வானந்த கடற்பெருகி யென்னுளம்
பேசுமந்திர மெது வுளோ
பிறவாத நெறியமையுங் குறைவிலா ஞானமும்
பெற்றுசுக நித்ய வாழ்வைச்
சோராமற் பொழியுமே மாருக்கண் ணீரதாய்
சுரமேற்றி நாத மமையுஞ்
சொகுசான வமிர்தமெனு ஞானசஞ் சீவியே
சொல்லரிய பரம குருவே. (9)

கரம்பெருகி மலர்பொழியுங் கண்ணினிடை பூட்டினிற்
கைமாறுக் கென் செய்குவேன்
கண்டதுங் கேட்டதும் விண்ணிலரு ளொளியிலே
கலந்துருவ மெப்படி சொலாய்
சரம்பெருகி மேலாறு தலமெலாஞ் சுற்றியுந்
தனித்திருக் கவும்வெளி யமை
சர்வபரி பூரண மடங்கவொரு நிறைவாகி
சாது சங்கப் பெருக்கின்
வரம்பெருகி விதிகாட்டு மன்னுசர்க் குருவடிவில்
மாருத வாஞ்சை புரியும்
வையகத் தார்நகை செய்யவுன தன்பையு
மதிதனி லேற்றி யருளுஞ்
சுரம்பெருகி விளையாடுஞ் சுத்தசை தன்யமாய்
சுகானந்த மதை யளிக்குஞ்
சொகுசான வமிர்தமெனு ஞானசஞ் சீவியே
சொல்லரிய பரம குருவே. (10)

மோனகுரு வணக்கம்.

தினகரனி லருட்பெருகி மனமுருகி நின்றிடுந்
    தித்திக்குஞ் செங் கரும்பே
தெவிட்டாத தேனே யமுதக் குழம்பேமா
    சித்தினுரு வாகி நின்ற
கனமோன பீடமுற கருத்திலமை பொருளேயென்
    கண்கொளாக் காட்சி தந்தீர்
கதித்தசெங் கமலமே கதிர்கா ணு மோனமே
    கவித்தாடுங் குல விளக்கே
மனதெனுஞ் சுழியிலமர் வாய்கொளா ஞானமே
    மதியோக ரவியி னுருவே
வைத்ததொரு பாண்டத்திற் சுட்டுவெளி யாக்குவீர்
    மனநினைவு மற்ற வெளியில்
வனம்பெருகி நிதிகாட்டு மதிரவியி னிடையிலே
    வள்ளலே கொள்ளை யிடுவீர்
மாசுத்த குணமதி னென்னகத் தீசனே
    மறைமுடிவின் மோன குருவே. (1)

நிதிபெருக பதியிலமர் விதிபெருகி யோடவே
    நின்னடிமை யாக்கு மருளில்
நிச்சயப் பாத்திர மட்சர மிலாதோது
    நினைவுமதி யதனின் மேவ
கதிசத்தி நாதத்தின் விந்துவையு மயமாக்கி
    கசடறத் திருத்தி மதியைக்
கைகாட்ட வல்லநீர் பொய்கள வெலாமறக்
    கண்காட்டி யொளி பரப்பி
விதிகாட்டி யருளுமே விண்ணுலக மாய்த்தோன்ற
    விசுத்தியறு கோண மதனில்
வெட்டுண்டு போகுமே திட்டிவா சற்புகும்
    வெந்துயரம் வந்து விடுமே
மதிகாட்டி ரவிகாட்டி மதகுதிற சுழியிலே
    மனமாயை யற்று விழவே
மாசுத்த குணமதி னென்னகத் தீசனே
    மறைமுடிவின் மோன குருவே. (2)

நித்யபரி பூரணச் சுத்த சைதன்யமே
நிறைந்தெங்கு மூலக மாண்டீர்
நிச்சயமென் றெண்ணியே பொய்ச்சடலக் கூட்டிலே
நிலையிலா வுரு வெடுத்தீர்
சித்தியதி லாக்கவே முத்திநிலை காட்டுவீர்
சின்மய மான வடிவிற்
சிதம்பரத் தொனியைப் பதம்பெறவு மாக்குவீர்
சிற்சத்தி யாக வருவீர்
பத்தியம தாகவே சுத்தி செய்தேதேகம்
பரிசுத்த நிலையு மருள்வீர்
பாலமுத மூட்டுவீர் காலனில் லாச்செய்வீர்
பாடக மெனக் களிப்பீர்
மத்திய மதிரவியைச் சுற்றியாடச் செய்வீர்
மனவாக் கெட்டா தருளுவீர்
மாசுத்த குணமதி னென்னகத் தீசனே
மறைமுடிவின் மோன குருவே. (3)

துள்ளுமெரு தைப்பிடித் துள்ளுறவு மாக்குவீர்
தூண்டவே சுடரளிப்பீர்
சுத்தவெளி காட்டுவீர் பித்தனைப் போய்த்திரிய
சுழிமுனை திறந் தோட்டுவீ
ருள்ளுறவு மாடியே தில்லைநடனங் காட்டி
யோங்கார மாகி நிற்பீ
ரொக்கசுழி முனையிலே நித்யதீபங் காட்டி
யுறவின்முறை விலை பேசுவீர்
கள்ளுமொரு காலினி லுண் ணுவீர் கருவிலருள்
காட்டுவீர் மூல வனலை
கனமோன மாக்குவீர் கைகாட்டவுஞ் செய்வீர்
கதிராக்க மதி பிடிப்பீர்
மள்ளுமன துக்குவெளி யொளிகாட்டி யேவைத்து
மாற்றுறை யளிக்க வல்லீர்
மாசுத்த குணமதி னென்னகத் தீசனே
மறைமுடிவின் மோன குருவே. (4)

அரியயனுந் தேடியுங் காணு தமைபொருளே
யாட்டி வைப்பாய் சுழியினி
லாடியு மாடா தடக்கமது வேசெய்வீ
ரந்தர வெளி யதாக
உரியபொரு ளெல்லா மொடுக்கிச் சுருக்கிடு
மோங்கார மோன நிலையா
யொத்தபர னடியார்க்கு சுத்தமாய் வெளியோதி
யுன்னுருவ மென் னுருவதாய்
பரியேறிச் சென்றுயான் பார்த்துப் பழகினவெலாம்
பதியில்வைத் தோட்டி வைப்பீர்
பரப்பிரம வடிவிலே தானுகி யானிற்க
பழகினது போராதோ சொல்
மரியாதை யில்லையோ குறியாத நாளேதோ
மணிப்பூட் டுடைக்க வில்லையோ
மாசுத்த குணமதி னென்னகத் தீசனே
மறைமுடிவின் மோன குருவே. (5)

தேடியுங் காணுதரும் பொருளே சிற்றின்பத்
தெவிட்டாத சீனி பாகே
சித்திரமணி யொளிவே கத்தரிக் கோன்மாறலே
தெள்ளமுதே யுள் ளளியுமே
கூடிக் கலந்துவிடுங் கூற்ற னணுகாமலே
கொள்ளையிடு வென் கதிரிலே
கோதிலா மணிமுடிவிப் போதிலே வந்தருளுங்
குதிகொளும் வாசி தேவா
வோடியலேந் திட்டநாட் போராதோ வுந்தனரு
ளுறுதிப் படுத்தும் வெளியி
லொளிகாட்டி வெளிகாட்டி யொற்றைபாய் மரநாட்டி
யொத்துவா யத்து விதமே
மாடியறைக் குள்வளரு மணியொளியின் றீபத்தின்
வாட்டிமன தழுக்கை வெட்டி
மாசுத்த குணமதி னென்னகத் தீசனே
மறைமுடிவின் மோன குருவே. (6)

சொந்தமதி யைப்பிடித் தெந்தனகத் திற்புகுஞ்
சோதியே சுக வாரியே
சுகதுக்க மீரொழித் தகம்புகச் செய்துவருந்
தூண்டாத மணி விளக்கே
விந்துவைக் கட்டுவீர் மணியாக்க வுஞ்செய்வீர்
விண் காட்டியு மறைப்பீர்
வேதமணி யோசையு நாதசங் கீதமதை
மெய்யறிவி லாட்டி விடுவீர்
கந்தபரி மளசுக மெந்தனக விழியிலே
கைகாட்டி மெய் யருளுவீர்
காரியங் கண்ணிலே மாரிபோ லேபொழிய
கண்குளிர காட்சி வைப்பீர்
மந்தவிர தத்திலே சொந்தமதி நீயருளு
மல்லாடி நின்றே னியான்
மாசுத்த குணமதி னென்னகத் தீசனே
மறைமுடிவின் மோன குருவே. (7)

ஆசைவலைக் குட்சிக்கி யலையாம லென்மனதை
யழுத்திசுழி முனையில் வைப்பா
யாதியை யளித்துநீர் பாதிமதி யைச்சூடி
யாக்குவீர் சூக்கு மத்தின்
பாசவினை பந்தமெல்லா மொழியு நின்றழற்
பரந்து தானாகி நிற்கும்
பார்க்கின்ற வேளையின் மார்க்கமதை யளியுமே
பற்றிதச வாயு முற்று
மோசையுற நின்றிடு முள்ளொளியு மற்றுமே
யுரைக்கொணு மோன பீட
மொத்ததிரு விழியிலே கைத்தல மருதுறு
மொளிகண்டு நடன மாடு
மாசறக் குண்டலி சத்தியை வணங்கிவரு
மல்லாடி வெள்ள முருகு
மாசுத்த குணமதி னென்னகத் தீசனே
மறைமுடிவின் மோன குருவே. (8)

மூலமதி லேறியே பாலங் கடந்துநின்
முன்னிற்க வெளிதோ சொலு
மூச்சைப் பிடித்தடையுங் காற்றிலா நேரமதின்
முடிகொளு மடி முடிவிலே
சீலம் பொழிந்திடுந் தேனருவி யுள்ளுறையுந்
தில்லைவெளி யாகி நிற்பேன்
றிருநடன கூத்தையு மருணனரு ளொளியிலே
சென்றேறி நின்று பார்ப்பே
ஞலமமு தாய்க்கொள்வேன் மூலவன விணைமூட்டி
யகக்காளை யைப் பிடித்தே
யண்டகோ டிகளெலாஞ் சண்டமா ருதம்வீச
வம்பிகையின் வாசல் புகுவேன்
மாலயனுந் தேடரிய மாதவ சிரோன்மணி
மனம்வாட மருந்தில் லையோ
மாசுத்த குணமதி னென்னகத் தீசனே
மறைமுடிவின் மோன குருவே. (9)

காயகற் பந்தேடி மாயுடலை மெய்யென்று
கருணைமலர் மதியி னின்றேன்
கைகாட்டி மெய்காட்டி குய்யநடு மையத்திற்
கண்மலர் தொடுத் தாட்டினேன்
றேயவே மதிபிடித் தில்லையை நாடினேன்
றிருட்டுத் தன முனக்கேன்
றிரும்பியே வராமோன மமையுமே யென்னுளஞ்
செகஜால மேதுக்கு வீண்
யாயனே யன்பினி லுபாயனே யெனையா
ளரும்பே விரும்பி னேன்வா
அட்டிசொல் வதுமுண்டோ கிட்டிவந் தேனுனை
யண்டுமுறை வேத மிதுவோ
மாயனே மணிவளர் மகத்தான பீடமே
மறைவிலா ஞான வடிவே
மாசுத்த குணமதி னென்னகத் தீசனே
மறைமுடிவின் மோன குருவே. (10)

சோதிகுருவணக்கம்.

மறைபொழிய விருவிழியின் மனதெனுங் குரங்கையும்
வசமாக்கி யென துளத்தில்
வாங்கியே வொருகாலைத் தூங்குசுழி முனையிலே
மதியெனும் விளக்கை யேற்றி
நிறைபெருகி யுலகெலாம் பூரணம தாகவே
நின்னுருவை வெளியி லேற்றி
நிற்கின்ற போதெலாம் பொற்கமல பீடமதி
னிறுத்தி வைப்பாய் சமாதி
அறையிருளை நீக்கியே யம்பலமெனுந் துறையி
லாட்டுவிடுந் திரு நடனமே
அக்கரையி லோடவே சுக்கான் றிருப்பிவிடு
மாச்சரிய மான மறையிற்
றுறைபெருகி பிறைகுறைய நரைதிரையு மாற்றுமே
சுகானந்த வெளியு மான
சுத்தநிற் குணமதனி னித்யகை வல்யமே
சோதிநடு நின்ற குருவே. (1)

நாய்நரிகள் தின்கின்ற பேயுடலை மெய்யென்று
நம்பியே குடி யிருந்தீர்
நாளைக் கழித்துமே காலனனுகவு நின்றீர்
நான்கும்பிட் டுனை மறவேனே
நீயுநானு மற்று நீங்கார தொனியற்று
நிதிமதியும் ரவியு மற்று
நிலையற்றுப் போகவே தானான வெளியிலே
நிருவி கற்பத்தி னமைவே
மாயுமே மாண்டுவெளி பாயுமே விதிபெருகி
மல்லாடி னேன் றில்லையின்
மக்களுற வாட்டுமே கைக்குண்முறை யாய்வந்த
மதிப்பிலா மோன மேநீ
தோயுமே பூரணையிற் சென்றேறி யமரத்திற்
றெண்டு புரிந்தே னறிகிலீர்
சுத்தநிற் குணமதனி னித்யகை வல்யமே
சோதிநடு நின்ற குருவே. (2)

பத்துமதி தனிலறு மத்துவித நிச்சயம்
பரியேற நாளு முளதோ
பார்த்துப் பிடித்துமே யாட்டிவைப் பீருமது
பாலக னுளத்தி னறிவே
சித்து விளையாடுமே சின்மயத் தினினின்று
தெளி தலது முத்தியிலையோ
சிவய்வசி யெனும்பெய ருளவாசி தேவனே
செங்கண் மாலுடைய தருவே
வித்துமுளையா துறும் பிரம மந்திரமோதி
வேதாந்த முடிவிலே தான்
விளங்குமெய்ப் பொருளாய் தலங்களா றுஞ்சுற்றி
விளக்கொளி வெனக் களித்து
சொத்துக ளிலாசெயு முற்று முற்றுதிலா
சூத்திரத் தின் மோனமாய்
சுத்தநிற் குணமதனி னித்யகை வல்யமே
சோதிநடு நின்ற குருவே. (3)

தள்ளிவிடும் பாசவினை யுள்ளநெக் குருகியே
தாண்டி முப்பாழை விட்டு
தரணிதனி லலையாம னுயினுங் கடையனைத்
தனிவெளி யிலேக னுக்கி
கிள்ளிவிடு மென்மனதை துள்ளிவிழ வேசெய்து
கெதிகாட்டி நிலையில் வைப்பாய்
கேவலங் துரியநிலை யாவலுட னீதந்து
கெம்பீர நீர னுக
அள்ளிய செழும்பொனைத் துள்ளிய மனத்தினரு
ளானந்த வெள்ள மாக்கி
ஆட்டியே மதியடங் காகாய மேல்சாட்டி
யனருவி வெந்து நீறுய்
துள்ளுமெரு ததின்மேற் சுமைகட்டி வைத்துமே
தூக்கிவிடு ரவியி னொளியே
சுத்தநிற் குணமதனி னித்யகை வல்யமே
சோதிநடு நின்ற குருவே. (4)

ஒருமொழியி னிடகலையை ரவியொளியிற் காட்டிவிடு
மோருருவ மாகி நிற்கு
மொத்தநடு மையத்திற் கத்தரிக் கோன்மாற
லொப்பொனு தப்பன் முறையே
யிருவிழியு மதிலமையு மருளா னந்தத்திலே
யேற்றிவிடுங் கேசரி தனி
லிதயத் திருத்தினு லுதயமாகு வேனுளு
மிறப்புப் பிறப் பொழியுமே
யருளுதய மாகிநின் ருடுஞ் சிதம்பர
மப்புவையு முப்பி லூட்டி
யனுதியுரு வாகியே கவுனுதி குளிகையு
மகப்படு மொ்த னருளிற்
றுருவனடு புருவனே யரூபநிலை வடிவிலே
தூண்டியே மெய்ச் சுடரிலே
சுத்தநிற் குணமதனி னித்யகை வல்யமே
சோதிநடு நின்ற குருவே. (5)

தாக்குமே மதிகாலைத் தூக்கிநின் ருடல்செய்
தையலிள மாத ராசைத்
தணலதனில் வேகவே மனமதனி லமையுமே
சங்கர சுயம்பு வேநீ
போக்குமே மக்கள்மனை சுற்றமுதல் யாவுமே
பொல்லாத பாவி நெஞ்சம்
பொடிபொடித் துதிருமே யிடிமின்ன லொளியிலே
போக்குவர வற்று நிற்கு
மாக்குமே யதுவா யருக்கனரு ளொளியிலே
வம்பல மெனுந் துறையிலே
யத்துவித நிச்சய சொரூப சாட்சாத்கார
மனுபூதி யாகி நிற்குந்
தூக்குமே யொருகாலை வாக்குமன மெட்டாது
சுந்தரப் பால னலவோ
சுத்தநிற் குணமதனி னித்யகை வல்யமே
சோதிநடு நின்ற குருவே. (6)

கற்பனையிலா திடங் காட்டுமென் னறிவிலே
கண்ட தாரையின் வாசியை
கடினதுண் டாக்கிவிடு மத்விதப் பொருளெலாங்
கண்ணிலருட் காட்டி வைத்தும்
விற்பனம தாக்குமே வற்பவுடற் பொருளெலாம்
வெந்து நீருக்கி விடுவீர்
விதியிலை யென்னிலோர் பூரண மெனும்பெயரென்
விடுதியி லமர்வ துண்டோ
முற்பவ மமைத்துமே வற்பவுடலிற் சிக்கி
விழிக்குதீ ரழிக்க வரமோ
மோனமா னவனேநீ தானுகி நிற்கவே
முடிகொளும் வெளியி லேதான்
சொற்பவினை நீக்கியே கற்பனை யிலாசெயுஞ்
சூட்சாதி சூட்ச நிதியே
சுத்தநிற் குணமதனி னித்யகை வல்யமே
சோதிநடு நின்ற குருவே. (7)

படிபிடித் தேறியே மடிபிடிப் பேன்வெளியிற்
பனிமதி யெடுக்க விலையோ
பார்த்துப்பழ கினவதனி லாத்திரமுண் டோசொலும்
பண்பிலா ரன்பர் கோவே
முடிபிடிப் பேன்வெளியின் முத்திகாத் தருளுமே
மூச்சையடை காற்றி வில்லா
மூலமதிற் சிக்கியே காலனில்லாச் செய்யு
மொளியற்ற வெளியி லேதா
னடிபிடிப் பேன்முடியின் வடிவிலெனை நீயரு
ளுசல மிலாமற் றுனு
யனுதியுரு வாக்கிவிடுங் கௌனுநி ராட்சதர்க
ளடியோடே வெந்து நீருய்
துடிதுடித் தானுமெய் யடிமுடிவி னடுவிலே
துணையற்று போகவுஞ் செய்
சுத்தநிற் குணமதனி னித்யகை வல்யமே
சோதிநடு நின்ற குருவே. (8)

நில்லாத விச்சடலம் பொய்யான வாழ்க்கையை
நிசமென்று நம்பி வாழ்ந்தே
னிலைக்கவொரு வழிகாட்டு மலைக்குளலை யாமலே
நித்ய கல்யாண குணனே
வல்லாள னுக்குள்வளர் மதியேறி யேநின்ற
மணிக்கு ளொளி யானநிறைவே
மதியற்று ரவியற்று மன்னுபர வெளியிலே
வாய்த்தபிர மத்தின் வடிவே
கல்லா லடிக்குள்வளர் ஜனகாதி முனிவோர்க்கு
கைகாட்டி நீ யழைத்துங்
கண்ணிலருட் குடிகொண்டு மண்விண் ணு மாய்த்தோன்ற
கருணை நிறை வாருதியுநீ
சொல்லா துணர்த்தியே சும்மா விருக்கவருட்
சுரந்தும் பிடிக்க விலையோ
சுத்தநிற் குணமதனி னித்யகை வல்யமே
சோதிநடு நின்ற குருவே. (9)

மதிநகரஞ் சென்றுமே ரவிநகர மாக்கிவிடு
மத்தியிற் பற்றி செலவே
மடங்காத வென்மன தடங்கவொரு நிலைகாட்டு
மதியமுத முணர வருமே
நிதிகாட்டி நிருவிகற் பங்காட்டி மனதுழல
நெஞ்சயர்ந் தைந்து பூத
நெக்கிச் சுருக்கிவிடுங் கற்கின்ற போதெலா
நெடுமூச் சொடுங்கி மூலம்
விதிபெருகி யோடுமே விண்ணொளியென் கண்ணிலே
வேசற் றயர்ந்து விடுமே
வேதனு புத்தனே பாதம் பணியவரும்
வெந்துயா மூட்டி விடுவாய்
துதிபெருகு மெய்ஞ்ஞான சோதிப் பிரகாசமே
துரியநிலை சார்ந்த வெளியே
சுத்தநிற் குணமதனி னித்யகை வல்யமே
சோதிநடு நின்ற குருவே. (10)

பரிதிமதி குருவணக்கம்.

அருளினிறை வருமுறையி னன்பே யென்னன்பான
வன்பினுள் ளின்ப நிலேயே
அறிவான வானந்த வெள்ளப் பெருக்கினி
லறிந்துநின் றன்ப ருக்கே
யுருவெளியில் வந்ததென் னுள்ளமே யுள்ளத்தி
னுள்ளூறவே கள்ள மில்லா
யுகாரமிட் டவ்வெளி யகார மில்லாதொழிந்
தொடுங்கி நின்றவனு நீயே
யிருளறை யிலாதறச் செய்தன் பருக்காக
யிடகலேயி லேற வாங்கி
யேற்றிப் பிடித்தேநீ காற்றையடைத் தூக்கதியி
லெங்குங் கைலாய மானுய்ப்
பருவமது செய்துதா னுகியே நிற்கவும்
பண்ணுமக் கரிதோ சொலு
பார்க்கின்ற போதெலாம் வாக்குமன மெட்டாத
பரிதிமதி யான குருவே. (1)

தேங்கித் தேங்கியேநின்று தூங்கிப் போகின்றேனே
சிற்றின்ப மெனே வாட்டுதே
தெரிந்திலேன் பாவியா னறிந்துதான் செய்தேனே
செப்புவீ ரெனக்கு வப்பா
வாங்கியே சுழிமுனேயி லோங்கிநின் றேகாட்டும்
வாங்கா வாங்கியுந் தூங்குமோ
வப்பப்பா யிப்பொரு ளெப்பப்பா கைக்கொள்வேன்
வறிந்துரை சொல வொணுதோ
நீங்கிப்போ காமலேநீ நிர்ச்சிந்தை காட்டியெனே
நித்திரை யிலாமற் செய்வாய்
நீனப்பா தேனெழுகும் வானப்பா பானெளிவு
நின்றுவெளி காண்பே னியான்
பாங்கிக ளதில்வா வொண்ணுமலே நீபண்ணைப்
பதியிலுன் னிதய நிற்கும்
பார்க்கின்ற போதெலாம் வாக்குமன மெட்டாத
பரிதிமதி யான குருவே. (2)

சாகுநாளெந் நாளொன் னுளினில் யான்வந்துஞ்
சாகவைப் பயோ வறிகிலேன்
சாமியே துணையென் றுனைநம்பி வந்தெனைச்
சார்வையோ பார்வை யிலையோ
நோகுதே யென்மனஞ் சாகுமுன் னொருநொடியி
னோகாமற் காலை நாவி
னெக்கிச் சுருக்கியே பூரணம தாக்கிவிடு
நோக்குத லெனைக் காக்குமே
யாகுமதி னுளவெலாந் தோற்றங்க ளாகியு
மடங்கியே சமாதி யாகு
மையையோ மெய்யுமே வையாம லெப்படி
யடைந்திட லாகுமோ சொலாய்
பாகுகாய்ச் சியுமதிற் சாகா திருக்கவும்
பண்ணிவை பூசை யதிலே
பார்க்கின்ற போதெலாம் வாக்குமன மெட்டாத
பரிதிமதி யான குருவே. (3)

சிற்றின்ப முத்தியே சிவகா ருண்யமே
தெவிட்டாத பான முளனே
தெரிசித்து வந்தநாட் போராதோ சிற்றடி
செலுத்தி யான் பட்டுழன்றேன்
முத்திக்கு வந்தவென் மோனமே ஞானத்தின்
மோனவெளி யான கண்ணே
முழங்குதே யகந்தனிற் செகங்கொளப் போகுதோ
மூடருற வோர்க்கு மெளிதோ
தித்திக்குஞ் செந்தேனே தேனொழுகும் பாகே
சிறந்தவின் பத்தின் ருசியென்
சித்தமதைக் கட்டியு மிழுக்கமருந் நிலையோசொற்
றேடறி விலாப் பாவியோ
பத்திக்கு நீயலால் வேறுகதி யுண்டெனும்
பழகின துள மறியுமே
பார்க்கின்ற போதெலாம் வாக்குமன மெட்டாத
பரிதிமதி யான குருவே. (4)

தேட றிவிலாக் கொடும் பாவியோ பாவிக்கு
டேவியதி லங்க மர்ந்தாய்ச்
சிரசிலுத யம்மாக நாட்செல்லு மோவென்றூற்
றேடுமிடந் தனிலும் வந்தா
யோடக் கருத்துகொண் டாயோநீ வையையோ
வுற்றுற்றுப் பார்க்கவோ சொல்
லொளிவுதனில் வந்தருளு முற்றுபார்த் தேனெனக்
குறுதிமொழி யைப் புகலுவாய்
நாடக் கருத்துனக் கில்லையோ நாளையெம
னடினு லென் செய்குவே
னுதியற் றவ்வெளியிற் குடியிருக்கச் செய்யு
நான்கும் பிடும்போ தெலாம்
பாடக் கருத்துமுன் பாவனை யெல்லாமறும்
பரமா னந்தம் மேடையிற்
பார்க்கின்ற போதெலாம் வாக்குமன மெட்டாத
பரிதிமதி யான குருவே. (5)

விடச்செய் வையோயெனை விட்டகுறை தொட்டும்
விடா திருக்கச் செய் வையோ
விட்டுவிடுவே னென்றூற் பட்டதுயரங் களற
விவேகமதி யதைநீ தாக்கு
நடச்செய் வையோயோக நட்டு கம்பமுனையி
னடியி லுணர்வு தாராய்
நண்பனென் றன்பிலரு ணடராஜ யோகனென்
னன்பின்வழி சொரிய வருளுந்
தொடப்படு மிவ்வேளை துவாதசாந்த நிலையிற்
சொக்கியதின் மனம் புக்குமே
துடர்பான ஞானம் படர்ந்தெனைத் தூடருமே
சொல்லாத மோன மமையும்
படச்சிறியே னுனலேங் கெடச்செய் வீரானற்
படத்துக்கு மக் னுவனே
பார்க்கின்ற போதெலாம் வாக்குமன மெட்டாத
பரிதிமதி யான குருவே. (6)

காட்டாயெ னன்பே கருத்துணர்வு மின்பக்
கடலிலெனைத் தள்ளி விடுவாய்க்
கலந்துருகுமே யின்ப மானந்த வெளியிலே
கைகாட்டி யெனை யிழுக்க
மாட்டாயோ மதியிலேறிப் போக மனதங்கே
மாளாமன் மாண் டேகனாய்
வருகுமே சுழியினில் வந்துமே யகப்படும்
வாசா மகோசர மதாய்
நாட்டாம னுடக் கருத்துணர்வு மேவந்து
நமனைப் பிடித் தறுக்கும்
நம்பிவந் தம்பிகையு மின்பநிலை தந்தந்த
நாடாள வல்லவ னெனப்
பாட்டாளி யாகிப் பரப்பிரம மேயுனை
படர்ந்தெங் நாளுஞ் சுகிப்பேன்
பார்க்கின்ற போதெலாம் வாக்குமன மெட்டாத
பரிதிமதி யான குருவே. (7)

கண்டுகளித் திட்டவுனை விண்டுவெளி சொன்னேனோ
கைமுறையிற் பிசகி னேனோ
கரும்பே கற்கண்டேநற் சீனியே யதிலுறையுங்
கட்டியுள் ளான வுருவே
பெண்டு பிள்ளைகளற்றுப் பேதமைக் குணமற்று
பேய்போ லிருக்க வுலகம்
பேயர்க ளெலாங்கூடி நாய்போலெனைச் சொல்ல
பேரின்ப மோடி நிற்குஞ்
சுண்டு விரலாலாடிக் கண்டுகளித் திட்டகண்
சொல்லா தானந்தங் கொளுமே
சோதியே திருவுள மோதியே யெனைத்துடர்
சுழிதிறந் தெந்நாளும் வாழ்வேன்
பண்டுமுன்னாட் செய்த பழவினை யிறக்கவே
பாருமண் ணாக்கி லேற்றி
பார்க்கின்றபோதெலாம் வாக்குமன மெட்டாத
பரிதிமதி யான குருவே. (8)

கண்ணுறவி லாடியவென் கற்பகமு மெய்ப்பொருட்
கதிக்கொணும் பொருளு மாணுய்க்
கலையைச் சுருக்கிநடு மையத்தின் மேன்மூட்டிக்
கதிராய்ச் செங்கோ னிறுத்தி
மண்ணும்விண் ணுய்த்தோன்றி மதியொளியும் வீசியே
மனக்கச டறப் பிடுங்கி
வாய்கொளா ஞானமிக் காயத்தி னுள்ளவென்
வன்மன தனலில் வாட்டி
எண்ணும் படிக்கிசைந் தெல்லையில் லாயோக
மென்னுறவி லாடி நிற்கும்
எங்கு நிராமயந் தங்குசாதனே யுளோ
ரிடத்திலும் வசித்த தேவா
பண்ணுமொரு சாதனந் திண்ணமாகச் செய்வேன்
பரகதி கிடைக்கப் பகர்வாய்
பார்க்கின்ற போதெலாம் வாக்குமன மெட்டாத
பரிதிமதி யான குருவே. (9)

எண்ணியிருந் தேஞானங் கண்ணி லகப்பட்டு
மெரியுதே யென் னுளத்தி
லெங்குமே கண்டறி யாதிந்தத் தில்லையே
யெவர்கள் கண்பட்ட தறியேன்
புண்ணிய முனக்குதா னில்லையோ சொலவென்றூற்
பொழுதோடிப் போகும் வெளியே
பொல்லாத காலமோ யெல்லாமுன் மாய்கையோ
பொதுநடன மாடி நிற்பாய்
நுண்ணிய கருத்தெனக் கொவ்வுமோ வொவ்வினு
னுன்செயலென் செயனு மாமே
யோங்கார கம்பத் துதிக்கின்ற வென்மனதை
யொரு பலியாய்க் கொடுத்தாற்
பண்ணியதோர் பூசைபுரிந் தென்னறிவி னுற்றீபம்
பரமானந்தங் காட்டுவேன்
பார்க்கின்ற போதெலாம் வாக்குமன மெட்டாத
பரிதிமதி யான குருவே. (10)

பரவெளியின் குருவணக்கம்.

சிதம்பரத் தெருவிலே செகஜோதி யாய்நின்ற
சின்மயா னந்த வெளியே
சிற்றின்ப முத்தியே செகத்திலருட் குடிகொண்ட
தேனொழுகு வாம ரசமே
விதம்வித மாய்நின்று விந்தில்விளை யாடினாய்
விண்முத்தே கண் ணகத்தே
விளங்கும் பராபரத் தின்கண்ணே வெளியிலே
வேறொருவர் யாவர் காண்பார்
மதம்பொழியும் யோகனே மங்கையர் கல்யாணமதில்
வாழ்த்தி யரவந் தீண்டிட
வரங்கொடுத் துலகெலா மண்ணினி லிறக்கவவ்
வரத்திலகப் படச் செய்வையோ
பதம்பெறவு மாக்கவே பண் ணுமிச் சாதனம்
பட்சம் வைத்தே சொல்லுவீர்
பாராதி யண்டங்க ளத்தனையு முன்னிதயம்
பரவெளியி னின்ற குருவே. (1)

வட்டமது வாய்வந்து வெட்டவெளி தன்னிலே
மாசற்ற குணம தாக
வந்துநின் றுயேநின் னண்டத்தின் சார்பிலே
மதியே பூரணம தாகத்
திட்டமாயத்திலிரு ஸ்தூலசூக் மத்துடன்
சென்றிருந் ததிலும் வாழ்ந்தாய்த்
திடமுள்ள ஞானிக்கு வந்ததிம் முறைமையே
தேடுதற் கரிதா குமே
சட்டமாய் நிட்டையிட் டப்பொருளி லதிசயஞ்
சாமியதில் வீற்றி ருந்தாய்ச்
சகத்தோர்க்குள் வைத்துப் படைத்து வாண்டவனுநீ
தானவர்க் கெதிரி னின்றாய்ப்
பட்டப்பகற் பொழுதை யிருளென்ற பேயர்க்குப்
பாதமது வெளி யாகுமோ
பாராதி யண்டங்க ளத்தனையு முன்னிதயம்
பரவெளியி னின்ற குருவே. (2)

கட்டிப்பிடித் தேயென் கண்ணைக் கொடுத்துநீர்
கலைமதியுங் கூட வைப்பீர்
காலைகொண் டேறுவேன் மாலையனே யுன்னைக்
கதித்த முக்குண மதனிலே
பட்டிமக னுனும் வட்டம் வாசித்தபின்
பரவெளியி லேக னுகப்
பண்ணுவேன் பண்ணினு லிவ்வுல கிலுமில்லை
யவ்வுலக மப்பா லேதான்
பெட்டியி லிருக்கின்ற பெருமானே யுன்னையான்
பேசுதற் கிடமுள் ளதோ
பேசுமந் திரமுநீ பாசந் தவிர்த்தநீ
பிறந்துழன் றலைய வைத்தாய்
பட்டாடைக் காரியாற் செத்துப் போகும்படி
படைத்தா யிவ் வையகத்திற்
பாராதி யண்டங்க ளத்தனையு முன்னிதயம்
பரவெளியி னின்ற குருவே. (3)

எத்தனை சென்ன மெடுத்து பிறந்துழன்றன
னிச்சென்ம முத்தி யிலையோ
யிறந்தும் பிறப்பிலை யென்றுமறி யாயோநீ
யென்செய்வே னய்யோ பாவி
கர்த்தனை பிரிந்தவர்க ளெத்தனை யனந்தமதைக்
காட்டுமிவ் வுலகின் கண்ணிற்
காணாத காட்சியோ வாழ்நாளைப் போக்கினரிக்
காலமதி லெனை யாள்வையோ
நித்தனே நிராமய நிர்மல சுரூபனே
நீங்காம லெந்நாளு மென்
னெஞ்சகந் தனிலிரு வஞ்சக மெலாமறு
மென்னிதய முன்னிதய மாம்
பத்தனென் றன்புபுரி நித்யசுந்தர சோதி
பண்ணிவை யென்னு ளத்திற்
பாராதி யண்டங்க ளத்தனையு முன்னிதயம்
பரவெளியி னின்ற குருவே. (4)

கருவுரு வானதவ் வெளியிலோ நின்னன்பர்
கண்ணகம் விண்ணா தனிலோ
கலையிலோ கதிர்காணு நிலையிலோ வகண்டத்திற்
கதித்தமுக் குணமத னிலோ
வருணின்ற விடத்திலோ வலையிலோ வலையிலா
வமர்ந்தவ ரிடந் தன்னிலோ
வங்கைகொடு நெல்லியங் கனியிலோ வதிசூர
வமரர் போர்க் களமதனிலோ
தருங்கற்ப சமாதிநிலை தன்னிலோ சமயநெறி
தானுள மறிந்த ததிலோ
சராசரந் தன்னிலோ நிராமயப் பொருளிலோ
தாரணையின் வாசி தனிலோ
பருதிமதி யைப்பிடித் தங்குவ ரிடத்திலோ
பதியோக மதியின் வாழ்வே
பாராதி யண்டங்க ளத்தனைப் முன்னிதயம்
பரவெளியி னின்ற குருவே. (5)

நிதியோக பதியில்வா முதியோக முள்ளநீ
நிர்ச்சிந்தை காட்டி நிற்பாய்
நிலையாதி கலையிலே யலையிலா வெளியிலே
நிர்மலமு முள்ள பவனே
மதியற்ற வாழ்விலே சிவராஜ யோகனே
மதுரசம் பிழிந்து காட்டாய்
மனமாயை யற்றுமே யானந்த மாய்நின்று
மருவி யழைத்திட லாகுமே
கதிகாட்ட வல்லநீ ரதிற்கண்ட பொருளுநின்
கண்காண வாடி நிற்பேன்
கலையிலகப் பட்டவென் கற்பக விருட்சமே
காட்டுவது மெக் காலமோ
பதியிலே விதியற்று பரமமோனந் தங்கி
பரப்பிரம மாகி நின்றாய்
பாராதி யண்டங்க ளத்தனைபு முன்னிதயம்
பரவெளியி னின்ற குருவே. (6)

சாதனை யில்லாமலே பண்ணிவைப் பாயருட்
டகுமோ பரா பரத்தே
சந்த்ரமண்டலந் தேய தந்தைதாய் நீயலோ
சாதனைவை வாசி யேறும்
வேதமீ தல்லவோ காதலறவே செய்யும்
விண்ணவர் துதிப்ப திதுவே
வெட்கங் கெடச்செய்து பக்குவம தாக்குமே
வேறொரு வுபாய முளதோ
மாதவம் புரியுமே மந்திர மிலாவாழ்வு
மதியிலாப் பெரு வெளியிலம்
மதத்திலே நீவைத் தாளாக்க வில்லையோ
மறந்துமே யேனி ருந்தாய்
பாதமலர் தொழுதியான் பற்றினேன் சிற்றடியிற்
பாரா திருப்ப தேனோ
பாராதி யண்டங்க ளத்தனையு முன்னிதயம்
பரவெளியி னின்ற குருவே. (7)

தூங்குந் தூங்காமலே வாங்கிச் சுழிமுனையிற்
சுற்றிப்பிடித் தேன் மதியினாற்
றுரியநிலை சாந்தத்தை பரிசுழி திறந்துமே
சுக்கான் றிருப்பி ரவிபோ
லாங்குமோ ரானந்த வெள்ளப் பெருக்கி
லமைத்த தொரு வோடமேறி
யறிவாற் சுகானந்த வின்பக் கடலிலே
யகண்ட வெளி யேறிநின்றேன்
தாங்குமன மதிலுறச் சஞ்சார மாய்நிற்க
சாமியெனை நழுக விட்டாய்
சாதனை பழக்கமோ மாதவ சிரோன்மணித்
தகுமோ வுன்னழகி தாமோ
பாங்கிலய மாகவே பரவெளியி லெனைவைக்கப்
பாராமுமக் குண்டோ சொலும்
பாராதி யண்டங்க ளத்தனையு முன்னிதயம்
பரவெளியி னின்ற குருவே. (8)

பேசவறி வில்லாத பேரின்ப ஞானத்தை
பேசுதற் காரு மிலையே
பெற்றவளுக் கல்லவோ பிள்ளையருமை தெரியும்
பெற்றி லார்க்குத் தெரியுமோ
பாசம் பிடித்தவர்க் கென்னபலன் கிட்டுமோ
பாராத பேர்க ளுண்டோ
பரமனே யுன்னருளைக் கண்டுகளித் திட்டவருன்
பாத மறக்க வசமோ
தேசமெங்குஞ் சுற்றித் திரிகின்ற பேயர்க்குத்
தெரியுமோ பிரம ஞானந்
தெரிந்துளோ ரிடத்திலும் பழகிவர வறிவிலார்
செத்தென விருந்து மென்ன
பாசமதை யான்விடப் பாருமே யிதுசமயம்
பரமனே யெனை யாளுவாய்
பாராதி யண்டங்க ளத்தனையு முன்னிதயம்
பரவெளியி னின்ற குருவே. (9)

சித்தாகி வந்தவென் செல்வமே யுனையெவருந்
தேடுதற் கெளி தாகுமோ
சிகப்பே முகப்பே யகப்பொரு ளிலேநின்ற
சிற்றின்ப முத்தின் வழியே
வித்தாகி நின்றும் விளங்கு நிராமய
வேதவே தாந்த முடிவே
விதேகமுத் திக்குநீர் வந்தெனைப் பின்றுடா
வேளையிது விவேக மருளு
மத்தாதி யோகத் தமர்ந்ததொரு முத்தர்க்கு
மருட் காட்டி யழைக்க விலையோ
யனந்தாதி முனிவோர்க்குக் கவுனதி குளிகையை
யடக்கி வைத்தா யறிவினிற்
பத்தாதி சித்தாதி முத்தாதி வித்தாதி
யத்தாதி பேர்க்கு ணின்றாய்
பாராதி யண்டங்க ளத்தனையு முன்னிதயம்
பரவெளியி னின்ற குருவே. (10)

அறிவிலானந்த குருவணக்கம்.

மோனத்தின் கண்ணேயென் முழுமதியி லேநின்ற
முத்திரையால் வந்து தித்த
மோகவிருட் கெடக்கோடி யருணனெனும் வெளியிலே
முத்திக்கு வந்த முதலே
வானத்தின் மீனேயம் மீனினி லகப்பட்டவ்
வாகாயப் பொருளு மானுய்
வந்தோர்க்கு மோட்சமவ் வாகாயங் காட்டியும்
வரத்தைநீ கொடுத் தழைத்தாய்
தானமாகக் கொடுவேனிந்த விவகாரந்
தருமோவப் பலனி னிற்பேன்
தாண்டவ மாடுமே யாண்டவஞ் சோதியுந்
தட்டியே யெழுப்பி விடுவே
னுனதவ் வறிவினல் ஞானவெளி யோடுமு
ண்டக்கந் தெரிந்திட செயும்
வண்டபிண்ட சர மொன்ருய் நிறைந்ததவ்
வறிவிலா னந்த குருவே. (1)

வாய்க்குமோ யின்பநிலை யெய்க்குதென் செய்குவேன்
மதியோக வழியை தரவா
வவ்வழி திறக்கவே மொவ்வுகர ணங்களை
வந்தவழி சென்று விற்பேன்
தேய்க்குமே மதியதைத் தேய்த்துத் திண்ணமதாய்
தில்லைவெளி காண வெளிதாந்
தெய்வசெய லாவிது வையையோ யிம்முறையை
செப்பவொண் ணுப் பெருமையே
யெய்க்குமை யோகடுமை யேற்ற வென்ருலது
வென்னுரு வொன் னுருவமாக்கு
மிதுவல்லோ முத்திக்கு மோட்சநிலை தந்தது
மிந்தமதி வெல்லு மெவர்காண்
மாய்க்குமே சுகாதி முனிவர்மற் றுள்ளோர்
மகாரிஷிகள் பட்டு மாய்ந்தார்
வண்ட பிண்டசர மொன்ருய் நிறைந்ததவ்
வறிவிலா னந்த குருவே. (2)

காயாதி கற்பங் கருத்துணர்வ ரில்லையோ
காயமதி லேன மைத்தாய்க்
கருவைத் துளைத்துமே குருவை யதில்வைத்துக்
கணக்கதாய்ப் பேரு மிட்டாய்ச்
சேயாய்ப் பிறக்கவுஞ் செய்தாய் காமப்பாலைத்
தேகத்தி லுறைய வைத்தாய்
தெய்வமே யிதுசேதி.சொல்லவென் றுலெனது
தேகங் களைப்பா குதே
யோயாமற் கைநோகப் பிறவிசெய் ததுமல்லாற்
றுக்க பெண்டீர் மக்களை
யோடுந் துருத்திவைத் தோடும்படி செய்து
முனையு மெனையும் படைத்தாய்
மாயா விநோதனென் மாயையை யறுத்தொரு
மருந்துளது மதியிற் சொல்வாய்
வண்ட பிண்டசர மொன்றாய் நிறைந்ததவ்
வறிவிலா னந்த குருவே. (3

கிட்டுமோ மெய்ஞ்ஞானங் கிட்டாதென் றுலெனைக்
கிளறிவிடு மதியி லேறக்
கேடிலா ஞானமது ரவிவாய விற்சென்றுங்
கெதிதந் தரங்க மோடி
வெட்டும்வெட் டுப்படாச் சக்கர மமையுமே
மேவவொண் ணாச் சித்திரம்
வேலையை யென்சொல்வே னுலைப் பிடித்துமே
வெண்ணிலா முற்ற மாக்குங்
கட்டுப் படுத்திநீர் கானகங் காட்டியென்
கண்வலைக் கெதிரி னின்று
யக்காலமே யெனக்கருட் சாட்டவும் வல்லநீர்
யாவரிடம் பொருந்தி நின்றாய்
மட்டுப்படும் யோக மதியற்ற வாழ்விதிம்
மாநில மறியா ததோ
வண்ட பிண்டசர மொன்றாய் நிறைந்ததவ்
வறிவிலா னந்த குருவே. (4)

தெருவிலே நடையிலே தில்லைவெளி யொளியிலே
சிதம்பர மேடை நின்ருய்த்
திருநடனக் கூத்ததிற் றில்லையம் பலத்திற்
சிதாகாச மான வெளியே
யுருவிலே திருவிலே யொருகாலைத் தூக்கியே
யோடுமம் பரம் வந்துமற்
றெருரு காலுக்கு வரன்றேடி யுங்காணு
துலசமதி லும் பிறந்தாய்
நிருவிகற் பாதியென் னினைவினிற் புகட்டாநின்
னினைவையு மறந்தாயோ சொல்
நித்திரைகொள் வாயோநீ புத்திசொல லாகாதென்
னெஞ்சந் துடிக்குதையோ
மருவே மருக்கொழுந் தேவாச சண்பக
மனதிலுற வருபவனுநீ
வண்ட பிண்டசர மொன்ருய் நிறைந்ததவ்
வறிவிலா னந்த குருவே. (5)

பாவிக்கு ளன்புவைத் தாயவ்வன் பின்மெய்யைப்
பகரவொண் ணுப் பேயனே
பார்த்திருந் துங்கெட லாகுமோ விளமதியம்
பண்ணிவைத் தவனீ யலோ
ஆவிக்கு ளாவியா யென்னுடலிற் சிக்கியு
மகப்பட் டென்னிட மிருந்து
மகண்டமாஞ் சோதியிற் றனவனுய் நின்றென்
னகமதி லெடுத்தாட்டி னுய்த்
தேவிக்கு நாயக னீயாக வேவந்து
திருடினு யோனி நடுவே
திருட்டையும் புகட்டி யெனக்குள் ளமைத்துநீ
சேரவென் னுடனும் வாழ்ந்தாய்
மாவிருந்தும் பணி யாரமது தின்றிலை
மதியே துனக்குச் சொல்வாய்
வண்ட பிண்டசர மொன்ருய் நிறைந்ததவ்
வறிவிலா னந்த குருவே (6)

காட்டா யிந்தோவந் தச்சுமட் டக்குதிரை
காலோ யிராறி லேறிக்
கட்டியே நாலாற் பிடித்துத் தில்லையருகிற்
காளையங் கிருந்து மேடை
வாட்டாய் மனமொளி பரப்பியே யானந்தம்
வாங்கிவர னரனடி தொழ
வாடாமல் வாடியுனைக் காணவந் தேனெனை
வம்மாடு மறைத்துப் படுக்கத்
தேட்டாள னுய்வந்து தில்லையைக் கண்டுமென்
றீவினை போக வில்லையே
தில்லையைச் சொலவென்று லெல்லை யில்லையப்பா
திருவுளச் செயலி தாமோ
மாட்டாயோ மனமறக் காட்டாயோ காட்டினல்
மனமாயை யற்று வருவேன்
வண்ட பிண்டசர மொன்றாய் நிறைந்ததவ்
வறிவிலா னந்த குருவே. (7)

சேருஞ் சேராததோ திருவுள மிருக்கயான்
றேடியலேந் தேனே வெகுநாட்
டிரும்பிப் பாராதெனத் துரும்புபற் றிக்கடற்
றிறந்தது போலங் கடைந்தேன்
யாருமே யெனக்கில்லை சேருங் கதிநிலையி
லன்புள்ள புதல்வ னலவோ
வடைக்கலம் புகுந் தியான்கை விடப்போகே
னடக்கியென் னுள்ளம் வைப்பாய்க்
காருமிக் கடையனைக் கைவிடா திருக்கவென்
கண்ணகத் திருத்தி வெளியே
காட்டுவிரித் தருணந் தருணம்விட வேறில்லை
கண்களித் திட நாளில்லை
வாருமே மதிதேய்ந்து கதிரோன்ற னுளதாய்
வரங்கொடு மிது தருணமே
வண்டபிண்ட சர மொன்றாய் நிறைந்ததவ்
வறிவிலா னந்த குருவே. (8)

கரங்கொண்டு வீசுமென் கண்ணருவி பாயக்
கலந்துருகி யொன் றுருகுமக்
காளையைக் கட்டவொரு கால்கொண்டு வீசுமே
கதைமுடிய வெளியில் வருவேன்
பரங்கொண்டு பாயுமப் பரமானந் தத்திலே
பற்றியெரியு மென் னுளம்
பார்த்திருந் தவ்வெளியில் வீற்றிருக்கச் செயும்
பசியா விளைத்து வுன்னை
சரந்தொடுத் தேறுவேன் சர்வகாமிய நீக்கிச்
சாமியே யானுகு வேன்
சம்மத முனக்குண்டோ வுள்ளது சொல்லிவிடுஞ்
சாதனைக ளற்று வருவேன்
வரங்கொடுத் தாள்வையோ சிவராச பூபதி
வாராத மோன மமையும்
வண்டபிண்ட சர மொன்றுய் நிறைந்ததவ்
வறிவிலா னந்த குருவே. (9)

கார்க்கவென் றுலெனது காயநிலைக்க விலை
காலை மடித்தும் பார்த்தேனே
கலையா லடக்க வென்றுலோ கதிர்மதியுங்
கண்டுகண் டோடு தையோ
பார்க்க வென்றுலெனது கண்ணுணிப் போகுது
பதைபதைத் திடுதே யுள்ளம்
பார்த்திருந் தாளவிலை நேர்த்தியிது வோவையா
பாரா திருப்ப தேனே
வேர்க்கவே யென்னுளம் வெந்துயர மேவந்து
வெளி யொளியாய்ப் போகுதே
வினையறுக்க வந்த விசும்பர மொளியோ
விட்டு விட்டுப் போகுதே
யாக்க வென்றுலென தாவித் துடித்துமென்
னங்க நீறுய்ப் போகுதே
வண்டபிண்ட சர மொன்றுய் நிறைந்ததவ்
வறிவிலா னந்த குருவே. (10)

நடனகுருவணக்கம்.

எள்ளள வாகிலு நிலைக்கவிலை யிக்காய
மென்செய்வேன் கர்ம வினையோ
யிடையறுப் பழகியு மறிந்துகேட்க விலையோ
யிப்பிறவி தப்புமோ சொல்
வள்ளலே யெனக்குநீ ருள்ளது சொல்லிவிடு
மருவி மெள்ள வருவேன்யான்
வாசியை யடக்கினாற் றேசியைக் கண்டுநிதம்
வலமதி லோடி நிற்பேன்
கள்ளக்கருத்து வுண்டோ யில்லையோ சொல்லுங்
கதிர்காண மதியும் வாடுங்
கதிர்மதியு மொன்றாகக் கூடிக் கலந்துமே
கங்கையில் ஸ்நான மாகிக்
கொள்ளையிட் டவ்வெளியில் வெள்ளையைக் காட்டிவிடுங்
கோலமது தெரியும் வெளியே
கும்பக மடக்கியே யம்பிகையின் யோகமதிற்
குதிகொளு நட ராஜனே. (1)

வெறிகொளப் போவனோ வெட்ட வெளியிற்செல
விதேக முத்தி யடைவனோ
வெட்டுண்டு போகநின் றட்டாங்க யோகத்தில்
வீற்றிருக் கச்செய் வையோ
தறிகொண்டு நெய்குவேன் சாம்பவி தனைக்காட்டுந்
தட்டா னிறையில் வருவேன்
சாமியைக் காணுமற் பூமியி லிருப்பனோ
சஞ்சலம் வைக்காதிர் காண்
அறிவினிற் கண்டுயா னனந்த மாடவே
யடக்கிவை யென்னு ளத்தி
லருணாசல மில்லாமலே தானாகி யேநிற்க
வழித்து விடும் போதனையுங்
குறிகண்டு போவனோ கொடுக்கின்ற பொருளிலே
கூச்சமற் றிருப்ப னோபார்
கும்பக மடக்கியே யம்பிகையின் யோகமதிற்
குதிகொளு நட ராஜனே. (2)

செத்துவிடு வேனேயா னத்துவித நிச்சயஞ்
சேர்ந்து வாழ்ந் திருப்பதறியேன்
தில்லையே யெல்லையே கொல்லையே காட்டியே
யில்லை யென்றால் வரந்தா
சித்துவிளை யாடுமோ வற்றுவிடுமோ வையா
சித்தாதி நித்ய யோனே
சிதறுதே கதறுதே யுதறுதென் செய்குவேன்
சிதறாமல் வர மளியுமே
வித்துமுத்தாய்ப் போக சித்திரமணி மண்டபம்
வெண்ணிலாக் காட்டி வையும்
வேகாத் தலையதையு நாலாகச் செய்யுமே
வாகாமற் போனு லுந்தா
கொத்துடனு முத்துச் சரங்கோர்த் ததுபோலுங்
கோழையறுங் கலை மதியினுற்
கும்பக மடக்கியே யம்பிகையின் யோகமதிற்
குதிகொளு நட ராஜனே. (3)

தொட்டுவிடப் போவனே துரைராஜ யோகத்
துரியநிலை சாந்த வெளியே
துடைத்துப் பிடித்தே யடுத்தடுத் தேநின்று
சோதியதிற் கண்ட நிறைவே
யட்டுப் பிடித்து மதிலொரு விருளறை
யந்தோ சோதியை மறைத்து
அடக்கிச் சுருக்கியு மேனேக்கி யேபார்த்
ததிலொரு வெளியுங் கண்டு
வெட்டுவோ மென்றால்வெட் டுப்படா சக்கரம்
வேறொருவர் யாருங் காணுரிம்
மேதினியிற் கண்டவர்க ளெப்படி தவம்புரிந்
திளமதியை யுண் டார்களோ
கொட்டுமே ளத்துடனே கூற்றன்வரு வானேக்
கொண்டு போவானே யையோ
கும்பக மடக்கியே யம்பிகையின் யோகமதிற்
குதிகொளு நட ராஜனே. (4)

சொல்லா யொருமொழியை சொல்லாமற் சொல்லியே
சூத்திரப் பாவை யதனுட்
சூதாகச் சொல்லிவிடும் பாதிமதி தேடவுஞ்
சூக்மத்தை காண்பே னியா
னல்லாய்கே ளப்பனே தில்லைவாழ் யோகனே
நடராஜ பூபதி யுநீ
நாடியி லகப்பட்ட சோதியைத் தட்டிவிட
நாட் செல்லுமோ சொல்லுவீர்
வெல்லா யுனைவெல்வே னீவெல்லு வேனெனில்
வெளிச்சங் காட் டென்னகத்தில்
வேடிக்கை பார்த்துமே கூடிக் கலந்துவிடு
விதியதை மாற்றி வருவேன்
கொல்லாயோ யென்னைக் கொடுத்துப் பலிவாங்கி
கூட்டி லிருக்கின்ற மூச்சைக்
கும்பக மடக்கியே யம்பிகையின் யோகமதிற்
குதிகொளு நட ராஜனே. (5)

எட்டிப்போகும் யோகங் கிட்டியே வரச்செய்யு
மிடகலையிற் றங்கி நிற்பே
னேற்றிப்பா ருஞ்சுழியிற் காற்றையு மடைத்தியா
னேறியுன் னிடம் வருகுவேன்
வெட்டியறி வின்வாளாற் சுட்டிமுனை யுங்கிட்டி
வெய்தனிலே வந்து நிற்பேன்
வெட்கங் கெட்டேவோடும் பட்டியான மதியும்
வேரூறு திரும்பி வருமே
கட்டியே புன்மதியைக் காற்றிலா தோரிடங்
கதிரவ னுடன்சேர்த் துப்பின்
காலமது வல்லையே சாலஞ்செய்யு மதியுங்
காலைத் தூக்கியு மிழுப்பேன்
கொட்டிவிடு வேன்பாருங் குறையக் குறையவுமதி
கூத்தா டொன்னிடம் வருகுமே
கும்பக மடக்கியே யம்பிகையின் யோகமதிற்
குதிகொளு நட ராஜனே. (6)

விந்தின்வழி யாகவந் திந்தமதிக் கென்செய்வேன்
விதிமோச மோ வறியேன்
விலையில்லா மாணிக்கக் குஞ்சரப் பாதனென்
வினையையு மறுத்து வெளியே
பிந்திவர லாமோவென் றெண்ணி னுலுமறு
பிறப்பிலை யென் செய்குவேன்
பேரின்ப ஞானத்தை சிதமதி யாலோதிப்
பேருமிடு யெந்த னுக்கு
முந்திவந்த குறையாற் செந்தி யென் னுடனு
முடித்தர்யோ யானறிகி லேன்
மோசமது செய்தாயோ பாசமது சுற்றவு
மூடிவைத் தாயோ சொல்லுங்
குந்திவிடும் விந்துவை குறையவிடச் செய்தயோ
குற்றத்தை நீர் பொறுப்பீர்
கும்பக மடக்கியே யம்பிகையின் யோகமதிற்
குதிகொளு நட ராஜனே. (7)

ஆலயங் கட்டியே சாலை யுண்டென்று
மடைத்துவைத் தென்னு ளத்தி
லகங்கார தத்துவ மூட்டைகளை யுஞ்சேர்த்
தவ்வாலயத் துள்ளும் வைத்தாய்
மாலயனுங் கூடவே மதத்தையுண் டாக்கியே
மனமரு திருக்கச் செய்தாய்
வஞ்சகத் தாற்செய்த நெஞ்சத்திற் கென்செய்வேன்
மதியைப் பிடித்துத் தாவா
சாலஞ்செய் யாதீர்கான் காலம்பார்த்து வருவேன்
சமயநெறி யெனக் கருளுஞ்
சாலோப சாமீப சாரூப சாயுச்யஞ்
சார்ந்து வருவேனெந் நாளுங்
கோலஞ்செய்யவும் வேண்டாம் பாலனுக் கருட்டருங்
கூற்றனெனை யணுகாமற் செய்
கும்பக மடக்கியே யம்பிகையின் யோகமதிற்
குதிகொளு நட ராஜனே. (8)

வஞ்சகத் தாலெனைக் கொஞ்சவய துள்ளன
　　வரைந்துவரச் சொன்னயோ சொல்
மனமது துணிந்ததோ மார்க்கண்ட னைப்போல்
　　வயதுபதி னாறவியில் வை
நெஞ்சகத் தைப்பிளந் துஞ்சல் செய்யாமலே
　　நீடூழி காலம் வாழ்க
நினைவையுங் கூடவை கனல்வாதை வந்தெய்தி
　　னீங்காச் சுகித்தி ருப்பேன்
தஞ்சமென் றடியார்க்கு வஞ்சகஞ் செயலாமோ
　　சாமிநீ பேரு முண்டோ
சாதித்து வந்தோரை பேதிக்கச் செய்யாதீர்
　　சாமிநீ தயை கூறுமே
குஞ்சரத் ததிலாடும் பஞ்சரத்ன வொளி
　　கூறும் வாசியி லேறியே
கும்பக மடக்கியே யம்பிகையின் யோகமதிற்
　　குதிகொளு நட ராஜனே. (9)

வள்ளுவன் தாயுமா னந்தன்சுக ராதியோர்
　　வழங் ககத்திய னிடையன்
வானம் பார்த்தஞான வெட்டியுங் கொங்கணவன்
　　மாணிக்கம் மஸ்தான் முதல்
விள்ளினீர் பதினெண் சித்தாதிவெண் காடர்க்கு
　　விளங்கியுன் னுருவ மாக
வேதாந்தங் கடந்துநின் றெல்லோர்க்கு நின்னருளால்
　　விதியதை மாற்ற விலையோ
தள்ளுமிச் சாதனத் துள்ளோ ரடக்கமாய்ச்
　　சாதனை யில்லா வாழ்விலே
சகச சமாதியுஞ் சஞ்சார மாய்நிற்கத்
　　தமியேனுக் கருள் புரிகுவாய்
கொள்ளுமிக் கடையனைக் குறைவராசிர் தாக்கியக்
　　கூட்டத்தி லெனையும் வைத்து
கும்பக மடக்கியே யம்பிகையின் யோகமதிற்
　　குதிகொளு நட ராஜனே. (10)

பூ ர ண ம்.

இன்பநிலை தனிலிருந் திருளறையி லகப்பட்டே
னன்பினிடத் திருந்த வன்பே
யிதயமதி லுதயமா யதிலுதய மாய்நிறை
யெங்கு நிராமயத்தி னன்பே
துன்பமதி லன்புவைத் தன்பர்க ளிடத்திலே
துரியநிலை தந்த முறையே
தூண்டிவிட பூரண மாண்டிருந் தையனே
துவாத சாந்தத்தின் பொருளே
யன்பில்வரும் வெளிபோ யகண்டத் திலேநின்ற
வருளின் பெருக்க மொளியே
யனுதியே யெனக்குமதி பாதியை யோதிவை
யடக்கஞ் சுருக்கு நிதியே
வன்பனிடத் திலுமிருந் தெந்தனகத் திற்புகு
மதியைத் துரத்தி யடியே
வரத்திலே சிரத்திற் கரத்திலெழுஞ் சோதியே
மதியே பூரணத்தின் வெளியே. (1)

அன்னைகொலு வினிலிருந் தாயிரத் தெண்பீட
மமர்ந்தாயென் னருளி னிறையே
யருணனொளி யிற்பிரிந் தருணம்பார்த் துப்புவியி
லாச்சரிய மாய்கை யானாய்
பின்னையு மென்னையிப் புவியிற் பிறவாமற்
பேரின்ப ஞான மருள்வாய்
புத்திரனுக் கொத்ததொரு சுத்தமான வெளியைப்
போதிவை மந்திர மதியே
நின்னையு மென்னையொரு வன்னையின் பீடமதில்
நிறுத்திவை யோர் சமாதி
நித்திரைகொள் வேன்மடியிற் சுற்றின்மதிள் கோபுர
நிலைக்க வைப்பா யருளிலே
வன்னமொழி மாதிவளு மென்னிதஞ் செய்வளோ
வாசியதி லேறுந் தேசி
வரத்திலே சிரத்திற் கரத்திலெழுஞ் சோதியே
மதியே பூரணத்தின் வெளியே. (2)

ஆதியி லமைத்ததொரு சோதிமுதற் பூமியி
லடுக்குநிலை யாவும் பார்த்தே
னதிமயங் கவனரொளிப் புவியுமா காயமுதற்
றண்டம் வெடித்திட லானனே
சேதிசொல வொன்றுமில்லை சித்தம்பே தித்துநின்
றினகரனி னொளி கண்டுமே
சிந்தை கலங்கிடநின் றவ்விந்துவி லெழுந்தவொளி
திகைதப்பி வெளி யுண்டாச்சு
சாதியற வேதமிதோ பாதிவழி வந்திலையோ
சந்தின்வழி யொன்று போகச்
சங்கர சுயம்புவே மங்கை யபிராமிநின்
சந்நிதி வெளிச்சங் கண்டு
வாதியெனைச் சொல்லறச் சாதித்த பெரியோரின்
வாதமலர் தொழுது நிற்க
வரத்திலே சிரத்திற் காத்திலெழுஞ் சோதியே
மதியே பூரணத்தின் வெளியே. (3)

அங்குமொரு சாதனத் தின்பூமி பெருமையை
யாரறிவ ரிஷிக ளல்லா
லறிந்துரை சொல்லவே பொருந்துமனங் கூடலை
யதிசயத் தென் சொல்லுவேன்
திங்களணி யன்பூமி தங்குவரின் சொந்தமே
செப்பரிய வப்பன் செய்த
செந்தீயாலே மூட்டியு மிந்தோ வந்தப்பூமி
செய்தானே கையின் முறையாற்
றங்குமிச் சாதனத் துள்ளோ ரடக்கமோ
சாமிகுரு நாதன் செயலோ
சஞ்சல மில்லாப்பூமி யென்செய்வேன் ரவியொளி
தட்டா னிறைக்கு வந்த
வங்கவா னருளினுற் பங்கயா சனர்முதல்
வாழ்த்தித் துதிக்க வளியே
வரத்திலே சிரத்திற் காத்திலெழுஞ் சோதியே
மதியே பூரணத்தின் வெளியே. (4)

உதயமதி லுருகுதென் னுள்ளமதில் வெள்ள
முருகி யானந்தங் கொள்ள
வுலகமதிற் கதிதரப் பதியதாய்க் காட்டுதே
யுதித்தே யென் னுளமுருகுதே
வதைவிடவே றன்புள மருந்தது தெரியவில்லை
வாகாய மாய்ப் போகுதவ்
வாகாயத்தின் கனியைத் தின்பவரிங் கில்லையோ
வறிந்த சித்தாதி யோரே
பதைபதைத் தென்னுளம் பார்த்துண்டு போகுதே
பார்க்க வொரு சேதியுளதோ
பதஞ்சலி யார்கண்முதற் பார்த்துக் களித்ததிது
பார்க்க சித்தாகுமோ சொல்
வதைகளெல்லாம் போச்சு மதியொளிவி னுலிந்த
வஞ்சக மெனை வாட்டுதே
வரத்திலே சிரத்திற் கரத்திலெழுஞ் சோதியே
மதியே பூரணத்தின் வெளியே. (5)

மனமறியப் போகுமோ மதிவழி சுழியிலருள்
வரையொணுப் பெருமை யிதுவோ
மட்டடங்கா வெள்ளம் பெருகிநின் ரோடுதே
மணிமந்திர மாதி யோக
நினைவிலெழுங் கரமலரை நின்னடியி லேதூவி
நெஞ்சமதைத் தூபங் காட்டி
நித்யசஞ் சாரவொளி பக்குவந் தனையோதி
நின்னன்பின் முன்னின் வினையை
முனைக்குளற வேவெட்டி முத்திரைக் குத்தான
முத்தனருட் கூத்துக் கிரையாய்
மூலமதிலே வந்து நின்னன்பர் கூட்டத்தின்
முத்திரை யில்லாமற் செய்யும்
வனங்க ளெல்லாமெரிய வாவாவெனச் சொல்லி
வாதஞ் சுடு மன்னையும்
வரத்திலே சிரத்திற் கரத்திலெழுஞ் சோதியே
மதியே பூரணத்தின் வெளியே. (6)

திங்களுதித் தென்குரு வங்கச் சிதம்பரந்
    தியங்கா வெளி யானகுருவே
தீயவரவந் தீண்டற் றீவினை மாயப்பையுந்
    தில்லைவெளி நின் றெரியுதே
கொங்கணவ ரெல்லோருந் திங்களுதி யற்றதோ
    குறியற்று வாசி யிலையோ
குலமற்றுப் போனீரோ மலமற் றீரோயெனைக்
    கூப்பிட் டுரைக்கொ ணாதோ
தங்கமே லிங்கத் தவம்புரி கின்றயென்
    சஞ்சல மற்ற கண்ணே
தாவிப் பிடித்துமே வேடிக்கை பார்த்துத்
    தவமே யெப்போதுஞ் செய்யே
வங்கவே கொங்கணர் வரத்தைநீ வாங்கிவா
    மதியற்று போகச் செய்நீ
வரத்திலே சிரத்திற் கரத்திலெழுஞ் சோதியே
    மதியே பூரணத்தின் வெளியே. (7)

குருமுறையே வருமறையி னருளினிரு விழியிற்
    கொடுத்தாய் பூரணத்தி னாலே
கூக்குரலிட் டழுகனுடன் வாக்குமன மெட்டா
    குவித்தே யவ்வுலக நின்றாய்த்
திருவருளைக் குருமகனுந் திரிபவனுக் குள்ளமர்
    தியாக்குவீ ரருண கிரியைத்
திங்கிலா மகனெனத் திருவுள மறியுமே
    தெரியாத பால னலவோ
கருவில்வரு வுருவதாய் சுரூபநிலை யாய்வந்த
    கருணா கடாட்ச தருவே
கதைக்குப் பின்னேவரு மகத்திற்குள் ளுள்ளொளி
    காட்டுவாய் கண்ணி னெதிரே
வருநெறியிற் றவறிடா வருளின்மன மடியவே
    மதியே யிறக்க வருள்செய்
வாத்திலே சிரத்திற் கரத்திலெழுஞ் சோதியே
    மதியே பூரணத்தின் வெளியே. (8)

காரணம தாடியதோர் பூரணத்தென் சொல்வேன்
கலைமதியும் விலை போகவே
கணக்கறிய விற்கக் கருத்திலாப் பாலனே
கதையெனக் கதிக முளதோ
சாரணையின் வாசியது தானடக்கிக் கொண்டு
தட்டுமுட் டோசை யிலையே
சாஸ்திர வேதமானுற் ருனுகி நிற்குமே
சங்கரா சுழுத்தியோ சொல்
நாரணனு நான்முகனும் பூரணனு மானநீ
நாதியற் றவ்வெளி யிலே
நான்குடி யிருக்கவுந் திருவுள மறிவாயிந்
நாட்டினில் யாரறிவர் காண்
வாரண வரனேநீ காரண சொரூபனவ்
வளநாட்டுக் கதிப னுன
வரத்திலே சிரத்திற் கரத்திலெழுஞ் சோதியே
மதியே பூரணத்தின் வெளியே. (9)

கோணலை யகற்றிவிடு பூணலை யறுத்துவெளி
கொண்டுநின் மேற்ருச்சு வேன்
குலையவே கலையிலே யலையிலாச் சோதியின்
கொன்றுனைத் தின்று விடுவேன்
காணலா மேயுனையுங் கதைமுடித் தவ்வெளியிற்
கதிர்மதியு மொன் ருகவே
கலையிலுரு வானவென் கர்த்தவ்ய மேயுனைக்
கண்டுங் காணும னின்றேன்
தோணவு மெனக்குத் துணையில்லை யோசொலுந்
தொண் ணூறுஞ் சென்று வருவேன்
தொக்குநெக் குருகியே யக்குவல யந்தனிற்
றுெண்டு புரிந்தே னின்றுமே
வாணளொழியு முனமே வேணதவத் தைக்கொடு
வாக்கையொழி மோன மாகும்
வரத்திலே சிரத்திற் கரத்திலெழுஞ் சோதியே
மதியே பூரணத்தின் வெளியே. (10)

சின்மயானந்தகுரு.

ஐந்துகரத் தாற்பற்றி யைம்புலனை யுஞ்சுட்
டைந்தெழுத் தோ ரெழுத்தி
லடக்கியே கலைமதி யுடற்குட் புகுந்து
மகண்டமாஞ் சோதி யாகி
வெந்துயமம் வந்துமே மிக்கவனன் மூட்டியே
விதியறிந் திடமுங் காட்டி
வேணமதியைக் காட்டி யாணவந் தனைவெட்டி
விரி கதிராய் விளங்க
நொந்துமனம் போகவே சிந்தையறவே யென்னு
ணுட்பமாய்க் காட்டி யறிவை
நூதன விவேகமும் பாதந் தூக்கியாட
நுண்மையிலு முண்மை வெளியிற்
சிந்துபாடியே நின்று வந்துவெனக் குள்ளம்மை
சிலம்பொலி முழக்க மருள்வாய்
சிலைக்குளே கலைக்கு ளலைக்குள்வெளி நின்றவென்
சின்மய மான குருவே. (1)

கைபிடித் துலகெலாங் கண்ணிமையை மூடியே
கடின மலர் தூவிவிட்டாய்
கலையாலெழுஞ் சோதி முச்சுடராய்த் தோன்றி
கற்பச் சமாதி யாகி
மெய்யிலருள் குடிகொண்ட விண்ணொளி கடம்பனே
விகற்ப மில்லாம னின்றாய்
மேதினியி லெல்லோரு மியாரறிவ ரிப்பூதுமை
மேல்வாச லுள்ள பவனே
பொய்யிலா மெய்யறிவி லுள்ளறிவி னின்றவென்
பூரணமு மாடி நின்ற
புத்தியிற் சூக்மமாகி யுத்துவித மேவந்த
புருவநடு மைய நின்றாய்
செய்ரவியு மொளிகாந்தி சிக்காமற் சிக்கியே
சிவசிதம் பரத்தின் கண்ணே
சிலைக்குளே கலைக்கு ளலைக்குள்வெளி நின்றவென்
சின்மய மான குருவே. (2)

மனநிழற் கல்லாலின் கீழிலொரு மொழியதாய்
வாய்விளாத் தந்திர மதாய்
மதிபிடித் தேறியே வந்துமருள் காட்டினுய்
மந்திரமிலாச் சோதி யாற்
கனகசபையைக் காட்டி கர்த்தனருட் டசதீட்சை
கலைமதியி லாடச் செய்தாய்
கதிர்காட்டி னுயொளி பரப்பியே யானந்தங்
கண்மாரி சொரிய விமையில்
வனமோன முள்ளவென் ஞானசம்பந் தனே
மதிதேய ரவியில் வாங்கி
மண்டலமூன் றுங்காட்டி யண்டபகி ரண்டமாய்
மதிக்கப்பால் ரவியிற் ருனுய்
சினமிறக்கச் செய்தாய் சிற்சுதய மானவென்
செல்வனே யிந் திரியனே
சிலைக்குளே கலைக்கு ளலைக்குள்வெளி நின்றவென்
சின்மய மான குருவே. (3)

கான்மாறி மழைசொரிய வுள்ளன்பி லெணைவைத்துக்
கதிர்மதியி னிமை யடுப்பாய்
கணக்கா யமைத்துங் சலைமதியி னுலைவைத்துக்
கதிரொளியின் றீ மூட்டியே
வான்மாரி நித்யசத் தானந்த சோறதனை
மனம்பொசித் துருகி வாட
வஞ்சனையெலாங் கறியாய் மதியாற் ருளித்துமே
வாஞ்சைபுரி சோதி நிலையில்
மீன்மாறிப் போய்வெளித் தானுய்நிற் கின்றமிர்த
மிகசோதி கலையிற் பொசிப்பேன்
மித்ரபே தங்கட்போ யத்துவித சூத்திர
மெய்யுலக மென்னு ளமையுந்
தேன்மாரி பொழியுமே நிர்விகற் பாதியுந்
திங்கள்கதி ரொன்ற தாகுஞ்
சிலைக்குளே கலைக்கு ளலைக்குள்வெளி நின்றவென்
சின்மய மான குருவே. (4)

மாறுத வுள்ள மதிக்கண் திறந்து
மனக் கதவின் பூட்டுடைத்து
மாறியே யொருகாலைத் தூக்கி பூரணநிற்கு
மதியோக மிது வென்பர்க
ளாறுது மாறுது வுள்ளம துருகியே
யானந்தங் கொளும் வெள்ளமே
யறியாத பக்குவக் கார னானுமிந்
தாச்சர்ய மொன்று போதுங்
கூறுத பொருளிது கும்பக மடங்குமே
கூற்ற னில்லா பிரமமாங்
குதித்தெழுந் தோடாது மணிவாசலிற் புகுங்
குறைவிலா வாழ் வெனக்குத்
தேறு தென்றுநீ நினைந்தாலு மாறுது
சித்ர மணி மண்டபத்தே
சிலைக்குளே கலைக்கு ளலைக்குள்வெளி நின்றவென்
சின்மய மான குருவே. (5)

கூட்டிற்றிருப் பணிவேலை குருக்க டெருக்களுடனுங்
கூட வெனையும் படைத்தாய்
கூடத்திருந்த மூச்சைக் கட்டிக் கலைமதியாற்
கும்பக மடக்கச் செய்தா
யாட்டிய திருநடனங் காற்றிலா தோரிட
மமைத்தா யென்னறிவி னடுவே
யாகாயம் புவியுமென் னந்தரங் கங்காட்டி
யம்புவியிற் சந்திர னொளிவுங்
கோட்டியா னுதசங் கீதமணி யோசையுங்
குறைவிலாத் தீப வொளிவுங்
குதிரைகட்டி யாண்ட வசுரர்க ளெலாம்வெட்டி
குய்ய நடு மய்யத்திலே
தீட்டியே மனதமுக் கறவாலம் பிகைவிட்டிற்
சீதமதி யைப் பிடித்தாய்ச்
சிலைக்குளே கலைக்கு ளலைக்குள்வெளி நின்றவென்
சின்மய மான குருவே. (6)

எத்தனையோ கோடி நூல்கள் கற்றிருந்தா
    லிறப்புப் பிறப் பொழியுமோ
இதயகுருவைத் தெரிய ஞான தேசிகனலா
    லிச்சென்ம மாறு மோதான்
பித்தனைப் போலுரு வெடுத்தீர்களே யல்லாற்
    பேரின்ப வீடு முண்டோ
பேசுவீர் ஞானம்விட வேறுவழி யாற்செல்ல
    பேசு மந்த்ர மெதுவுளோ
அத்தனருட் பெறுதற்கு யிதுதருணம் வேறில்லை
    யலைகிறீர் புகை குடித்து
அக்ங்கார கோப மடங்குமோ வலையாதீ
    ரையனருட் டையல் மதியிற்
சித்தனே சிதாகாச ரூபனைத் தெரிசிக்கச்
    செகங்கொண்டு வாரு மையா
சிலைக்குளே கலைக்கு ளலைக்குள்வெளி நின்றவென்
    சின்மய மான குருவே. (7)

வஞ்சனை யெலாமறச் சாத்திரஞ் சொன்னதிது
    வாதாடி யேன் றிரிகிறீர்
வார்த்தையி னுல்வெகு வாய்ஞானம் கிட்டுமோ
    வாஞ்சை புரி தேசிகனிட
நெஞ்செரிவி னுலேநீ கொஞ்சவயதிற் சாவாய்
    நிஷ்டூரம் பேசாதிர் காண்
நிலவுமணி மண்டபங் கலைக்குள் ளிருக்குது
    நித்ய வஸ்துவைச் சேர்வா
அஞ்சிப் பயந்தியான் கெஞ்சிவாங்கி வந்தே
    னுச்சர்ய சித மதியை
அறியலாகுமோ சொலாய் பரியாசஞ் செய்யாதீ
    ரதியோக மதியின் வாழ்வை
செஞ்சடைக் கடம்பனைத் தசதீட்சை பெற்றுலே
    தில்லையின் யோக முண்டாஞ்
சிலைக்குளே கலைக்கு ளலைக்குள்வெளி நின்றவென்
    சின்மய மான குருவே. (8)

தேடரிதற் பொருளிது மானிடரே யல்லாமற்
றேடுஞ்சென் மங்க ளுண்டோ
தெவிட்டாத மாணிக்கக் குஞ்சரப் பாதமிது
தேடியலேந் தேனே வெகுநா
ளாடலிது பாடலுங் கூட மாடங்களு
மப்பன்கை முறையா லறியும்
வாச்சர்ய மிதுவேளை மாச்சர்ய மல்லவே
வையோகுரு விதற்கு வேண்டும்
வாடவரு மதிவேளை காலம்பார்த் துச்செல்லு
மக்களே முறையு மாறு
மதிவேளை யுண்டிட ரவிவாய விற்செலு
மாறுத ராச யோகஞ்
சேடமிருந் தாற்சிக்கு மதியைவல மோட்டிவா
சிதாகாச நீயு மாவாய்
சிலேக்குளே கலேக்கு ளலேக்குள்வெளி நின்றவென்
சின்மய மான குருவே. (9

எட்டிலே யெழுதாத கலேமாணிக் கத்தையு
மெழுதின யெளிமையி னடுவே
யெழுதியே பூரணவி லாசமுங் காட்டினு
யெழுதாம லெனே யழுத்திக்
காட்டியே கருக்குழி பறித்துப் பயிரிடக்
கைவிசி யண்ட மாக்கிக்
கைகாட்டின யையோ மெய்யுலகந் தோற்றவே
கதைமுடிய வெளியி லுருவாய்
பூட்டியே யதில்நிற்கச் செய்தாய்நின் பெருமையிற்
பூசை செய்யவு மறிந்திலேன்
புத்தியில் லாப்பேய னுயினுங் கடையனேன்
புருஷ ரூபங் காட்டியே
தீட்டியே யெனயழைத் திருத்தாண் டவமாடுந்
தில்லேக்குள் வாவு மெளிதாஞ்
சிலேக்குளே கலேக்கு ளலேக்குள்வெளி நின்றவென்
சின்மய மான குருவே. (10)

மெய்யறிவின் குரு.

சாதிமதம் பேசியே சாஸ்திரங்கட் கற்று
சகசுதனிற் பேசு மாடு
தாடியுஞ் சடைமுடியுங் காஷாயம் பூண்டுமே
தலைமொட் டடிக்கு மாடு
நீதியில்லா ஞானம் பேசியே படுகுழியில்
நிச்சயம் வைத்த மாடு
நித்திரையை கைக்கொண்டு கத்திவயர் கழிக்கின்ற
நிலமைதெரி யாத மாடு
ஆதியிற் பொருள்வைத்த தறியாமற் குருவறியா
ரவனிதனிற் பெரிய மாடு
அவர்களெல் லாங்கூடி செத்தென் னிருந்தென்ன
வையோகுரு வருளைச் சேர்ந்தோர்
வீதிவழி சுழியேறி யாதிபிர மத்தினிடம்
விதிமாற்றி வருபவர்கள் காண்
விந்திலே யுருவான வைந்திலொரு பூதமாய்
மெய்யறிவி னின்ற குருவே. (1)

காலமது மதிவேளை கற்பமுண் ணுமலே
கயவர்க ளெலாங் கூடியே
கஞ்சா வபினியுங் கள்ளுண்டு நெறியிலாக்
கண்தெரியா மாடு மானுர்
மூலமதி லெழுந்தருளுஞ் சோதிகண் டேனென்பர்
மூடிக்கண் விழித்து மறியார்
முக்காடிட்டு மறியார் கைக்குள்வருஞ் சோதியின்
முச்சுடருந் தானு மறியா
ராலமமு துண்ணவே நெருப்பார் மயிர்ப்பால
மதினிற்கும் வாசி யறியா
ரையோ குருவறியார் மெய்யறியார் பொய்தனி
லறிந்தே னுபதேச மென்பர்
மேலவாசற் றிறவார் சாலத்தை நம்பாதே
வீற்றிரு மதியி னிடமே
விந்திலே யுருவான வைந்திலொரு பூதமாய்
மெய்யறிவி னின்ற குருவே. (2)

எட்டாத வான்பொருள் கிட்டிவரு மோவையா
யெட்டாமல் வட்ட மாமோ
இருளறையில் வந்ததி தருளறையி னுட்புகுமோ
விதயமதின் வந்த பொருளே
கிட்டாதோ மதிவழி சுரந்துபூ ரணமாமோ
கிட்டினு லெட்டி வருமோ
களறினல் மதிநிலவு மண்டபமு மாகுமோ
கிடைக்க வொளி கதிராகுமோ
அட்டாங்க யோக மதற்குள் ளிருக்குமே
யதைப்பார்க்க வொன்றி ரண்டோ
அக்கனி பழுத்துமே பக்குவப் படுத்துமோ
வையோசிவ ராச யோகம்
வெட்டாத சக்கரம் வேதமுறை முடிவிலே
வெளியிலே தானு குமோ
விந்திலே யுருவான வைந்திலொரு பூதமாய்
மெய்யறிவி னின்ற குருவே. (3)

கதைமுடிய வருகுமோ கண்டபொரு ளுள்ளுறைய
கசக்கிக் குமட்டு மோதான்
கசக்கிக் குமட்டினுற் கலைமதியை யுண்ணவே
கண்ணொளிய தாகுமோ தான்
பதைக்குமோ வென்னுளம் பார்க்கக் கனியாகிப்
பரமனு யுள்ளு றையுமோ
பாராத குற்றந்தா னாகினுஞ் சற்றே
பார்த்தெனக் களிப்பீ ரையா
சிதைக்குமோ சிற்றடி சுரக்குமோ வறிகிலேன்
சிற்சபைபொற் சபை யாக்குமோ
சிறியோன் செய்தபிழையை பெரியோர் பொறுத்துஞ்
சிவரூபந் தர வெனக்கு
விதைக்குமோ வித்தாய் முளைக்குமோ விதையா
விவேகபிர மத்தை யாக்கு
விந்திலே யுருவான வைந்திலொரு பூதமாய்
மெய்யறிவி னின்ற குருவே. (4)

நடந்துவரு மோவையா நாட்டமிட் டுப்பார்க்க
நயனத்தி னுள்ள மருமோ
நயனத்தி னுட்சென்று நடுநிலையி னிற்குமோ
நாசிநுனி போய்ச் செல்லுமோ
படர்ந்துவரு மோஞானம் பற்றியுந் தீபவொளி
பாதத்தி லெனைச் சேர்க்குமோ
பதியேறிப் போகுமோ குதிரைரெண் டுங்கட்டி
பக்குவ படுத்து மோதான்
தொடர்ந்துவரு மோசோதி தட்டினது போலாக
தொட்டி ழுக்க வருகுமோ
துடிக்குமோ வென்னுளம் பதைத்துப் பதைத்துமே
தூணோ மாய் நிற்குமோ
விடந்துரிய மாகுமோ விட்டகுறை யைத்தொட்டு
வினவுமிடந் தானு குமோ
விந்திலே யுருவான வைந்திலொரு பூதமாய்
மெய்யறிவி னின்ற குருவே. (5)

எந்தனருள் விந்திலே யெழுந்ததொரு பூரண
மெடுத்து மாகாயங் காட்டி
யிருந்துதே வறைக்கு ளிருட்குள்வெளி யானதே
யிவ்வுல கமு மறைந்தே
பந்தமதைத் தான்விட படைத்துவைத் தானிதோ
பாரளந் தான் வேலையோ
பரமனுக் கிவ்வேலை யேனிருந் தும்புவியிற்
பாழுலகந் தன்னிற் சிக்கி
தொந்தமா கவேபல சிவகோ டிகளிலுஞ்
சுடுபட்டும் புதைய விட்டுந்
தொந்தரவு மிகபட்டு மெந்ததுன் பங்களிற்
றுணையா யிருந்தா னையோ
வெந்தழுன் மதியேறி பூரணக்கற் பாநியே
பிரமமே பென்னு ளமையே
விந்திலே யுருவான வைந்திலொரு பூதமாய்
மெய்யறிவி னின்ற குருவே. (6)

காணுமணி பூரகங் கலையா லெழுதியுங்
கட்டினய் கோயி லொன்று
கைமுறையி னீவந்து கற்பூர தீபமதில்
கலைநழுக விடவுஞ் செய்தா
யாணும்பெண் ணுங்கூட வக்குடி கெடுக்கவே
யகப்பட்டா யோனி நடுவே
யையோ வெகுகொடுமை தையலிள மதியைநீ
யகப்படா தொளித்து வைத்தாய்
பேணும்வயர் கழிக்கச் செய்ததே யல்லாற்
பெற்றபலன் வேறு முளதோ
பிறவா திருக்கவு மழியாப் பரம்பொருளே
பெற்றுநீ கைக்கு ளாண்டு
வேணுமென் றன்பர்க்குக் கண்ணிலருட் சோதியாய்
விமலனே கலை யோகினய்
விந்திலே யுருவான வைந்திலொரு பூதமாய்
மெய்யறிவி னின்ற குருவே. (7)

சோதிமுதற் பூமியிற் சுழிதிறந் தேபுகச்
சுழியிற் சித்தர்கட் கோடியாய்
சுற்றியே வலம்வந்து கத்தரிக் கோன்மாறற்
றிறந்துநீ வந்த பாலா
பாதிமதி யைத்தேடா பரமனரு ளுள்போடா
பாதையிது மகனே யென்று
பார்த்துவிழிக் கவுஞ்சொன்னர் க்ஷேத்திரமுண் டுன்கண்ணுற்
பார்வைமதி தவரு தென்று
ராதியி லமைத்த சந்த்ரகாந்த மேடையி
லறிவே சமாதி யாகி
யந்தகா ணமுமூடச் சுந்தர யோகம்மதி
யடக்கியங் குட் புகுந்தேன்
வீதிவழி வந்தும் விளக்கொளி தனைப்பார்த்தும்
வீடுபுக நாட் செல்லுமோ
விந்திலே யுருவான வைந்திலொரு பூதமாய்
மெய்யறிவி னின்ற குருவே. (8)

காலிற் சிதம்பரங் கனசபை காட்டக்
கருத்தெனக் கில்லையோ சொற்
காலைசற் றேயிழு மேலேதாக்கி யெனையுங்
காட்டுஞ் சபா மண்டபங்
தாலிகட்டி வைத்த செய்கூலி யைத்தாரேன்
றட்டான்கை நிறையைக் காட்டுந்
தாமதமுண் டோவையா காமிய மெனக்குளதோ
சாமி யருளா லெரியுமே
சாலின்காகம் வைத்த வேலைசம்பள முண்டோ
சரம்பார்த் துனைக் கண்டேனே
சரியாய்ப் போகவில்லையோ பரிதிமதி யைக்கண்டுஞ்
சஞ்சல முனக்கே னிது
வேலிக்கு போட்டமுட் காலிற்றத் தஞ்செய்தேன்
விதியதை மாற்றி யாளாய்
விந்திலே யுருவான வைந்திலொரு பூதமாய்
மெய்யறிவி னின்ற குருவே. (9)

தலைம்கனு நானுக சாமியெனைக் கண்டுஞ்
சாத்திலுத யம்பார்த் தேனே
தற்கமுனக் குண்டோசொன் முக்கோண மூலச்சுழியிற்
சாமியதில் வீற்றி ருந்தாய்
குலைமக னுய்ப்போகக் கொடுப்பாயோ நின்னருளிற்
கோர்ட்டிற் கொடுப்பேன் பிருது
கொடுத்த பிருதைநீ படித்தெனைக் கூப்பிடு
கொண்டே னுனையே சாட்சி
கலைமகனு கக்கொள்ளுங் கதிர்மதியின் றிர்ப்பதிற்
கண்கொளாக் காட்சி யாகுங்
காலிற் சிலம்பசைய பாதந்தூக்கி யாடுங்
கர்த்தனரு ளட்சை யிதுவே
விலைமகனுய்ப் போகவும் வீடுபுகுந் தேனெனையும்
வெளியிலே தள்ளி விடுவாய்
விந்திலே யுருவான வைந்திலொரு பூதமாய்
மெய்யறிவி னின்ற குருவே. (10

சிவராஜயோககுரு.

நிறையோதி பரையோதி நிற்ககலை யோதியே
நித்ய வஸ்துவின் றன்னிலே
நிற்கவொரு வருளோதி பக்குவ வறைக்குளே
நிறைந்த பரிபூரணம தாய்
பிறையோதி னுயேகீ மதிகுறைய ரவியிலே
பெற்றதா யுட் காட்டினுய்
பின்கலையுங் காட்டினுய் திங்கள்மதி யொளிவாலே
பின்னையும் வரச் செய்தாய்கீ
மறையோதினு யேகீ மாமதியின் மேடையில்
மலர்பூத்து கற்பங் தங்க
மல்லாரி பில்லாங் குழற்றொனி நாதமும்
வந்து முரசங்கு மூத
சிறையோதி வைக்கநின் றிருவுள மறிவாய்
சிகைக்குளிருந் தன்பர் நேசா
சித்தத்திற் பூரணஞ் சத்துசித் தானந்த
சிவராஜ யோக குருவே. (1)

மனம்புக வொருவழி படுத்தமருந் ததுசொனு
மதிரவி கண் கல்வத்திலே
மதியையதிலே விட்டு ரவிகுழவியா லாட்டி
மந்திர மிலாப் புடத்தில்
வனம்புக ரவியொளிக் காந்தியைப் போல்வர்ண
மனமதை பஸ்ப மாக்கி
வந்துமதி தனிற்கொடு சுந்தரச் சோதிமய
மணிமேடை யுச்சி புகுமே
தினம்புக வறுசமயக் கூத்துக ளதிலாடுங்
தில்லையெனச் சொல்ல லாகுங்
திரும்பியேவாரா பொருந்து முன தவிழ்தமது
தீவிரதங் கைக் கொள்ளுவேன்
சினம்புகா தொருநாளுஞ் சின்முத்தி ராங்கமது
சிறுவ னெனைக் கைக்கொள்ளுவீர்
சித்தத்திற் பூரணஞ் சத்துசித் தானந்த
சிவராஜ யோக குருவே. (2)

ஆதியே யுனதன்பி லுருகிமனங் குவியாம
லலையுதே நெஞ்ச மையோ
அப்பனே யிப்பவோ தப்பாம னுளையெம
னடிப்பா னதற்கென் செய்வே
னேதியே குருளன்பி லென்னன் புருகியே
யுன்னுறவென் னுறவ தாக்கு
வுதயகிரி யிற்சென்று வழியாத் தீபவொளியி
னேட்டம் பிடிப்பா னேயோ
வீதிவெளி சுழியேறி விதிமாற்றி வருவேன்யான்
விந்திலே குரு வாகியும்
விண்ணெளி பறக்குமே கண்ணெளியுன் னெளியுமே
வெட்டி யெரியு மெமனேயே
சேதிசொல வொன்றில்லை யுள்ளம் புகுந்துவுன்
றிருவருள் மறக்க வசமோ
சித்தத்திற் பூரணஞ் சத்துசித் தானந்த
சிவராஜ யோக குருவே. (3)

உறவான வுன்னன்பி லுள்ளம் பெருகியு
மூன்றுகோ லில்லா மலே
ஊமையா யெனையும்வைத் தாமைபோ லடங்கவே
யோங்கார மிட்டு வெளியே
மறைவான யிருளிலே யுன்னறிவை யதிலூன்றி
மனந்தனை யதனிற் கட்டி
மங்கையா வந்தீண்டுஞ் சங்கரா வப்பையை
மதியைரவி யாலே வாட்டுங்
குறைவான தொன்றுமெனக் கில்லையே யவ்வுலகங்
கூப்பிட் டெனை யழைக்குங்
கூற்றனனு கானெனையுங் காற்றிற்பூ,ரண மாடுங்
குறையமதி யெனை வளர்க்குந்
திறவான திறவுகோற் சிதமதி யல்லாமற்
றிறந்தவ ராரு மிலையே
சித்தத்திற் பூரணஞ் சத்துசித் தானந்த
சிவராஜ யோக குருவே. (4)

எரிகின்ற தீபவொளி தன்னின்மன நசியாம
லிரைதேடித் தின்றி டத்தே
யேங்குதென் செய்குவேன் நீங்கிலா வொளிமாற
வெல்லாமுன் னுடைய செயலோ
பரியேறிப் பொருளறியும் வேளையி லதையறியா
பரவிவந் திருள் மூடவே
பார்த்தபொரு ளதைவிட்டு நேத்திரத்திற் றங்கா
பாவியான் பிழை செய்தேனே
வரிமாறிப் போகாமல் வந்துவுன தன்பினில்
மதிவிளக் கேற்றி யழையும்
வாராத ஞானமுஞ் சாராமற் சார்ந்து
மனம்புகுந் தருளிற் றங்கி
திரிமாறிப் போய்வெளி நிற்குநிலை தானாகுந்
தில்லையைத் தாண்ட விதுவே
சித்தத்திற் பூரணஞ் சத்துசித் தானந்த
சிவராஜ யோக குருவே. (5)

உடலைவிட் டுயிர்விடப் போகுமுன மென்னுள்
ளுருகிமன முனைச் சேரவே
உயிர்பிச்சை நீயளி யுள்ளபொருளிற் றங்கி
யுறவின் முறை விடுதலாகும்
கடல்பெருகி கண்மூடி மௌனியென் றொருமொழியாற்
கண் திறந் தருட் பார்வைசெய்
கதவைத் திறந்தும் பவக்கட லொழிந்துமே
கனிவாய் திறந் தெனக்கு
விடலரிதுன் மகிமைதனை யாரறியப் போவர்காண்
விண் ணுலக மென்னு ளமையும்
வேதவே தாந்தவொளி நாதாந்த வெளியிலே
வினைப்பய னொடுங்கி யங்கே
திடவிலாப் பயிர்விளைந் திங்கள்கதி ரொன்றாகித்
தேனமுத மாகப் பொழியுஞ்
சித்தத்திற் பூரணஞ் சத்துசித் தானந்த
சிவராஜ யோக குருவே. (6)

நாதமணி யோசையுங் கலீரென முழங்கவே
நாட்டிய குண்டலி சத்தியு
நடனமது புரியவு மெனையழைத் துட்கொள்ள
நந்தி வாகனம் விளங்க
வேதம் பொருந்தவு நெருப்பார் விடயங்கள்
வெந்து மயிர்ப் பாலமீதில்
வீறுவிட் டோடவே நீறுபொடி யாய்ச்செய்து
வெட்கங் கெடச் செய்வைநீ
காதலறவே வந்துன் பாதமே கதியாகி
கடைத்தேறு நா னெனக்கு
கைகாட்ட வல்லநீ செய்குறியு னைப்போலக்
கண்தெரியப் பண்ணு மெவர்காண்
சித்மதி யோகனே சிவராஜ பூபதி
செல்வனே கள்ள னுறவே
சித்தத்திற் பூரணஞ் சத்துசித் தானந்த
சிவராஜ யோக குருவே. (7)

நாக்கைமடித் தண்ணாக்கி லேற்றினல் வாசியது
நயனத்தி னுட் புகுமோதான்
நாசிரெண்டுங் கட்டண் ணுக்குத் தானேவையா
நம்பெரியோ ரிதையு நம்பார்
வாக்கையொழித் தேவிடு மதியே பூரணமாகும்
வந்து காராசா னிடம்
வாழுமதி பழகிவர வெகுநாட் செலுமப்பா
வாங்கிநீ மதியை யுண்ணு
சேர்க்கை யில்லாபேச்சு யேன்பேசுறீர் சும்மா
சிரிக்குமே வைய கங்கள்
செத்தாரைப் போலிரு நித்யவஸ்துக் காண
சேரலாம் ரவியின் பாகம்
திக்கையி லிருக்குதே தேசியால் வாசியை
சித மதியா லேறிவா
சித்தத்திற் பூரணஞ் சத்துசித் தானந்த
சிவராஜ யோக குருவே. (8)

இமையளவு நேரமதி கற்பமது வுண்ணவு
மிருள்வந்து மூடு தையோ
யிருளைவெளியாய்க் கொஞ்ச மொளிகாட் டெனையழை
யெங்குநிரா மய மாகவே
வமைபொருளு நீயே வமைத்துவெனை யாட்கொண்ட
வடிபணியுங் குருவு நீயே
வையோ வெகுகொடுமை யனியாய மனியாய
மார்செய்த வஞ்ச மிதுவோ
சுமையெடுக்கச் செய்து சும்மாடுங் கையுமாய்த்
துக்க பெண்டீர் மக்களைத்
தூக்கிச் சுமக்கவுஞ் செய்தவனு நீயலோ
சூதை யவர் காண்பதிதுகா
ணிமைப்பொழுது நேரமுனை கைவிடப் போகேனுன்
றில்லையின் கோயின் மூர்த்தி
சித்தத்திற் பூரணஞ் சத்துசித் தானந்த
சிவராஜ யோக குருவே. (9)

சொல்லாமற் சொன்னவொரு மொழியைகலை யோதியுஞ்
சூதையு மெவ ரறிவர்காண்
சூட்சாதி சூட்சமெய்ஞ் ஞானவீ டளித்தயென்
சுகானந்த பெருவாரியே
யுல்லாச மாகவந் துச்சிவெளியிற் சென்று
பூசி முனை மீதினின்று
முகந்துகை காட்டியெனை நீயழைக்க விலையோ
யோசை யற்றவ் வெளியிலே
யெல்லா முன்னுடையசெய லென்செயலி லாவதோ
யிதுநேர மெனை மறந்தா
யிதுவல்ல வதுவல்ல வென்று போராடுவது
யிதுசமய மலவே யையா
செல்லா மோனத்தைச் செலுத்தியென் னுள்நுழை
தீய வெளி தானுகுமே
சித்தத்திற் பூரணஞ் சத்துசித் தானந்த
சிவராஜ யோக குருவே. (10)

பரப்பிரமஞானகுரு.

ஆழியிரு கடலிலரு ளக்கினியுங் கூடவைத்
    தமைத்தாய்நீ யொளி பரப்பி
யாடிவருங் காலிலிரண் டாதிமதி ரவியென்று
    மக்கடலிற் பேரு மிட்டா
யூழிபெருங் காற்றையு மோடாமல் வாடியு
    மூமை மந்திர மமைத்தா
யொருபாதந் தூக்கிமற் றோர்பாதத் திற்றுக்க
    யுரைக்கொணு முறையும் வைத்தாய்
வாழியாய்ச் சோதிமதி பூரணம தாகவே
    வந்நீரி னின்று மெரிய
வதிற்குணமு மூன்றதா மறிவான சாத்மீக
    மையனீ யதி லமர்ந்தாய்
பாழில்லா தெந்நாளும் பதிதனி லிருந்துமென்
    பாசமதை விட வறுப்பாய்
பார்க்குமிட மெந்நாளுந் தீர்க்கமென் னறிவில்வாழ்
    பரப்பிரம ஞான குருவே. (1)

என்னிரு கடலதனிற் றண்ணீரு ளக்கினி
    யிருக்கவேன் செய மறந்தா
யெடுப்பார் கைபாலனே யடுப்பேற்றி மூட்டுவே
    னென்குருவக் கடலின் முறையை
வன்னியிருப் பிடமதில் வாழ்கின்ற போதெலாம்
    வருங் கற்பமே சமாதி
வாழைக்குக் கீழ்க்கண் ணக்கடலில் வைத்து
    மதியே துனக்குச் சொன்மின்
சன்யாசம் பூண்டுமெய்த் தவமது புரிந்துமே
    சற்குண நிற்குண மாகினுய்
சர்வகாமிய நீக்கி யக்கடலிற் சோதியைத்
    தட்டி யதி லேயெழுப்பி
பன்னிபன்னித் தொழுக வுன்னை பதிலே வெளியிற்
    பார்க்கேக னுகி நின்றுய்
பார்க்குமிட மெந்நாளுந் தீர்க்கமென் னறிவில்வாழ்
    பரப்பிரம ஞான குருவே. (7)

தில்லையைக் காணவக் கடறனிலே மதியோகந்
திருநடனங் காட்டி யப்பாற்
செப்பாப் பெருவெளியு மப்பாயென் சொல்லுவேன்
சேதிசொல வொன்று மில்லையே
சொல்லையறிந் துணர்வோர்க ளில்லையே யாவொருவன்
சொல்லவு மெளி தாகுமோ
சுகம்பெருகி வாழ்ந்தவர்க ளில்லையோ கடைச்சிறியன்
சொல்ல வெந்நா வுளறுதே
வல்லையோ யிச்சமய மில்லையென் றனுமுன்
வரத்தைப் பிடித் தேறுவேன்
மாமதியுந் தாண்டியே சாமியுனைக் காணவு
மகாரமிட வெளியி னிற்பேன்
பல்லையே காட்டியெனை மெல்லப் பிடித்திழும்
பரஞ்சோதி யான வுருவே
பார்க்குமிட மெங்நாளுந் தீர்க்கமென் னறிவில்வாழ்
பரப்பிரம ஞான குருவே. (3)

திங்கள்மதி யைப்பிடித் தெந்தனுக் குள்ளமைத்
தேனெழுக காமிய மெலாந்
திரையைத் திறக்கவே மதிகோடி ரெப்பையொளித்
தீயா லறச் செய்யுமே
யங்கைகொடு மலர்தூவ வானந்த மேபெருகி
யையனுற வாடி நிற்கு
மாகா விதுவலோ முத்திநிலைக்கே மோட்ச
மாகுமறி வேறு முளதோ
சங்கர சுயம்புவே மங்களகல் யாணகுண
சர்வமய மாகி நின்ற
சாத்மீக நடையெனுள் ளாத்மத் திலேநின்ற
சமயமு மறிந்த வனுநீ
பங்கயா சனர்முதற் பணிந்திந்த மார்க்கத்திற்
பரகதி கிடைக்க விலையோ
பார்க்குமிட மெங்நாளுந் தீர்க்கமென் னறிவில்வாழ்
பரப்பிரம ஞான குருவே. (4)

ஆதிமதி யாற்சோதி யம்பலத் தேநின்று
மறிவைப் புகட்டி வைத்தா
யாக்குவை யவைதனி லடக்கமாக வெனையு
மாளாக்கி விட நேரமோ
சோதியுந் துரியங் கடந்தவனு நீயான்
ஞெடுத்து வந்த தறிவையோ
சோராத மாணிக்கம் பச்சையே யெனதன்பிற்
சொலவொணுப் பொருளும் வைத்தாய்
வீதிநெறி காட்டி வெளியொளியு மேன்மூட்டி
விதிவிலகச் செய்த வனுநீ
விண்ணவர் துதிக்கவே கண்ணொளியி லேறியு
மேல்வாசற் றிறந்து நின்றாய்
பாதிமதி யுங்காட்டி யாதிகுரு வாய்நின்று
பரலோக மென்னு ளமையே
பார்க்குமிட மெங்நாளுந் தீர்க்கமென் னறிவில்வாழ்
பரப்பிரம ஞான குருவே. (5)

தொண்டுசெய் தேனுனைக் கண்டுகளித் தேயெனை
சுகதுக்க மோட வருள்வீர்
சோராம லக்கடலின் மாறும லுனதன்பிற்
சுகங்காட்டி யமு தளிப்பீர்
விண்டுமே மெய்ப்பொருளைக் கொண்டா னந்தத்திலே
விதைக்கொணுப் பொரு ளமைப்பீர்
வேதசா ரத்தினுல் மாதுவா லாம்பிகை
வீடில்லா வெளி யமைப்பீர்
முண்டுபண் ணுமல் முழுமதியுங் காட்டியே
முக்கா டிலாமற் செய்தீர்
மூவுலகெலாந் தோன்ற சாதனையு மதில்வைத்து
மூச்சைப் பிடித் தடைத்தீர்
பண்டுமுன் னுளிற்செய் வினையறு வெளியிலே
பாரமுன் பார மலவோ
பார்க்குமிட மெங்நாளுந் தீர்க்கமென் னறிவில்வாழ்
பரப்பிரம ஞான குருவே. (6)

ஆரா ரெனக்கு மிருந்தென்ன கண்டபல
னறிவையு மறிந்து மிலேயோ
வப்பனே யிப்போது தப்பிதஞ் செய்தனே
வறிந்து மறியாம லானேன்
சீரான சிவராஜ யோகமுந் தந்தநீ
செப்பரிய வொப் பிலனுநீ
செங்கமல பீடநீ கங்குல்பக லற்றதாய்
சித்ரக் கூத் தாடினதுநீ
சோராத சுகவாரி யானந்த மதிலெனைத்
துடைத்தேக னுக்க வரிதோ
சொல்லாத மோனமீ தெல்லா முனதிடந்
தோற்றுந் தோன்றும நின்றாய்
பாரான பதியில்வாழ் பாலன் றனைத்தூக்கி
பாதமிடு வாத முறவே
பார்க்குமிட மெங்நாளுந் தீர்க்கமென் னறிவில்வாழ்
பரப்பிரம ஞான குருவே. (7)

கடற்பெருகி யேயென் னுடற்சுருகி மதியோடி
கண் ணுக் கெட்டாத பொருளாய்
கலையைச் சுருக்கியே கதிர்காண விதியறக்
கடின காவலி னடுவிலே
திடறரிசி லாதுழுது சிற்சுதய மாகச்
சிதம்பரமு மாகச் செய்தீர்
தித்திக்கவுஞ் செய்தீ ரதிலேகனுய்ப் போய்ச்
செகமெலா மடக்கி நின்றீர்
வடவாலி னிற்கீழ் சனற்குமரர் முனிவோர்க்கு
மவ்வறி விலாக்க வைத்தீ
ரசையா திருக்கவும் வங்க கற்பா நியா
யாக்கி வைத்தவனு நீயே
படறதனைத் தூக்கியே பரவெளியெலாங் காட்டி
பட்சத்தில் வைக்க விலேயோ
பார்க்குமிட மெங்நாளுந் தீர்க்கமென் னறிவில்வாழ்
பரப்பிரம ஞான குருவே. (8)

நித்திய நிராமய பரஞ்சோதி யாகியே
நிறைந்த பரி பூரணமதாய்
நிலைநிற்க வலையிலா வெளியிலொன் றுருவதை
நிறுத்துவ துபாய மிலையோ
சத்தியதிலே தங்கி முத்தியளித் தன்பரைச்
சன்யாச மாக்க விலையோ
சரிகை கிரியாயோக ஞான சஞ்சிவியே
சாதனை யிலாதவனே சொல்
முத்தியளித் தன்பருட நித்யவாசியி லேறி
மூல வனலா லெழுப்பி
முப்பாழ் கடந்துமே வப்பா லந்தோபெருமை
முறை யதற் கொப்பாகுமோ
பத்தி வைராக்ய நித்ய கல்யாணனே
பாலனுட வன்பில் வாவா
பார்க்குமிட மெங்நாளுந் தீர்க்கமென் னறிவில்வாழ்
பரப்பிரம ஞான குருவே. (9)

கைலாய மென்பதுன் கைமுறைமையால் வந்தென்
கண்ணருளில் வெளி யாச்சுதே
கண்டவனு நீயலோ விண்டெனக்குப் பின்
கதைசொல்வ தொருவ ரிலையே
மெய்லாபங் கண்டநீ மேதினி தனக்காக
மெத்த மண்மேற் பிறந்தாய்
விதியிலாமற் செய்து கதியடைந் தோரிடம்
விலையிலா தவனு மானாய்
பொய்லாபங் காணவிப் புவிதனில் வந்தவெனை
பூரணம தாக்கி வைத்தாய்
புத்தியோ வுமக்கிது பத்தியிலையோ சொலும்
புலம்புவ துமக் கருமையோ
பைலாபங் காணவும் பனிமதி தனைப்பிடியும்
பாரு மண்ணுக்கி லுறவே
பார்க்குமிட மெங்நாளுந் தீர்க்கமென் னறிவில்வாழ்
பரப்பிரம ஞான குருவே. (10)

ஆனந்தவல்லி.

பரிபூர ணத்திநீ பறச்சிநீ வலைச்சிநீ
பாண்டி மலைக் குறத்தியுநீ
பச்சைநிற மானநீ முச்சுடரி னின்றநீ
பரவெளியி லாடு வளுநீ
சிரித்தமுக மானநீ சின்மயமு முள்ளநீ
சிலம்பொலியு மான வளுநீ
சிற்சபையும் பொற்சபையு மற்புதக் காட்சிநீ
சிற்றிடையு முள் ளவளுநீ
விரித்தசெஞ் சடையுடைய மின்னொளியி னின்றநீ
மேல்வாயற் றங்கு வளுநீ
விண்காட்டி மண்காட்டி மேகவொளி வானநீ
விண்ணவர் துதிப் பவளுநீ
அரியயனு மாலுந் தேடியுங் காணதநீ
ய்ம்மை குண்டலி யுள்ளநீ
ஆனந்த வல்லியே ஞானசிவ காமியென
தறிவு தனி லாடுந்தாயே. (1)

நாசியிடை மையநீ நடுவணையி னின்றநீ
நமனைப் பிடித் தவளுநீ
நம்பிவந் தடியார்க்கு வின்பநிலை தந்தநீ
நாடாள வல்ல வளுநீ
மாசிலா மணியொளியின் மறைமுடிவி னின்றநீ
மணிவாயிற் புகுந்த வளுநீ
மகிமையது வறியவே தவசிகட் கெட்டாத
மதியமுத மூட்டு வளுநீ
வேசிமனத் துள்ளநீ வாசியிற் படருநீ
வெந்துயரு மாக்கு வளுநீ
விலையில்லா மாணிக்க பச்சைநிற முள்ளநீ
வெய்யவன் றனக்கு டையநீ
ஆசியளித் தன்பருட வாசியி லடங்குநீ
யாணிப் பொன் னம்பலமுநீ
ஆனந்த வல்லியே ஞானசிவ காமியென
தறிவுதனி லாடுந் தாயே, (2)

மதியினட மாடுநீ மந்திர சொரூபிநீ
மனக்கண் திறந்த வளுநீ
மாருத் தியானத்தா ருள்ளத் திருந்தநீ
மௌனத்தில் வைத்த வளுநீ
விதியது விலக்கவே வேதாந்த சாரமதின்
விண்ணிலருள் வைத்த வளுநீ
வித்தாய் முளைக்கவே சித்துவிளை யாடலை
மெய்தனி லமைத்த வளுநீ
நதிசூத கேணியு நாற்சதுர வீடுநீ
நடனமணி மண்ட பமுநீ
நங்கையர்கள் யோனியின் பங்கினி லமர்ந்தநீ
நமனுரு மான வளுநீ
அதிவிதய மதிகுறைய கெதியடையச் செய்புநீ
யப்பனு மாத் தாளுநீ
ஆனந்த வல்லியே ஞானசிவ காமியென
தறிவுதனி லாடுங் தாயே. (3)

ஓலமிட் டவ்வெளியி னுலைப் பிடித்துவரு
மோங்கார மான வளுநீ
ஒருநொடியிற் றிருநடன மாடியு மறைந்தநீ
யூமையெனு மட்ச ரமுநீ
காலனைக் காலா லுதைத் தன்பருக்காக
கண்ணினிடை மைய முளநீ
கதவைத் திறந்துமே கண்மூடி மௌனியாய்
கலைபெருக வான வளுநீ
வாலைப் பருவமது வந்துபத்து வயதாய்
மக்களுற வாடு வளுநீ
மஞ்சத் திருந்துமே லுஞ்சத்தி லசையாமன்
மடியிலமு தாட்டு வளுநீ
ஆலமமு துண்ணவே பாலர்க ளிடத்தினி
லன்புமிகத் தந்த வளுநீ
ஆனந்த வல்லியே ஞானசிவ காமியென
தறிவுதனி லாடுங் தாயே. (4)

என்னையே தன்யனு யுன்னைவெளி காணவு
மேற்றிடவு மாற்று வளுநீ
யிதுசமயம் வருமென வறுசமயக் கூத்துகளை
யெப்படியுங் காட்டு வளுநீ
பின்னையொரு தெய்வமும் பேசுவ தெனக்குளதோ
பெற்றதா யுற்ற வளுநீ
பிறவாத நெறியையு மறிவினி லடக்கிடப்
பேசு மந்திர முள்ளநீ
முன்னமொரு காலத்தில் மோசமது செய்தநீ
மூடருற வாக்கி னதுநீ
முழுமோச முழுமோச நழுகிப் போகாமலே
முத்திகொடு பத் தினியேநீ
அன்னைநீ பின்னையுஞ் சொன்னநீ மறந்தையோ
வாச்சரிய மிது சமயநீ
ஆனந்த வல்லியே ஞானசிவ காமியென
தறிவுதனி லாடுந் தாயே. (5)

எக்கால மென்னிட மிருந்துங் கலந்தநீ
யென்றுமுள தன்பி லேயுநீ
என்னையுநீ கண்டநீ யன்னையெனை யுண்டநீ
யீசனடி யாக்கு வளுநீ
முக்கால முள்ளநீ மூவுலகெலாந் தொழவு
முத்தியை யளிப்ப வளுநீ
மோசமது செய்தநீ பாசம் புரிந்து
முழுமதியி னின்ற வளுநீ
தற்கால முள்ளநீ சமயமு மறிந்தநீ
சாதனை யொழித்த வளுநீ
சர்வமய முள்ளநீ கெர்வ மில்லாதநீ
சரவீடு கட்டு வளுநீ
அக்கால முன்னையா னறியாமற் செய்தநீ
யறிந்தபின் தெரிந்த வளுநீ
ஆனந்த வல்லியே ஞானசிவ காமியென
தறிவுதனி லாடுந் தாயே. (6)

சூலி கபாலிநீ சுத்தவெளி யானநீ
சுந்தர பரம் பரையுநீ
சுழிமாறின வழியி லழியாப் பொருளுநீ
துரந்தரி நிரந் தரியுநீ
நீலிமக மாயிநீ நிர்மல சொரூபிநீ
நித்ய கல்யாண குணநீ
நிஷ்டூரக் காரிநீ யஷ்டாங்க யோகத்தி
னீங்காம லெந் நாளுநீ
தாலியி லமைவுநீ சர்வகா லம்பூசை
தவறுதலில் லாத வளுநீ
சங்கரி யுனக்கிடு மெங்கேயினி சொல்லுவேன்
சாதனைசெய் பவர்க ளிடநீ
ஆலிலகப் பட்டக் கரும்பதுபோ லலைகின்றே
னடியேனைக் கார்க்க வருநீ
ஆனந்த வல்லியே ஞானசிவ காமியென
தறிவுதனி லாடுந் தாயே. (7)

சித்திரப் பதுமைபோன் முத்திநிலை யில்வந்து
திரைகாட்டி மறைத்த வளுநீ
சின்முத்தி ராங்கத்திற் கன்னிவய தாய்வந்து
சிறுவனெனைக் காத்த வளுநீ
முத்திரைக் கோலூன்றி சத்தியென திருகண்ணை
மூடித் திறந்த வளுநீ
முச்சுடராய்த் தோன்றி யச்சுடர் சமாதியு
முழுமதி யும்பூ ரணமுநீ
நித்திரை யிலாமலே முத்தியடை யச்செய்து
நினைவையுந் தடுத்த வளுநீ
நீங்காம லெந்நாளு மோங்கார கம்பத்தி
னிர்ச்சிந்தை காட்டி னதுநீ
அஸ்திரம் போட்டெனை யடக்கிவெளி காட்டியே
யறிவினி லொடுக் கினவனீ
ஆனந்த வல்லியே ஞானசிவ காமியென
தறிவுதனி லாடுந் தாயே. (8)

முக்கோண சக்கரப் பக்குவ வல்லிநீ
மூலமதி லெழுஞ் சோதிநீ
மூடியொரு காலினி னுடியி லகப்பட்டு
மூவுலகிற் பல யோனிநீ
நிற்குண நிராமய நிறைந்தபரி பூரண
நின்றொரு முகூர்த்த மதில்நீ
நிலைநிற்க வொட்டாம னிஷ்டையது தட்டிட
நீதிவில கச் செய்தநீ
சற்குண வல்லியே சண்டாள ரூபிச்
சமயமு மறைத்த வளுநீ
சாதுசங் கத்திலே வாதுவிளை யாடினுய்ச்
சர்வ மய பூரணியுநீ
யக்குணச் சாயலிற் பிரமமந் திரமோதி
யனுருவி மதி பிடித்தே
ஆனந்த வல்லியே ஞானசிவ காமியென
தறிவுதனி லாடுந் தாயே. (9)

காரணி கடாட்சத்திற் பூரணியு மானநீ
கண்மணியி லுண் மணியுநீ
கலைமகளு மானநீ கங்கையாடச் செய்து
கலையிலுரு வான வளுநீ
நாரணியு நடராஜ யோகத் தமர்ந்தநீ
நற்குண முக் குணமுநீ
நம்பியதோ ரன்பருக் கம்பிகையு மானநீ
நடனம் புரிந்த வளுநீ
வாரணியு நீறணி வாலையுரு வானநீ
வந்தவளு மென் றுயுநீ
வஞ்சகமு மானநீ நஞ்சணியு மீசனிட
மடிபிடித் திழுத்த வளுநீ
ஆரணியுங் கோதைய ரிடத்திலு மமர்ந்தநீ
யரவுவிஷந் தீண்டி னதுநீ
ஆனந்த வல்லியே ஞானசிவ காமியென
தறிவுதனி லாடுந் தாயே. (10)

சுகானுபவம்.

பாரேழு புவனுதி யண்டங்க ளத்தனையும்
பகர்ந்தசுழி முனையி னுள்ளே
பாலகா ஞானதே சிகனருட் கனியினுற்
பரிதிமதி தனைப் பிடித்தே
பாயுமீ ராறுகலை யமரபட் சத்தினிற்
பகலவன் வீட தனிலே
பார்முனையி லேவைத்து சேர்கலையி னுலதாய்ப்
பரஞ்சோதி யாய் விளங்கும்
பழகிவர நாளுக்கு நாளாய்ச் சதாநிஷ்டை
பாழ்மனதை யறிவி லூட்டி
படர்ந்துவரும் வன்னியா லடர்ந்தமுட் காடெலாம்
பதிதனிலே வைத் தெரித்து
பளிங்கொளி யாய்நிற்குங் களங்கமற் றதுவிலே
பரமனருள் குடிகொண்ட தாம்
பார்சித்துச் சடமதாய் வேருகி நின்றிடும்
பரவெளியி லேக னுகிப் (8)

பற்றிப் பிடித்துவர வுச்சிவெளி சென்றுமே
பாழும்ப் பாழை விட்டுப்
பட்டப்பகற் பொழுதாய் வட்டமிட் டோடிவரும்
பதிநிலவு மண்ட பத்திற்
பகர்ந்ததூ ணுட்டியே நாற்சதுர வீடதாய்ப்
பளிங்கினிலு மொளிவ தாகிப்
பங்கமது வாராது தங்கமே யுனைமருவப்
பாங்கிகள் வருவர் கோடி
பாசவலை யிற்சிக்கி மோசமது போகாதே
வாசியதி லேறி நின்று
பற்றிலடங் காததே யஷ்டாங்க யோகமிது
பரவெளியி னூடு தாக்கிப்
பலவான்க ளேகமாய்க் கொல்வார்க ணீயெனைப்
பறித்துப் பிடிக்க வருவாய்
பயனுக்குந் தம்பனங் கஜமாக்கிக் கொள்ளவே
பான்மதி பிடித் தொடுக்கியே (16)

வாராகு மண்டபஞ் சண்டமா ருதம்வீசி
மழைபோ லொழுகும் விழிநீர்
மக்களே யிந்தமுறை கைப்பிசகில் லாமலே
மனமொத்த சுழியி னின்றேன்
மகாதவசி கட்சித்தர் நவகோடி யாய்வந்து
வருந்தியிளைப் பாற வைத்து
வருமகனே திருகுமுப் பாதையெப் படிவந்தாய்
வல்லபா வென் றிருத்தி
மங்கையபி ராமியுஞ் சங்கர சுயம்புமே
வாய்க்குமே யுனக்கு முத்தி
மகாராச துரைராச தவராச யோகனே
வாவென் றுணர்த்தி யேகி
வாசமலர் தங்கியத் தேசமெல்லாஞ் சுற்றி
வனக்கச டறப் பிடிங்கி
வஸ்துநிலை கண்டுமே சத்துசித் தானந்த
வடிவிலே நின்று தங்கி (24)

வனமது கடந்துமே கனவேக மாய்ப்போக
வளம்பெருகு மாற்றி னருகே
மாயமோ விதுவெனக் காயத்தி லுள்ளதோ
மட்டிலடங் காத வெள்ள
மகாபாதக னென்று வேகமாய்ப் போகுதோ
மனமது கலங்கி நிற்க
மாருட்டஞ் செய்யுதே கூருன விந்துநிலை
மதியினது பெருமை தானே
வனந்தனி லிருக்கும்ரிஷி மாருத பார்வையோ
மன்று ளாடுதென் செய்குவேன்
மலைபோ லருவிகட் கரைபுரண் டோடுதே
மங்கையபி ராமி வாசா
மாறியே போகவுந் தேறுதலை காணனே
மதிதனைப் பெருக்கி விழிநீர்
மாருத வெள்ளமாய்ச் சோராமற் பெய்யவே
மௌன தேசிக னருளினன் (32)

மாரூப மயிர்ப்பால மீதேறி யகத்தியன்
மலரடி நமஸ் கரித்து
வரைதாண்டி யப்பாலே யறுகோண வீதியில்
வாசியது படர்ந்து நிற்க
வச்சிரமணி பெட்டக முச்சுடரி னுல்வந்த
மகிமையது சொல்ல வெளிதோ
மலர்பூத்த விழியினு லுலகநடை யைவிட்டு
வாட்டுதே நெஞ்ச மையோ
வாடாமல் வாடுதே கூடுறவு தேடுதே
மனநினைவு மற்ற வெளியின்
மங்களக் கவிபாடித் தங்கநட னச்சாலே
மல்லாரி புள்ளாங் குழல்
வாசிக்கு தேயின்ப நேசிக்கு தேதாளம்
வலம்புரிச் சங்கு முரசும்
மதியொளியும் வீசுதே கதிரொளியுங் காணுதே
மங்கை சிலம்பொலி கேட்குதே (40)
வாட்டுதே நெஞ்சமதைப் பூட்டித் திறக்குதே
வசந்தமணி மண்ட பத்தின்
மச்சமது மேயுதே நச்சரவ மேபூண்டு
மதிகெட்டுப் போ யுண்ணுதே
வாழாது வாழ்ந்துமே பாழான வென்மனம்
வாடித் தவிக்குதையோ
மக்கள்பெண்டி ராசைச் சுற்றமொடு மற்றுளரு
மதிர்வியி னுல் வேகுதே
வாசா மகோசர தேசசுந் தராசன்
வரமது கொடுத்த வருளோ
மாது கற்பத்தினுல் வேதமதை யோர்தியும்
வந்துதோன் றியபல னிதோ
வல்லாள மகராஜன் கொள்ளையிது வோவையா
வாய்க்குமே யுனக்கு முத்தி
மாளாத சூனியி லாளர்கிப் போகாமல்
வாருங் குணங் குடிக்கே (48)

மாரனிருள் வேதனை வஞ்சமொடு பொய்சூதை
யடித்தீயில் வாட்டி மாய்த்து
மனமொத்த சுழியினிற் றினமாறு வேளையான்
மாசறக் குண் டலியிலே
வாரிவாரிச் சொரியு மாரிபோ லேபொழியு
மனநிலையிற் பிசகா மலே
மல்லாடு மேயதுவுஞ் சொல்லாமற் சொல்லுமே
வாய்பேசா மோன மதுவாம்
வாங்காமல் வாங்கியே தூங்குநற் சுடரினின்
மலர்விழியி னுல றிந்து
மாசற்ற திருமேனி தேசமெல் லாம்புகழும்
வாசிவா வென்று தொழுது
வரிசைதவ ருமலே திடறரிசி லாதுழுது
மாறி யொரு காற்றாக்கியே
மாணிக்கத் தூணினி லாணிப்பொன் னம்பல
மாடமதை யென் சொல்லுவேன் (56)

மாதுவா லாம்பிகையின் சாதனையி னுல்வந்த
மாற்றுரையை யென் சொல்லுவேன்
மணியோசை யதிரவே தனியான தீபவொளி
வாவென் றழைக்கு தையோ
வணங்கியே நமஸ்காரம் பண்ணியே பூசைநற்
பலம்பெறு சமு சாரியாய்
மாளுமகனே யிந்த வேடங்க ளேதுக்கு
மாயுமுட லேன் சுமந்தாய்
வைத்தபட் சத்திலே நச்சரவ மேபூணும்
வரவையறி யாத விதையை
மாலமுத மூட்டியே காலனவன் வாராமன்
மன்னிபர விணி லேகனுய்
மதிபூர ணத்திலே சர்வகா லங்களும்
மௌனகுரு வடிவ மாக
வந்துகாத் தாள்வையோ வாதிகுரு வாகியவ்
வடநிழலில் வந்த பொருளே. (64)

தாழிசை.

நாசியிடைப் புருவநெற்றி நடுவிலுற்றுப் பாரு
நயனவிழிப் பார்வைரெண்டு நாட்டமிட்டுத் தேறு
வீசிவருங் கால்பிடிக்க வெண்சாரையாம் வீடு
வேசிமதிக் காற்றொட்டு மெல்லெனவே பூத
ஆசிமுனை பாயுமங்கே வுத்தமரைத் தேட
வுற்றுநின்று பார்த்தவர்க்குப் பித்தன்சுடு காடு
தேசியென்ற நாதனையுஞ் சின்மயத்தி னூடு
செத்தசவம் போலிருந்து பித்திலமை மனமே. (1)

ஆதிகுரு வைத்தொழுவே சோதிமயந் தோனு
மத்தனருட் சித்துருவாய் புத்தியதிற் காணுஞ் .
சோதிமைய மீதிற்செல்ல சுந்தரக்கண் ணுடி
துடைத்துப்பிடி யடுத்துவருஞ் சுத்தமாஞ் சமாதி
நீதிநெறி யுள்ளவர்க்கு நித்யநிலை யோட்டு
நித்யசுத்தப் படிகமதாய் நேத்திரத்திற் காட்டும்
பாதிப்பிறை சூடியதோர் பரமன்வெளி யாகும்
பளிங்கினிலு மொளிவதாகி பார்த்திருநீ மனமே. (2)

ஏறிவருங் காலைப்பிடி மாறிவரும் பாதை
யேக்கமற்று பார்த்துநின்றோர் தாக்குமதி சாலே
மாறிவரும் பாதைகண்டு மாமதியி லூது
மலரதுவே பூத்துநின்று மாநிதிய மோடுங்
கூறிவந்து பெற்றுநின்றோர் குருவின்றுணை யாமே
கோண்மதியின் காலைத்தொடக் கூற்றனற்றுப் போமே
அறிவிலேறிப் போகுமேதா னனந்தத்தி லாட
வையோதிருக் கூத்தேயிது வசையாதிரு மனமே. (3)

நெற்றிவிழி ரெண்டையுநீ யொத்திருந்து பாரு
நீலமணி யோசையது நாதமது வாகுஞ்
சுற்றிவல மாகவந்தாற் சூழும்ரவி கூடஞ்
சுந்தரமாஞ் சோதியது தூண்டாமணி விளக்காம்

வெற்றிகொளும் விளக்கதுதான் வெண்மதியி னுட்டம்
வீணர்க்கிது கண்ணிற்கிட்டா மெய்யனருள் வாய்க்குங்
கற்றிருந்து மென்னபலன் கண்ணைக்கட்டிப் பாரு
கருதுமொரு குணமூன்றதிற் கலங்காதிரு மனமே. (4)

முச்சுடரு முப்பாழது முடிச்சதுவுங் காணு
மூலவட்டந் தானேநின்று முத்திமலர் தோன்று
நச்சரவம் பூண்டகுரு நாதன்வரு வாரே
நானென்றதை தள்ளிநின்று தானென்றுநீ வணங்கா
யச்சமற வுச்சிவழி யாலவட்ட மாடு
மையன்றிருக் கூத்திலருள் மெய்யனுவாய் நீயே
மெச்சுந்திரு மாளிகையு மேலேயொளி விளக்கு
மேலப்பாதை தன்னினின்று நாலைப்பிடி மனமே. (5)

மதியிலிரு காந்தமலை வந்துமே யிழுக்கு
மாமதியின் மேடைமேலே வந்துவுனைத் தூக்கும்
விதிபெருகு மேடையுச்சி மேலேயதிற் செல்ல
மேலவாயிற் கோபுரமும் வேதாந்த விளக்குங்
கதியடைய நதியுங்காண கௌனமார்க்கந் தோணுங்
கவர்ந்துபிடி துரியமது கிடைக்குநல்ல மார்க்கம்
பதியிலிரு விதிவிலக்க பரனம்பிகை தாமும்
பாடுங்கவி யருளிற்செய்வார் பசியாதிரு மனமே. (6)

கட்டுப்படா தச்சுமட்டங் காலோபனி ரெண்டு
காலையது வெள்ளையாகுங் கறுத்துவரு மேலே
யெட்டிரண்டு மிரவிமதி யென்பார்சில மூடர்
யேழைமக்காண் மோசம்போனுற் பாதைவழி யறியீர்
வெட்டுமெரி வாளைக்கொண்டு மின்னொளியிற் பாயும்
வேல்முனையிற் சிக்கிவிடும் பார்முனையி லாடாய்
நட்டநடு வணையிற்கம்ப நாசிவழி யாலே
நாலைப்பிடி மாலும்வருங் கோலையறி மனமே. (7)

நாளைவரு வானேயெம னவனுக்கிரை யாவாய்
நம்பிவந்தா லம்பிகையுஞ் சொந்தமாகு வாளே
வேளைகண்டு பாலைக்குடி மெள்ளவன்னை தானு
மிஞ்சிக்கொஞ்ச வருவாளுன்னைத் தஞ்சமாகு வாயே

காளையகப் பட்டவர்கட் கண்சிவந்து போகுங்
கலக்கமற்று துலக்கமாவாய் கண்மணியி னுருவிற்
பாளைபூத்து பழம்பறிக்க பகருநாளு மாச்சு
பார்த்திருந்து நேத்திரத்தாற் பசியுந்தீரு மனமே. (8)

ஓடும்வாச லொன்பதையு மொத்திருந்து கட்டி
யோடாமலே சுவாசமதை யுள்ளிருத்தி மூட
நாடுந்திருக் கூட்டத்திலே நயனவிழி காணு
நல்லவரோ டொற்றுநின்றா னமனுமணு கானே
கூடுமுன்றன் கருவியெல்லாங் கூட்டோடற மடிந்து
கூறுகெட்ட சாரையது நீறுநீறாய் வேகுந்
தேடுந்திரு வள்ளுவனார் சென்றாரிது மார்க்கஞ்
சித்தர்களு மொத்துப்போன வித்திதுபார் மனமே. (9)

சித்தரென்று வேடம்பூண்டு தேசமெங்கு மோடித்
தேடியலைந்தார்க ளையோ செத்த சவம்போலே
பித்தரென்றும் பேயரென்றும் பிதற்றித்திரிந் தார்கள்
பேயினிலு நாயதுவாய்ப் பேசிமொட்டை யானார்
கர்த்தரிருப் பிடந்தேடியே கண்டுவெளி யறியார்
காவிவேடம் பூண்டுமிகக் கண்டெரியா மாடு
முத்தரென்று சொல்லுமிட முழுமதியுந் தோணு
முச்சுடர்வட் டத்தினின்று மெச்சியிரு மனமே. (10)

ஆருங்கண்ணி லகப்படாம லையோபாடு மெத்த
வர்சான்கையின் பாகமல்லா லறியலாமோ சொல்லு
நீருநெருப் பாறுமங்கே நினைவுதட்டிப் போகும்
நித்யபரி பூரணமுஞ் சத்திநாத மாகும்
பாருமுனைப் படைத்தசிவன் பதியினிற்பார் கண்ணே
பாவையென்ற மோகந்தள்ளிப் பரனருளை நாடாய்
சேருஞ்சென்ம வூடறுக்கச் சித்துவினை யாடுஞ்
சின்னஞ்சிறு வாசற்சென்று கண்ணிலாடு மனமே. (11)

கண்ணுருகி நின்றவர்க்குக் காணுங் கைலாயம்
விண்ணுருகி வந்துநின்றான் மெய்தனிலே காட்டு
முண்ணுமுயி ரனைத்தையும்விட் டொழிந்தாலது கூடு
மூன்வெறுத்து நின்றவர்க்கே யுற்றதுணை யாச்சு

தின்னுமறு சுவையுமற்றுற் றில்லைவெளி காட்டுந்
திருநடனக் கூத்துக்களுஞ் சிலம்பொலியுங் கேட்கும்
பன்னும்பதி தலத்திலிரு பராமுகமில் லாமற்
பார்வையற்று நின்றவர்தாம் பரமனியே மனமே. (12)

ஞானம் 36.

ஆதியாங் கமலமுனி பாதம்போற்றி
யருட்டங்குந் தாயுமா னவனே போற்றிச்
சோதிவெளி கண்டவ் வள்ளுவரைப் போற்றித்
துணையற் றிருந்த கொங்கணவன் போற்றி
வீதிவெளி நின்றஞான வெட்டி போற்றி
விதேகமுத்தி மோனசுப்ர மண்யம் போற்றிச்
சாதியற்றுப் பேதமற்றுத் தனித்து நின்ற
சற்குருவாய் மற்றெல் லோருஞ் சாற்றுவீரே. (1)

சாற்றுவீ ரின்னமொன்று தவறிப் போனேன்
சண்டாள னுய்ப்போவே னையோ பாவி
போற்றுதற்குச் சுகாதி யானதாலே
பொய்யிலே செனித்ததனுல் விட்டுச்சொன்னேன்
வீற்றிருந்த சித்தர்களை மறந்துவிட்டேன்
வெளியறிந்த பெரியோர்கண் மெத்தவுண்டு
காத்திருந்து சொலவென்றுற் கணக்கேயில்லை
கணக்கறியக் கருத்தில்வந்து குதிகொள்வீரே. (2)

கொள்ளுவீர் குலமற்று மலமுமற்றுக்
குறியற்றுப் போனவிட நின்றதாலே
விள்ளுமென யான்கேட்டால் விளம்பப்போமோ
விட்டகுறை யெனக்கிருந்தாற் சொல்லுங்களையா
கள்ளுவெறி யாற்சொன்னுற் காணப்போமோ
கருத்தறிந்து சொன்னுலே காண்பேனையா
தள்ளுங்களை தெரியாத மூடனுனேன்
றனிக்கடை யனேக்கருத் தறியச்சொல்வீர். (3)

சொல்லுவீர் மதிபிடித் தேறச்சொல்லுஞ்
சொல்லாத மதியிதற்கோ பாடுமெத்த
வெல்லலா மென்றுசொன்ன னம்பமாட்டேன்
வேதாந்த முடிந்தோர்க்கு மதியேயில்லை
நில்லுமென் றெனக்கருள வேண்டுமான
னீங்கள்மதி யில்லாதா ரானதாலே
கல்லுமென மெனக்கல்லோ காணவொண்ணுக்
கணக்கறிந்து சொன்ன லெனக்குத்திரும். (4)

திருமே யென்குருவாய் நின்றுசொல்லுஞ்
சிவலோகம் பரலோக மெல்லாங்காட்டும்
யாருமே யெனக்கெதிரி யில்லாக்கேட்பே
னச்சர்ய முள்ளதெல்லா மதியாலாகும்
பேருமில்லா யூருமில்லாப் பெருவெளியதாகப்
பேசாத மந்த்ரத்தை யெனக்குவோதும்
நீருநெருப் பாறதெல்லா மதற்கப்பாலே
நின்றதெல்லாங் கண்காட்சி சொல்லுங்களப்பால். (5)

அப்பாவென் றெனக்கூவி யழைத்தமைந்தா
அறிவறிந்த சுப்ரமண்யன் சொல்வேன்பாலா
செப்பாத பொருளிதுதான் றேடிக்காணார்
சிறுபிள்ளை யானதினுற் றெரியாச்சொன்னய்
முப்பொருளைக் காணுமன் மோட்சமுண்டோ
முடிவதனைத் தெரியாமற் பெரியோரெங்கே
வொப்படா புவியில்லா வாகாயமுண்டோ
வுறுதிகொண்டு போகவென்றான் மதியும்வேணும். (6)

மதிவேணு மென்றுசொன்னய் முன்னேயப்பா
மார்க்கமதை விட்டுநீ வெளியைக்கேட்டாய்
விதியற்றுப் போனவர்க்கு மதியுமில்லை
வேதாந்தங் கடந்தவர்க்குக் கெதியுமில்லை
நிதிதேட வேணுமென்றான் மதியைக்காரு
நிச்சயமாய் மதிபிடித்து பதியைக்காண்பாய்ப்
பதிவிட்டுப் பேசவேண்டாம் பதஷ்டம்போக்கப்
பதிதனிலே மதிபிடிக்கத் தருவேன்மைந்தா. (7)

மைந்தாகே ளிந்தமுறை யந்தோவந்தோ
மதியடங்காப் பெரும்பூத மாகும்பாரு
விந்தாலே கெட்டகுடி மெத்தவுண்டு
விந்தைவிட்டாற் பந்தமது விலகாதையா
அந்தோபா ரிந்தமதி விந்தாம்பாரு
மதையடக்க வேணுமென்றாற் றவங்கண்மெத்த
நொந்துமனம் புண்ணாகும் விந்துவாலே
நுணுக்கமடா வெருசுருக்க நல்லோர்சொல்வார். (8)

நல்லோர் சொல்லுவாரென்று விந்தமார்க்கம்
நாதமதை யோதவென் றுனக்குச்சொல்வார்
பல்லோர்கண் கூடிமெத்த பாடுபட்டார்
பாழ்மதியைக் காணவென்று லாளன்வேணு
மெல்லோர்க்கு நல்லபிள்ளை யாகவேணு
மிந்தமதி தனைப்பிடிக்கச் சமர்த்துவேணும்
வல்லோர்க்குச் சொன்னமுறை மதிதானப்பா
வாசிகண்டு மதியில்வைத்துத் தூங்குதூங்கே. (9)

தூங்கவென்று லகங்காரம் போகவேணுந்
துரியநிலை பார்க்கவென்றால் விழியும்வேணும்
நாங்களெல்லாம் பாடுபட்டோ மந்தமார்க்கம்
நாதியற்ற மதிபெருமை விந்துவாலே
நீங்காரம் போட்டலவோ நிறுத்தவேணும்
நிச்சயமாய் சுரூபநிலை காணும்பாரு
ஆங்கவர்க்கு முள்ளமுறை யிதுதானப்பா
அனற்றாவி மதிபிடித்து வருவாயேறி. (10)

ஏறிப்போ யுச்சிவழி காணவேணு
மெல்லையில்லா மதியோக நன்றாய்ப்பாரு
மாறியே போகுமடா மதியின்மார்க்கம்
வலத்திலே போகவிட்டு வணங்கிநில்லு
தேறியே யிடம்புகவும் வேணுமென்றாற்
சித்ரமதி வாசலிலே காக்கவேண்டுங்
கூறியே கண்ணகத்தி லிருத்திக்கொண்டு
கூச்சமற்று பார்க்கையிலே வெளிச்சம்பாரே. (11)

பாரேநீ யுள்ளுறைய மனநோக்குற்றுப்
பளிச்சென்று மின்னும்பர் ரொளிகாணப்பா
நீரேதுபாரேந் நிலையு மில்லா
நீயிருந்த யிடமதுவுந் தெரியாதப்பா
வாரதுவும் போறதுவும் வழியிற்பாரு
வந்தவழி வெளிதனிலுன் னுருவமாகும்
போறதுவு மில்லையடா வொருநாளுந்தான்
புத்தியை யதினிறுத்த நீதானுமே. (12)

தானுகு மற்றதெல்லா மழிந்துபோகுந்
தாய்வருவாள் மதிமயங்கித் தவறிடாதே
நானுகச் சொல்லவில்லை யந்நாட்டிலுள்ளோர்
நம்பெரியோ ரிதையறிந்து சொன்னாரப்பா
நீனுக வேணுமென்று நிசமென்றெண்ணு
நித்திரையைத் தள்ளிநின்றுக் காற்றைவாங்கிச்
சேனுதிபதி யாவாய்ச் சிதமதியினாலே
சிவராஜ யோகமது கிட்டும்பாரே. (13)

யோகமென்றுன் மதியோக மல்லால்வேறே
யோகமென்றுன் மூச்சையுநீ யடைத்திடாதே
போகமதை போக்கியுமே யோகம்பாரு
பொல்லாத பாவிமனம் புகுந்துகொள்ளும்
நாகமது பொல்லா துனையேதீண்டும்
நஞ்சிருந்த பாம்பதுதான் பிஞ்சின்மாள்வா
யாகமத்திற் சொன்னமுறை யழிக்கலாகா
யரவுவிஷந் தீண்டாமல் வாசிபாரே. (14)

வாசிவரும் வழிதனிலே மதியைப்பாரு
வந்தவழி யேசென்று விந்தாற்பாரு
நாசிநுனி போகவென்று னயனத்துள்ளே
நடுவீட்டி லேயிருக்கு மடுக்குமெத்த
தேசிகனைக் கண்டுமதி யாக்கவேணுஞ்
சிதம்பரத்தின் வீதியிலே மதியைக்காண்பா
யூசிமுனைத் துவாரமது வுள்ளேபோகு
மூற்றுற்றுப் பார்க்கமதி காலமாமே. (15)

காலமது கார்க்கவென்றாற் பாலம்வேண்டுங்
கணக்கதிலே யகப்படா நதியுமாங்கே
சாலமது செய்யுமடா நதியைத்தாண்டச்
சற்குருவின் றுணைகூட வேணுமப்பா
பாலமது மயிர்ப்பால நெருப்பாறுமங்கே
பற்றியிழு சிற்றடியை மதிபேர்சொல்லிச்
சீலமது பொழியுமடா சிதம்பரத்திற்
றீபவொளி கண்டவுடன் முத்தியாமே. (16)

முத்தியென்று சொன்னாலும் போதாதப்பா
முழுமதியைக் கண்டுரவி யாலேவாங்கு
சத்திவிந்து நாதமணி யோசைகேட்குந்
தவறாதே மதிதேய வெளிச்சம்போடு
கத்திப்புலம்பிக் கண்ட பலன்களென்னக்
காத்திருந்து நேத்திரத்தான் மதியிருத்தே
வித்தில்லா விருட்சமுண்டோ விந்தைக்கட்டு
வெளியொளிபாய்ப் போகும்பார் சுழியால்வாங்கே. (17)

சுழிநின்ற விடமல்லோ தோணியோடுஞ்
சுந்தரனே ரவிமதியி னிடையிற்றானே
வழிகண்டே னென்பார்கட் சுழியைக்காணார்
மாபாதக னப்பா தள்ளுதள்ளு
வழியாத பொருட்டேட வேணுமென்று
லாணிவலமே னோக்கித் தோணிபாரு
விழியாலே நீமிரட்டிச் சுழியைக்காண்பாய்
விதேகமுத்திக் கடையாளம் பதியும்பாரே. (18)

பதியென்றாற் சுழிபோகு மார்க்கந்தானே
பழகினவர் பரவிடு பதியிற்றங்கும்
மதியோக மதிவிருக்கு மனத்தைவாட்டு
மகான்கட் கற்பமுறைச் சமாதிதங்கும்
விதிபெருக்க மாகுமடா வவற்றிற்றங்கு
விதேகமுத்தி யடைந்தவர்க ளிதுதானப்பா
கதிதருமே மதியோக மதற்கப்பாலே
கணக்கறிய வொன்றுமில்லை வேதம்போச்சே. (19)

வேதம்விட் டப்பாலே பிரமமாச்சு
பிரமமென்ற விடமெங்கும் வெளியாய்ப்போச்சே
சாதனைக ளற்றுதடாத் தவமேயில்லைச்
சரிகைக் கிரிகாயோக ஞானமில்லை
வேதனைக ளொன்றுமில்லை வெளிச்சமில்லை
விண்ணில்லை மண்ணில்லை விதியுமில்லைச்
சோதனையாய்ச் சொல்லிவிட்டேன் சொரூபமில்லைச்
சுழியில்லைப் பதியில்லை நானென் றுமில்லைப்பாரே. (20)

நானென்று மில்லையடா நமச்சிவாயமில்லை
நாசிநுனித் துனையுமில்லை மதியுமில்லைப்
பானென்றுச் சொல்லுமிடந் தானுமில்லைப்
பஞ்சரத்னத் தீபமுமே யொளிவுமில்லை
நீனென்று நானென்றும் பேருமில்லை
நிச்சயமாய்ச் சொல்லுகிறேன் சத்தியம்பார்த்
தேனென்று சொல்லவுமே ருசியுமில்லைத்
திரும்பிவரா தெந்நாளும் வெளியாவாயே. (21)

வெளியாவா யின்னமொரு சூட்சங்கேளு
வீணருக்குச் சொன்னதல்ல விந்நூற்றுனப்பா
ஒளிவதனைத் தெரியாமற் சண்டிமாடா
யூரெங்கு மேசுற்றிப் புகைகுடிப்பார்
பழிபாவந் தனைச்சுற்றிப் பரகெதியுமில்லாப்
பாவிகளைக் கண்டாலே மோசம்மோசஞ்
சுழிதிறக்கா மாடவர்தான் சுற்றமில்லைச்
சுணங்கனைப்போல் வயர்கழிக்கத் திரிந்தாரையா. (22)

திரியுமிடஞ் சொல்லவென்று வின்னங்கேளு
சிதம்பரத்தைக் கண்டல்லோ திரியவேணு
மரியயனுங் கூடியல்லோ வமைத்தவிடு
அதையறியா மாடுகளைத் தள்ளுதள்ளு
எரியவென்றுற் கைமுறையை வாங்கவேணு
மெடுத்தவர்கட் கைகாட்டச் சோதிதட்டும்
பரியேறிப் போகவுமே மார்க்கஞ்சொல்வார்ப்
பரிதிமதி யல்லாமலொன்று மில்லைப்பாரே. (23)

ஒன்றென்று சொல்லுவ துணரக்கேளு
வொருமொழியை யல்லாமல் வேறொன்றில்லை
மன்றுள்வரு மொழியதுவே வாசியாகும்
வாசிகாணச் சொன்னதுதான் மொழியுமாகும்
நின்றுநின்று காணவேணு நெறியிலூன்றி
நிலைக்குமடா புருவமத்தி யுந்தானப்பா
வன்றன்று பார்த்தவர்க ணெற்றிப்புருவமென்
றதையறிய மாட்டாமன் மாண்டுபோனார். (24)

மாளாமற் போகவென்றால் மனதைக்காரு
மனமல்லால் வேறொன்றும் வாய்க்காதையா
ஆளாக வேணுமென்றா லகாரத்துள்ளே
யடங்கிநிற்கு மொருமொழிதா னதற்குப்பேரு
நாளாகு மப்பப்பா கடுமைமெத்த
நாரியர்கள் வலையிலகப் பட்டதுதான்
வாளாயுதம் பெற்று வாழ்ந்துமென்ன
வஞ்சகமுள்ள மதியைக் கண்டிடாயே. (25)

கண்டுகொள்ள கலைமதியின் காலைத்தூக்குக்
கசடறவே திருத்தியதை ரவியில்வாங்கு
பெண்டுபிள்ளை யற்றுவிழப் பேரின்பவீட்டைப்
பெற்றாலோ வதுதானே மதியின்வாழ்க்கைக்
கொண்டேற்றித் தின்றுவிடு மதியையப்பா
கூச்சமற் றிருக்கவேணு மதிபிடிக்கத்
தண்டுமிண்டு செய்யாதே தவறிப்போனாற்
றுய்வந்து சொல்வாளோ யில்லையப்பா. (26)

அப்பப்பா யிப்போவொரு வுப்புச்சொல்வே
னண்டத்திற் குள்ளிருக்கு மந்தவுப்புச்
செப்பப்பா வென்றாலுஞ் செகத்திற்காணார்த்
தெரிந்தவர்க ளைக்கேட்டு வுப்பைவாங்கு
முப்பப்பா மூன்றுபொரு ளடங்கிநிற்கும்
முப்பொருளு மறிந்தவர்க ளுப்பைக்காண்பா
ரெப்பெப்போ காண்பதென்று லெடுத்துச்சொல்வே
னென்குருவின் கைமுறைதான் முப்புமப்பா. (27)

கைமுறையைக் காணவென்றாற் கணக்குமெத்தக்
காத்திருந்து கேட்கவேணு மறிவைத்தீட்டி
மெய்ம்முறையைச் சொல்லுகிறேன் வியரங்கேளு
வேதாந்தஞ் சொன்னதுவே பூரணமதாகும்
வைமுறையுங் கைமுறையு மிதுதானப்பா
மார்க்கண்டன் சுகர்முதலோ ரடைந்தவீடு
செய்முறைபூ ரணந்தன்னிற் செபமேயில்லைச்
சித்துவத்தி லொத்திருக்கும் நன்றாய்ப்பாரே. (28)

பார்க்கையிலே பூரணத்திற் றாலசூக்மம்
பதித்துவைத்தான் பிரமநிஷ்டை யாகவேதா
னேற்கையிலே கம்பமுனை மேலேகாணு
மேழடுக்குக் கட்டிவைத்தா னந்தவீட்டிற்
சேர்க்கையில்லா வீடதுதா னென்றிருக்குச்
சித்துநின்ற விடமல்லோ சேர்க்கையில்லை
நோக்குதலிற் பூரணத்திற் பார்ப்பாய்நீயும்
நுட்பமென்று நினையாதே யந்தோபாரே. (29)

அந்தோவி ததிசயமா னந்தமாகு
மானந்தத் தைக்கண்டு வறிவினில்லு
விந்தோ கட்டியல்லோ வெளுத்துதப்பா
வேகாத தலையென்ப திதற்குப்பேராங்
கந்தாதே பிந்தாதே காத்திருந்துக்
களங்கமற்ற கண்ணாடி தன்னினில்லு
நொந்துமனம் விட்டாலே போச்சுபோச்சு
நுண்ணறிவா லன்னையைநீ காணலாமே. (30)

அன்னையைநீ கண்டாலே யமுதளிப்ப
ளவளிடத்தில் வரம்பெற்று விதியைமாற்றாய்ப்
பின்னையுமே யன்னைவந்து பேசாமோனம்
பெற்றவர்க்குத் தான்கொடுப்பாள் வெளியேதானைப்
முன்னைநீ செய்தவினை யெல்லாம்போச்சு
முழுமதியும் பூரணமு நீயேயாச்சுப்
பின்னையினி யொன்றுமில்லை பேரின்பவாழ்வு
பெற்றவர்க்கு முத்திபது பேசலாமே. (31)

ஆமேதானரசுக்கு அவளே தெய்வ
மண்டசரா சரமதுவே யொன்ருய்நிற்கும்
நாமமற்று பூமனேயும் பிடித்துவங்கே
நாட்டமற் றிருக்கவேதா னங்கைசொல்வள்
காமமெல்லாம் பறந்தோடுங் கனகபீடங்
கண்டுகளித்தானந்த சிலம்பொலியுங் காணுஞ்
சாமநிலே யனற்றனிலே சாம்பவியைக்கண்டு
சங்குமுழங்குந் தொனியைச் சாத்தாற்பாரே. (32)

சாத்தைப்பார் சன்னபின்ன லாகியெங்குந்
தன்மயமே யுன்மயமாகுங் கார்ப்பாய்
வரத்தைப்பார் நல்லவா மனஞெளியும்வீசு
மந்தவழி நீசென்ருல் சித்தர்மெத்த
சிரத்தைப்பார் சிவலிங்க ரூபங்காணுஞ்
சித்தியது முத்திபெற்ற மோனமாகுங்
காத்தைப்பார் கண்டுமுத்ரை யாகிநின்ருற்
கானலொளி தாண்டியுமே கடக்கலாமே. (33)

கடக்கவே கதிர்தோனும் மடத்தைப்பாரு
கற்பமதி யால்வந்த மடந்தானப்பா
இடத்துக் குரியமட மிதுதான்பாலா
என்குருவின் போதனேயு மிப்படியேயாச்சு
நடக்கவென்ரு லடக்கமுள்ள யோகந்தேடு
நாமறிந்த சிவயோக நன்ருய்ப்பாரு
முடக்கமல்லோ கருவிகடா ளுெழிந்துபோச்சு
மூவாசை யெலாம்போச் சாவாய்மேலே. (34)

மேலேவெளி கண்டவர்க்கு விடுமேது
விண்ணவரைக் கடந்துமிக நிற்கும்பாரு
காலமதிற் ருன்கொள்ள கற்பமாகுங்
கண்டுரையாக் கற்பமிது சொலவொணுது
தாலமதிற் ருனுக நிற்கும்பாரு
தன்வெளியி லேவந்தா லுனேப்போற்காணும்
மூலமதி லடங்கிநின்று மூச்சுமில்லா
முடிகொண்டே பெருவெளியைக் காணுவாயே. (35)

ஆவாயே யனலற்றுப் பொறியுமற்று
அரசுசெய்த விடமுமற்று ஆசானினுய்
நாவாலே சொலவொண்ணு நாட்டமில்லை
நானிருந்த நீயிருந்த விடமுமில்லைத்
தேர்வாயே தொண்டுசெய்ய வொன்றுமில்லைத்
துணையற் றிருந்தவனே பெரியோனப்பா
பாவாயே பரவெளியே யெல்லாமாச்சு
பழகினதெல் லாம்போச்சு வெளியாமுற்றே. (36)

சுத்தஞானம் 32.

ஆதியாம் பராபரையா மாத்தாள்காப்பா
மகண்டபரி பூரணத்தி னருளேகாப்பாஞ்
சோதிமணி மூலமதிற் றுலங்குங்காப்பாந்
தூயவெளி தனிலேறி நின்றோன்காப்பாம்
பாதிமதி சடையணிந்தோன் பாதங்காப்பாம்
பரிதிமதி யொன்றாகி நின்றோன்காப்பாஞ்
சாதிபே தகமகற்றித் தனித்தோன்காப்பாஞ்
சற்குருவின் றுணைகாப்பாஞ் சாற்றக்கேளே. (1)

சாற்றுவேன் வேதமுறை முடிவின்மார்க்கஞ்
சற்குருவின் பதம்போற்றி சாற்றக்கேளு
வேற்றுமை யில்லாவிந்நூல் வெளியாய்ச்சொல்வோம்
வேதாந்த விரகசியந்தான் விளங்குமிந்நூற்
கூற்றுவனைக் காலுதைத்துத் தள்ளுந்தள்ளுங்
கொடிதான மாயையெல்லா நீறதாகுங்
காற்றுருசி கண்டோர்க்குக் காட்சியாகுங்
கைகாட்டி நின்றவிட மோட்சந்தானே. (2)

மோட்சமது தானுண்டு சூக்குமத்தான்
முத்திரையின் பலனதுவாய் முடிகொண்டேற்றுந்
தாட்சியன்றி யேகிடைக்குந் தடையொன்றில்லை
சாமிதுணை யுனக்குண்டு சாயுச்யம்பாரு

சாட்சியது வேணுமென்றாற் சடத்தைப்பார்த்துச்
சற்குருவை நீதேடிச் சார்ந்துநில்லு
காட்சிதரு வாருனக்குக் கண்ணினுள்ளே
கண்ணிருந்தால் போதுமடா கருதிப்பாரே. (3)

கண்ணிருந் தென்னபலன் மனச்கண்வேணுங்
கௌனமில்லாப் பேர்களுக்குக் கிடைக்காதையா
விண்ணிருந்து வெளிகாண வொளிதான்வேணும்
வேதாந்த சாரமெல்லாஞ் சுழியாற்றேணு
மண்ணிலிருந் தென்னபலன் மதியைப்பாரு
மதியிருந்தாற் சுழிதோன்றிப் பதியுங்காணும்
பண்ணியிரு பதிதலத்தி லிருந்துகொண்டு
பழகிவர நாளாகப் பயிராகும்மே. (4)

ஆகவே மதியதனைப் பிடிக்கக்கேட்பா
யகங்கார கோபமதைக் கொண்டிடாதே
வேகமா யோடிவரும் வெண்சாரைதான்
வெட்டவென்று லரிவாளால் வெட்டவேண்டுஞ்
சாகவே கருஞ்சாரை தனிலிருத்தித்
தையலர்தம் வாசலிலே வைத்தேயூது
பாகமா யோடிவரும் பரிதிதன்னிற்
பார்முனையின் மதிதோன்றும் ரவியால்வாங்கே. (5)

வாங்கவே மூலமதி லெழுந்தசோதி
மண்டலமும் விண்டலமு மொன்றாய்நிற்குந்
தாங்கவே சந்திரனார் விடதாகுஞ்
சமாதிவீ டதுவாகுஞ் சத்துசித்தாம்
பாங்கான திருநடன மதுவுமாகும்
பார்மகனே கெஜபுடமாய் மதியில்வைத்துத்
தூங்காதே சுழினைவிட்டுச் சுணங்குறாதே
தாண்டிவூற்ற மீனதுபோற் சுண்டுவாயே. (6)

சுண்டவே பூரணமுஞ் சுடர்மூன்றுகுஞ்
சூட்சாதி சூக்குமந்தான் வெளியாய்ப்போகு
மண்டமது தான்வெடிக்கு மகண்டசோதி
யாசான்கைப் பாகமதா யறிவிற்றங்கிக்

கண்டமதிற் றங்கிநின்ற கருவைப்போற்று
கசடறவே நாசிநுனி நடுவிலேற்று
சண்டமா ருதம்வீசத் தாயுஞ்சொல்வாள்
சற்குருவின் றுணையாலே தன்போனுமே. (7)

தன்போனுப் போவதற்குத் தாயைப்போற்று
தாய்வசமா யாவதற்கு மதியிலேற்று
வனியாய மாயுடல மதியில்லாம
லழிந்ததே யென்மக்காண் மதிபாராமற்
பனியதுபோ னீங்கிவிடும் பழகிப்பார்த்தாற்
பார்த்தவர்க்குப் பலன்கிடைக்கும் பரமரூப
மினியதொரு மதிதனையே யிடைவிடாம
லிருத்தடா ரவிவரும்போ திடையினில்லே. (8)

நில்லேதா னிமிடமது பிசகிடாதே
நில்லிமைக்குட் டட்டிவிடு நேரஞ்செல்லா
தல்லலென்று பாராதே யறிவோனுனு
லயராம னித்திரையைச் சுழியிற்ருக்கு
சொல்லாத மந்திரமுஞ் சுழியினுள்ளே
சுற்றிநீ பிடித்திழுக்கி லுனையேசொல்லும்
பல்லா யிரங்கோடி பழகினுலும்
பாழ்மதியா விதையன்றிப் பலன்வேறுண்டோ. (9)

உண்டேதா னுலகத்தா ரெல்லோருக்கு
முமைபாக னமைந்திருக்க வறியமாட்டார்
கண்டபேர் சொல்லார்கள் கபடரையா
கருவாளி நீயானு லவரைக்காண்பாய்
விண்டபேர் மெத்தவுண்டு வீணுய்ப்போனுர்
விண்ணுலகம் பாராம லழிந்தாரையா
கொண்டதோர் கோலமதை கொளுத்தவென்ருற்
கூர்முனையின் மதிரவியாற் குத்தித்தாக்கே. (10)

தாக்கவே சந்திரன்றன் னேரமெல்லாஞ்
சர்வகாமிய நீக்கிச் சமயம்பார்த்துப்
பார்க்கவே வேணுமடா பதித்தலத்தே
பழகிவரப் பலன்கிடைக்கும் பாலாகேளு

வேர்க்கவே வெண்சாரை பிடிபட்டுப்போம்
வேணமதி புறப்படுமே விண்ணிற்காண்பாய்
கார்க்கவே கண்கூசுங் கருவிற்றங்கு
கசடற்றுப் போகுமடா களங்கமற்றே. (11)

களங்கமற்ற கண்ணடி தன்னினின்று
கருதிப்பார் வெளிதோன்றும் விழியாற்பாரு
புலன்களற வொளிதோன்றும் புவியுந்தோன்றும்
பூத்தமல ராகிவிடு மேற்றம்பாரு
தலங்களாறுஞ் செலவே சமாதிமேடை
சன்னிதியின் வாசலுக்கு வழியுண்டாச்சு
மலங்களறு மதியடங்கு மௌனந்தங்கு
மங்கையபி ராமிவர வரமுண்டாச்சே. (12)

ஆச்சேதா னரசாள வடுமைதங்க
வயராதே நித்திரையைச் சுழியில்வாங்கு
வாச்சுதென்று மங்கையர்க ளோடிவந்து
மடிபிடித்தே யுனைத்தள்ளி மயக்கஞ்செய்வார்
மூச்சேதான் விட்டுவிட்டால் மோசம்மோசம்
முத்திரையாற் சுட்டுவிட்டு மோனமேசெல்
காய்ச்சமரங் கனியாமக் கனியிற்றங்கிக்
கைகாட்டி விட்டகுரு தன்னைப்போற்றே. (13)

போற்றியே துதிசெய்து பூசைபண்ணிப்
பூஷணமாய்த் தான்றரித்து பாதநில்லு
சாற்றியே நாதசாரத்தைப் பூட்டச்
சண்டாள நாதமது குருவாய்நிற்கு
மாற்றியே போவதற்கு வழியுண்டாச்சு
மதனையாய் வந்தகுரு நீயேயாச்சு
வாழ்த்தியே போற்றிநின்று வணங்கிக்கேளு
வழிபார்த்த விடமெல்லாம் வானமாச்சே. (14)

வானுச்சு வனமாச்சு மதிரவியுமாச்சு
வன்னிபடர்ந் திடமெல்லாம் புவியதாச்சே
பூணுச்சே யுயிராச்சே யோங்காரத்து
ளுத்தமர்க ளிருக்குமிடம் வெளியுமாச்சு

தேனுச்சு ருசியாச்சுத் தித்திப்பாச்சுத்
திருநடனந் தனைப்பார்க்க நாளுமாச்சு
சேனுதி பதியாச்சு செபங்கள்போச்சு
தில்லைவெளி தனிற்செல்லச் சொல்லலாச்சே. (15)

சொல்லலாஞ் சூட்சமொன்று சொல்லக்கேளு
சொரூபானந்தக் கடனீ ராழமேயுண்
டல்லலாலே வந்தகட லகலமெத்த
வறிவுனக்கு வேணுமடா வாழிதாண்ட
வெல்லலாம் வெகுபழக்கஞ் செய்தாயானல்
வேணமதி யுனக்குண்டு வெண்சாரையாற்
கொல்லலாங் குருவருளைப் பெற்றுநின்று
கூர்முனையில் ரவிமதியைப் பூட்டிச்செல்லே. (16)

பூட்டிவிடும் போதெல்லாம் மதியில்வைத்துப்
பொய்யான காயமிதைத் தள்ளிப்போட்டு
நீட்டிவிடு நீடுருவிப் போகுமட்டும்
நிர்ப்பந்த மாய்நின்று கண்ணீர்வாங்கி
யாட்டிவிடுங் கரும்பதுபோ லசையாதேநின்
றனற்ருக்கி நீர்சொரிந் தண்ணுக்கிலேற்றி
மாட்டிவிடு மதிதனையே ரவியிற்ருக்கி
மாளாத சூளையெல்லாம் ரவியிற்போமே. (17)

போமேதான் ரவிபாய மதியுந்தோய்ந்து
போய்ப்புகுந்தா லரனருளி னிற்கும்பாரு
வாமேதான் வரங்கண்மெத்த வந்தபேர்க்கு
மங்கையபி ராமிவந்து வார்த்தைசொல்வாள்
சீர்மேவுந் தில்லைநகர் கோயில்கண்டாய்
திருப்பணிகண் மெத்தவுண்டு தீபங்கொண்டா
ளுமேவும் பதிதலத்தில் நமனுமில்லை
நாதாந்த வொலியதுவு நடக்குந்தானே. (18)

ஒலியதுவுந் தானடக்கு முஞ்சலாடு
முத்தமர்க டிருநடன முடனேகாணுங்
கலியதுவும் வாராது காட்சிமெத்த
கண்கூச்ச மற்றுநின்ருேர் சித்தராச்சு

நலியதுவு மொன்றுமில்லை நாதங்கேட்கும்
நமனையறுத் தேவெளியிற் காட்டும்பாரு
பலியதுவுங் கொடுத்துவிடு பிணமதாக
பகராத மோனமிது பகரும்பாரே. (19)

மோனமது பகரவென்றால் ஞானம்வேண்டும்
முத்திரையைத் தரவென்றாற் சித்தர்வேண்டும்
வானமது பார்க்கவென்றான் மதியைத்தேடு
மதியிருந்தாற் பதிகாணும் விதியைத்தாண்ட
தேனமுதம் வேணுமென்றாற் றேவிபூசை
செய்துவர செங்கதிரோன் வீடாம்பார்ப்பா
யூனமுது செய்துவந்தா ருடற்பெருத்
துலுத்தசுணங் காய்த்திரிவா ருறுதியற்றே. (20)

உறுதியற்றுப் போனவர்கட் குத்தமர்சொல்
லவ்வுறு துள்ளபடி யுறுதிசொல்வோம்
நிருவிகற்பச் சமாதியது நிலைக்கவென்று
னீடுருகி நின்றவர்க்கு நிலைகண்ணாடி
கருவியற்று வந்தமென்று காட்டுமென்பர்
காட்டாதே காட்டினாற் கண்டுதோயு
மருவிநின் றீராறுண் டாண்டுசென்றால்
வாய்க்குமே யவர்க்குமுத்தி மதியிற்றானே. (21)

மதியிருந்தால் விதிவிலக்க மனக்கண்வேணு
மனதைவிட்டான் மற்றொன்றால் வாய்க்காதையா
கதியிருந்த மூலமதிற் சோதிகண்டிக்
கால்வழியாய்ப் பிடரிவரைக் காணுமார்க்கம்
நதிதாண்ட வோடுமடா நாசிநுனியினில்லு
நடுவணையிற் றட்டிவிடு நாடிப்பாரு
பதிவிலக்க மாகிவிடும் பரவெளியாயெங்கும்
பாழ்மதியை யிடைநடுவாய்ப் பிடித்தேயோடே. (22)

ஓடையிலே விழியடங்கி யொத்தேநிற்கு
மோகோகோ கம்பமுனை பிசகாதப்பா
வாடையிலே வாசியது பொடிதான்றாவி
வாசித்துப் பார்க்கையிலே மௌனந்தோன்றுங்

கோடையிடி தான்முழங்குங் கூர்மைதங்குங்
கும்பிதனிற் ருனிருந்த தம்பூரைப்பா
ராடையிலே யாட்டமெத்த வனந்ததீப
மறிவுதங்கிக் குருமுகத்தி லமருவாயே. (23)

அமர்ந்திட்ட நேரமெல்லா மாசான்மார்க்க
மறிவாலே நீவணங்கிப் போற்றிசெய்து
சமைந்திட்ட விடமெல்லாஞ் சாரமாச்சுச்
சாரமது வெண்சாரைத் தயிலமாச்சு
குவிந்திட்ட விடமெல்லாங் கொள்கையாச்சு
கூற்றுவனைக் காலாலே யுதைக்கலாச்சு
பரிந்திட்ட விடமெல்லாம் பாபம்போச்சு
பற்றிநின்ற பேர்க்குமிது முத்தியாச்சே. (24)

முத்திதரு மூலமதி லெழுந்தசோதி
மூதண்டம் பாய்ந்துசுழி முனைமேனிற்கு
மத்திமுகத் தானருளைப் பற்றிநின்று
லறிவறிந்த குருவதனைக் கருவால்வாங்கிப்
பத்திவருங் காணிக்கை பசும்பொன்னுகும்
படர்ந்துவரும் வாசியினு லதிகமாற்று
சத்தியவ ளிருந்துவிளை யாடும்வீடு
தையலர்தம் வாசலிலே காவல்வையே. (25)

காவல்வைத்த நேரமெல்லாஞ் சங்கையூது
தாணிதனி லொருவருக்குந் தெரியாமற்ருன்
சாவல்வெட்டி பூசைபண்ணித் தாயைப்போற்று
சங்கரனுர் வீடதுவு முனக்குமுண்டாச்
சாவலது தீரவென்று லாணியாக்கி
யழியாத சுழிமுனையிற் குத்தித்தாக்கி
சேவலிளங் குயிலதுபோற் சேயனுகி
செவிடுமை நீயாகிச் சேரலாமே. (26)

சேரலா மதிபெருமை மெத்தவுண்டு
சென்றவிட மெல்லாமு மொன்றுய்ப்போச்சு
மாறலாம் வாசியது வன்னியாச்சு
மங்கையர்க ளாசையுமே நீறதாச்சு

பாரெல்லா முனக்காச்சு படிகமாச்சு
பஞ்சரத்ன தீபமுமே யதிகமாச்சு
கூறலாங் குருபெருமை மெத்தவுண்டு
கொற்றவனே மதிபெருக்கங் கூறக்கேளே. (27)

மதியென்றுன் மனமதாச் சறிவுமாச்சு
மௌனமென்ற வட்சரமுந் தானுமாச்சு
விதிதாண்டிப் போவதற்கு வீடுண்டாச்சு
விண்ணாச்சு மண்ணாச்சு விளக்கொளிதானாச்சு
நதிதாண்டிப் போய்புகுந்து நமனைவென்று
நம்பிவந்த பேருக்கம் பிகையுமாச்சு
பதிதனிலே போய்ப்புகுந்து பரனைவென்று
பரப்பிரம மானதுவு மதுவுமாச்சு. (28)

ஆச்செனநீ யவசரமாய்ப் பிடித்திடாதே
யடங்காது கோபமது கொண்டிடாதே
வாச்சுதென்று மனம்வேறாய்ப் போய்பிடித்தால்
மதிமயக்கம் பொல்லாது மாயமாயம்
போச்சுதென விட்டுவிட்டாற் போகஞ்செய்யும்
பொய்யான காயமிதே யுய்யாதோடுங்
காச்சுதென்றுங் கனிபழுக்கப் போகுதென்றுங்
கச்சைகட்டி பச்சைமயின் மேயுந்தானே. (29)

மேயுநாள் ஞாயிறென்ற திங்கடன்னின்
மேகவர்ணப் பொடித்தூவி மனக்கண்ணூட்டிப்
பாயுமே பதறாதே பூரணைக்குட்
பழகிவந்தாற் கூர்முனையிற் சிக்கிக்கொள்ளூர்
தேயுமே யரிவாளால் வெட்டித்தள்ளு
சித்திரமா நவரத்ன பீடங்காணுந்
தோயுமே மதியதுவுந் தோய்ந்துதோய்ந்து
தொண்டுசெய்யச் சித்தருனைக் கொண்டுபோவார். (30)

சித்தரென்று சொல்லுமிடஞ் சிவனாரெல்லை
சீவவர்க்கத் துயிர்களொன்றாய்ச் சேர்ந்துபோகு
முத்தரென்று சொல்லுமிட மோனமேவு
முத்திரையின் பலனதுவாய் முடிகொண்டேற்றும்

பித்தரென்றும் பேயரென்றும் பிதற்றலாகும்
பேரின்பக் கடற்புகுந்து நாணங்கெட்டுக்
கர்த்தரிருப் பிடங்காண காட்சிபெற்று
கால்வீசி முனைதங்கிக் ககனம்போவார். (31)

போவாரே பொன்னுலக மெல்லாந்தோன்றிப்
பொய்யாப்பொன் னம்பலத்திற் பொருத்திவைக்க
வாவாயே யரசுரிமை யறிந்துநின்று
லானுமையா ளுன்னைக்கண் டன்புகூறச்
சாவாயே சவம்போலே சபிக்கச்செய்வார்
சச்சிதா னந்தகுரு நீயேயென்பார்
சேர்வாயே சென்றவிட மெல்லாம்பார்த்தாற்
றில்லைநகர்க் கோயிலதா யெல்லாமுற்றே. (32)

பூ ர ண ஞா ன ம் 28.

பொருளான பூரணமாய் நின்றசோதி
புகலார்க ளுதாக்கள் புகலக்கேட்பா
யருளுதய மாகிநின்ற வாத்தாள்காப்பா
மடிமுடிவு நடுவாகி நின்றோன்காப்பாம்
பருவமது செய்துவந்தோன் பாதங்காப்பாம்
பக்குவமா யிதையறிந்த சித்தர்காப்பா
மருவுவன்னி யிருப்பிடத்தி லிருந்தோன்காப்பா
மக்களே யுங்களுக்குச் சொர்க்கங்காப்பாம். (1)

கப்பியகாப் பெதுவெனிலோர் கையிலாடுங்
கதிர்மதியைப் பிடித்துநன்று யாட்டிப்பார்ப்பாய்
முப்பென்று சொல்லுமிட மிதுதானப்பா
முருக்கம்பூப் போனிறமா நந்திபீடஞ்
செப்பென்று வுலகத்திற் பிறந்தோரில்லைச்
செகந்தனிலே கோடியிலே யொருவனுண்டா
மப்பென்று முப்பென்று மறைவதாகி
யாச்சர்ய மாய்விளங்கித் தோன்றும்பார்ப்பாய். (2)

தோணுமே முக்கோண கேசரியில்நின்று
சுடர்போன்ற தீபமது சொலிக்கும்பார்ப்பாய்
காணுமே வட்டம்போற் கதிரொளியும்வீசுங்
கண்கொள்ளாக் காட்சியது யெதிரேதோன்றும்
பூணுமே நந்தியருட் பீடந்தானும்
புகழ்பெரிய நாதாக்கள் குடியிருப்புச்
சாணகலக் கொல்லையிலே சந்தையொன்று
தன்வெளியி னின்றவனே ஞானியாமே. (3)

ஞானியென்றால் வாய்ப்பேச்சா லாவதேது
ஞாயிறென்ற வாரமதில் விரதம்பூண்டே
யாணியாய் வந்ததடா வந்தவீடே
யாச்சர்ய மெத்தவுண்டு காண்பாய்நீயுந்
தோணிபோ லோடுமடா சொர்க்கவீடு
சொல்லுதற்கே யண்டவுச்சி மேலேகாணும்
வாணிபங்கண் மெத்தவுண்டு மயக்கங்கொள்ளாய்
வந்தவர்கள் கைலாயம் வாழலாமே. (4)

ஆமேதா னரசுரிமை யங்கேயுண்டா
மவனவளுங் குடியிருந்த யிடத்தைக்கண்டு
போமேதான் வாமத்துக் குள்ளேமைந்தா
பொங்கமுடன் ரவிகோடிக் காந்திகாணு
நேமமாய் பஞ்சவர்ண மைந்துமுண்டு
நெருங்கியே போய்பிடிக்க வோடும்பார்ப்பாய்
சோமனென்ற மதிதன்னையே யிறுக்கிப்போட்டாற்
சொல்லிறந்த விடமெங்கே மோனப்பேச்சே. (5)

பேச்சேது மூச்சேது தானுமேது
பித்தனும் பிதற்றுதலு மறிவுமேது
வீச்சேது வேங்கையென்ற புலியுமேது
வெறும்பாழா யறுமிடத்தில் வீடுமுண்டு
பாய்ச்சலது பாயாதே பாழ்போகாதே
பாவிகளோ டிணங்காதே பாத்தைக்கூடு
காய்ச்சலது காயுமடா கானல்வீசுங்
கண்டுபார் முத்திரையின் கருத்திதாமே. (6)

முத்திரையின் படிதவறு தின்னங்கேட்பாய்
மொழிதவறு மானிடர்க ளிந்நூல்பார்ப்பார்
சத்தியமாய்ச் சொல்லுகிறேன் றவறிடாதே
சண்டாளர்க் குரையாதே சாபமெய்தும்
பத்திசெய்து பிறந்தோர்க்குப் பாவம்போகும்
பராபரையாள் குடியிருப்பு மதிகமாகும்
நித்திரையி னின்றவர்க்கு நிலைகொள்ளாது
நிச்சயமாய்ச் சொல்லுகிறே னினைவாய்நில்லே. (7)

நில்லேதா னெற்றிக்கண் திறந்துபாரு
நிலையான காலறிந்து முனையினில்லு
கல்லேதா னம்மலையோ காடோமெத்தக்
கரடிபுலி சிங்கமுமே யதிகமாகும்
வெல்லடா வூமையென்ற வெழுத்தைப்போடு
வெட்டாத சக்கரமும் வெட்டும்வெட்டுஞ்
சொல்லாம லோடிவிடும் ரூபந்தட்டுஞ்
சுழினையிலே நின்றுமனஞ் சொக்குவாயே. (8)

சொக்குவா யிதுவலவோ கருணைவீடு
சுகதுக்க மிரண்டினையும் போக்கும்வீடே
யக்கரையி லிருக்குதடா வந்தவீடு
ஆழாழி தாண்டியல்லோ வப்பாற்சென்றாற்
சிக்கெனவே தீபதெரி சனையுங்காணுஞ்
சிதம்பரத்தி னொலிகேட்குஞ் சிலம்புகொஞ்சு
முக்கனிசர்க் கரைதேனு மமுதப்பாலு
மூட்டுவா ளம்பிகைவந் தூட்டுவாளே. (9)

ஊட்டுவா ளமுதப்பா லுண்ணச்செய்வா
ளுத்தமனே யுள்வீட்டுக் குள்ளிருந்து
மூட்டுவா ளக்கினியைக் கொளுத்திப்போட்டு
முன்செனம் மிட்டகுறை முடியச்செய்வள்
காட்டுவாள் கண்டவர்கள் நகைக்கச்செய்வள்
கைகாட்டி நின்றவிடங் காணியென்பா
ளாட்டுவாள் சித்துவிளை யாடற்சீரை
யரகரா யென்னசொல்வே னந்தோபாவி. (10)

பாவியென்று லிவளைவிட வேறுமில்லைப்
பணம்பறிக்கச் சண்டாளி வந்தாள்பார்ப்பாய்
தாவியே மடியைபிடித் திழுத்துக்கொண்டு
சாத்திரத்தின் பூட்டுகளைச் சுட்டெரித்தாள்
கூவியே கூச்சலிட்டேன் கூகூவென்றேன்
குடியிருக்க விடமுமற்றேன் யாருமற்றே
னுவியைக் கொள்ளைகொள்ள வழைத்தாள்பாவி
யந்திபக லற்றவிடத் தழுத்தினளே. (11)

அழுத்தினா ளஞ்சனத்தின் றைலத்தைப்போட்
டரகரா யுகமுடிவு மங்கேகண்டேன்
கழுத்தின்மே லாடுமடா கண்டுபார்ப்பாய்
கனமௌன பீடமதை யுரைக்கொண்ணாது
சுழுத்திவிட்டு வறுகோணச் சுழியுமிட்டுச்
சத்தியே பிடித்திழுக்கு மந்தபீடம்
பழுத்தபழக் கொம்பிருக்க பழம்வேறுமோ
பக்குவமா யதைப்பிடித்து பறித்துண்பாயே. (12)

பறித்துவரக் காலமது பகரக்கேளு
பன்னிரண்டு காலுள்ள புரவிமேலே
மறித்துவர வாய்தனிலே பூட்டுப்போட்டு
மௌனமென்ற வட்சரத்தை யதிலேமூட்டு
குறித்துவர வேயாண்டு முப்பதுக்குள்
கூறரியப் பயிராகுங் காயுங்காய்க்கும்
பறித்துவரப் பழமாகும் பட்சம்பார்த்துப்
பருவமது தான்பார்த்து பறித்துக்கொள்ளே. (13)

கொள்ளவே வித்தெடுத்து முளையாய்ச்செய்த
குலகுருவாற் கிடைத்தவிந்தக் கனியைப்பாரு
மெள்ளவே யிந்நூலை வெளியிடாதே
வேந்தருக்கு முரையாதே வீண்போகாதே
பள்ளமதிற் றுன்கிடக்கு முதலையொன்று
பகர்ந்துபா ரம்முதலை யுரைசெய்யும்பார்
தள்ளாதே தயங்காதே தடவிப்பாரு
சத்தியமாய்ச் சொல்லுமடா சார்ந்துபாரே. (14)

சார்ந்துபா ரவிமதியைப் பிடித்துநன்றாய்ச்
சாரியிட வலமாக மாறியோட்டுக்
கூர்ந்துபா ரவிமதியு முருகியொன்றாய்க்
கொள்ளையென்ற கண்ணருவி வெள்ளங்கொள்ளும்
போந்துபார் மயிர்ப்பால மீதிலேறிப்
பொல்லாத காயமிதைத் தள்ளிநீபோட்
டாய்ந்துபார் சுழியாணி யதற்குப்போா
மறுரூப மற்றவிடத் தடங்குவாயே. (15)

அடங்கும்போ துயிரெல்லா மொன்றேயாகு
மாகாசங் கிடுகிடென மழைதான்பெய்யு
மடங்குமே யெழுத்தெல்லா மாண்டுபோகு
மக்களே யிந்தமுறை வகைதப்பாது
தடங்கலுமே யில்லையடா சண்டிமாடே
சட்டமாய் நிஷ்டையிட்டு நன்றாய்ப்பாரு
படமெடுத் தாடுகின்ற பாம்பைக்கொன்றாற்
பரதேசி யாகுவையப் பதியினுள்ளே. (16)

பதியென்று சொல்லுமிட முணரக்கேளு
பார்மூக்கு மத்தியிலே நடுவிலேதான்
நதிரூதக் கேணியுண்டு நயனத்துள்ளே
நாசிநுனி மேலேதா னனந்ததீபம்
விதியிருந்தால் விடுமோதான் விளக்கொளிதான்காணும்
வீணர்களுக் கென்னூற்றான் வெளிப்படாது
மதிதனக்குப் போதாமன் மடையரெல்லா
மாறுமற் காஷாயந் தரிப்பார்வீணே. (17)

வீணரென்று வந்தவர்க ளனந்தங்கோடி
வேங்கையென்ற புலித்தோலை யணிந்துகொண்டு
காணடவி போய்த்திரிந்து காய்கனிகள்தின்று
கரடிவேஷம் பூண்டு வருவார்மாடு
நாணமின்றி யகங்கொண்டு யோகம்பேசி
நாட்டினிலே தண்டெடுத்து வருவார்பாரு
சாணகலக் கொல்லையிலே குடியிருந்து
தவஞ்செய்து வந்தவரே ஞானியாமே. (18)

வந்தவர்க்கு மடையாளஞ் சொல்லக்கேளு
வகையான கைரேகை தானுமுண்டு
சொந்தமனை தனிலிருந்து சுகந்தேடான்காண்
சுகதுக்க மிரண்டினையும் பாரானையா
நிந்தனைக ளேதுமில்லா னிதம்பரந்தான்
நித்திரையுஞ் சோம்பலுமே பசியுமில்லான்
வந்தவழி போனவழி யிரண்டுந்தள்ளி
மாறும லோர்நிலையி னிற்பான்பாரே. (19)

பாரேநீ யவர்க்கமைப்பு மூர்தானேது
பலபிச்சை தானெடுக்கான் தேசஞ்சுற்றான்
கூரேநீ குடிசெகத்தி லிருந்துகொண்டு
கொள்ளையென்று வெண்சாரைத் தயிலம்வாங்கி
வாரேநீ வாய்பேசான் மௌனமுள்ளான்
மங்கையர்கள் சுழல்தனிலே யகப்படான்காண்
காரேநே ரவனைநீ கைவிடாதே
காத்துநன்று யக்கனியைக் கையால்வாங்கே. (20)

வாங்கியே ரவியிட்டமிட் டெடுத்துப்பாரு
மாதளம்பூப் போனிறமா மௌனந்தங்குந்
தாங்கியே தங்கமது போலாமேனி
சந்திரனைப் பிடித்தேறிச் சாதித்தேபார்
தூங்கியே போகாதே சுழினைவிட்டுச்
சொல்லாத மந்திரமு மிதுதானப்பா
நீங்கியே யிதைவிட்டுப் பிரிந்திடாதே
நிச்சயமாய் செய்தவர்தான் பத்திக்காண்டி. (21)

ஆண்டியென்றால் மடமல்ல வாத்தாள்விடா
மதுதானே மதியினது கற்பமாகுந்
தோண்டிக் குள்ளேயிருக்கு மந்தகற்பஞ்
சொல்லுரையாக் கற்பமது சொல்லொண்ணாது
பாண்டியனே யென்மகனே பறந்துபோகும்
பதறும லொருகாலாற் பதனம்பண்ணு
தூண்டிபோ விழுக்குமடா சுழினைக்குள்ளே
சுடரொளியுங் கண்டுபர வெளியுமாமே. (22)

பரவெளியில் வந்ததடா வந்தக்கற்பம்
பாரேநீ யுன்முகம்போ லிருக்குமப்பா
கரமதனுல் வந்தசின் முத்திரை தானையா
கண்டுபார் கேசரிமே லேறிக்கொண்டு
வரந்தருமெஞ் சாம்பவியை வணங்கிநில்லு
வந்துசொல்லும் பைரவிக்கு மயங்கிடாதே
யுரந்தருவ திம்மூன்று முரைக்கொண்ணுதா
லுத்தமரைத் தவிரவிதை யுரைசெய்யாரே. (23)

உரைசெய்தா விதற்குப்பல னென்னவையா
வோகோகோ வண்டமது வெடிக்கும்பாரு
கரைபுரண்டு வெள்ளமது கரைகொள்ளாது
கங்குல்பக லற்றவிடங் காட்டியோடும்
நரைதிரையு மாற்றுமடா விந்தமார்க்கம்
நாசிவழி சுவாசமது வடங்கும்பாரு
பறையடித் தோட்டிவிடு மெமனைத்தானும்
பதியில்வைத்துக் கொளுத்திவிடும் பாருபாரே. (24)

கொளுத்திவிடுங் குமுகுமெனப் பொறிதட்டும்பார்
கோடையிடி போன்முழங்குங் கண்ணைமூடு
வெளுத்தவெள்ளை போற்காணும் வேர்வைசிந்தும்
வெந்துயாம் வந்துவிடும் வேகங்கொள்ளு
மலுத்துவரு மசநிமெந்த வயர்ச்சிதோணு
மன்னமது வுட்கொள்ள வறுசுவையுந்தள்ளும்
வலுத்துவருந் தேகமது மயக்கங்காணு
மாறலுட னீர்க்கடுப்பு வாந்திகாணே. (25)

காணேநீ கண்ணெரியுங் கண்டநோகுங்
காந்தியுடன் வேகமது கையிலேதோன்றுந்
தானென்று சொல்லவுமே தலைவணங்குஞ்
சாயுச்ய பதமிதப்பா சார்ந்துபாரு
கானகத்திற் றள்ளிவிடு கருவியெல்லாங்
கருத்ததனி லிருக்குதடா பிரமம்பிரமந்
தேனமுதப் பாலுண்டு தின்றுபாரு
சிவசிவா பரப்பிரம மாவாய்நீயே. (26)

ஆவாயே யல்லுபக லறுமிடத்தே
யனுதினமுங் குடியிருப்பு மங்கேயுண்டு
சாவாயே சவம்போலே தனித்துநின்று
சற்குருவை யெப்போதுங் கைவிடாதே
கூவாதே குலவையிட்டுக் கொஞ்சிடாதே
கொட்டாட்ட மடிக்காதே குடிகெட்டுப்போந்
தாவாயு மோவாயு மொன்றாய்ப்போனாற்
சகலமுமே யுன்றனுக்கு வந்ததாமே. (27)

வந்தவழி போனவழி யிரண்டுஞ்சொன்னேன்
வானிதிய மிருக்குமிடந் தானுஞ்சொன்னேன்
சொந்தகத்தி லேநின்று செபிக்கச்சொன்னேன்
சொல்லாத மந்திரந்தொட் டிடமுஞ்சொன்னேன்
சந்துவெளி குடியிருப்புத் தலமுஞ்சொன்னேன்
சாரிவல மேனோக்கம் பார்வைசொன்னேன்
இந்தவகை யறிந்தவரே பிரமஞானி
யிருபத்தெட் டுரையதனி லிருந்தான்முற்றே. (28)

ஞானக்கும்மி.

வெண்பா.

சித்திதருங் கும்மிதனைச் சேர வருள்புரிந்து
நெற்றிவிழி யிற்றங்கி நேர்பார்த்தான்—முத்திதருஞ்
சத்திசிறு வாலைப்பெண் தாயா ரடியில்நின்றால்
வெற்றிமதி யங்காப்பா மே.

வெண்மதியா மூலவட்ட மேலாதா ரப்பகுப்பிற்
கண்மதியா னுன்மதியுங் காட்டுமே—விண்மதியைக்
கண்டாயே கும்மியிதைக் கண்ணிமையா மற்கொட்டி
கொண்டாடு வாயே கூத்து.

கும்மி.

கும்மியடிக்கண்ணே கும்மியடிகுரு
நாதனைவேண்டியே கும்மியடி
நன்மைதருவா ரோங்காரக்கம்பத்தி
னுடிக்கும்மி யடியுங்கடி. 1

முச்சுடர்வட்டமுந் தானுமுண்டாமதின்
மூலாதாரத்தின் முதலெழுத்தா
மச்சுடர்வட்டத்தி லானந்தமாடு
மறிவின்சமாதியாம் ஞானக்கண்ணே. 2

கண்ணாலேபார்க்கவே யொண்ணாதடியது
கருத்தினிலாடுது கண்டுகொள்வா
யண்ணாக்கைக்கொண்டுமே யுண்ணாக்கிலூட்டியே
யறிந்துபாரடி ஞானக்கண்ணே. 3

எட்டிப்பிடிக்க முடியாதுமதி
யெட்டாதரவப் பையினுழையும்
பட்டிமதியுமே திட்டிவாசற்செல்ல
பையுநசுங்குமே ஞானக்கண்ணே. 4

திட்டிவாசற்செல்ல வெப்படிப்போகவே
திண்ணமாகச்சொல்வேன் கண்ணேகேளு
கட்டிமதியைநீ கண்ணுருவிற்சேர்த்துக்
கலந்துகொள்ளடி ஞானக்கண்ணே. 5

ஒட்டாரம்போட்டுநீ யோடித்திரியாதே
யட்டாங்கயோக மறியவேணுந்
தட்டானிறையினி லுட்புகுந்தாலந்தத்
தாரணியாளலாம் ஞானக்கண்ணே. 6

இடையின்கலையை யேற்றிவிடுவாயதே
யறுயேறுதெனப் பாயுங்
கடையின்முடிவி னின்றுபார்த்தாலந்த
காசணம்பார்க்கலாம் ஞானக்கண்ணே. 7

கலையிலாடினும் கண்ணிலகப்படுங்
கண்டவர்கண்ணுக்கு நின்றுதொழு
மலையிலாடியே யம்பலத்தினின்றே
யறிந்துகொள்ளடி ஞானக்கண்ணே. 8

தேன்கூடுகட்டியே தில்லையிலாடுது
சென்றவர்க்கெல்லாஞ் சொந்தமடி
வான்கூடுகட்டியே வந்துகைகூப்பிடு
மறந்துபாரடி ஞானக்கண்ணே. 9

மறந்திருக்கவே வேணுமடியந்த
மாமதிதன்னையுஞ் சேரவேணு
மிறந்திருந்தா லினிவசமாகுமே
யிருளறைக்குள்ளே ஞானக்கண்ணே. 10

வீசுமொளியினி லாசைவைப்பாயந்த
மெல்லியராசையைத் தெய்வமென்றுங்
காசுபணங்களுக் காசைவைத்தாலந்த
கைப்பொருடங்குமோ ஞானக்கண்ணே. 11

பெண்ணுருவாய்வந்து நிற்குமடியது
பேசாதமோனக் குருவடிவாங்
கண்ணுருவினின்றே யாணுருவாய்வருங்
கலந்துகொள்ளடி ஞானக்கண்ணே. 12

ஆதியிலேயான் கோயிலிலேயவி
யாதவிளக்கொன் றெரியுதடி
சோதியின்மூலக் குருவருளால்வந்த
சூட்சத்தைப்பாரடி ஞானக்கண்ணே. 13

எண்ணெயில்லாம லெரியுதுபாரடி
எங்கள்குருநாதன் கையிதுவோ
அண்ணலருளின் சோதனையோமெய்
யடக்கமாமிது ஞானக்கண்ணே. 14

காலைமாலைமதி வேளையிலேநீ
சாலையில்ரவியைக் காணவிட்டு
வாலையின்மதியி னட்சரத்தையூதி
வழக்கம்பாரடி ஞானக்கண்ணே. 15

விந்துநாதசார மந்தரத்திலோடி
விட்டகுறையினாற் றொட்டதென்பார்
சுந்தரமான சோதிமயத்தினிற்
றாண்டுஞ்சுடரடி ஞானக்கண்ணே. 16

ஏற்றவென்றான்மதி யேறாதேயிந்த
நாற்றச்சரீரம் படியாது
காற்றையடைத்துமே மேற்றாக்கியேவிட்டுக்
கலந்துகொள்ளடி ஞானக்கண்ணே. 17

ஏற்றியிருந்த தீபத்தையுநீ
மாற்றிப்பிடிக்க வியலாது
காற்றுப்பிடித்தவர் கண்ணுக்கெட்டுமிது
கவலையைவையடி ஞானக்கண்ணே. 18

ஏறிப்போகவேணு மென்றேசொன்னால
தேற்றமாமதி பொல்லாது
மாறிவரும்பாதை கண்டேயனுதினம்
வழக்கம்பாரடி ஞானக்கண்ணே. 19

ஆருயிருமுனக் குத்துணையில்லை
யையனருளல்லால் வேறுமில்லை
நீரூறும்பூதல முள்ளமட்டுமந்
நிலையினில்லடி ஞானக்கண்ணே. 20

தோப்பிலேராயனுங் கூப்பிடுவானந்த
மாப்பிள்ளையேயுன் றுணைவனடி
சாய்ப்பிலேமோப்பிலே நீபோய்நுழையாதே
சந்திரன்வழியடி ஞானக்கண்ணே. 21

சந்த்ரன்வழியிலே பொந்துமிருக்குது
சர்க்காரதிகார மெத்தவுண்டு
விந்தின்வழியிலே வந்துபுறப்பட்டு
மெய்யைநம்படி ஞானக்கண்ணே. 22

தொல்லையறுத்துமே சூழ்வினைபோக்கிடுஞ்
சுந்தரமாங்குரு வந்துநிற்கு
மல்லலைநீக்கி யறிவினிலேற
வகண்டவெளிகாணும் ஞானக்கண்ணே. 23

தலையறுத்துமே சாமிதுணையென்று
தம்பியதற்குள் வெளிப்படுமே
வலையறுத்துமே வந்தமதனை
வரமுங்கேளடி ஞானக்கண்ணே. 24

பேசாமற்பேசுவ னுசானுமாமிவன்
பெற்றவுயிர்த்துணைக் காரனடி
யாசாபாசமதை யறுத்துவெளிக்காட்டி
யவ்வுருவினினிற்பாய் ஞானக்கண்ணே. 25

அவ்வுருவாய்வர வெவ்விதங்கேட்பா
யறிந்துசொல்வனென் கண்மணியே
யெவ்வுயிர்க்கும்நீ தானாகியந்த
யேகப்பெருவெளி ஞானக்கண்ணே. 26

சொற்பனஞ்சுழுத்தி சாகரமூன்றுந்
துடைத்தாலறுகோண வீதிவரு
மற்பவுடலைநீ நம்பித்தினந்தின
மறுசுவைபார்த்தாயே ஞானக்கண்ணே. 27

கோலமாங்கனற் கோலமல்லால்வேறே
கூடிக்கலந்துகொள் ளேதுபலன்
ஆலமதுதீண்டி சிலமுனைப்பற்றி
யங்கமதுவேகும் ஞானக்கண்ணே. 28

அங்கம்வேகவே தங்கமயமாகு
மாயிரத்தெட்டிதழ்ப் பீடங்காணுந்
திங்களணியுஞ் சடையணிமார்பனுந்
தில்லையிலாடுதாம் ஞானக்கண்ணே. 29

தொடுத்துப்பார்க்க முடியாமற்கெட்ட
தோசியென்றேபே செடுக்காமல்
வகுத்துமும்மண்ட லத்திற்சென்றுலந்த
வானந்தெரியுமே ஞானக்கண்ணே. 30

வானந்தெரியவே வேணுமென்றால்மதி
காலைப்பிடித்துமே லேற்றிநில்லு
தானந்தவமுந் தவநிலையினின்று
சத்தமுழங்குமே ஞானக்கண்ணே. 31

முழங்குநாத விந்துவின்செயலின்
முத்தர்கண்மெய்க்கூத்து மெத்தவுண்டு
வழங்குமேல்வாசற் றன்னைத்தெரிசிக்க
வையகங்கொஞ்சுமே ஞானக்கண்ணே. 32

கொஞ்சுமைம்பூத மிரஞ்சிதமாகவே
கொள்ளையென்று சொல்லிகூப்பிடுதே
யஞ்சுதலில்லாம லாணுவத்தைவிட
வக்கரஞ்சுற்றுமே ஞானக்கண்ணே. 33

அக்கரஞ்சுற்றியே யந்தரத்திலாடு
முக்கோணமூலச் சுழியினில்லு
பொய்க்கரவந்தன்னை போட்டுடைத்தானந்தம்
பொருந்தபிடியடி ஞானக்கண்ணே. 34

தத்துவந்தொண்ணூற் றாறுபேர்பிறந்தவன்
றாணியாண்ட தொருவனடி
சத்துசித்தானந்தஞ் சர்வலோகேஸ்வரன்
சன்னதிகாண்பாயே ஞானக்கண்ணே. 35

இத்தனைபேரும் பிறந்தென்னகண்டார்க
ளேகரூபத்தி லிறந்துவிட்டா
ரத்தனைபுந்தள்ளி யாண்டதொருவனை
யண்ணாக்கிலூணடி ஞானக்கண்ணே. 36

நிலைக்குங்கண்ணாடி யென்றுமுண்டுவது
நிர்மலரூபமாய் வந்துநிற்குங்
கலைக்குள்வந்தது கண்ணொளியாமிது
கண்டுதெரிசிப்பாய் ஞானக்கண்ணே. 37

கண்ணொளிகாணவும் விண்ணொளியம்புலி
கண்கடெறித்துமே விண்ணிற்றங்கு
மண்ணொளிவீசி வனமதற்குள்ளே
வந்துபுறப்படும் ஞானக்கண்ணே. 38

வீசிவனங்களு மின்னொளியாய்நிற்கு
மெத்தவதிசயஞ் சற்றேநில்லு
வேசிப்புனலதை வேகாத்தலையினால்
வெட்டித்தள்ளடி ஞானக்கண்ணே. 39

வெட்டித்தள்ளவுங் கிட்டிச்சிதம்பரம்
வெள்ளைகாட்டுந்தில்லை யம்பலத்திற்
கட்டிச்சதங்கையுங் கைமணியோசையுங்
கர்த்தனடனமாஞ் ஞானக்கண்ணே. 40

கர்த்தனடனத்தைக் கண்டுகொள்ளவுநீ
சுத்தசைதன்யமாய் நிற்கவேண்டும்
பெற்றவனுக்குநீ பிள்ளையல்லவென்று
பேச்சுமூச்சைவிடு ஞானக்கண்ணே. 41

பேச்சுமூச்சைவிடப் பின்கலையேறினாற்
பேயாட்டமெல்லாந் தாயாட்டமாகுங்
காய்ச்சுதெனக்கனி தொங்கவிட்டேயங்கே
கைப்பொருட்குமே ஞானக்கண்ணே. 42

போனமைந்தன்வரக் காணோமென்றவர்
பிள்ளையைத்தேடும் வகையதுபோற்
கானகத்தினில் வான்வலைவீசியே
கண்டுதெரிசிப்பாய் ஞானக்கண்ணே. 43

கண்டுதெரிசித்துத் தொண்டருள்ளடக்கங்
காவலனாகவே யுட்புகுந்து
பண்டுமுன்னாட்செய்த பலன்வாய்ச்சுதென்று
பற்றிப்பிடியடி ஞானக்கண்ணே. 44

பற்றிப்பிடிக்கப் பரமாகுமங்கே
சுற்றிலுங்கோபுரஞ் சூழ்ந்துநிற்கு
நெற்றிக்கண்பார்வையும் பட்டவிடமெலாம்
நிர்மலரூபமாம் ஞானக்கண்ணே. 45

காட்டினிற்சென்று கருத்தறியாமலே
நாட்டினின்மனதை யோட்டிவிட்டாய்
மாட்டிரவிமதி பூட்டிவிட்டுமனம்
வையாமல்வையடி ஞானக்கண்ணே. 46

காட்டிமறைக்குதே கண்ணுறவாடுதே
காலனற்றுப்போக மேலுறவாங்
கூட்டிலகப்பட்ட கிள்ளைவெளிப்படுங்
கூறுமதிவாசல் ஞானக்கண்ணே. 47

வண்ணான்றுறையி னின்றுவெளுத்தந்த
வழக்கமாறாமல் வெள்ளையடி
சுண்ணாம்புக்கல்லுச் சூளையதுபோல
சுத்தவெளியாக்கும் ஞானக்கண்ணே. 48

தன்னைமறந்தவன் ஞானியடிதனக்
காதாரமானத் தலைவனுமே
யுன்னைமறந்துமே யோங்காரகம்பத்தி
லுற்றுப்பாரடி ஞானக்கண்ணே. 49

தன்னையறிந்திட வேணுமடியந்தத்
தலைவனைக்காணவு மெத்தவுண்டு
உன்னையறிந்திட வுத்தமப்பொருடா
னுகந்துபாரடி ஞானக்கண்ணே. 50

கண்ணாலேகண்டதும் பொய்யாமோவந்தக்
கருத்தையறிந்தவ ராருமில்லை
மண்ணாசைபெண்ணாசை பொன்னாசையும்விட்டு
மறந்துபாரடி ஞானக்கண்ணே. 51

ஆடும்பறவை யனேகமுண்டுவதி
லாடாதொருபற வையைக்கண்டு
வாடுமனதைநீ யோடச்செய்தான்மதி
வாசல்புறப்படும் ஞானக்கண்ணே. 52

நாசிப்புருவ நடுவணையினின்று
நாட்டியகம்பத்தின் வட்டத்துள்ளே
வீசித்துரேசகம் பூசித்துப்போய்நின்றால்
வெட்டவெளியாகும் ஞானக்கண்ணே. 53

உண்டநீருமே யுன்னுக்குள்ளேதெளி
யூரெங்குஞ்சுற்றி யலையாதே
கண்டதைச்சொல்லடி காணாத்தைச்சொல்லாதே
கண்கடேறிக்குமே ஞானக்கண்ணே. 54

நாடிச்சிதம்பரங் கூடிநின்றானல்ல
வேடிக்கைபார்க்க விதியுமுண்டு
சாடிமண்ணு முடைந்தபின்னிவிது
சாராதேயெல்லோர்க்கும் ஞானக்கண்ணே. 55

கண்டபேர்க்குத்தலைக் காட்சியடியிது
காணாதபேர்க்கிது மண்டையோடு
சண்டனைச்செயிக்க சற்குருநாதன்
றலைநகராளுரான் ஞானக்கண்ணே. 56

முப்புரமெரித்த முக்கண்ணனானவன்
றப்பாமலெல்லோர்க்குஞ் சார்ந்தவனுங்
கற்பூரதீபமே கண்ணொளியாமதைக்
கலந்துகொள்ளடி ஞானக்கண்ணே. 57

எட்டிவருந்தில்லேக் கிட்டிவிடுமதை
யெட்டாதிருக்குமே கொல்லேவழி
சுட்டிமுனேயிலே கிட்டிவிட்டால்வெகு
சுருக்கம்பாரடி ஞான்க்கண்ணே. 58

சுருக்கம்பாரடி யென்றுசொன்னேனீயுஞ்
சுக்கானேநேராய்த் திருப்பவேண்டு
மருக்கனுல்வரு மந்தமார்க்கநீயு
மனலிற்பற்றடி ஞானக்கண்ணே. 59

அனலிற்பற்றி யெரியவென்ருற்காற்றைக்
கனலெழுப்படிக் காட்டுத்தீப்போற்
புனலும்பற்றி யெரிந்துவிடும்பதி
புஷ்கரணிகாணும் ஞானக்கண்ணே. 60

முத்திதருஞ்சுழி மூலவாசற்சென்று
பத்தினியாகவு நின்றுகொண்டு
நெற்றிக்கண்பார்வையாற் சித்திக்கணபதி
நிலேயறியடி ஞானக்கண்ணே. 61

முத்தர்கள்கூடுங் கூட்டத்திலேசென்ருற்
பத்தரைமாற்றுப் பசும்பொன்னுவாய்
சித்தர்கள்கண்டுனே சேருங்கலேயினிற்
சேர்த்துப்பிடிப்பாரே ஞானக்கண்ணே. 62

சாரிவலமாய்நீ யோடிநில்லுவழி
சஞ்க்கும்பாதை யிறுக்கிவிடு
மரியைப்போல பொழிந்துநீநின்றந்த
மாமதியிற்சேரு ஞானக்கண்ணே. 63

மாமதியிற்சேரக் காமத்தைப்போக்கிடு
மந்துவெளியிற் புறப்படுமே
சோமனதற்குள்ளே பூமதியினின்று
சுற்றும்பாரடி ஞானக்கண்ணே. 64

சுற்றுஞ்சுற்றுனது விராட்டினச்சுற்றுஞ்
சுந்தரமாங்குரு சோதனையாஞ்
சித்துவிளையாடுஞ் சின்மயரூபத்திற்
றெளிந்துசொன்னேனே ஞானக்கண்ணே. 65

அருத்தம்பார்க்க முடியாதுகெட்ட
வாண்கலைபெண்கலை பொல்லாதது
வருத்தம்பாராமல் யோகப்படிதன்னை
மறந்துபாரடி ஞானக்கண்ணே. 66

மறந்திருந்தவ் விருளறைவிட்டினின்
மாறுத்தியானமுஞ் செய்யவேண்டு
மிறந்திருந்துமே யேற்றும்பனிரெண்டினி
லிறங்கிப்போகாதே ஞானக்கண்ணே. 67

உச்சிக்குக்கீழாலே தச்சன்கைவேலை
பச்சைமாணிக்கம் பதித்திருக்கு
நச்சரவம்பூண்ட நாதனருண்மாலை
நமக்குமுண்டோடி ஞானக்கண்ணே. 68

உண்டேதான்சொல்கிறே னுத்தமர்சொன்மொழி
யொன்றையறிந்தே யுணரவேண்டுங்
கண்டேதான்சொல்கிறேன் கண்ணுணையுன்கண்ணிற்
கலந்துகொள்ளடி ஞானக்கண்னே. 69

இனிக்குதடியே யென்றனுக்குள்ளே
யெத்தனைசொன்னாலுங் கேட்கவில்லை
தனிக்குள்வெளியே தன்னறைக்குட்சென்றாற்
றன்வசமாகுமே ஞானக்கண்ணே. 70

முக்காடிட்டுநீ மூடித்திறந்துபார்
கைகாட்டினபொருள் கண்ணில்வரு
மக்காடுசென்றாலே யாள்காட்டியேநிற்கு
மானந்தம்பொங்குமே ஞானக்கண்ணே. 71

போங்குமானந்த வமுதக்கடலது
போகவழியுந் தெரியாதடி
தங்குஞ்சதாநிட்டைச் சாதனைச்சதுஷ்டியன்
றன்னையறியடி ஞானக்கண்ணே. 72

ஆசையிருந்தாலே பாபமடியந்த
நாசகாலன்வந்தால் மோசமடிமூ
வாசையைவிட்டொழி தேசமாகாயமே
மூர்த்தியுதயமாம் ஞானக்கண்ணே. 73

எட்டுமிரண்டையு மேற்றிவிடாயிந்த
கட்டையழிந்துமே போகாது
கொட்டுமேளதாளக் கூத்துகளும்பெருங்
கோடிரகசியம் ஞானக்கண்ணே. 74

முப்பாழ்கடந்தாலே தப்பாமன்மேடையா
மப்பானடனத்தை யென்னசொல்வேன்
கைப்பாழாய்ப்போகாமற் கலந்துருவாகி
கண்ணிமையாதிரு ஞானக்கண்ணே. 75

சாடியுடைந்தபின் சாராதேயிந்தச்
சன்னதியும்வெகு தூரமில்லை
மாடியறைக்குண் மணியொளியிற்சென்று
வந்துவணங்கடி ஞானக்கண்ணே. 76

தட்டான்கைவேலையோ சாமிசெய்சூதிதோ
தங்கத்தாலேவைத் தானந்தலோக
மிட்டானேமாற்றை யெடுத்துவுரைசொல்ல
வென்னால்தகாதடி ஞானக்கண்ணே. 77

தேவரெல்லாந்தொழச் சித்ரமமைத்ததோ
செங்காட்டுந்துரை யொப்புங்கண்ணே
மூவராலேவந்த மூலப்பொருளிது
முத்திக்குவித்தடி ஞானக்கண்ணே. 78

முத்திக்குவித்தடி சத்துச்சித்தானந்த
முப்பாழைத்தாண்டி யப்பாலேநில்லு
தித்திக்குந்தேனு செங்கரும்போவிது
தில்லையிலாடுமாம் ஞானக்கண்ணே. 79

தில்லையிலாடினு லெல்லைவெளிகாணுங்
தேவரகசிய மெத்தவுண்டு
வல்லையென்றுசொன்னல் மனமிரங்காதுன்
மனமேசொல்லுமே ஞானக்கண்ணே. 80

ஆழக்கடலை யறிவினூற்றுண்டியே
வேழைக்குடித்தனக் காரனுனே
ஞழக்கடலிது வம்புபேசாமலே
வார்த்தையைநம்படி ஞான்க்கண்ணே. 81

எத்தனைசொன்னலு மேற்கலையோபெண்ணே
கத்தரிக்கோன்மாறற் பார்க்கலையோ
முத்தனைத்தேடியே முன்றவத்தோர்கண்
முடிந்தமார்க்கமிது ஞானக்கண்ணே. 82

முடிந்தமார்க்கம் வகையறிந்தோரை
மூவுலகந்தேடக் காணலையே
கடிந்துநின்றுமே கண்ணுறவாடினுற்
காணக்கிடைக்குமே ஞானக்கண்ணே. 83

காணக்கிடைக்க முடியாவென்றால்வாசி
வானத்தின்மீனை யறியவேண்டும்
வேணபடியந்த வானத்தின்மீனினில்
வெட்டிச்செயிக்கலாம் ஞானக்கண்ணே. 84

வெட்டிச்செயிக்கவே வேணுமடி தில்லைத்
திட்டிவாசலுந் திறந்துவிடும்
பட்டிச்சிறுக்கி வாசனிற்புகுந்து
பையநுழையடி ஞானக்கண்ணே. 85

பையநுழையவுந் தையலவள்வந்து
பாங்கிகளோடுமே போற்றுவந்தே
யையோமதனையும் வந்துவிட்டதென்று
யமுதமூட்டுவாள் ஞானக்கண்ணே. 86

ஊட்டினவுடனே யுத்தமிதொட்டது
பத்தினிவிளக்குந் தோன்றுமடி
ஆட்டினதொட்டிலி லன்னையும்யானு
மசையாமற்றூங்கினோம் ஞானக்கண்ணே. 87

தூங்கிவிழித்தவுடன் பார்க்கவங்கே
சுற்றுமதில்களுங் கோபுரமும்
வாங்கியுமூலச் சுழியினில்வச்சிர
மண்டபங்கண்டது ஞானக்கண்ணே. 88

மண்டபத்தடியி னின்றனடியங்கே
யண்டசராசர மொன்றாச்சு
சண்டமாருதம் வீசியெழும்பியே
சன்னதிவிளக்காம் ஞானக்கண்ணே. 89

சன்னதிவிளக்கைத் தான்பார்த்தேயந்தத்
தாயார்மடியினில் வீற்றிருந்தேன்
சொன்னதிகாரமுஞ் சுத்தநிர்த்தனமுஞ்
சுந்தரநாட்டமாம் ஞானக்கண்ணே. 90

சுந்தரநாட்டத்தைச் சந்திரன்மேடையிற்
சுத்தசைதன்யமாய்ப் பார்த்திருந்தே
னந்தரவெளியி லன்னையுமென்னை
யனாதியுமாக்கினாள் ஞானக்கண்ணே. 91

வெளியினின்று விழியுருகிப்பார்த்தேன்
வேறொன்றுமங்கே தெரியவில்லை
யொளியுமற்றதே யோசையுமற்றதே
யொற்றைமரமானேன் ஞானக்கண்ணே. 92

ஒத்தமரமானேன் வித்துருகிப்போனே
னுனக்குமந்த கதியறிவாய்
சித்தமிரங்கியே சற்றேவாடிசும்மா
முத்தியதிலுண்டு ஞானக்கண்ணே. 93

முத்தியதிலுண்டு சத்தியமில்லையோ
முன்சென்மமிட்ட குறையில்லையோ
சத்தியமுண்டடி சஞ்சாரசமாதி
தான்கிடைக்குமே ஞானக்கண்ணே. 94

சஞ்சாரசமாதி தான்கிடைத்தபேர்க்குச்
சடம்பிரித்து வெளிகாட்டும்
வெண்சாரையாலே பிடிபட்டுப்போகவுன்
மேனிதளுக்கேறும் ஞானக்கண்ணே. 95

மேனிதளுக்கேறிக் காணியாறுவந்து
மின்னலொளியிலே தங்கிநிற்கு
மாணிப்பொன்னம்பலந் தோணியதில்வாய்த்த
வறிவைநம்படி ஞானக்கண்ணே. 96

நாய்க்குடலிது நம்பாதேபெரும்
பேய்க்குக்கூட வுதவியில்லை
வாய்க்குடலையை நம்பியிருந்துமே
மாண்டுமடிந்தாயே ஞானக்கண்ணே. 97

ஊரெங்குஞ்சுற்றிநீ யோடித்திரியாதே
நாரியர்மயக்கங் கொள்ளாதே
பாரெங்குஞ்சுற்றி பாமதடியானுர்
பாராமற்போனுயே ஞானக்கண்ணே. 98

பாவியுலகத்தை நம்பாதேநாம்
பட்டபடுகள மெத்தவுண்டா
மாவியுங்கூடு மழிந்ததல்லால்வேறே
யறிந்துபார்த்தாயோ ஞானக்கண்ணே. 99

நாலுயுகங்களு நடந்ததிப்படி
நாட்டிலறிந்தவர் யாருமில்லைக்
கோலுமதியுங் குறிப்பறிந்தோர்கள்
கோடியிலொருவர்தான் ஞானக்கண்ணே. 100

உத்தமரைக்கண்டாற் சற்றுமில்லாமூட
ரோகோவிவனென்ன சாமியென்பர்
சத்தம்பிறந்த விடமுஞ்சன்னதியுந்
தானறியாமாடு ஞானக்கண்ணே. 101

மாடென்றாலுமொரு போக்குமுண்டேயிவன்
மனிதனிலுமிருகச் செந்துவடி
வீடென்றுமர்டென்று வேசைவலைக்குள்ளே
மெத்தவிறந்தனர் ஞானக்கண்ணே. 102

பாவியென்றபேர் வையாதேகெட்ட
பயல்கண்மயக்கங் கொள்ளாதே
கூவிக்கொஞ்சிவந்து கோளரவப்பையிற்
குடியோடிறந்தாண்டி ஞானக்கண்ணே. 103

இப்படிக்கொத்த பாவிகளைக்கண்டா
லெல்லைவிட்டுத் தில்லையம்பலத்திற்
றப்படித்துவிட்டு சாமியின்கொலுவிற்
றன்னைமறவடி ஞானக்கண்ணே. 104

சிவமுஞ்சத்தியுஞ் சேர்ந்தவிந்துசாரஞ்
செப்பமுடியா துருவங்காணும்
பவமும்போமடி பார்முனையிலாடிப்
பற்றிப்பிடியடி ஞானக்கண்ணே. 105

சித்துவிளையாடப் போகாதேபோனாற்
றேசமயக்கமே பொல்லாதது
பத்துத்தசவாய்வும் பார்த்துப்பழகினாற்
பூாலரூபமாம் ஞானக்கண்ணே. 106

பாலரூபமு மானாயேநீ
பரமமோனமும் பெற்றாயே
சிலம்பொழிந்திடுந் தேனருவிபாயுந்
தில்லைச்சிதம்பரம் ஞானக்கண்ணே. 107

எங்குமொருபொரு டானாகித் தில்லை
யேகாந்தமேடையில் வீற்றிருக்கும்
பொங்குமானந்த மருடங்கினவிடம்
போய்ப்புகுதுமே ஞானக்கண்ணே. 108

போய்ப்புகுதுமே பொல்லாப்பாவிநெஞ்சம்
பொய்யெல்லாம்போய் மெய்யாகுமடி
தாய்க்கொளித்த சூதில்லாமற்சொன்னேன்
சத்தியநிலையாம் ஞானக்கண்ணே. 109

ஓயாமலா துவா யுள்வெளியிற்சென்றே
யோகோகோமெத்த வொளிவுவரும்
பாயாமற்பாய்ந்துமே பரிபூரணந்தன்னைப்
பற்றிப்பிடியடி ஞானக்கண்ணே. 110

தொண்ணூற்றிருபதுஞ் சொல்லிவிட்டேன்கும்மித்
தொண்டனருணா சலதாசன்
கண்ணூறும்பலனிற் கண்டுகொள்வாய்முற்றுங்
கலைப்பெருக்கமாம் ஞானக்கண்ணே. 111

கண்ணிகள்.

விருத்தம்.

சரம்பார்த்து வழிநடக்காச் சண்டாளர்க்குச்
சசியாலே மதியோகஞ் சாற்றுவேன்கேள்
சிரம்பார்த்து கண்மதியால் யோகஞானந்
திறவுகோன் மதியையல்லாற் றிறந்தோரில்லை
பரம்பார்த்து மதிபிடித்துப் பகலதாக்கிப்
பகலிரவில்லா திடத்தே நீதானாகி
கரம்பார்த்துக் கணக்கறிந்த குருவைச்சார்ந்து
கண்டுகளித் தானந்தக் கதையைப்பாரே.

வேதமது கிட்டாது மதியில்லாட்டால்
விளங்காது மெய்ப்பொருட்கே மனக்கண்வேணும்
பாதமது பணிந்துநின் றாசான்மார்க்கம்
பழகிநின்றான் மதிகொடுக்க வெகுநாட்செல்லும்
சாதகம்பார்த் துன்னையுமே மதியில்வைத்துத்
தப்பாமல் வாதமுறை கிட்டச்செய்வார்
நாதமது வுந்தனுக்குப் போதம்வாய்ந்து
நமனணுகா மதியோக நன்றாய்ப்பாரே.

கண்ணிகள்.

இப்புவியில் ஞானகுரு   தேசிக னடிதொழுது
அற்புத மதியிலிருந்   தழுதேனே
உப்பும்ரவி யப்புமதி   செப்புவ ரொருவரிலை
முப்புச்சுன்ன மானதுவே   முறைதானே
செப்புவேன் ரேசகமதி   யற்புதம் பூரகம்ரவி
யொப்புமே கும்பகமடங்கு   முணர்வீரே
ஆருமறியாம லிந்தப்   பேருந்தெரியாமற் போனார்
வாரும்பனி ரெண்டிலேற   மதிபாயும்
பேருமில்லை யூருமில்லை   வாருதியி லாடிநிற்கும்
யாருங் கண்ணிலேயமரு   மறிவாலே
கள்ளமனதை விட   பள்ளச்சாதி யாகுமிது
வுள்ளேவுற்று நோக்கமன   முறவாமே
தெள்ளமுர்தப் பாலுமிது   வுள்ளே யுறவாடியிரு
வள்ளலருள் வாய்க்குநிலை   வழியாமே
காலைப்பிடி வாலைமதி   மூலப்பதி சாலைவரு
நாலைப்பிடி மேன்மண்டப   நிலவாமே
கோலையழி மேலேயொளி   வாலைவெளி யாய்வருவள்
சாலைவழி தானறியத்   தபமாமே
கண்ணின் மதியைப்பிடித்து   விண்ணிலருள் கொண்டவரை
யெண்ணியிரு கண்ணிலருள்   கொடுப்பாரே
புண்ணிய முனக்குவேண்டுங்   கண்ணிய மகனேயய்யா
யெண்ணியெண்ணிப் பேசில்   மதியிசையாதே

பேசினுலும் புண்யமோசொல் நாசியிடை மய்யமீதில்
வாசியாலே யுள்நுழைய வருவாயே
தேசிக னில்லாமலிந்த பாசிவிலகுமோ சொல்வாய்
வாசிமதி யுந்தனிடம் வசமாமோ
காலனை ஜெயித்தமதி வேலவனிட மிருக்கு
பாலனே மதிபிடித்துப் பசியாறு
மாலவனு நீயுமாவாய் மூலக்கனல் வீசும்பாரு
சீலனே சிதம்பரத்தின் றெளிவாமே
சாத்திரமுட்டையைத் தள்ளு நேத்திரத்தி லாடுதுபார்
மாத்திரைப் போதுமதியி லமர்வாயே
காத்திருந்தாலும் போதுமே சாத்திர மேதுக்குக்கற்றுய்
க்ஷேத்திர முனக்குள்ளறி தெளிவாமே
திங்கள்மதி சந்திரனை யெங்குமே யோடியலைந்தீர்
தங்கள்தங்கள் கண்ணொளியாற் பாராம
லுங்கட்குல மெங்கட்குலந் திங்கள்மதி யாற்றெரியும்
பெண்களரவந் தீண்டாமற் போய்ப்பாரும்
மதியை ரவியில்விட விதிபெருகி யோடிநிற்கும்
பதியில்வர மதிகுறையும் பாராயோ
நதிபெருகி யோடங்கண்டால் விதியறிய மதியில்லைகாண்
மதிபெருக்க மானதொரு மறையாமே
சொந்தமதி விந்துவைநீ பைந்தொடியிடஞ் சேராமற்
சிந்தை தவருமலிது சிவமாகும்
முந்தவே தந்தைகுறையால் வந்துதித்த நேரமிது
வெந்தனருள் கண்டறிந்தே னிதுகாலம்
ஓடியலைந் தாலுமென்ன தேடியுங் காணுமற்போனீர்
நாடியறிந் துண்டவர்க்கு நமனேது
ஜோடிப் பறவைகள்ரெண்டு வேடிக்கை காட்டுதுபார்
கூடியடைந் திட்டோரிடங் குணம்பாரு
எட்டுமோ எட்டாதோவென்று கொட்டாவி விட்டகதைபோல்
கட்டுப்படவும் வாசியைக் கதிராக்கு
தட்டுப் பலகைமீதினி லெட்டிரண்டுஞ் சேர்த்துவிடு
நட்டு நடுவணையின்கம்ப நடுவாகி
கொண்ட குருவைத்தேடிநீ கண்டுகொள்ளக் கூடுமோதான்

தொண்டு செய்துமேபுரிந்தாற் றுணையாவர்
பண்டு முன்னுளிற்செய்த பல்னிருந் தாலேகூடுங்
கண்டுகொண்டு தெண்டனிட்டாற் கதையாமே.
கண்மதியாலே யிருத்தக் கனக சபையினடனம்
விண்மதியா லோடிநிற்கும் விழிபாரு
உண்ணு மதியைப்பிடித்து வுணரக் குருவின்முறை
கண்மதியாலே கொடுப்பார் கலைசேரு
மந்தபுத்தி யாலேயிந்த மதிவசமாகுமோ சொல்வாய்
சொந்தநற் பதிகிடைக்க துலைதூரம்
யிந்தமதி கிடைக்க வோடுங்கால் தூக்கிநிற்க
சொந்த மதியில்வா சுகமாகும்
பக்குவ மறியச்சீடன் பதருமல் வீற்றிருந்தா
லிக்குவலயத்திற் குரு வெதிராவர்
முக்கோண கேசரிநின்று முனைதனில் வீற்றிருக்க
வக்குணத்திலே குருவு மமைப்பாரே
ஆதியிற் படைத்தகுரு சோதியி லிருக்குதென்பார்
வீதிவழியாய்ச் செலவும் வினைதீரும்
பாதிப்பிறை சூடிநின்ற பரமனரு ளானந்தந்
தீதிலாச் சிதம்பரத்தின் றெருபாராய்
உருவில்லாத மாணிக்கங் கருவி லமைந்திருக்கு
நிருவிகற்ப மானதொரு நிலைபாரு
இருவினைகளைச் சுட்டு இறப்புப் பிறப்பொழிந்தால்
மருவி யழைக்கக்குரு வருவாரே
வேஷமிட்டு வெளியை விழிதிறந்து பாராமல்
ரோஷமுனக் குண்டானல் நூல்பாரு
தோஷ மடையாமலே சுடரொளி தீபத்தைப்பாரு
தாழும்பழந் தின்னுமற் றணைற்சேரு
வாசம்புகழ் மதியை பனதி னினையாமலே
தேசமெங்குஞ் சுற்றியே திரிந்தீரே
நாசகால யெமனு மோசஞ் செய்வானேநானே
பாசபந்தத்தை விட்டுப் பாராயோ
சுற்றிப் பிடிக்குமேபாரு கத்தரிக்கோன் மாறலது
வெற்றிமதியைப் பிடித்தால் மேல்வாயல்

அஸ்திகளெல்லாந் தெரிய வனருவி போய்பிடிநீ
கஸ்திகளில்லாமற் சொன்னேன் கதைபாரு
முப்பாழுக் கப்பாலேதான் முதற்பூமி யோகம்பாரு
அப்பாழுக் கப்பாலேதா னனந்தஞ்
செப்பாப் பொருளிதுவே செகத்திற் கண்டுமறைந்தா
ரொப்பாரு மில்லையது வுணர்வாகுஞ்
சித்திமுத்தி யிரண்டுஞ் சின்மயத்திலே யிருக்கும்
பத்தியிற் சிறந்தவர்க்குப் பசியாறு
முயித்தியங்க ளுண்டுமே யுயர்வான ஞானங்கூடுஞ்
சத்தியமாய் சொன்னேனே தனியாகு
முச்சுடர் வட்டத்தைக்கண்டான் மூலப் பொருளிருக்கு
மச்சுடர் வட்டத்திற்கற்ப மமைவாகு
மெய்ச்சுடர் வட்டமுமது விளக்கொளி காணும்பாரு
எச்சுடரிதற் கொவ்வாது விமையாதே
கண்ணிற் கலையிருக்க கருதிப் பாராதகுற்றம்
மண்ணிற்போகும் மூக்கை வழிபார்த்தாய்
விண்ணி லருளிருக்க மேலேற்றும் வாசிதனை
பண்ணி யிருக்கமனம் பதிவாமே
யெட்டிப் பிடிக்கமதி கிட்டுங் கிட்டாதேசொன்னேன்
முட்டிமுட்டிப் பிடிக்க முனைபாயும்
பட்டி மதிபிடிக்க திட்டிவாசற் றிறக்குங்
கட்டிநீ பெண்களையுங் கருதாதே
மூலப் புளியமுரி மும்மூலமும் வாசியாம்
வாலையவ ளிருந்த வழிவிடு
ஆலமமுதாய்க் கொள்ள யறிவுனக்கு வேண்டுமே
கோலஞ்செய்து கொள்ளாதே குடிகேடு
வேகாத் தலையதுவுஞ் சாகாதக் காலதுவு
மாகாவெண் சாரையுமே யதுவாகும்
போகாவிடந் தன்னிலே புகுதச் செய்யுமேபாரு
நோகாமலே நாசியி னுனிபாரு
சாலத்தினு மிந்த்ர சாலமதுவே சொன்னேன்
பாலத்திலும் பெரிய மயிர்ப்பாலஞ்

சிலம் பொழிந்துமிக சிதம்பர மாகிநிற்கும்
ஞாலத்திலும் பெரிய ஞானம்பாரு
ஞாயமிருக்க வேண்டுங் காயம் வலுத்திருக்க
சேயனுன் சொல்வதெல்லாந் திடமாமே
வேதமெடுத்து நீயும் மேதினியிற் பொய்சொல்லாதே
போத முனக்குக்கிட்ட பொருளாமோ
பாதம் பணியவென்றாற் பரமசற் குருவேண்டும்
நாதசங் கீதங்கேட்க நமனேது
சற்குருவைத் தேடிநீ சார்ந்து நில்லாமலேயே
பொய்க்குருவைத் தேடிநீயும் புலம்பாதே
மெய்க்குரு வுபதேசம் விளக்கொளி காணும்பாரு
கைக்குரு வுபதேசங் காண்பாயே
ஆரியக்கூத் தாடினாலுங் காரியங் கண்ணிலேவேண்டு
மாரிபோலே பொழிந்து மதிபாரே
கீரியும்பாம்பு மேகூடிக் கிட்டிசண்டை செய்ததனில்
காரியங் கிரிஜெயித்தக் கதைபாரு
கஞ்சா வபினிமுதற் கள்ளுண்டு போய்த்திரிந்தால்
வெண்சாரை விடுனக்கு வெளியாமோ
யெண்சாண் தேகத்தினுள்ளே யிருக்கும்பனங் கள்ளையே
யிறக்கியுண்ணே மனக் கண்ணாலே
மோகவிருட் கடக்க முழுமதி கண்ணிற்காணுந்
தாகமது கொள்ளலாஞ் சசிபாரு
வேகமது கொள்ளவே மின்னொளி யாகிநிற்கும்
பாகம்ரவியிற் சேர பரையாகுங்
குருவுபதேசம் பெற்று கூச்சமற் றிராமனீ
பொருளாசைக்குட் பட்டுநீ போய்மாண்டாய்
அருளுரு வானசோதி யானந்தமே யிருக்க
கருவிலமைத்த பொருட் காண்பாயே
யோகமென்றே மதியை யூதிமூக்கை யடைத்தீர்
மோகவிருட் கடக்க முழுமோசம்
நாகமென்ற வாசியை நடத்துமதியால் யோகம்
போகமெல்லாந் தலைந்து போய்மாளும்

மதியால்யோகங் கொடுக்க மானிலமெல்லா மலேந்தேன்
விதியறியச் சிஷர்கள் வெளிகாணேன்
பதியறியா மாந்தர்கள் பரமனுக் காளாவரோ
மதியிலிருந்தால் வாசி வலமாகும்
நடத்தும் வாசியைத்தன்னு விடத்திற்புகவே செய்தால்
மடத்துக் குரியநீயு மவனுவாய்
ஜடத்துக்குள் ளதிபதி தானவனுகி நிற்கு
மிடத்துக்குரிய விட மிருள்நீங்கே
தற்பிதங்கள் பேசாதீர் சாமியருளைப் பெற்று
முற்பவங்கள் வந்துமே முடிசூழும்
அற்பவுடலை நம்பி யாயுளையழிக்கப் போதீர்
கற்பமதியால் வரக் கருதாயோ
விந்துநாதங் குருவாய் வந்துநிற்குமே பாரு
சிந்துகள்பாடி நின்று சிற்சபைகூடும்
இந்துடன்ரவியைக் கண்டாற் சுந்தரக்குருவு மாவாய்
வந்துவிளை யாட வாலை வருவாளே
வாலையவள் வரவுங் காலைப்பிடித்துக் கொள்ளு
மேலேயொளிபரவி வேதம்பாடும்
நாலைப்பிடித் ததினுல் மேலே பதியுமாச்சு
கோலைப்பிடித்து நிதங் குறிதேறு
சகச சமாதியது சர்வபரி பூரணத்தில்
வகைதெரியாமல் நீரு மாண்டீரே
நகைபுரியாம னீயு நடுநிலை தன்னில்நில்லு
பகையில்லாத விடம் பரன்றேடு
இப்புவிதனி லொன்றை யெடுத்துச் சுட்டிக்காட்டினு
விருக்குதென்று ஞான மிசையாதே
அப்புமுப்பு மகத்தி லறிய விருக்குமுப்பு
கைப்பொருளில்லாக் குருவைக் கருதாதே
அறிவால் வணங்கிநீயு மாதரிப்பாய் குருவை
நெறிதவறும விரு நிதஞ்சேர்வர்
வெறிகொண்டுத் திரியாதே விழித்திருக்கத் தபஞ்செய்
குறிகண்டு மனக்கண்ணைக் கொடுப்பாயே
கூசாமலே யிருக்க வாசானே யீசனுகி

வாசாமகோ சரமாய் வரங்கூடும்
தேசானுபூதி யாகி சென்ம சாபல்யநீங்கி
யீசனு நீயுமாக விருப்பாயே
பசியாலிளைத்து நீயும் பாராமனித்திரை செய்தாய்
சசியாலிளைத்து மிக சரம்பாரு
நசியாதுவுந்த னுடல் நமனணுக மாட்டாது
பசியாவர முனக்குப் பகலாகும்
ரோமபுரி நகரி னுழையவானந்தம் பொங்கும்
வாமம்வைத்துப் பூசைபண்ண மதிவேணும்
சாமவேதங்க ளெல்லாந் தவிர்ந்து நீறாய்விடுமே
நாமமங்குண்டோ நரை திரைமாறுந்
திரையறுத்து வெளியே சென்றுலதுவாய் நிற்கும்
பரையிலிருந்து வெளிப் பாராயோ
கரைகடந் தப்பாலேக கனலொளி யெல்லாமற்றும்
வரைகடந்து மேநிற்க மோனம்பாரு
மோனந் தானுகிநிற்க ஞானமெல்லா மொழிந்து
வானமில்லா வெளியில் நீதானுகி
கானலொளியு மற்றுக் கடுங்காவல் தானுமற்று
நானென்றற்ற வெளியி லதுவாகி
யெல்லா முனக்கடிமை யேவல்பணி செய்யுமே
பொல்லாத மோனமிது போய்ப்பாருங்
கல்லாலடி நீழலிற் கற்பமிருந்து கண்டாற்
சொல்லாமற் சொன்னவுண்மை சுகவாரி.

திருப்புகழ்.

அறுசீர்க்கெழிநெடிலாசிரிய விருத்தம்.

உடைத்துவிடு மனப்பூட்டை மதிக்கண்ணேக்கி
யுத்தமர்க ளிடஞ்சென்று மதியோகம்பார்
அடைத்துவிடு மதிநகர மப்பாலேதா
னருணனெளி வீசியறு கோணநின்று
துடைத்துவிடுங் கருவிகடான் றுரியம்வந்து
துவாத சாந்தநிலையுங் காட்டும்பின்னல்
மடக்கொடியாள் மையல்தனிற் சிக்கிநின்ற
மதியையென்னு லெடுத்துரைக்க வாகாதுபாரே. (1)

பாரேநீ பரவெளியி லழிந்துபோச்சு
பற்றிநின்ற குருமுறையும் வெளியாய்ப்போச்சு
கூரேநீ கூறுதற்கு வாயுமில்லை
குறிப்பறிந்து சொல்வதற்கு வேதமில்லை
சாரேநீ ரவிமதியி னொளிவுமில்லை
சச்சிதா னந்தமென்ற பேருமில்லை
நீரேநீ தானாகி நிற்கும் பேர்க்கந்
நிலையறிந்து பிர்மமாய் நிற்பர்தாமே. (2)

கண்ணிலருட் சோதிகண்டுங் குருவைவிட்டுக்
கலங்கினீர் சாஸ்திரங்கற்றுங் கசடரானீர்
மண்ணி லிறக்கப்போறீர் திண்ணமாக
வையகத்திற் குருதேடி யலைந்திரையா
புண்ணிய மில்லைபோசென்மம் புழுக்கடானே
புலம்பாதீர் சாஸ்திரத்தை யுற்றுப்பாரு
விண்ணிலே மதிதோன்றிக் கண்ணிற்பார்த்த
மெய்க்குருவை யொருநாளுங் கைவிடாதேசொன்னேன்.

அப்பப்பா கடினமெத்த மதிபெருமையையோ
வடங்காது மதிமயக்கந் தேகந்தங்கா
வொப்பாத பிள்ளைகளுக் குபதேசித்தா
லுறுதிகொண்டு பார்க்கானே யடுமைவேண்டான்
கைப்பாழாய்ப் போகாமற் கண்ணேக்குற்று
கலைதெரிந்த பிள்ளைகளுக் குபதேசஞ்செய்
முப்பாழுக் கப்பாலே மதியோகம்பார்
மூடிக்கண் திறக்க பூரணத்திற்பாரே. (4)

கற்பந்தா னிதற்குமெத்த பேருமாச்சு
கடினமாங் காவலுள்ளோர் காட்டமாட்டார்
சற்பந்தான் சாரையது மதிக்குப்பேரு
சாகாக்கால் வேகாத்தலை யென்றும்பேரு
மூப்பொருளு முடிந்ததவு மனுவேயாகு
மூலத்தீ மூட்டினது மதிவேறில்லை
கைப்பொருளு மெய்ப்பொருளுங் கண்டாராய்ந்தோர்
கணக்கறிந்த பேர்க்குக்கற்பந் தங்குந்தானே. (5)

தங்குமே சதாநிஷ்டை யாகிநின்று
சாதனைக ளற்றுபர வெளியதாகும்
பொங்குமே பாலமுத மதிப்பாலுண்டு
போக்கறிந்து மூச்சையிடம் புகவேசெய்து
அங்குமொரு கதிரொளியின் கம்பத்துச்சி
யாத்தாளு மப்பனுமே கலந்திருப்ப
ரிங்குவந்த மகவினுக் கீன்றவன்னை
யெடுத்துமடி மீதில்வைத்துப்பா லுண்ணென்பாளே. (6)

பாலுண்ணும் வேளையிலே காலைவிட்டாற்
பசியடங்காப் பெரும்பூத மாகத்தோனுங்
காலூன்றி யமுதமது பொழியும்பாரு
கண்வெளிச்சம் போடவுமே சொட்டுஞ்சொட்டும்
வேலூன்றி யமுதமது வுண்பாய்நீயும்
வெந்தழலி லுன்றியு மொன்றாய்ப்போகு
மாலூன்றி மதிவிளக் கேற்றிப்பாரு
மாடகூடங்கட் சிறைச் சாலையாமே. (7)

சாலைவெளி தானடக்கத் தவமேயில்லை
சற்குருவே நீயார்வாய்ப் பேருங்கொள்வாய்
நாலைவிட்டாற் பாழுனக்கு வந்துபோகும்
நம்பெரியோ ரதிலடங்கி ரிஷிகளானார்
மாலைவிட்டுப் பேசாதே மதியோகத்தை
மாறிமாறிக் கொடுத்து ரவியால்வாங்கு
கோலையறி மேலையொளி வாலையாவள்
குறிப்பறிந்த யிடந்தனிலே கற்பந்தானே. (8)

வந்தநல்லோர் பெரியோரை யுபசரித்து
வணங்கிநின்று வவர்க்குப்பசி யாற்றுவாய்நீ
யிந்தவுட லெடுத்ததற்கு வீண்போகாம
லிரங்கியுன்மேற் பரமளிக்க வன்புகூர்ந்து
சொந்தமனை யாட்டிமக்க ளோடுவாழ்ந்து
சுகம்பெற்று முத்தியுனக் குண்டுபின்னு
லந்தநாள் யான்வருவேன் யானுலுந்தா
னதுவரையிற் செல்வனென் றுறைந்தார்போவாரே. (9)

சுழிமாறி வழிநடத்த விதியில்லாமற்
சோம்பேறித் தனம்பேசித் திரிந்தமாட்டை
விழிமாறி மதியிடத்தில் வைத்திருத்தி
மேலான ரவியுடைய பாகந்தன்னி
லழியாத பொருளையமைத் தகத்தினுள்ளே
யகண்டா காரசொரூப மாகியெங்கும்
பழிபாவந் தனையொழிக்கும் பவங்கட்போக்கும்
பக்குவமா மிந்நிலையே முத்தியாமே. (10)

ஒருமொழியே யின்ன தென்றுணராமற்று
னுலகமதில் வேடமிட் டாசான்போலு
மொருமொழியி னிடகலையை ரவியில்வாங்கி
யுகமுடித்து வைத்தவரே குருமொழியதாகு
மொருமொழியே மற்றதொரு மொழியுமல்ல
வுள்ளொளியிற் செல்லாதார் குருவுமல்ல
வொருமொழியே பலமொழிக்கு மிடங்கொடுத்தே
யூமையெனு மட்சரமாங் கலையின்வாறே. (11)

திருப்புகழ்.

ஒருமொழியி னிடகலையை ரவியில்விட மனமுருகி
யருளினுறு மிருநயன வழியமர குருமுறையின் றிருவெனவே
யோதினு ரன்ப ரோதினர்

ஓதினதோர் குருமொழியா மதிநிலையில் விழியமரப்
பனிமலரோன் றெடுமலரா லறுசமயந் தினமுமதிற்பழகிவர
வீதியே ஞான வீதியே

வீதியதிலேறி விளையாடுமதி சோதிமய பூரணமா
யாதிகுருவே யமருஞ் சாதிபேத மில்லாதொரு
வேதமே பிரம வேதமே

வேதமறை யானதுவே ஞானகுரு வானதுவே
பாதமெனு மோதனவே போதமெனும் வாதமுறைநாதமது
கிட்டவே சுட்டு வெட்டவே

வெட்டவெளி யாகவருந் திட்டென சமாதியுறுங் [வரும்
கெட்டமதி பொட்டெனவே வட்டமதாய்க் கிட்டுமதுமுட்ட
யோகமே யஷ்டாங்க யோகமே

யோகமதி லேயிருந்து போகமதைத் தான்மறந்து
சாகாக்காலு மேதெரிந்து வேகாத்தலை யென்றறிந்துநாகமதிற்
சாகுமே மனம் வேகுமே.

வேறு.

சாகுமிடகலை யிற்புகமாறியே போகும்ரவிசலை யிற்புகவேறியே
வேகுமனமதி லுருகிநின்றுடியே
பாகும்பாலமு தூண்டிடவாடியே மதிபோலே

நீரும்பாரது நிலமது வுருகியே பாருமதிநிலா மண்டபமேறியே
சேரும்ரவியினிற் சேர்த்திருகாலையே
காருங்கலைமதி கருணையின்வாரியே யிதுகாலம்

ஓடுமானிடர் வேதமதோதாமே சாடுங்கஞ்சாவபின் தாமதை
தேடுவாரிதைத் தினமிகவருந்தியே [யுண்டுமே
கூடுவாரிது கோதையரின்பமே மதிமோசம்

மதிகலையிற்செல மனமறியாதபேர் விதியிதுவாருமே வீண்பல
கதியடைந்தோரிடம் பதிநிலையறியாமல் [பேசியுங்
மதியில்லாதநின் மானிடர்யோகிகாண் வெகுகோடி

வேறு.

கோடியிலொருவனே குருமொழி யுணர்ந்தவன்
மாடியிலேறியே மணிவிளக்கேற்றியே
சாடியுமண்ணு முடைந்தபின் சாருமோ
பாடியுந்தேடியும் பரனருள்கிட்டுமோ விதிமோசம்

சர்க்கரையென்றவாய் ருசித்திடுமோசொலு
விக்கரைதனிலிருந் தாலதுவாய்க்குமோ
முக்கனிசர்க்கரை தேனமு துண்டிட
வக்கரையிற்செல வானந்தட்டுமே மதிகாலங்

காலமதிவலம் பாலம்ரவியிடைச்
சாலஞ்செய்பவ ராலமதிகுடை
வாலாம்பிகையருட் சீலம்பொழிநடை
நாலாம்பதமதின் மேலாமிதுவிடை யதுவாகும்

மதிமலர்க்கொங்கையைத் தவிர்த்துமேவிடு
வதிலிதயம்மதி லழுத்தியேநடு
மதிவலமாகவு மாறியேதொடு .
துதிபலசெய்யவுஞ் சுரூபந்தட்டுமே யதுதீரா

யிருமணிகட்டி யேற்றியேவிடு
கருமணிதட்டிக் கானலிற்செலு
குருமணிநீலக் கோமளத்தியே
வருமணிமதிநிலா மண்டபஞ்சுற்றியே யிதுநேரம்

யிந்துநிலையிலே விந்தையாகவரும்
விந்துநாதத்தொனி பைந்தொடியாளுமே
வந்துகூடிநின்று சிந்தைசிலம்பொலி
சிந்துபாடிநின்று முந்துகூடுவளே யபிராமி

அணைத்துமங்கைய ரடிதொழுதேற்றியே
துணைத்தவெண்புகை யொளிவுடனேறியே
பணைத்துவிண்மதி பரிதியினொளியதா
யிணைக்கவும்முளே யிருகைகள்கூப்பியே தவருதே

வேறு.

தங்கச்சிலம்பொலி வந்தடிக்கவே யிருள்
யெங்கும்பரவெளி யாய்வெடிக்கவே மதி
திங்களணியு மங்கைபடிக்கவே யொரு
சங்குமுழங்குந் தொனியடிக்கவே வரு மதுநாதம்

நாற்றிசையுமதிளுங் கோபுரம் நிறைக்
காற்றினலமைந்ததோர் தாபர மறைக்
கூற்றுவனற்றவெண் சாமரந் துறை
வீற்றிருந்தாலது தீவிரம் நீ கரைசேரு

கலைக்குளேயொரு கதிரொளி கண்டிடு
வலைக்குளேயொரு வகண்டமாஞ் சோதியா
மலைக்குளேயொரு மதிநிலா மண்டபஞ்
சிலைக்குளேயொரு சிதம்பர ரகசியங் காணயோ

வடிமுடியற்றதோ ரிடத்திலே யொரு
வடிவுள்ளசோதியி னிடத்திலே தரும்
படிதனிலேறிய ஜடத்திலே திருக்
கொடிமுடியுஞ்சிதம் பரத்திலே யொரு மணியோசை

மணியொளிதீபமும் வணங்கிடத் திருப்
பணியொடுபக்தியும் பணிந்திடக் குரு
துணிவொடுமுத்தியுந் துலங்கிட வரு
ளணிபணியகத்தினி லசைந்திட வது வருடானே

அந்தரமான வெளியிலே யொரு
சந்திரகேசரி யொளியிலே குரு
வந்துவிளையாடும் விதியிலே யிது
யெந்திரத்தாலெழுங் கதியிலே முழு மதியோடும்

உச்சியின்கிழிலோர் சார்பதி லொரு
மச்சுவீடமைந்தது பாரதி நீயுங்
குச்சிபோட்டுத் திறந்துநோகி லிது
வச்ரமணி பெட்டகஞ்சிரதி லதே யமைவாகும்

வாசனைக்கேற்றபூ மலர்ந்துமே யங்கு
பூசனைக்கேற்றபூ பொருந்துமே தங்கு
தாசனென்றுபணியத் தாழ்ந்துமே சங்கு
வோசையாற்பாசவினை யொழிந்துமே நிலை தெரியாதோ

சத்வசொரூபமே ஜடத்திலே கலை
சித்துவிளையாடுஞ் சின்மயத்திலே நிலை
வித்துமுளைக்குஞ் சிதம்பரத்திலே தலை
சுத்துமாகாயம் பூரணத்திலே யிதைத் தெளிவாயே

சர்வபரம்பரை யானதுஞானமே
சொரூபமடைந்தபின் போனதுமோனமே
பருவமடையுமுன் பார்ப்பதுவானமே
சிறுவனுகிவெளி சென்றதுதீனமே யிதுமோட்சம்

நரைதிரைமாற்றி நமனறைபுகுந்திடு
கரையதிற்சென்று கனலொளிகண்டிடு
பரையதிற்சென்று பரனருள்கொண்டிடு
வரையதுதாண்ட மௌனமாகுமே வெளியேறி

ஆசைவினையைநீக்கி யறிவதுமில்லையே
பாசவினையைப்போக்கி பற்றுவரில்லையே
மோசகாலன்வந்தால் முழிப்பதுந்தொல்லையே
யீசனருணிலையி லிருப்பவர்வல்லையே பவமோட்சம்

மதியைநினைக்கமனம் வல்லையோயிந்த
விதியையறிந்தவர்க ளில்லையோசொந்த
பதியிலிருக்குங்கரு வில்லையோவந்த
நதியைத்தாண்ட குருவில்லையோசொல்லு முழுமூடம்

எட்டிப்பிடிக்கமதி தோயுமேநினை
திட்டிவாசற்றிறந்து பாயுமேமுனை
யொட்டிரவியில்வந்து தேயுமேயினை
கட்டியணைக்கவொரு சேயுமேயென்று வருவாளே

இருவிழிதட்டிச் சொலிக்குமேயொளி
கருவழிவெட்டிப் பரவுமேவெளி
குருவருள்கிட்டி வெளிக்குளேதெளி
யருமறைசுட்டி யிமைக்குளேதரு மசையாதே

வாசிநிலையது நாசிநுனியெனும்
பேசுவார்சிலர் பித்தற்றலர்குமோ
நாசியினுள்வழி நயனப்பார்வைபோற்
பேசலாமிது பின்கலையாளினி யதுவாஞ்சொல்

தருவருணாசலந் தமிழ்க்குளேசொலுங்
குருமுறையிதுவெனக் கூறலாமதி
யருளுருவானதோ ரகண்டசோதியிற்
றிருவருளாட்டஞ் செகத்திலில்லைகாண் மறவாதே

சத்வசொரூபமே சடமதுசூக்கும
மத்விதநிச்சய மானந்தப்பேரொளி
நித்யநிர்மல நிர்விக்றபாதியுஞ்
சுத்தநிற்குணமதில் சொரூபமாய்நின்றிட விதுமோனம்

சாஸ்திரமாமிது பாத்திரமேந்தாதே
நேத்திரமானதிற் காத்திருநோமே
சூஸ்திரமாகிய தோணிகவிழுமுன்
மாத்திரைப்போது மதிதனிலேறிட ரவிபாயும்

கானலொளியினிற் கலந்துமேசெலு
வானமதியினின் மதியமுதுண்டிடு

பானலந்தனிற் பசியதுமாறிடு
மோனஞான முடிவதுகண்டிட சுழியேறு

அரிசுழியைத்திறந் தகத்திலேபுகு
கரிசுழிதிறந்து கடற்குளேவெகு
பரிசுழிதிறந்து பரந்துமேவெளி
யிருசுழிபோக்கி யிருந்தமோனமே தானாகும்

நாதவிந்துவெளி சொலிக்கவேகுரு
நாதனென்றமொழி கெலிக்கவேயருண்
ஞானமோனநிலை பலிக்கவேயொரு
பாதம்வைத்திருத்தச் சலிக்கவேவரு மறியாயோ

விண்ணொளிகண்டு வெளிக்குளேவெளி
கண்ணொளிகண்டு சுழிக்குளேகளி
மண்ணொளிகண்டு மதிக்குளேதெளி
பண்ணொளிகண்டு படர்ந்துமேசெய விமையாதே

இருத்தரவிமதி வருத்தமாகுமே
பொறுத்தகேசரி நிறுத்தலாகுமே
பெருத்தமேருவைத் திருத்தமாகுமே
யொருத்தனாகவெளி யருத்தமாகுமே யழியாது

மதிவழிசுழியினி னடுவிலேயொரு
கதிவழியானதோர் வடிவிலேதரும்
பதிவழிதன்னிலை முடிவிலேவரும்
விதிவழிகண்டறி கொடியிலேயுன் வினைதீருந்

திருநடுவானதோர் வீதியிலொரு
குருவடிவானதோர் சோதியிற்பெருங்
கருவுருவானதோர் தேதியிலரு
டருமெனவளர்மதி பாதியினி யறியாயோ

அலைபடுநெஞ்சைநீ யறுத்துமேமங்கை
வலையிலகப்படாம லொழித்துமேபங்கைக்
கலையிற்கொடுத்துவசப் படுத்துமேகங்கைத்
தொலையிலிருக்குங்கொழு வடுத்துமேவரு கரையேறு

நினைவுதட்டியொளி பறக்குமேசுழி
முனையுந்தட்டிவெளி துறக்குமேவழி
சுனையுந்தட்டிசுத்தம் பிறக்குமேயழி
வினையுந்தட்டிபிரம நிலைக்கவேவரு நீதானுப்

மதியைத்திருப்பி வலத்திலேவிடு
நிதியைப்பெருக்கி ரவிக்குளேநடு
விதியைப்பெருக்கி வெளிக்குளேபடு
பதியிலிருக்கப் பரந்தமோனமே பரையாகும்

வேறு.

சஞ்சலமனதழுக்கற வாலாம்பிகைவிட்டிற்
றுஞ்சற்செய்தமூர்தப் பாலுண்டிடவேசெய்யு
நஞ்சணியீசன்றுணை யாலருள்பெற்றிட நமனேது

மாமதியாலருட் பூரணம்வாய்த்தது
காமன்கணைகளையு மறுத்திடுமேயது
சோமசுந்தர குருவதில்வரும் பார்த்துற விதுதானே

கைக்கருணையால்விழி பூட்டிடும்பூரண
மெய்க்கருணையாற்குரு விளம்பியகாரணம்
வைக்கருணையான்மதி வாருதிபாய்ந்திடு மதிவீடே

யாருமறியா ரமாவாசியின் பூரணை
பேருந் தெரிந்தவர்போற் பிதற்றுவர் பாவிகள்
காரும்பூரணை யமாவாசி வருமளவுங் கதிசேறும்

விழிக்கவொண்ணுது விழிமூடிபார்த் திருவென்ப
னழிக்கவந்தானிவ னருந்தவசி கட்கெட
சுழிக்கப்பாலேசென் றுமே திறந்துநீமூடிரு சரமேறுஞ்

சாஸ்திரப்படி கலையோதுவனென்பர்சிலர்
மூத்திரக்குழியிலோடு மூச்சையுமறியார்
வீற்றிருகண்மூடி பிரமமாவாயே யென்பார் கெடும்பாவி

ரவிமதியைப்பிடித் தண்ணுக்கினி லேற்றிநில்
குவியமனக்கண்ணினுற் கோள்மதி பிடித்துசெல்
அவியர்விளக்கொளியி லுனந்தம்பார்த்திரு விதிமாறுஞ்

சித்திரமணிமண்டபஞ் சிலைக்குளே யொரு
கத்தரிக்கோன்மாறல் சுழிக்குளே நீ
பத்திசெய்து வருவாய் பதிக்குளே பர வெளியேறுஞ்

சங்கித வோசைமணி யடிக்கவேயது
வெங்கும் பரவெளியாய் வெடிக்கவேமதி
சங்கையறவே விழிதுடிக்கவே வருந் தெரியாதோ

மனமொடுமதிமுகம் பார்த்திரு தில்லைக்
கனகசபைநடனங் கார்த்திரு வொரு
தினமறுசமயமுங் கூத்திது திருக் கோயினுள்ளே

மாறிமாறிக் கலையேறி யீராறினில்
வேறியோடு மதிவாசலை யடைத்துநில்
கூறிகூறி மனதைக்கொடு தீபமேற் குருவாகுஞ்

செகம்புகழ் சுகர்முதற் சென்றதுமதிகலை
யகம்புகுந்தேயரு ளேற்றின ரிஷிகளுஞ்
சுகந்தருஞானத் தீச்சுடரினிற் றூங்கினர்சுக சனேவோருங்

கஞ்சாவபினி மதுவுண்பர்கண் தெரியுமோ
நெஞ்சகந்தனிலிருக்கும் வஞ்சகமறுமோ சொல்
விஞ்சைமந்திரமோதி விழித்துமே னேக்கிட விதியோடுங்

காரணகுரு வுபதேசநீர் பெற்றீரோ
பூரணமார்க்கமும் போவது தெரியுமோ
வாரணகொங்கையர் மையலிற் சிக்கினீர் மதியேது

கலையைப் பெண்ணாக்கினோர்கள் கதைபாரு மிதோ
விலையில்லாமாணிக்கம் விடதைச்சேரு நீ
யுலைமெழுகாய்மன முருகியே யிருகலை மாறுதே

வந்தவழிபோக மதிகலை பாரானவன்
யெந்தவிதத்திற் சொன்னாலு மதுகேளான் குரு
தந்தவுபதேசந் தவறுண்டு போவா னறி விலாமூடன்

கண்டவர்சிரிக்க வுடம்பெடுத்தானே யவன்
மண்டலநகைக்க வுயிர்விடுத்தானே நீ
தெண்டனிட்டழைத்தா லுடன்பெடுக்கானே பெருங் குருத்துரோகி

தடமுலைமாதரை விடுவது சாரமே
னடைபழகு நல்லோ ருறவதுவீரமே
திடமுளஞானிகள் சென்றது தீரமே சிவயோகம்

யோகமென்றால் மதியைத் தேடானே மூடனும்
நாகமென்ற சாரையை நாடானே சாஸ்திரம்
பாகமறியக்குரு பாரானே பெரும்பாவி பரமேது

அருட்குருவைக்கண் டடுத்தடுத்து மாறுவான்
கருக்குழிபறிக்க கண்ணிற்சோதி கண்டுவாரான்
குருக்குருவென்று குவலயத்திலுந் தேடுவான் படுபாவி

யானந்தமானமதி சரத்திலே யொரு
வானந்தமாய்பூர ணத்திலே பெருந்
தானந்தயோகமதி தலத்திலே குரு விருப்பாரே

யிருளினிலிருக்குது இகபர மொரு
குருவினூற்றிறக்கவும் பரம்பர மது
வருளினிலாடுஞ் சிதம்பரம் நீ குடியேறு

பஞ்சவறிவைவசப் படுத்தவே வுன்
னெஞ்சமதைச்சுழியி னிறுத்தவே மனம்
வஞ்சகமறுக்கக்கண் ணுறுத்தவே வருங் கலைதெரியாதோ

கருணைக்கடலமுர்த வாருதி காலை
யருணனொளி யாலறிந்தயாநிதி நீ
தருணம்பார்த்துப் பணிந்தேத்தி கலை வெளியாகும்

காலைத்தூக்கி நின்றாடுதே யது
மேலைச்சிதம்பரத்தி னேடுதே குரு
வாலையவளிருந்த வீடிதே கோ விலைப்பாரு

யேறுந்தில்லையருகி னெருப்பாறு வது
மாறுமயிர்ப்பாலத்தின் மீதேறு வாசி
கூறுங்குருவருளின் குறிப்பேறு குறி மாறுதே

கறுத்திடுமாசியைக் கருவாலே யதை
பிரித்துவெளியாக்குவாய் குருவாலே யுன்
னுருதெரியுமதை யறிவாலே நீ தெரிவாயே

நல்லோருறவில்மன மொடுங்குமே யது
பல்லோர்களுந்துதிக்க பளிங்குமா மேடை
வல்லோர்களாலமைத்து வழங்குமே வகை தெரியாதோ

பரியைநிறுத்திநீ குறிபாரு கண்
டுரியபொருள்வரு மதைக்காரு நீ
திரியைக்கொளுத்தி யொளியுனேரு வது தானுகுஞ்

சென்மமெடுத்து பலன்கண்டது சொல்லுவீர்
கன்மவினையைப்போக்க கலங்கிநீர் தவிக்காதீர்
குன்மவினைகளாலே குலநாக மடைவீர் குருதேடாய்

சரணம்புகுந்துமதி யேற்றிரு நீ
மரணமில்லாரவி போற்றிரு விதோ
வருணனொளிவீசுமே காத்திரு விழி யிமையாதே

திங்களைப்பிடித்துரவி புடத்திலே சுழி
சங்கையறவேசாம் வடத்திலே புகு
கங்குல்பகலற்றதோ ரிடத்திலே நீ கரைசேரு

அடியவாசியை யண்ணாக்கிலே கொடு
மாடியறைக்குள்ளிருக் குண்ணாக்கிலே நானே
சாடியுடையுமுனமே மூச்சிலே தொடு சசியாற்பால்

பாலமூர்தமுண்டிட பறக்குமே வாசி
மேலைச்சிதம்பரங் கண்டாற்சுரக்குமே நீயு
காலைப்பிடித்துக் கட்டவுந்திறக்குமே நவ மணிவாசல்

நவமணிவாசலிற்புக வறுகோண முன்னே
பவமறுத்திடுமது முக்கோணக் குரு
தவம்புரியுமது சதுர்க்கோண மது மணிமேடை

கற்பூரதீபவொளி காணுமே யது
வற்புதக்காட்சியாய்த் தோணுமே யொரு
முப்பொருளுதயமதிற் பூணுமே யுன் முடிசேருஞ்

சாத்திரப்படிநடையுங் காட்டுவா னவன்
மூத்திரக்குழியிற் நீமூட்டுவான் நீ
வீற்றிருவென்றுற் புகைகாட்டுவா னது விதிமோசங்

கடைபிடிநாதனைக் கரத்திலே யொரு
மடைபிடிகொக்கு மீன்போல் வரத்திலேநீ
தொடபிடிகண்ணாகச் சிரத்திலே யிது துடர்ஞானம்

ஞானம்பார்த்தவன் மதிமாறுனே யவன்
வானம்பார்த்தும் வீரங்கூறுனே யிது
மோனஞானமென் றுணர்வானே பெருந் தபவாசி

யருக்கனொளியைக் கண்டுதிறப்பானே யவன்
குருக்கேமயிர்ப் பாலத்தினடப்பானே மன
முருக்கமுட னெருப்பார் கடப்பானே யவ னுமைபாலன்

அம்மைகுண்டலியை யடுப்பானே யவ
னம்மையுமாளாக்கி விடுப்பானே யொரு
பொம்மையைக்காட்டி மனமிழுப்பானே யவன் மதியோகன்

மதியோகத் தமர்ந்தது வாசியானம்
விதியை மாற்றியவரந் தேசியாங்குருக்
கெதிகாட்டின துள்நாசியா மூசி முனைமேலே

கற்றறிந்துமே மூடம்போகாதீர் நீர்
சற்றிருந்து பார்க்காமற் சாகாதீரிதோ
பற்றியெரியும்படி வேகாதீர் சுடு காடாவாய்

இருத்ததவம்புரி யீராறிலே நீ
வருத்தப்படாது பதினாறிலே யது
வொருத்தனுக வருநேரிலே யுரு நீதானே

யொருபொழு தமுதுண்வதே நியாய
மறுசுவை யற்றிருப்பதே காயங்
குருவருள்வந்து கொடுப்பதுபாயங் கண் ணருட்காட்டி

சாத்திரப்படி நடையேறுவீர் சின்
மாத்திரமதினிலே கூறுவீர் குல
கோத்திரத் தொருபிள்ளை தேறுவீ ருன் குலம்வாழுந்

தில்லைச்சிதம்பர மென்றறியுமே நீர்
வல்லையென்றாலு மனமுருகுமே யொரு
சொல்லையறிந்து வந்துணருமே குரு வருளாலே

குருவருட்டேடானே கொடும்பாவி யவ
னருளிருப்புமறியா பெரும்பாவி கொடும்
பெருநரகில் விழுவான் வெகுபாவி முகம் பாராதே

வேறு.

நாசியினுள்ளே பிடர்வழியோடி
நயனத்திருவரு ணடனமுமாடி
தேசிகனுருவை வாசியிலாடி
திருநடனத்துக் கருண்மலரதுசூடி
வாசியிலேறி மையத்திற்கூடி
மதிமுகங்கண்ட ஞானிகள் பெருமைசொல வொணாதே

குறைமதியாகப் பிறையதுசூடி
குருவருளனுதினம் போற்றிநீர்வாடி
யறையதுவாகி யம்பலந்தேடி
யருணவொளியைக் கண்டானந்தம்பாடி
நிறையொருபுறமா யொருகாலாடி
நிற்குணவஸ்துவை கண்டவனை வேத முரையாதே

கடந்தவர்ஞானி மடந்தையராசையை
கதிரொளியின்றீயில் மதியதைவாட்டி
நடந்தவர்நல்லோ ருறவினையற்று
நயனத்திருவரு ணடுவணைமூட்டி
படர்ந்ததுஞான முத்தியேபெற்று
பரவெளிகடந்தவ ரடியையான் பணிவேனே

கட்டும்மனக் குரங்கையும்வெட்டி
காவிற்சிலம்பொலி நாலையுமூட்டி
வெட்டும்ரவியொளி மேலதாய்க்காட்டி
விண்ணொளிதன்னையுங் கண்ணிலேமூட்டி
நட்டும்நடுவணை கம்பத்திலோட்டி
நயனத்திருமாளிகை கண்டவருட் பெறுவேனே

அகரத்திருத்தி யருளதுகாட்டு
மபயங்காத்தே னமுதமுமூட்டு
முகரத்தொருபொரு ளொளிவதிலோட்டு
முத்தமசித்தர்க ளுள்ளுறநாட்டு
மகரகுண்டலியிலே மனமதைவாட்டு
மங்கையர் கல்யாணியையான் றுதி செய்வேனே

இருமனதைப்பிடித் தொருமனதாக்கு
விருளதைநீக்கி யருளதுவாக்கு
குருமுறைதனக்கு மனமதைதாக்குக்
குண்டலிசத்தியி னின்றிடதாக்குக்
கருவிகளொழிய வொளிவினிற்போக்குக்
கண்டவரிடந்தனில் மனம்புகநோக்கு குரு முறைதானே

வந்தவன்போலே பேசுவன்ஞானம்
வாங்கியேபார்க்கத் தூங்கியேபோவன்
பந்தத்தைநீக்கான் பரமனைக்காக்கான்
பதியிலுள்ளவர்களை யிவன்கண்டு துதிக்கான்
எந்தஜென்மங்களிலு மிவனருள்காணு
னிருளாவங்கடித் திறப்பது வேத முறையோதும்

நாட்டியகுண்டலி சத்தியைப்போற்றி
நமனறைபுகுந்து வருளதையேற்றி
பூட்டியபூரண மலரதுசாற்றி
பூசைகள்செய்தே னடியிணையேற்றி
யாட்டியாளெனக்கு நாட்டியங்காட்டு
மானேயுனைத்துதித் தெனையாள் போற்று மருடாராய்

குண்டலிசத்தி வாசலடைத்தநீர்
கூசாமல்வாசியாற் கதவையுடைத்திடு
மண்டலமூன்றினுட் சண்டனைப்போக்கிடு
மாமதியிலாடக் காமத்தைநீக்கிடு
அண்டசராசர மொன்றாய்நிறைந்ததவ்
வறிவிலானந்த கூத்தையுங்காட்டிடு மன்பர்நேசா

விந்துவினொளியை யைந்துருவாக்கி
வேகாத்தலையதை யொருவனாய்த்தாக்கி
வந்துவுள்ளறையிற் பூரணமாக்கி
மணிமேடையுச்சியிற் கற்பமதாக்கி
சிந்துகள்பாடி சிலம்பொலியாக்கி
திருநடனக்கூத் தனுதினநோக்கி யருள் புரிவாயே

உள்ளொளிபுகுந்தோன் றன்னையும்பார்க்க
வுகந்துச்சாஸ்திர மவன்முகங்காட்டும்
விள்ளொணுவொளியைக் கண்டவன்பின்னே
மெல்லடி தூக்கியே கப்பலையோட்டுந்
தள்ளொணுவொளியில் வேதமுமில்லை
சண்டனைபோக்கியே கண்டிதம்வாட்டும் ரவிவீடே

எச்சிலைக்காக விரப்பதோதான
மிகபாமிரண்டிற்கு மொத்ததேஞானம்
பச்சிலைதின்று பார்ப்பதோவானம்
பார்த்தவரைக்கண் டேற்றுவீர்மோனங்
குச்சிலைகையாற் பிடித்துமேயுச்சி
குறிப்பறியகுரு புகட்டுமபான மது வுண்டுதேறு

நடந்தவருள்ளந் தெரிந்துளோரிடத்தி
னடைபழகியேநீ நல்லுறவாக்கு
மடந்தையராசை வஞ்சகங்கொடுமை
மாறிக்கவலை மதிமுகநோக்கு
இடந்தரும்யோக மருளதுவாக்கு
மிருளதைபோக்கி பெறுவதேஞானம தின்பந்தானே

அகங்குளிரஞானம் பேசுவன்மாடு
அக்கரைக்கழிச்சற் றப்பாமற்கொல்லுஞ்
செகங்கொளரிஷிகட் சித்தர்மற்றுள்ளோர்
தெரிந்துளோரிடத்தி லறிந்துமேபழகி
சுகந்தருஞானச் சுடரினிற்றூங்கி
சுத்தமாபெற்றவ ரெத்தனைகோடி மறையேது

கொடிநடையுடைய மடையர்கள்கூடி
கூற்றனுக்கிரையாக கஞ்சாவைத்தேடி
யடிமுடிகண்டோ மாகராபாடி
யய்யாபுகைகொஞ்ச மரிசிதாநாடி
முடியதுசொண்டு மொட்டைகளடித்து
மூட்டியேதீப்புகை காட்டுவன்கோடிகண் தெரியாதே

தொண்டையினுள்ளே மண்டலவீடு
தொண்ணூற்றறுவகை தத்துவமமைத்து
அண்டர்கள்புகழு மறிவினினுள்ளே
யகண்டமாம்பூரண மேயதுவகுத்து
பிண்டத்தைப்பிரித்து வண்டத்திற்காட்டி
பிரமத்தையறிவுன் னுள்ளுறகூத்து தரு வழியாலே

வே று.

அருளினுரு வாகிவந்த குருமொழியா லேசிறந்த
கருணைமலர் பொழியுமந்த கதிரேசா
யிமையகுரு பாதந்தன்னை யமையவருவா யென்முன்னே
சமயனெறி யாலேயன்னை யடிதருவாயே
நாதவொலியாற் சொலிக்க வேதமுறை மேற்கெலிக்க
போதம்வந்துமே பலிக்கவருள் படிதாராய்
தில்லைச்சிதம் பரலோலா வல்லையோ கிண்கிணிவேலா
சொல்லையுணர்த் தினேன்காலா கடைக்கண்பாராய்
மூலப்பதி வாழும்வாசா வாலகுருசாமிநேசா
நாலைப்பிடித் தேனேயீசா பூரணமாக்கு
முத்திக்கு வித்தாகவந்து சித்தினுருவெனக் குட்டந்து
சத்தியிட கலையுகந்து பின்கலைசேராய்
வாசிமைய மீதிலேறி பூசிமுனை பாய்ந்துகூறி
பூசித்துகுண்டலி வீறிபூசை மணியாட்டு
கற்பூரதிபமுங் காட்டு வற்புதக்காட்சியி லோட்டு
உப்புவா லப்புவைநாட்டு குண்டலிபாயும்
அம்பலத்தி லேறிநின்று மும்பலச் சேரியேவென்றுந்
தம்பலமாகவே நின்றும் பதந் தருவாயே
ஆதிமுதற் சுழியறியே னீதியருண கிரியென்
சோதியிற் கலந்தறியேன் சற்குருநாதா

ஏலப்பாட்டு.

வெண்பா.

ஓடமொன்று செய்தேனு னோர்மொழியா லோதிவிட்டு
நாடக் கருத்துய்யு நான்மறையும்—பாடம்வைத்துக்
காட்டினு ரென்குருவுங் கையாணி யாற்றைத்து
வாட்டிமனஞ் சாக வரும்.

தந்தையருளா லோடந் தானேசமைந் ததுகாண்
பைந்தொடியாள் வாசலிலே பண்ணிவிட்டா—னுந்துருகி
பூத்த மலரெடுத்துப் போற்றிவிடு நாதவிந்தை
வீற்றிருந்து கார்க்கவரு மெய்.

சென்றேறு மோடச் சிறுவாச லுட்புகுந்து
நின்றேறிப் போவதற்கு நேர்காட்டுஞ்—சென்றேவிண்
காட்டுமேதில்லைக் கரைகடந்தா லப்பாலே
வாட்டும் மதியின் வழி.

ஆசைக்கடலை யழிக்கவந்த வோடமிதா
மோசை யடங்கிநிற்க வொத்தோடும்—பாசவினை
சுட்டெரித்து நிற்கவுமே சுத்தவெளி யாய்ப்போகும்
கட்டுமனக் கண்ணருளிற் கா.

விலைகொள்ளா வோடமிது வெஞ்சாரை நாட்டங்
கலைகொள்ள வேறி யுருக்காட்டு—மலைதாண்டி
நாதம்விளங்கி நமனைப் பிடித்தறுக்கும்
வாதஞ் சுடவே வரும்.

மாணிக்கத் தோடுபச்சை வைத்திழைத்த வோடமிதோ
வாணிப்பொன் னம்பலத்தி லாடுமந்தத்—தோணியதை
கண்டவர்க ளம்மைக் கனகசபை வீடமருந்
தொண்டரெனக் கூப்பிடு நெஞ்சே.

தெளிந்துபா ரோடஞ் செகசோதி யாய்மின்னு
மழிந்துபோகா துடலை யாக்க—பிழிந்தரசங்
கொள்ளையிடு முன்னே கூடிக் கலந்துவிடு
சள்ளையென்று போகாமற் சார்.

வந்தேறு மோடமதின் மாமதியி னுலமைந்த
விந்தேறிப் போய்நின்று விண்காட்டுஞ்—சிந்தையற
கண்காட்டி யேயோடுங் கைகூப்பி தெண்டனிட்டு
விண்காட்டி கப்பல் விடு.

ஏலேலோ—ஏலவிலோ.

ஏறிவருங் காலைச்சொல்வே — னேற்றிவிடு மதிதனிலே
மாறிவரும் ரவிமுகத்தின் — மாய்ந்துவிடும் பூர்வபட்சந்
தேறிநின்ற பேர்க்கேயிது — செகமயமாம் ஞானகப்பல்.

முடுகு.

மூலமெனுஞ்சோதியின் பாதமேபோற்றி
முனைவழியிற்றான்செல்ல நாதமதுவாகும்
ஞாலமெனுஞாயிறை குருநாளாய்வைத்து
நாடியேதிசைநோக்க வுத்திரமாகுங்
காலமதுதான்போக கண்ணிலருள்மதியை
கணக்கதுபாரமாவாசி வருநாளும்பார்த்துக்
கோலமுடன்குருவருளை பாய்மரமாய்நாட்டி
குறிப்பாகரவிமதியைச் சீனிப்பாய்த்தூக்கி
சாலமுடனிந்த்ர சாலத்தினின்று
சாம்பவியும் பைரவியுந் தியானமதுகொண்டு
வாலமுடனிருளகலக் கண்வெளிச்சம்போடு
வான்பார்த்துமீன்றேடி மதியதிலேநில்லு
சீலமுடன்றிருப்பெருந் துறைபார்த்துச்சேரு
சென்றுவெளிகாட்டியே கண்டமதிற்றூக்க
நீலமாந்தண்ணீரி னின்றுவிடுங்கப்பல்
நிலைதவறிப்போகாதே கரைகாணமாட்டாய்
ஓலமிடுமோங்கார சத்தமே போட்டால்
ஓகோகோவானந்தம் பொங்கிவருங்கப்பல். (ஏலேலோ)

தாண்டிவிடு சுடாரதனை சுக்கானிலே மதியைவைத்து
ஆண்டிமக னாயிருந்து அறிவுதனின் மனதடக்கித்
தாண்டிவிடு முப்பாழ்கடந்து தனிவெளியி லோடுங்கப்பல

முடுகு.

தோன்றியேயுயிர்க்கெலாந் துணைவனாய்நின்று
துரியநிலைதன்னிலே பரியதைநிறுத்தி
யூன்றியேசுழிமுனையி லுத்தமரைத்தொழுது
ஓங்காரகம்பமுனை தன்னிலேபாய்ச்சி
காண்டீபந்தனைவளைத்துக் கருணைமலர்பொழிந்து
கலைவழியிலுருவெளியாய்க் கைலாயந்தேடி
பாண்டியமகரூஜன் கப்பலதையோட்டப்
பரியேறிக்கருவிகளைக் கப்பலிலேயேற்றி

தோண்டிக்குள்ளேயிருக்குஞ் சுத்தவெளிதன்னிற்
றுடர்கொடியும் படர்கொடியுந் துரியமதிலேற்றி
வேண்டியசரக்குவகை வெண்சாரையாலே
விலைமதிக்கக்கூடாத கலைமாணிக்கத்தை
யாழ்ந்தியேயிருக்கு நீராழியுமேதாண்டி
யாறுதெருவிற்சென்று வழியாதபொருளைத்
தீண்டியேபோகாது திருவருளிற்சென்றுற்
றீபவொளிதனைக்கண்டு விலையதுவேபேசி
நீண்டியேநீடுருவிப் பாய்ந்துமேநிற்கு
நிலையாதவெள்ளங்கொண் டோடுமடாகப்பல். (ஏலேலோ)

நெற்றிவிழி நீலமணி நின்றிலங்கும் வாசிநிலை
சுற்றிவருங் கப்பலிலே சுந்தரமாஞ் சோதிவட்டம்
பற்றிநின்று பார்முனையில் பழகிவந்தா லோடுங்கப்பல்.

முடுகு.

பொங்கிவருமானந்தக் கடலிலேதள்ளு
பொய்சூதுவஞ்சனையும் போகவேவிள்ளு
கங்குல்பகலற்றிடங் காணவேசெல்லு
கரைகாணபோவதற்குக் காட்டும்வகைசொல்லு
திங்களணிமார்பனுஞ் சேர்ந்துறவாடுந்
திசையெட்டும்போய்ச்சுற்றித் திகைத்துவிடுங்கப்பல்
தங்குஞ்சதாநிஷ்டை தன்னையுமறந்து
தன்யனுயோடுமடா சரக்கைந்துபூதம்
யெங்குமேயொருதீர்வை யேற்றிவிடுங்கப்பல்
யேகாந்தமான வெளியிலேசென்று
பெண்களரவங்கடியாப் போகாதவண்ணம்
பொய்க்கூடுநாற்றமிது போய்விடுமேதிண்ணம்
அங்கைகொடுமலர்தூவ வாகாயமோடு
மறிவானபூரணந் தன்னிலேநாடு
செங்கமலபீட்மது தன்னிலையில்வாய்க்குஞ்
சிவசிவாபரப்பிரம சொரூபமதுகாணும்
ஐங்கானர்விடதனி லமர்ந்திருந்துபார்க்க
வறிவானசோதியதி லோடுமடாகப்பல். (ஏலேலோ)

மேகவொளி தன்னைப்பார்த்து மின்னலொளி யிருளகலும்
நாகமது பொல்லாதது நாச்சைநீட்டி படம்விரிக்கு
மேகரூப மாகிநின்று யெல்லைவெளி யோட்டுங்கப்பல்.

முடுகு.

ஆடுஞ்சிலம்பொர்லியி லன்னைவருவாளே
யசையாமன் மனதொன்று யமுர்தமதுவுண்ணு
கூடுங்கருவிகளைக் கொள்ளையிடும்பாவி
கூற்றனணுகாமலே பேருங்கொள்வாளே
வீடுநமக்குண்டு வேணபொருளீவள்
வெள்ளைகாட்டிநின்று தில்லைபதியருளுவள்
தேடுமருட்சோதி தன்னிலேநாடு
திரும்பிவராகப்பலிது திண்ணமாய்ச்சொன்னேன்
மாடுமக்கள்பெண்டீர் மனைசுற்றத்தாரு
மதியால்மறந்துவிடுங் கெதியடைகுவாயே
யோடும்வேதாந்தமுறை யுயிர்நிலையிற்றங்கி
யொற்றைப்பாய்மரமானாய் பித்தந்தலைக்கேறி
பாடுங்கவியருள பரிதிமதிதன்னாற்
பற்றிப்பிடிக்கவே நெற்றிவிழியோடுஞ்
சூடுஞ்சூடாமணியுந் தூண்டாமணிவிளக்குஞ்
சுற்றிலுங்கோபுரஞ் சூழ்ந்துமேநிற்குஞ்
சாடும்பெருங்கூத்து சமுசாரியாகி
சாகாமற்செத்துஜடந் தனியாகுங்கப்பல். (ஏலேலோ)

பராபரக்கண்ணி.

ஆதியுமனாதியுமா யந்தரமாகிநின்றோனே
சோதியேயென்னாவிதனிற் சொல்லும்பராபரமே. 1

பாதிபிறைதன்னிலே பற்றிநின்றுசிற்றடியில்
வீதிவெளியோதுமெம் மெய்யேபராபரமே. 2

சாதியற்றுபேதமற்று சமயநெறிகளற்று
நீதிவிலகச்செய்து நின்றாய்பராபரமே. 3

வீற்றிருந்தநாளெல்லாம் வீணாகபோகாமற்றான்
காற்றையடைத்துங்கதி தாராய்பராபரமே. 4

சோற்றுத்துருத்தியைநீ துடைத்துவறுகோணமதி
னேத்திரந்தனிற்காட்டி நில்லும்பராபரமே. 5

நாடிநரம்பதுவின் னூற்றச்சரீரமதில்
மாடியறையுங்கட்டி வைத்தாய்ப்பராபரமே. 6

ஆடியகாலாலே யடக்கியொருகாலைகட்டி
தேடிப்பிடித்தேனென் சித்தேபராபரமே. 7

ஆண்டவனுநீயிருக்க மாண்டுமேமண்மேலழியா
பூண்டவனேயெந்தன்மேல் பொறுப்பாய்ப்பராபரமே. 8

தாண்டவமேயாடிநின்று சந்திரனைபோய்ப்பிடித்து
காண்டவனமெரியமெய் காட்டும்பராபரமே. 9

தூண்டிநின்றநேரமெல்லாஞ் சுடரொளியின்வந்துநின்றாய்
ஆண்டிமகனாகவுநீ ராக்கும்பராபரமே. 10

வேண்டியசரக்குவகை வெண்மதியாலேயிருக்க
காண்டபத்தைவளைத்துங் காட்டும்பராபரமே. 11

அண்டபிண்டசரமனைத்து மடங்குமோர்நிலைதன்னிற்
பிண்டமாகவும்வந்து பிறந்தாய்ப்பராபரமே. 12

சண்டமாருதம்வீசித் தணறனையேமூட்டிவிடுங்
கண்டபோதெல்லாமெனக் காட்சிபராபரமே. 13

எத்தனையோர்சென்மங்க ளெடுத்தேபிறந்துழன்றேன்
முத்தனேகைதவறி முகப்பேபராபரமே. 14

பித்தனுருவாகவே பிதற்றிவெளியேறிநிற்க
கர்த்தனேயென்கண்ணிற் காட்டாய்ப்பராபரமே. 15

நாற்சதுரவீடுகட்டி நடுவணையிலாடுவோனே
கோற்சதுரங்கட்டிநீ கொடுப்பாய்ப்பராபரமே. 16

சூடுண்டமேனியனே சுத்தவெள்ளியானவனே
நாடுவுண்டோவுனக்கு நவில்வாய்ப்பராபரமே. 17

மாளிகையுங்கட்டிவைத்து மதிபூரணமதற்கு
ளாளுகையில்லாம லமைத்தாய்ப்பராபரமே. 18

கோழிபலிகொடுப்பேன் கொள்ளையிடும்வெள்ளையிலே
யாழிகடக்கவுமே யாக்காய்பராபரமே. 19

மன்றுள்ளேநீயிருந்து மங்கையபிராமியுடன்
கன்றுக்குபால்கொடுக்க காட்டும்பராபரமே. 20

சென்றேவெளியேறி தில்லைதனிலாடிநின்று
யன்றமைத்தபொருளை யறிந்தேன்பராபரமே. 21

காட்டிக்கொடுத்துங் காணாப்போய்நின்றாய்பானால்
மாட்டிமதியாற்பிடித்து வருவேன்பராபரமே. 22

ஆட்டியென்றுநினைந்தா யம்பலவாணனேமெய்யா
தோட்டியாகவும்வந்து துடர்வேன்பராபரமே. 23

எள்ளுக்குளெண்ணையைப்போ லெங்குந்தானாகிநின்றாய்
கள்ளுகுடிக்கவுநீ கால்தாபராபரமே. 24

முள்ளுமிதியடிமேன் முருக்கம்பூவட்டந்தந்தே
விள்ளுமேயென்னருளின் வெளியாய்பராபரமே. 25

காலைமதிதொழுது கண்ணினிலமைத்துவைத்தேன்
மாலைகட்டிச்சாத்த வருவாய்பராபரமே. 26

வாலையைத்தான்பணிந்து வனபூசைசெய்துவிட்டே
னாலைப்பிடிக்கவெங் நாளோபராபரமே. 27

தொண்டுசெய்துங்குருவை துரியநிலைவந்துநின்று
விண்டுவெளிதன்னில் விழித்தாய்பராபரமே. 28

பண்டுமுன்னாட்செய்தவினை பாசந்தவிர்க்கலையோ
அண்டசராசரத்தா லறுப்பாய்பராபரமே. 29

நானிருந்தவாழ்வைவிட்டு தானாகியேநிற்க
கானலொளியாகக்கண்ணிற் காட்டாய்பராபரமே. 30

தேனொழுகும்பாலமுதந் தெவிட்டாதசெங்கரும்பும்
வானுலகந்தோன்ற வறைவாய்பராபரமே. 31

சிற்றின்பந்தனையேவிட்டு முத்தியளியென்னுளத்திற்
கற்றிருந்துங்கார்க்கவென் கண்ணேபராபரமே. 32

பெண்களரவங்கடித்து பேய்போலலேயாமல்
திங்களையுநீதந்து சேர்ப்பாய்பராபரமே. 33

தெப்பக்குளமும்வெட்டித் தெருவீதியுண்டுபண்ணி
யற்பவுடலுக்குள் ளமைத்தாய்பராபரமே. 34

சற்பமெனைத்தீண்டாமல் சாகாவரமளித்து
கற்பச்சமாதியைநீ காட்டாய்பராபரமே. 35

காரணத்தாலேவந்து கண்ணருளிலேநின்று
பூரணத்தைக்காட்டி புகட்டாய்பராபரமே. 36

எனக்குள்ளேநீயிருந்து மெந்தனைத்தவிக்கவிட்டாய்
தனக்குள்வெளியினின்று சார்வேன்பராபரமே. 37

என்னைத்தனியேவிட்டு யெங்கேநீபோயொளிப்பா
யன்னையினாலேவந் தடைவேன்பராபரமே. 38

முன்னேசெய்தவினைபோல் பின்னேநீசெய்வீரானாற்
கன்னம்வைத்துமதியாற் காண்பேன்பராபரமே. 39

உன்னையுமென்னையு மொருவீட்டிலமைத்திருக்க
பின்னையோர்தெய்வமுநான் பேசேன்பராபரமே. 40

கண்ணிற்கலையமைத்து கதிர்மதியுங்கூடவைத்தாய்
மண்ணிலிறக்காமல் வரந்தாபராபரமே. 41

எண்ணித்தவமிருந்தே னெத்தனையோபாடுபட்டேன்
புண்ணியமுனக்கில்லையோ பொய்யாபராபரமே. 42

சரவீடுகட்டிவைத்து சஞ்சலமில்லாததிப
பாவீடுவுண்டுபண்ணி படைப்பாய்பராபரமே. 43

காத்தாலருட்காட்டிக் கண்ணினிடைமையமதில்
வாத்தால்வந்துபார்த்தேன் மதியேபராபரமே. 44

பார்த்தவிடந்தனிலே பரஞ்சோதியாய்நின்றாய்
காத்திருந்துகண்டேனென் கண்ணேபராபரமே. 45

மதியாற்பிடித்தேறி மாறிவரும்பாதையிலே
கதியாற்பதியில்வந்து கண்டேன்பராபரமே. 46

எங்கேயொளித்தா யெனக்கிடர்செய்யாதிர்கா
ணங்கேயுனதன்பி லடைவேன்பராபரமே. 47

மங்கையர்களாசையின் வலையையறுத்துவிடு
சங்கரனேயுன்னையான் சார்வேன்பராபரமே. 48

எத்தனைபொய்க்களவு ஏதளிகட்காமமெல்லா
மத்தனையுமுன்ற னடக்கம்பராபரமே. 49

மாற்றிப்பிடிக்கவு மதியெனக்குகிட்டலையோ
நேத்திரத்திற்காட்டி நிறுத்தும்பராபரமே. 50

ஆசையுமேயிருந்தா லறுத்துவெளிகாட்டியெனை
வாசலுக்குண் ணுழைய வரந்தாபராபரமே. 51

தில்லைசிதம்பரத்திற் றெருவீதிசெப்பனிட்டு
அல்லலோவுன்றனுக் கருள்தாபராபரமே. 52

வீதிவிளக்கேற்றியே வெட்டவெளியாய்ப்போக
சோதியைக்காட்டியே திறப்பாய்பராபரமே. 53

கண்ணிமையாதிருக்கக் கலைமதியைநீயருளும்
விண்ணிலருள்வந்து விளங்கும்பராபரமே. 54

சாஸ்திரங்கற்றேனேவீணாய் வீற்றிருக்காமலேசும்மா
நேத்திரத்திலாடியே நில்லும்பராபரமே. 55

அன்பர்களுக்குபணி செய்யவமைத்துவைத்தா
லின்பனிலைகிடைக்க வெய்தும்பராபரமே. 56

தேருந்திருவிழாவுஞ் சித்ரக்கூத்தையும்விட்டு
பாருமெளியோன்றன்னை பண்பாய்பராபரமே. 57

என்னையழைத்தா லிடர்வருமோவுன்றனுக்கு
வுன்னைவெளிகாணவுமே யுண்டாம்பராபரமே. 58

வேசிமனத்துள்ளுறவில் வேடிக்கைபார்க்கின்றாயோ
யாசியளித்தன்பருக் கருள்தாபராபரமே. 59

வெட்டுப்படாசக்கரத்திற் கட்டுண்டுவந்துநின்றாய்
பொட்டுமிடுமையத்திற் புலம்பேன்பராபரமே. 60

ஆரியக்கூத்தாடினாலும் காரியங்கண்ணிலேவையு
மாரிபோலேபொழிய மதிதாபராபரமே. 61

மாளையபக்ஷத்திலே வந்துயென்முன்னிற்கவேதான்
காளையேயென்கண்ணிற் காட்டாய்பராபரமே. 62

மண்வீடுகட்டிவைத்து மரணவில்லைபேசிநின்றாய்
கண்வீடுகட்டிநிற்க காட்டாய்பராபரமே. 63

எண்ணுஞ்சிரஞ்சிவிபோ லிருக்கவரமளித்தா
லுண்ணுமுனையல்லாம லுண்டோபராபரமே. 64

கானலொளிகாட்டியே கதிரானுருவெடுக்க
வானவொளிகாட்டிவையும் கண்ணேபராபரமே. 65

முட்டைபொரித்துமே முழுக்கோழிதான்படைப்பேன்
கட்டைக்குள்ளேயிருந்து காட்டாய்பராபரமே. 66

சடத்தையுமுண்டுபண்ணி சஞ்சலத்தையேனமைத்தாய்
மடத்துக்குவுரியமக னுக்காய்பராபரமே. 67

மதியைவலமாக்க வல்லமையுமக்குண்டானாற்
பதியிலமைத்தபொருள் பரனேபராபரமே. 68

நிதியிற்பதிகாட்டி நிற்கநிலைகாட்டுமுனை
விதியைவிலக்க விளங்கும்பராபரமே. 69

சென்மமெடுத்துமென்னைத் தீவினைக்குளாக்கிவைத்தாய்
கன்மவினைபோக்கக் கதிர்தாபராபரமே. 70

சாவல்வெட்டிபூசைசெய்வேன் சண்டாளநாதமதை
காவல்வைத்துகண்ணகத்திற் காட்டாய்பராபரமே. 71

சோலையொளிகாட்டி சுந்தரனேவந்துநின்று
பாலைக்குடிக்கவெனைப் பகர்வாய்பராபரமே. 72

கண்ணுங்கருத்துங் கதிர்மதியுந்தானிருக்க
வெண்ணிலாமுற்றமதை விளங்கும்பராபரமே. 73

விண்ணேவொளியே வெளியிலானந்தமேநீ
யுண்ணும்பொருளேயுன் யோகம்பராபரமே. 74

சத்தம்பிறந்திடத்தே சகலகலையும்பிறக்கும்
முத்தனாய்ப்போகவதின் மோட்சம்பராபரமே. 75

அருளொளிதேடிநின்ற வன்பருளுள்ளமர்ந்து
குருவடியைத்தந்துமுத்தி கொடுப்பாய்பராபரமே. 76

நாக்கைமடித்துவண் ணாக்குதனிலேற்றிவிட்டா
லாக்கையழிந்துனையே யறியேன்பராபரமே. 77

சுழியைத்திறந்துந் தூணோரமாய்நிற்க
வழியாப்பொருளுளத்தி லமையும்பராபரமே. 78

தேனொழுகும்பாகே தெவிட்டாதசெங்கரும்பே
வானொழுகயென்னுளத்தில் வைப்பாய்பராபரமே. 79

சித்திரக்கூடத்தே சிதம்பரத்தின்கண் ணுருவே
முத்திக்கருளுஞான மோனம்பராபரமே. 80

பூரணத்திலாடிநின்ற புல்லறிவேகைமுறையே
காரணத்திற்கண்டு களித்தேன்பராபரமே. 81

தோரணங்கட்டி தொடுத்தாய்மதியோகம்
வாரணனேயுந்தன் வரமேபராபரமே. 82

சோதிமயந்தன்னிலே தூண்டிநின்றபூரணனே
யாதிகுருவேயெனக்கு ளமையும்பராபரமே. 83

தேனும்பாகுமிருக்கத் தேடியலையவிட்டும்
வானுலகந்தோற்றயென்முன் வந்தாய்பராபரமே. 84

வந்தவிடமெந்தனுக்குட் டந்தவிடமென்னுயிர்தான்
தொந்தம்விட்டுப்போமோநீர் சொல்லும்பராபரமே. 85

காற்றாக்கியாடினேன் கண்ணொளியினின்றவனே
வேலாயுனக்கிதுவும் வெறுப்போபராபரமே. 86

உச்சிவெளிசென்றியானு முருகிநின்றுவாடும்போ
தச்சுழியினீவந்தகப் பட்டாய்பராபரமே. 87

கண்குருடாய்வைப்பீரானாற் காலானுனையிழுப்பேன்
வெண்கதிராய்த்தோன்றி விளங்கும்பராபரமே. 88

சிந்தைகலக்கந் தெளியவில்லையெந்தனுக்கு
ளுந்தனைக்கண்டா லொடுங்கும்பராபரமே. 89

ஆனைகட்டிபானையிலே யடுக்குநிலைநீயும்வைத்தாய்
பானையுடையாமற் பாராய்பராபரமே. 90

கண்டவர்கள்கண்ணிற் காட்சியளித்தவனானீயே
பெண்டளந்தான் றன்னுடன் போனாயோபராபரமே. 91

காரியங்கண்ணிலிருக்க வீரியமாய்ப்பேசவேண்டாஞ்
சூரியனையான்கண்டு துடர்வேன்பராபரமே. 92

நாசியினிடையி னடுவணையினின்றவனே
வாசியாலுண்ணுழைந்து வருவேன்பராபரமே. 93

தேவடியாள்வீட்டிற் றிண்ணையிலேவீற்றிருந்தாய்
காவடியுங்கட்டிவந்து கண்டேன்பராபரமே. 94

உற்றுற்றுப்பார்த்தாலு முன்மயக்கந்தீரவில்லை
கற்றறிந்தென்னபலன் கண்ணேபராபரமே. 95

தத்துவந்தொண்ணூற்றாறுந் தணறனிலேவேகவைத்தா
லத்துவிதமானபொரு ளாகும்பராபரமே. 96

ஆசானுபதேச மாகுனாளாகுமுன்னே
தேசமெங்குமோடித் திரிந்தேன்பராபரமே. 97

கைப்பொருட்கண்ணிலிருக்க கதிதெரியாமற்றேடினேன்
முப்பொருளைக்கண்டு விழித்தேன்பராபரமே. 98

தேசமெனக்குட் டிருநடனங்கூடவைத்து
பாசத்தைவைத்தேன் படைத்தாய்பராபரமே. 99

மூலவாசற்றிறந்து முச்சுடர்வட்டங்கண்டால்
மேலேவைத்தவாசையெல்லாம் விளம்பாய்பராபரமே. 100

வெண்பா.

நேரிசையும் வெண்பா நினைவர் லெடுத்துரைப்பேன்
சேருசை தன்யமதிற் சேர்த்து—மாறலிலா
கண்பால் மதியுருகக் கணக்கதுவு மொன்றறியேன் 1
வெண்பாவை நீமதியால் விடு.

அருளா னந்தத்திலே யம்பலமு மாடிநின்றப்
பொருளா னந்தத்தின் வெளிபோய்—கருவிலருள்
காட்டுவாய் தில்லைக் கனகசபை நடன
மாட்டி யெனக்குள் ளமை. 2

பரந்தாங்கி நின்றும் பரவெளியில் நீவந்துங்
கரந்தாங்கிக் கண்ணி லருள்காட்டு—வரந்தாங்கி
மதியைப் பிடித்து மாறியொரு கால்நாட்டி
விதிபெருக்கி யும்வெளி யமை. 3

தெண்டனிட்டே னுன்பாதஞ் சிதமதி யாலெனக்கு
மண்டபத்தைக் காட்டிநின் றழையுமே—தொண்டனெனை
காத்திருந் தலைந்தேனுன் கதிராய் மலர்பூக்க
வீற்றிருந்தே னேத்திரத்தில் விடு. 4

ஆசைவலை தங்கிநின் றலையாம லென்மனதை
யோசை யடங்கி வெளியொத்துப்—பாசவினை
சுட்டெரித்து நின்றுஞ் சுடுகா டனுதினமாய்
பட்டதுய ரங்களறப் பார். 5

நாசியிடை னடுவாய் நயனவிழி யாட்டதனை
யூசிமுனை திறந் தோடச்செய்—வாசிநிலை
வன்னிக் கதிரொளியாய் மாமதியுந் தாண்டிநிற்க
கன்னிவய தாய்வரவுங் கார். 6

சித்திதரு ஞானசிவ சிதமதி யோகமதை
முத்திதரு மூலத்தின் முச்சுடரி—னத்தியிரு
காலா லனன்மூட்டி கண்ணகத் தைத்திறந்து
நாலாக நீயமைய நடு. 7

நடுவாகி யேநின்று நாட்டம் புரிவதைநீ
படுவாய் கெடுமகனே பாராய்—கெடுமுனமே
தள்ளிவிடும் பாசவினைத் தட்டா னிறைநின்று
பள்ளியறை யதனுள் பார். 8

வாராயோ நின்னருளில் வாழுமதி யைப்பிடித்துச்
சேராயோ சின்மயத்தின் றேடி—கூறாய்நீ
பூரணத்தி லாடிநின்ற பூமதியின் றீபமதைக்
காரணத்தி லாடிநின்று கார். 9

எட்டாத வான்பொருளை யிதயந் தனிலிருத்த
வட்டார மாய்மதியும் வாழுமே—திட்டமதாய்
கைகாட்ட வேநிற்குங் கண்ணிலரு ளானந்த
மெய்காட்ட விண்ணில் விடு. 10

விண்ணொளி யில்நின்று மேல்வாச லைத்திறந்து
கண்ணொளியில் வந்துநின்று காராயோ—பண்ணொளியிற்
செத்தாரைப் போலிருமே சிவராச யோகமதை
முத்தார மேடையதின் முகில். 11

செல்லு மதிகாலஞ் சேர்ந்தபனி ரெண்டேறி
யல்லும் பகலு முறவாடும்—நில்லுமதிற்
கண்டா லதுவாங் கசடை யறுத்துவெளி
கொண்டா னந்தத்திற் கொடு. 12

கொடுத்து வாங்கிமதியை கோண லறுரவியி
லடுத்து வருவோர்க் கங்கர்குந்—தொடுத்துவிடு
வெள்ளை வெளுத்துநிற்கும் வேதமது பொருந்த
கள்ளமனம் விட்டுமதை கார். 13

சித்தாடியே நிற்குஞ் சிவலிங்க ரூபமதை
முத்தாடி வித்தாடு மோனஞ்—சுத்தாடுங்
கத்தரிக்கோன் மாறலுக்குட் கனகசபை நடனஞ்
சித்த ரொருவனெனச் சேர். 14

காலன்வரு வானைக் காத்திருவென் றூற்போகான்
கோலஞ்செய் துன்னைக் கொடுபோவன்—பாலகனே
முன்னாளிற் செய்தவினை முழுமதியாற் போக்கு
மன்னை கொளுவதனி லமர். 15

இறந்திறந்துங் கண்டிலேயோ யேழை மதிமகனே
யறந்தாங்கி யேவுங் தமர்வாய்—மறந்துவிடு
கள்ள மனததனைக் கருவா லறுத்துவிடு
முள்ளபொரு ளிற்றங்கு முயிர். 16

நாற்றச் சரீரமதை நாமறிந்தும் பார்த்திலேயோ
பீற்றலையு நம்பிப் பிதற்றினுய்—காற்றையறி
யுப்பிருந்த பாண்டமதை யொப்பா தொருநாளும்
முப்பொருளின் கைப்பொருளை மூடி. 17

நம்பி யிருந்திருந்து நமனுக்கா மாளானு
யம்பிகையின் யோகமதை யறிவாய்—தும்பிமுகன்
மூலச் சுழிதனிலே முத்திநிலை தன்னில்வந்துக்
காலனறச் செய்யக் கார். 18

நாதநா தாந்தவெளி நாதனையு நீகாணப்
பாதம்வைத்துப் பூசைமதி பண்ணுமே—போதம்வைத்து
வுண்டாகும் பாருமிது வுன்னுக்குள் ளேதெளிவாய்
கண்டாற்கொண் டாடுமது கண். 19

சிவிச் சினுக்கறுத்த சிங்காரக் கொண்டைதனி
லாவியதிற் போக்க வானுயே—தாவிமடி
கண்ணை யதில்வைத்துங் கருத்தழிந்து மாண்டாயிவ்
வெண்ணமதை யும்விட்டு வா. 20

விட்டுவா யென்னுடனும் விட்டவுடன் சோதிதட்ட
கட்டுதற்குக் கால்தருவேன் காணவா—பட்டுவிடப்
போவா யெனவிட்டு பெண்களா வங்கடிக்கச்
சேர்வாய் மதியில்வாச் செய். 21

பணம்பறித்த வேசையர்மேற் பாசம் பிடித்தாய்நற்
குணங்கெடுத்த கோதையரென் றெண்ணுமல்—மணமெடு
வந்தா ளேபாவி வாங்கும்வாத் தையழிக்க [த்து
விந்தாலே கெட்டகுடி வீண். 22

அழிக்க வரம்பெற்று மாளனெல்லாங் கொள்ளையிட
பழிக்காக வந்த படுபாவி—யொழிக்கவரம்
பெற்றாளே நீயொரு பேரின்பத் தையழிக்கச்
சற்றேனும் பார்த்தறிந்து சார். 23

சார்வையோ நீயுஞ் சார்ந்தும் ரவிமதியை
பார்வை யதில்நிறுத்தி பாராயோ—சீர்பெறுவாய்
தில்லை யருகின் றிருக்கோயி லங்கிருக்க
வல்லையோ யிச்சமயம் வா. 24

வாசி வலமாய் வரத்தை யெனக்களியும்
நாசிவழி யுண்ணுமைய நாடுமே—பாசியது
தான்விலகிப் போகவுந் தாயா ரடிகாண்பேன்
வான்விலகா வெளி வரும். 25

மந்திரமில்லா மதியை வாங்கிரவி யில்வைத்தே
தந்திரம தாய்நிறுத்தத் தாராய்நீ—யந்திரமாய்
பூரணமாய் நின்றும் பொருந்தி விளையாடு
மாரணமந் தக்கரண மறும். 26

தொட்டுவிட்டாற் சற்குருவின் றோஷ முனக்குண்டு
மட்டுப்படா கன்மம் வாய்க்குமே—யட்டியிலை
சோராத மாணிக்கச் சுந்தரத்தின் சோதிமயம்
வாராத மோனமிது வாம். 27

கண்ணக மதியை கதிராய் நிறுத்துதற்கு
பண்ண நாளாக பகர்வாயோ—விண்ணதிலே
கூட்டினிற் காட்டி குறுக்கே மயிர்ப்பால
மோட்டி யெனக்குளருள் முடி. 28

முடிசூடி யேயெனக்கு முக்காடில்லாச் செய்வா
யடிமுடியிற் கண்டுவிளை யாடல்செய்—படுமுனமே
மாறுமோ யென்மனமு மாறாதெனக் களியுங்
கூறும் வாசியிலேறிக் குதி! 29

குதிகொளவே வாருங் கும்பகத் துள்ளடக்கி
நதிகொள்ளக் கெதிகாண நாடுமே—விதியறவும்
வெட்டவெளி யாய்த்தோன்ற வேறறவே நீசெய்து
கட்டையிடு முன்னமெனைக் கார். 30

நஞ்சுண்ட மேனியனே நாதமய பூரணத்தின்
பிஞ்சுண்ட போதமைத்த புல்லறிவை—யஞ்சிலொன்றில்
வாதம் விளங்கவரும் வினைகளையே சுட்டறுத்து
பாதம் பணியகுரு பண். 31

காணு தரும்பொருளை கண்ணருளிற் சிக்கவைத்து
வாணு ளொழிய வரமதுவோ—காணுய்
ஓட்டமதி லேறி யுள்வெளியி லேவருவேன்
பாடக மெனக்களிக்கப் பார். 32

எனக்கு மதியோக மென்குருவு மப்படியே
யுனக்குமதி யில்லாம லேன்போச்சு—தனக்குள்வெளி
யெல்லோர் மதியினு மிருந்த தறிந்திலையோ
பொல்லாத பேய்மனமே போ. 33

கண்ணிற் கலையைக் கலைமதியா லேற்றுமல்
மண்ணிற் புகுமூக்கு நுனிபார்த்தாய்—விண்ணதனை
காட்டுமோ வேதங் கணக்கறியாப் பாவிநெஞ்சே
பூட்டுடைக்க மார்க்கமிது புல். 34

வாரா யென்கண்ணே வளர்மதியி லேறிநின்று
தேராய் சிவராஜ யோகமுநீ—மாருத
தியானமது கொள்ள திருடாய் ரவிபுகுந்து
மயானமதிற் சுடுகா வாம். 35

கண்ணேயென் கண்மணியே கட்டிமுத்தம் நீவிடுவாய்
பெண்ணரவங் கடியாப் போவாய்நீ—யண்ணலே
கண்டானந் தத்தையுங் கண்திறந்து பார்த்துவிடு
கொண்டா னந்தக்குணங் குடி. 36

குடியேறிப் போவாய்நீ கொள்ளையிடு வெள்ளையிலே
படியேறிப் போகவும்நீ பாரா—யடிசருவுந்
தழுவி மதிதொழுது சற்குருவி னற்றுணையாற்
பழுதிலா ஞானமிது பார். 37

இறந்ததைநீ கண்டிலையோ யெமனுக் கிரையானுய்
மறந்துவிட்டு மாமதியை மாண்டாயே—திறந்துவிடு
கள்ளமனப் பூட்டைக் கருவா லறுத்துவிடு
வுள்ளே வுற்றுநோக்க வுய். 38

உய்யும் பொருளனைத்து மோங்கார மாய்நிற்கு
மய்யன் றிருக்கோயி லாடும்பார்—கையின்முறை
முச்சுடராய்த் தோன்றியதில் மூலப் பொருளிலமர்
அச்சுடர் சமாதியை யறி. 39

அறிவா லடுத்து மாகாயமாய்ப் போவாய்
குறிபார்த் துளமுருகி கொடிமதியால்—வெறிபிடித்து
கள்ளமுர்தப் பாலைக் கலைமதியா லேகுடித்து
வெள்ளம் பெருகவெளி விடு. 40

வெளியேறிப் போவாய்நீ விண்ணுலகத் தேவர்மெச்ச
வொளியால் மதிபிடித்தே யோடு—சுழியா
லாணிப்பொன் னம்பலத்தி லாடும் பரம்பொருளே
தோணியேறி யேநின்று தோய். 41

தேக மெடுத்துநீ செத்தசவ மாகாதே
பாக மறிந்தும் பரிதியாற்—சாகாநீ
நாற்றச் சரீரமதை நம்பாதே சென்மமில்லை
காற்றை யடைக்கக்கதி காண். 42

கதியடைய வந்துங் கணக்கி லிருப்பாயோ
மதிபிடிக் கவ்வரத்தை வாங்காய்—பதியிருக்கு
முத்தர்க ளாய்க்கூடி முழங்குநா தாந்தமதை
வித்தகனே பார்த்திருநீ மெய். 43

கோலமிட் டாய்மனமே கோதையர்மே லாசைவைத்து
பாலங் கடக்கவுநீ பார்க்கவில்லை—சிலமுட
னுண்டான போது வுகந்து மதிவாங்கு
அண்டம் புகவுனக்கு மதே. 44

சென்ம மெடுத்துந் தெரிந்திலையோ பாவிநெஞ்சே
கன்மவினைக் குள்ளிருக்கக் காண்கிலையோ—குன்மவினை
சுற்றியே யுன்னை துக்கமதாய் தானிருத்தி
பற்றி யிழுக்குமுள்ளே பார். 45

பார்த்துபரி பூரணத்தை பாராம னீதிரிந்தாய்
சேர்த்துமதி யைரவியிற் சேரு—கார்த்திருந்து
கண்கொள்ளாக் காட்சியிது கண்ணி லருள்புரியு
மண்கொள்ளப் போகாமல் வா. 46

எண்ணிறந்த கோடி யிறந்திருந்தும் பார்த்திலையோ
கண்ணிருந்தும் பார்க்க நிலைகாணும்—பண்ணுநெஞ்சே
வற்றாத பொய்கைதனில் வாழுமதி யாலேறி
யுற்றார்களை நம்பா துணர். 47

காலை மதிபிடித்து கண்ணொளியி லேபதித்து
மேலைச் சிதம்பரத்தின் மேவாய்—கோலையறி
தீபவொளி யதனிற் சென்றார்க்குச் சென்மமில்லை
பாப மகற்றியுனைப் பார். 48

உன்னைநீ பார்த்திருக்க வுற்றதுணை வேறுளதோ
வன்னை கொலுவி லமர்த்துமே—பின்னையொரு
தெய்வமுனக் குளதோ சென்றோர்க்கு வுண்டுபலன்
வையகத்தி னுசை மற. 49

மறந்து மதிபிடித்து மாபதியின் கூட்டுறவிற்
றிறந்த வெளியிற் சிதாகாசங்—கறந்துவிடு
மதிபாற் சுரக்கு மனதை யதினிறுத்த
விதிபெருகி னுலே வெளி. 50

வெளியேறிப் போய்நின்ருய் வேலவனு நீயாவா
யளியாப் பரம்பொருளு மானு—யொளியதனிற்
கட்டு மனதையதிற் கதிராகும் பாரதிலே
மட்டில்லா யோகமிது வாம். 51

யோக மறிய வுலகமெல் லாந்திரிந்தாய்
பாக மறியமதி பார்த்திலையே—நாகமது
பொல்லா துனைதீண்டும் பிழைத்தவ ராருமிலை
யெல்லாரு மேயிறந்தா ரதில். 52

மூச்சையு மிழுத்து முழுங்கினுய் பாவிநெஞ்சே
பேச்சையு நம்பப் பிறப்பிலையோ—பாய்ச்சலது
பாயாமற் பாயும் பரமனருள் காணுமோதான்
சேயா வேதமிதுவோ செப்பு. 53

செப்புவேன் ரேசகத்தின் சேர்ந்து மதிபுகுந்து
அற்புதக்காட்சி யறிவா லாடுமே—முப்பொருளின்
கைகாட்டுஞ் சற்குருவாற் கண்டுமதி யாகவேணும்
மெய்காட்ட மெல்லடிமே னில். 54

ஊரார் நகைக்க வுடம்பெடுத்தா யேழைநெஞ்சே
பேரானந்த மதைப் பெறுவாயோ—சீரான
சிவராஜ யோகமது சிக்கும் மதியேறி
பவமாகா பூரணையிற் படு. 55

பூரணையி லடுத்துப் புகழ்ந்தமா வாசிமட்டுங்
காரண குருவின்முறை காட்டுமே—சாரணையிற்
பரியேற நாளும் பாதைவழி வேறுமிலை
யெரியுந் தீபத்தினொளி யிது. 56

கண்ணிருந்தும் பார்க்காமற் கலங்கினுய் பேய்மனமே
விண்ணிருந்தும் வெளியில் மேவாய்நீ—புன்னியதை
பன்னிபன்னித் தொழுது பார்த்து மதிபிடிநீ
யுன்னி யதிலிருக்க வோம். 57

சிற்றம் பலத்தையுநீ தேடித் திரியாம
னித்தஞ் சோற்றுக் கலைந்தாயேநீ—முத்தனருள்
வாடி யொடுங்கி மதிவேடம் பூணாமல்
நாடி யகப்படுமோ நண். 58

நாடி யறிய நடந்தா லகப்படுமோ
தேடிப் பிடியு மகக்குருவை—வாடியதி
லூசி முனையி லொத்து ரவிமதியால்
வாசி யடங்கவுமே வரும். 59

நில்லாத தேகத்தை நிச்சயமென் றேயெண்ணி
யெல்லோர்க்கு முள்ளவனென் றெண்ணாமல்—வல்லபனை
காத்திருந்தும் பார்த்திலையோ கங்குல்பக லற்றிடத்தே
நேத்திரத்தாற் சுட்டுநீ நில். 60

கும்பக மதிலடக்கக் குருவுனக்கு வேணுநெஞ்சே
யம்பலத்தி லாடவருள் புரிவா—ரும்பலத்திற்
றில்லைவெளி யேறிச் சித்தாடி யேநிற்கு
மல்ல லறுக்கவெளி யாம். 61

மாறிரவி யிற்புகவு மதியுனக்கு வேணுநெஞ்சே
கூறிக் குருவருளிற் கொண்டேற்று—வீறுமதி
வாச லடைத்துவிட வந்துவெளி காட்டுமுனை
மாசறக்குண் டலியிது வாம். 62

அம்மெனவு மும்மெனவு மழுத்தி நடுவினில்லு
வும்மெனும் வாவென்றே நீயூது—வம்மெனவே
கும்பித்துத் தம்பனத்திற் கூடிக் கலந்துயிரு
வம்பிகா யோகமிது வமர். 63

அமரமதி யாலாடுந் திருக்கூத் தையுமே
தமர்திறந் திடவுமதி யோது—குமாரகுரு
காட்டி யெனக்கருளை கண்ணகத்தி லேபுரிந்து
வாட்டி மதியோகம் வா. 64

நல்லவ ருடன்கூடி நாமறிந் தால்மதியை
கல்லாலின் கீழ்யோகங் காணலாம்—நல்லாய்கேள்
சனற்குமா ரெல்லோருஞ் சார்ந்தார் மதியோகம்
யெனக்கு ளமர்ந்தவிட மிது. 65

இறந்தும் பிறப்பதினி துளதோ வென்னெஞ்சே
மறந்தால் மதியைநீ மண்போவாய்—சிறந்தகுரு
காண்பாய் கன்னெஞ்சே காணு திறப்பையோநீ
விண்பா டலவேயிது வின். 66

விண்ணி னொளியில் வெளியேக னுகிநின்றால்
கண்ணின்மதி யால்யோகங் காணலாம்—புண்ணியர்தா
னில்லையோ வன்னெஞ்சே யேழைமதி யேனுனக்கு
சொல்லை யறிந்துவந் துணர். 67

உடல்பொய் யுறவென் றுற்றுணர்ந்து பார்த்திலையோ
கடல்பெருகா னந்தவெளி காட்டும்—விடலரிது
வொள்ளிய வழற்கண் ணொருகாலைத் தூக்கிநிற்கும்
பள்ளியறைக் குள்ளிருக்கப் பார். 68

மனம்வா டவுமருந்து மதியேநீ தின்றுவிடு
தினம்வாடி நிற்கத் திருவருளாம்—புனலாடி
கங்கையைத் தாண்டிக் கரையேறு வென்னெஞ்சே
பங்கயா சனர்முதற் பார். 69

தொழுது பணியுமுனஞ் சொல்லாம னீயிறப்பாய்
பழுதிலா ஞானமிதைப் பாரா—யழுதழுது
சற்குருவைப் போற்றிச் சரம்பார்த் தடியினில்லு
மெய்க்குருவி னல்வெளியிற் போ. 70

வெளியேறிப் போய்நின்று வீற்றிருக்க மாட்டாயோ
விழியால் மிரட்டிமதி மேனேக்கு—வொளிவுதனிற்
சென்று வெளியாக்குச் சிறுவாச லுட்புகுந்து
மன்று ளாடுமேமதி பார். 71

உள்ளே யுறநோக்க வொத்தநடு மையமதிற்
கள்ளத்துற வால்வெளி காட்டுமே—வெள்ளமதி
லுண்டே யுறங்கி யொருமொழியி னின்றாடு
கண்டுகொள் ளானந்தங் கண். 72

கண்ணே போதுமுனக்கு கார்த்திருந்தா லேநெஞ்சே
யெண்ண மிருக்க யிறவாது—வுண்ணுமதி
காலை நீகண்டு கனகசபை யாடாய்
வாலை யவளாலே வரும். 73

வரும்பொரு ளைக்கண்டு மறந்து மிருப்பாயோ
யரும்பொரு ளுதய மங்காகு—முரும்பொருளை
பார்த்து விழித்துப் பரவெளியி னீபோக
வேர்த்துவெளி யாக்கு விண். 74

விண்ணே வெளியானால் மெத்தவாம் நீபெற்றாய்
கண்ணேபோது முனக்குக் காண்பாயோ—திண்ணமதா
யோடிவரு மூச்சை யொத்தே மதியூது
மாடிவருங் காலா லடை. 75

அடைய மதியுனக்கு வாணவங்க ளில்லாமற்
றடையறவே குருவைச் சாற்றும்—மடையருடன்
சேரா தெங்நாளுஞ் சிக்க லறுத்திடுவாய்
பாராய் மதிவெல்லப் பலன். 76

பலன்பெற்று வாழ்வாயோ பாவையிடஞ் சேர்வாயோ
குலங்கெட்டு வாடிக் குலைவாய்—நலங்கெட்டு
போவாயே நீயும் பொல்லாத பாவிநெஞ்சே
யாவாயே நீயு மருள். 77

அருளோடி நின்று மாக்கை வலுத்திருக்கக்
குருதேடி யும்வந்து கொள்வாய்—திருவடியைக்
கண்டா லுனக்குக் கண்போரு மோநெஞ்சே
விண்டா லானந்தமாம் வெளி. 78

ஆனந்தம் பார்த்தே யதில்விற் றிருப்பாயோ
வானந் தவமாய்நீ வாழ்வாயே—மோனத்தின்
மூர்சைப் பிடித்து முழுமதியா லேற்றிவிடு
வாச்சுதென்று வாநீ ரவி. 79

ரவியால் மதிபிடிக்க நாதமய பூரணத்தி
லவியா விளக்கேற்றி யாடு—குவியமனம்
பண்ணும் பதியே பரிபேற யோகமிது
வுண்ணும் பேர்க்குயிது வூர். 80

ஊரா ருனக்கு வுதவிசெய் தேதுளது
வாராய் மதிவழக்கை வாங்கு—சீராய்கேள்
அல்லற் படுநெஞ்சை யறுத்து வெளியாக்கு
தொல்லையி லகப்படாமற் செல். 81

தேடிக் குருவைச் செகமெலாம் போயலைந்தாய்
வாடி யிருக்க வருவாரே—நாடிதனில்
மாமதியின் யோகம் வைப்பாரே கற்றுணரு
பூமதி யாலேநீ புகு. 82

புகுந்தா லறைதெரியும் பொற்பீடமு மாங்கே
நெகுந்தார்க் கிம்மார்க்க நேராகா—தகுந்தமுறைக்
கையா லேவாங்கிக் கண்ணகத்தி லேதொடுத்து
மெய்யா விதிபெருக விடு. 83

கொடுத்து வாங்கியேநீ குண்டுணியாய்ப் போகாதே
படுத்து வருவோர்க்கு பையனரு—ளெடுத்துவிடு
மெல்லாம் மதிபோக்கே யெங்கு நிராமயமாய்
வல்லார்க்கு நல்லயிது வழி. 84

நல்ல வழிதனிலே நாதனிருப்பி டங்காண்
சொல்ல வொருமொழியாற் சுழிமாறு—மல்லலில்லா
சோதியால் விதியிற் றுரிய நிலையமரும்
ஆதிக்கோ விலங்கை பாம். ...லை)

கோவி லேக்கண்டாற் குருக்களே நீயாவா
யாவியதற் குள்ளிருந் தகப்படுமே—தாவியதை
பிடித்து வடியேறிப் பேய்மதியா லேயோகம்
முடித்து வெளியேக முன். 86

வந்த குருபாரீண மதியில்லா தேன்விட்டா
யந்தகனுக் காகவங் கென்செய்வாய்—சொந்தவினை
போக்கக் குருவேணும் பொய்யாத வம்பலத்தி
லாக்க வவரைநீ யறி. 87

கும்பத் தனங்குலுங்கக் கோதைய ரைப்பார்த்து
மம்பலத்தை யேன்மறந்தா யையையோ—யும்பலத்திற்
கூத்தாடி யேநிற்குங் குறைவிலாந் தீபமது
வீற்று லொளிக்குள் வெளி. 88

அன்பர்க ளேக்கண் டாதரிப்பா யோநெஞ்சே
யின்பமாய்ப் பெண்களுட னிருப்பாயோ—துன்பம்வருந்
தேடிப் பிடித்துநீ சென்ம வினைப்போக்கு
மாடி யறைக்குண் மணி. 89

மணியொளியின் தீபமதில் வந்து விதிமாற்றும்
பணியாப் பூசைமதி பண்ணுமே—துணிவுடனே
நெஞ்சை யறுக்க நிமைக்குள் வெளியாகும்
வஞ்சக மில்லாமதி பார். 90

மதியே யுனக்குவந்து மங்களமே பாடிநிற்கும்
விதிகோடி ரப்பையொளி வீசுமே—கதிபெருகுஞ்
சுற்றுதுஞ் சுற்றிச் சுழிக்குள் விளையாடுங்
கற்று லதற்குமனக் கண். 91

முத்தர் களைக்கூடி விழித்துமே நோக்கியதிற்
சித்தர்க ளுருவெளியிற் றெரியுமே—பத்தனெனக்
கொண்டாடிக் கொள்ளுங் குவிந்தமன மோடாமற்
கண்டா லதுகைலே யாம். 92

ஆதி குருவை யறியாமற் பேருலகி
னீதியும் வேதமதை நிந்தித்தார்—சோதியதிற்
றனக்குள் ளிருக்குதென்று தானறிய மாட்டாமல்
மனக் குரங்கின்குண மாம். 93

போதம் விளங்கப் போய்ப்புகு மென்னெஞ்சே
வாதம் விளங்கி வசமாகும்—நீதமறி
யெல்லோர்க்கு ளுள்ளு மெங்குநிறைந் ததுவாம்
வல்லார்க் குளேயது வரும். 94

கண்ணின் மணிமழுங்கி காண்பாயோ பேய்நெஞ்சே
விண்ணின் மணியாக்க வேணுமே—யெண்ணியதிற்
சென்றேறி யேநிற்கச் சிதம்பர மேடையதி
னின்றேறி யேசமாதி நில். 95

கொல்லா விரதங் கொடுத்தருளு மென்குருவே
நில்லாத தேகத்தில் நீயமர்ந்தாய்—நல்லாய்கேள்
யாற்ற லுடையானே யறிவைப் புகட்டிவையும்
மாற்றமருந் ததனையு மாம். 96

தாவா வென்க்கூவி தவிக்கின்ற பாலகனை
மோவாயுந் தாவாயு மொன்றாய்ப்போக—வாவாநீ
ஆண்டிமக னுக்க வுனக்கரி தோமறிவே
தூண்டி விடுஞ்சுழி முனை. 97

என்னை யொளித்து மெங்கேநீ வீற்றிருந்தா
யுன்னை யெனக்குள்வெளி யாக்குவேன்—சொன்னமொழி
யாலே பரஞ்சோதி யையனதில் வீற்றிருந்தாய்
காலேறும் வாகனனே கார். 98

காலேறி மாலேறிக் கண்ணின் மணியேறி
சாலேறி நின்ற தயாபரனே—கோலேறி
சற்குருவாய் வந்துஞ் சமயங் கடந்திலகு
மெய்க்குருவே மெல்லடிச் செல். ...லை)

தூண்டா மணியே சுடரொளியின் றிருவே
மண்டார் மனந்தனிலே வந்துறையுந்—தீண்டாப்
பேயருள்ளந் தங்கா பிரமமே வெளியேறு
ஆயன் றிருக்கூற்றி லமர். 100

கீர்த்தனைகள்.

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

அண்டபகி ரண்டமொடு வடங்குந் தில்லை
யம்பிகையின் பீடமதி லமர்ந்திருந்த
மண்டபத்தி லாடுகின்ற வட்டத் துள்ளே
மகத்துவத்தை யெடுத்துரைக்க வாயோயில்லைக்
கண்டபடி சொல்லுகிறேன் கருத்தாய்க் கேளு
கவுனரசக் குளிகைதன்னிற் கண்டுதேறு
தொண்டருக் கன்புடையோ னீயேயானாற்
றெடுத்துப்பா ரிந்நூலுஞ் சொல்லுந்தானே.

இராகம்—தோடி—தாளம்—ஆதி.

பல்லவி

தில்லைக்குப்போவோம் வாரீர்—திருநடனமிடுங்
கனகசபாபதிதனைக் காண (தில்லை)

அநுபல்லவி.

எல்லைவெளியிற்போனா லேகனாய்நீயேதானாய்
தொல்லைவினையைப்போக்குஞ் சுந்தரச்சோதிபாதஞ்
சுடர்மணிதீபமும் படருஞ்சங்கீதநாதந்
தடமூலமாதாராசை கெடவேவருமேபோதந் (தில்லை)

சரணங்கள்.

1. மாற்றியேபோவதற்கங் கொரு மருந்துளது யிதய
மதியைப்பிடித்துளோடு
காற்றினாலமைந்ததோர் கலைமதிதனைக்கூடு
நாற்றிசையோரும்போற்று நமனறையில்லாநாடு
நடுவணைதனிவிடு படுவினைதனைவிடு
கெடுமுனைவினையறு கொடுமனதைச்சுழியிற் (தில்லை)

2. முப்பாழைத்தாண்டிநில்லுங்கண் முதற்பூமியி
லதிசயந்தான் ஸாமிபரிபூரணத்திற்
செப்பாததுவுமிக செகத்திலாருமேகாணு
ரொப்பாருமில்லையதை யப்பாற்றிருநடன
முயர்முறைபலகலை யுணர்பவாறிகிலர்
நயனனுனலனா னடமதைவழிபெறத் (தில்லை)

3. அந்தரத்திலாடும்பொருடா மது சுந்தரச்சுயஞ்
சோதியாந்தந்த குருநாதன்செயல்
மந்திரத்துக்கெட்டாத வான்மதியிலாடிநின்ற
சுந்தரக்குருபானுற் சூக்குமத்திலேயமையும்
சூட்சாதிசூட்சத்தைக்கண்டு மாட்சிமைபொருந்திக்கொண்டு
சாட்சியாகவந்துநின்று காட்சிதருங்கண்ணிற்கண்டு (தில்லை)

கலித்துறை.

கல்லைப் பிளந்து கடுங்காவற் சென்று கடுவெளியிற்
சொல்லை யுணர்த்தி வடிவா னந்தக்கடற் சூத்திரத்தில்
வில்லை வளைத்து மேனேக்கும் பார்வை விழித்திருந்து
தில்லைப் பதியிற் றிருக்கோயி விற்சென்று சேவித்தனே.

இராகம்—பைரவி—தாளம்—ரூபகம்.

பல்லவி.

தில்லைச்சிதம்பரந் தன்னைத்தெரிசிக்க
யெல்லையிற்போ நெஞ்சமே

சரணுனுபல்லவி.

1. கொல்லனுலைகொண்டு மெள்ளக்கனன்மூட்டிக்
கோபுரத்தையினி சாடா யந்தக்
கோலமானயீசன் பாதமலர்தனைக்
கொஞ்சிமுத்தங்கண்டு தேடாய்
நல்லவர்நேசத்தி னுனெனவேபோக்கி
நம்பியிருந்துமே வாடாய் வெகு
துன்பங்களைவிட்டுக் கூடா யந்த
வல்லபன்சபைநெற்றிவிழியி லாடாய் (தில்லை)

2. பித்தந்தெளியுமே நித்தந்தெரிசித்தாற்
பேரின்பவீடு முண்டே நல்ல
பேசாமற்பேசுமே யாசானுமாமிது
பித்தனுகியு நின்றே
செத்தசவம்போலிருந்து செபதபஞ்செய்து
தனித்துக் கண்டே யிந்த
கர்த்தனைகண்டுகொண்டே நீயுஞ்
சுத்தத்துடனுமே பத்திசெய்தா னன்றே(தில்லை)

3. ஆதியிலேயொரு சோதிச்சுடரினு
லங்குசனைப்பணிந் தேனே சாலை
வீதியிலேசென்று மேடையிலேறி
விளக்கொளியைக்கண் டேனே வளர்
பாதிமதியனைச் சூழுஞ்சூடாமணி
பாதமலரணிந் தேனே சொந்த
சாதனையாற்றுணிந்தேனே யிந்த
சூதும்வாதுந்தெரியாதவன் யானே(தில்லை)

4. வாசிப்பழக்கத்தான் மதிரவியைப்பிடி
வந்துகைகாட்டும் பாரே பெரு
மூசிமுனைதனிலுசியிற்சுவாச
மோடாமலேற்று நேரே பர
தேசிகனைக்கண்டு பாசிவேருகவே
செங்கதிரோனைச் சேரே யிது
பங்கம்வராது சாரே நீயும்
வீசிநடந்து வெளியினிற் போரே(தில்லை)

அறுசீர்க்கெழினெடிலாசிரிய விருத்தம்.

ஆசையெனும் பெருநெருப்பை யடியோடே வேகவைத்தே
யம்மென் றேதா
னேசையெனும் வாசியைநீ யுள்ளடக்கி யுள்ளினுழைந்
தொருகாற் றாக்க
வாசலெனு மேல்வாசன் மரகதவுச்சியி னிடமாய்
மௌனந் தங்குந்
தேசமெனு மம்பிகைப்பெண் சீர்பாத கமலமதிற்
றெரிசித் தேனே.

இராகம் மோஹனம் தாளம் ஆதி.

பல்லவி.

ஓசையடங்கியே யுள்வெளியிற்சென்று
உச்சிதக் கோட்டையைப்பாரடா.

அநுபல்லவி.

ஆசையினுலெழும் பாசமூன்றையும்விட்
டம்பிகையின்பாதந் தும்பிமுகவனை
வாசமலர்தங்கி வீசுஞ்சுடரினுன்மாணிக்கத்
தூணினிலாணிப் பொன்னம்பலம். (ஓசை)

சரணங்கள்.

1. பார்த்துரவிமதி யைப்பிடித்தாட்டுமே
பண்பாய்ச்சின்முத்திரை யின்படியோட்டுமே
கோர்த்தமுத்துகள்போற் சாத்திரங்காட்டுமே
கொள்ளையென்றுகண்ணீர் வெள்ளங்கொண்டோட்டுமே
சேர்த்திறுக்கிவிடு நேத்திரத்தாற்சுடு
காற்றையடைத்துமே நாற்றைவிட்டுநடு
வீற்றிருந்தாலது க்ஷேத்திரமாகுமே
விண்ணவர்துதிக்கக் கண்ணொளியேகுமே. (ஓசை)

2. சோதிமதிதனி லேறியேபோகவும்
வாதுகள்செய்ய வரும்பலனனேகமும்
வீதியினிலேந்து கோபுரமாகவும்
வெற்றிக்கொடிமரங் கட்டியதாகவுஞ்
சாதியிலீனராய்ப் பேதியாமனேராய்
சற்பாத்திரங்களிற் பிச்சைபோட்டுவாராய்
நீதிப்பிரகாசமாய் நீடொளியிற்சென்று
நில்லுஞ்சொல்லுமிது வல்லபனேயது. (ஓசை)

3. ஆடியலேந்துமே தேடிப்பிடிக்குதே
யந்தரத்திலோடிக் கண்டுமறிக்குதே
தேடிப்பிடிக்குதே சென்மங்கள்போக்குதே
சித்திரபாவைபோ னித்தம்வந்தேய்க்குதே

மாடியறைக்குள்ளே கூடியிழுக்குதே
மாணிக்கதீபமும் வாவென்றழைக்குதே
சாடியுடையுமுன் சன்னதிமுன்சென்று
சற்குருபாதத்தின் முப்பொருளைப்பாரு. (ஓசை)

அறுசீர்க்கெழிநெடி லாசிரியவிருத்தம்.

கண்டெழுதி விட்டசிவன் கணக்கறியாப் பாவியுனுன் கசிந்துமென்ன
தொண்டுசெய்யப் புரியவல்லேன் சுயம்பாடுங்கவியுமல்லேன் றுண்ட
[னுன்னை
தெண்டனிட வகையுமல்லேன் றில்லையிலாடும் பரனே தீபமேநீ
கண்டுகொண்டே யென்னையாளுங் கனகரத்ன நடராஜக் கருணைவாழ்வே.

இராகம் சங்கராபரணம் தாளம் ரூபகம்.

பல்லவி.

மன்றுள்ளாடிய பரனைக் கண்டுமே
வண்டர் நாயகனைக் கண்டுதொழு மின்கள்.

அநுபல்லவி.

பண்டுபழகிய நாட்டந்தனிலிரு
பண்ணேகண்ணே தொடுவண்ணலேநீயடு. (மன்று)

சரணங்கள்.

1. மெள்ளமெள்ளவாருங் கள்ளமில்லாமலே
பள்ளந்தனிலொரு குள்ளனிருக்கிறுன்
கள்ளக்கயிர்கொண்டு மெள்ளப்பிடித்துமே
கட்டேமுட்டே தொட்டே வட்டந்தனிலொட்டே. (மன்)

2. நாட்டத்தைப்பற்றியே பூட்டைத்திறந்திடு
நாயகன்பொற்சபை நேராகப்பார்த்திடு
மாட்டைமடக்கியே காட்டைக்கொளுத்திடு
மாடந்தனிலேறி விளையாடு நடனந்தேடு. (மன்று)

3. நந்திகொலுமேடைச் சந்திலிருக்குது
தொந்திக்கணபதி வந்திருக்கும்பாரு
பந்தியினின்றுமே முந்திவிட்டகுறை
பற்றுஞ்சுற்று மனமற்று மிருக்குமே. (மன்று)

4. சாத்திரம்பார்த்துமே பாத்திரமேந்தாதே
சூத்திரப்பாவைக்குட் சூக்மத்தைக்கண்டுகொள்
மாத்திரைநேரம் பிரியாதேகண்முன்னே
வந்துவிளையாடுமது சிந்தை குளிரத்தேடும். (மன்று)

5. காட்டாமற்காட்டுதே காட்டிமறைக்குதே
மூட்டுதேமுக்கோண மூலச்சுழியினிற்
சாட்டுதுபாரு சவுக்காலடித்துமே
சாரிக்குதிரைரெண்டும் நோய்ப் போகுதுபாரு (மன்று)

6. நின்றுமணிவிளக்கைக் கொண்டுநில்லுமே
நீடூழிகாலமும் வாழலாஞ்சொல்லுமே
கண்டுகொண்டானந்தங் கானகஞ்செல்லுமே
கண்டாமணியோசை யடி தெண்டாயுதபாணிமுடி.(மன்)

வெண்பா.

அஷ்டாங்க யோக மறிவதற்குச் சூட்சமிது
தட்டான் றராசதுபோற் றுனினையே—யொட்டிமுனை
பாராமற் பார்த்துப் பரம ரகசியந்தான்
வாராத பேர்க்கும் வரும்.

இராகம்—பூரிகல்யாணி—தாளம்—ரூபகம்

பல்லவி.

சரந்தொடுத்திடவாருங்க ளுங்கள்
சஞ்சலமெல்லா மொழிந்திட தேறுங்கள்

அநுபல்லவி.

பரந்தொடுத்துமே பார்த்துப்பிடியுங்கள்
பாழ்மதியைப்பிடித் தானந்தங்கூறுங்கள் (சரந்)

சரணங்கள்.

1. திட்டிவாசற்றிறந் தெட்டிப்பிடியுங்க
டில்லைவெளியினி லெல்லையைக்காணுங்கள்
வட்டிக்கடன்பட்டு பட்டினியானீர்கள்
வையகத்தோர்க ணகைக்கவீணானீர்கள்

செட்டிச்சிதம்பரஞ் சீராயிருக்கச்சே
திருவடியைநீர் சேராமற்போனீர்கள்
குட்டிப்பெண்களைநீர் கட்டிச்சுமந்துமே
கூற்றன்வரும்பொழு தோட்டம்பிடித்துபோனீர் (சரந்)

2. ஏழையடித்துப் பருந்துக்குப்போடாதே
யின்பமென்றுசொல்லித் துன்பத்தில்வாடாதே
கோழைமதியாலே குண்டுணிபேசாதே
கொலைபொய்களவு செய்யநீபோகாதே
வேடக்காரனென்ற பேருமெடுக்காதே
வீணாகப்பேசிநீ வாழ்நாளைப்போக்காதே
தாழைப்பழந்தின்னத் தாழ்வுனக்கில்லையோ
வாழைப்பழந்தின்ன வாராயோநீசொல்லு (சரந்)

3. மந்தப்புத்தியினால் மதிவசமாகுமோ
மாருத்தியானமும் வைக்காமலாகுமோ
சுந்தரச்சோதியிற் றூலச்சூக்குமந்தன்னை
தொடுத்துப்பார்த்துநானு மெடுத்துமுன்னமே
[சொன்னே
னெந்தனகத்திலேயிப் பிறவியிற்கண்டே
னேற்காமற்போனீரே நாற்கான்மிருகமே
வந்தேனென்றுசொல்லி மனதிடஞ்சொல்லுங்க
டந்தேனென்றுசொல்லி சத்யமிந்நாற்சொல்லுஞ் (சரந்)

4. சாதியிலுள்ள வுறமுறையோர்கள்
சண்டாளரெல்லோரும் வாழ்ந்துமுனக்கென்ன
நீதிதவறி நடக்கின்றமன்னரும்
நித்தியானந்தத்தை பற்றாதிருந்தென்ன
பாதிப்பிறைமதி சூடிமுடித்த
பரமனைக்காணார் புனர்செனனமாச்சுதே
சோதியின்மூலக் குருவடியிற்றினஞ்
சூக்குமந்தன்னிலே காட்சியைகண்டுகொள் (சரந்)

கலித்துறை.

பாருங் கலிமா லிவனென் றிருக்கப் பதிதலத்தி
னீரு நெருப்பு நிலாமணி மண்டப நின்றிலங்கும்
பேரும் பிறப்பு மிறப்பு மறந்தப் பேரின்பத்திற்
றீருங் கருவிக ணீருகப் போகுஞ் சிதம்பரத்தே.

இராகம் கல்யாணி தாளம் ரூபகம்.

பல்லவி.

வாருங்கள் வனநாதரைக் கண்டுமனந் தேறுங்கள்

அநுபல்லவி.

வாருங்கள் கைலாசமாகுஞ் சேருங்கள் சென்மங்கள்போகுந்
தீருங்கள் வினைகளெல்லாஞ் சென்ம சாபல்யமாகும். (வாரு)

சரணங்கள்.

1. கட்டியே கனகரத்ன பீடமதி லெட்டியே
மட்டும் படியாய் யெட்டிரண்டும் பிடியே
சுட்டி விழும்படியாய் சுழிமுனையில் விழியே (வாரு)

2. முட்டுமே மூலவாசற் றிறந்துமன மோட்டுமே
யெட்டிப் போகுமேரவி மட்டுக் கடங்காததுமே
கட்டிக் கயற்றினலே கலைகாலையுஞ் சேருமே (வாரு)

3. சுற்றுதே சுடுகாட்டி னிடத்தினின்று பற்றுதே
சத்துச் சித்துக்கள்போலே தாண்டவ மாடுமேசோதி
யத்துவித நிச்சயத்துக் கானந்த மானவீதி (வாரு)

4. வருமதே யனேகம் வினைவந்து நதிப்பெருகுமே
மருவுஞ் சுழியினின்று கருவூர் நாதனைக்கண்டு
திருவுமயிர்ப்பாலநின்று செந்தியாலுந்தனைக்கண்டு(வாரு)

5. அக்கரை யதிலிருக்குந் தேனமுதஞ் சர்க்கரை
சொக்க நாதரைக்கண்டு சர்க்கரைத் தேனையுமுண்டு
மிக்கவே தீபத்தைக்கொண்டு பக்குவந் தவருமற்சென்று
(வாரு)

அறுசீர்க்கெழினெடிலாசிரிய விருத்தம்.

கண்டதோர் கனவில் யானுங் கண்கொளாக் காட்சி யாலே
விண்டதைச் சொல்லப் போமோ மேதினி தன்னி லேதா
னண்டர்கோன் றன்னை யல்லா லவனுக்கங் கவனே சாட்சி
பிண்டத்திற் குடி யிருந்து பிரமமு மாவாய் நீயே.

இராகம் செஞ்சுருட்டி தாளம் சாப்பு.

கண்ணிகள்.

1. மண்டலத்திற் றேடியுன்னை மாதவங்கள் செய்தேன்யானே
தெண்டனிட்டுயான்பணிந்தேன்வா தில்லைப்பதியே(மண்ட)

2. கண்ணிலாடு மொளியைக் காரண மாகவேமூடிப்
பண்ணுகையாற் பிடித்தேனே பரஞ்சுடரை(மண்ட)

3. கட்டுப்படா வாசியை யொட்டுப் பலகைமீதின்
மட்டுப்படும் படிசெய்தேன் மதிரவியால்(மண்ட)

4. நந்திகொலு மேடையி னாயகனரு ணடையின்
முந்திவரங்கள் பெற்றேனே முச்சுடரைக்கண்டு(மண்ட)

5. முப்பாழைத் தான்கடந்து முச்சந்திவீதிதொடர்ந்து
மப்பாழைத் தாண்டி நின்றேனே யரும்பொருளே(மண்ட)

6. அந்திபக லிரவோ யாருமற்றவேளை தன்னிற்
சந்தில் வெளியே நின்றேனே சாமிநாதனே(மண்ட)

7. உருவில்லா மாணிக்கமே குருவாகி நின்றவனே
நிருவிகற்பாதி யையனே நிட்களங்கமற்ற(மண்ட)

8. கண்ணேயென் கண்மணியே கனகமணிப் பெட்டகமே
பண்ணேன் பூசை புரிவாயே பதந்தருவாய்(மண்ட)

9. தூண்டாமணி விளக்கே தொண்டர்க ளாடியகூத்தே
கெண்டாமணியி னோசையே கெதிகொடுப்பாய்(மண்ட)

10. அக்கரையி னின்றோனே யானந்த வெள்ளப்பெருக்கே
முக்கனிசர்க்கரையு நீதானே முப்பொருளில்வந்த(மண்ட)

வெண்பா.

முத்திரையி னால்வந்த மூன்றுலக மாய்நிறைந்த
கத்தரிக்கோன் மாறல்தனைக் காட்டாயோ—சித்ததனைக்
கண்டாலும் பேசான் கனமெளன பீடமதைக்
கொண்டாலும் பேசேன் கொடு.

இராகம்—சங்கராபரணம்—தாளம்—ஆதி

பல்லவி.

எற்றவேற்ற மதியோட்டம் பிடிக்குதே
யிதற்கென் செய்வேனையா
ஏழைமதியினான் மோசம்போகாமலே
யிருத்தித் தடுத்திடையா.

அநுபல்லவி.

மாற்ற மதியெனக்குக் காற்றுத் துருத்தியை நீ
வரவழைத்திடு மையா
மைந்தனா னுனக்குச் சொந்த விந்துவைகட்ட
மருந்து தந்திடு மையா (எற்ற)

சரணங்கள்.

1. உள்ளேசுருக்கிமுனை யொருகாற்றாக்கினே
னோட்டம்பிடிக்குதே வாட்டும்
ஓடாமலடக்கியே கோடாலிரவியா
லொட்டிமுனைவைத்துமே வெட்டும் (எற்ற)

2. கள்ளக்கயிர்கொண்டு மெள்ளப்பிடித்துவரக்
காலையைக் கண்ணிற்காட்டாய்
கடுவெளிதனிலே படுமுனையில்வைத்துக்
கானகந்தனி லோட்டாய் (எற்ற)

3. விரையொன்றுபோடச் சுரையதுமுளைக்குமோ
விந்துநாதத்தை யல்லால்
விண்ணொளிதன்னின்மதி கண்ணிலேயான்கண்டால்
வேறுசந்தேகமெனக்கேன் (எற்ற)

4. கரையதுகடக்கக் கனல்விழி திறந்து
கதிர்மதி யொன்ருய் கூடுங்
காணக்கிடைக்குமே கனகசபை நடனங்
கண்டாலது போதும் (எற்ற)

5. பிடிக்கப்பிடிக்கமதி திருத்தமாகவில்லை
பெண்டுபிள்ளைக ளிச்சையோ
பேய்மதியாலேயான் ருயினிடவயிற்றிற்
பிறந்துவந்தேன் கொடுமை (எற்ற)

6. அடிக்கத்துரத்தினு மகப்படேனென்குதே
யாச்சர்யமானமதி
யாசைவலைக்குட்சிக்கி மோசத்திலழுத்துமே
வையோயிதற்கென் செய்குவேன் (எற்ற)

7. இழுத்துமுனைபிடித்து யழுத்தநடுவணையி
லிருள்வெளி கொஞ்சமாகுதே
யிருந்தரவியும்விட் டேமாந்துநிற்குதே
யெல்லைக்குட்போகே னென்குதே (எற்ற)

8. பழுத்தபழமிருக்க பாராமற்போகுதே
பாவியென்றமதியும்
பழகிரவியினிடம் பார்த்துக் கொடுப்பமென்ருற்
பார்முனையுந் தோயுதே. (எற்ற)

அறுசீர்க்கெழினெடிலாசிரிய விருத்தம்.

தந்தைவிதி தனையறிந்துஞ் சஞ்சலங்கள் போகவில்லை
சற்குருவே யென்
சொந்தமனை தனிலிருந்துஞ் சுகதுக்க மிரண்டினையுந்
துலையச் செய்தும்
நிந்தனைக ளேதுமிலா நிபாததீபக் கவசமதை
நிலைக்க நாட்டி
யந்தரங்கந் தனிலமரு மன்பர்களுக் குரியவனே
யருள்செய் வாயே.

இராகம்—மோஹனம்—தாளம்—சாபு.

பல்லவி.

எந்தன்குருஸாமி தந்தவுபதேசம்
விந்தையை யென்னசொல்வேன் (எந்தன்)

அநுபல்லவி.

வந்துகைகாட்டி மதிரவியைப்பூட்டி
சிந்தைநிலைநாட்டி திருவருளையோட்டி
யந்தரமாக வசைந்திடும் பம்பரந்
தந்திரமான தலத்திலிருத்தியே (எந்தன்)

சரணங்கள்.

1. சோதிச்சுடர்மணி மூன்றினிற்றோன்றிய
சுத்தநிட்களங்க மற்றதிற்றங்கிய
வாதிகுருபரன் றன்னையறிவினு
லானந்தமுங்கொண் டமுத்தினேன்வாசியை (எந்தன்)

2. சொல்லாலேயில்லைச் சுகந்தருங்கற்பஞ்
சும்மாயிருத்தியே சூட்சமதாகிடு
மெல்லார்கண்ணிலு மிருக்குமறியார்கள்
வல்லாளகண்ட னருள்வந்தாலெய்திடும் (எந்தன்)

3. எட்டியெட்டாப்பொருளைப்போய்ப்பிடிக்கவு
மெங்குமிருட்கடற் றங்கிமறைக்கவு
முட்டித்ததும்பி முனைபிடித்தேறியே
மின்னொளிவெளியிற் கண்ணொளியும்வீச (எந்தன்)

4. வீசுஞ்சுடரினல் மேலிருளைவெட்டி
மின்னொளியிற்பாய்ந்து தன்னருளையொட்டி
நாசிப்புருவ நடுவணைவீட்டினி
லொட்டியகம்பத்திற் பூட்டைத்திறந்துயான் (எந்தன்)

5. முப்பாழைவிட்டு முதற்சுழிவீட்டினின்
முந்தியென்ன தவப்பயன்செய்தேனோ,
வப்பாற்கொலுமேடை யம்பிகையினுடை
யாதிக்கணபதி வீதியிற்சென்றியான் (எந்தன்)

6. ஐம்பொறிகட்டி செம்பொன்விழிபூட்டி
யண்டசராசர மெண்டிசையும்வெட்டி
சிங்காரமாளிகை சிவசத்திவீட்டினி
லெங்குநாதத்தொனி சங்குமுழங்கிட (எந்தன்)

7. அங்கங்குஞ்சத்திக ளெங்குமறைத்திடத்
தங்குந்தீபவொளி தன்னையுமேற்றிட
வெந்தன்கருவிகள் வெந்துநீறாய்விழ
திங்கட்கதிரோனுங் கங்குல்பகலாக (எந்தன்)

8. காடுகள்செடிக ணாடுகண்மேடுகள்
கண்ணிற்கண்டதெல்லாந் தன்மயமாய்நின்று
நாடிச்செயல்கண்டு வீடுபுகுவென்று
நண்ணியசித்த னொருவனெனைக்கண்டிங் (கெந்தன்)

9. அப்பாற்கடந்திங் கடர்ந்தவனஞ்சென்று
செப்பாநதிப்பிர ளயத்திலேநின்று
தப்பாமற்போகவே ணுமே யென்செய்குவேன்
சாமிகுருநாதன் றாளிணைப்போற்றினேன் (எந்தன்)

10. ஏறுமயிர்ப்பால மேறியேசென்றுமே
யெல்லையிற்றில்லையில் வில்லைவளைத்தியா
னல்லலைநீக்கி யருள்பெறவாக்கி
நல்லவர்நேசத்தி னானெனவேபோக்கி (எந்தன்)

11. பதியினின்றேன் பானருள்கொண்டேன்
பத்திவைராக்கிய நித்தியதீபங்கண்டேன்
செத்திறந்துமனம் வித்துவைக்கண்டியான்
சேர்ந்துபிரமநிஷ்டை சார்ந்திடநம்பினேன். (எந்தன்)

அறுசீர்க் கெழிநெடி லாசிரிய விருத்தம்.

அடுத்திடும் பேர்க ளுக்கு மறிந்துரை சொல்லு மிந்நூல்
கொடுத்திடா தெந்த நூலுங் குறிப்புட னிதை யுற்றுப்பார்
நடுத்தெரு நடன மாடு நாதாந்த வெளியி லேதான்
தடுத்திடா திருந்து வந்தாற் சமாதியின் முத்தி யாமே.

இராகம்—கேதாரம்—தாளம்—சாபு

பல்லவி.

நடுத்தெருவொன்றிருக்குது நீ நமசிவாயமென்றுசொல்லு

அநுபல்லவி.

நடுத்தெருவொன்றிருக்கு ரவிமதியிடைதனிலே
யடுத்துவருவோருக்கு மம்பலவாணன்சபை (நடுத்)

சரணங்கள்.

1. தடுத்திட வேண்டுமேமதி தாயிடமே நீயுஞ்செல்லக்
கொடுத்து வாங்குவோரில்லைக். குவலயந் தன்னிலிப்போ
யெடுத்துக் கொடுப்பேன்யானு மிந்த மதிதனையே (நடுத்)

2. மடைவாயிற் பட்சிபோலிரு வாசியடங்க விடம்புகு
அடையோக மென்றுசில ரட்க்கி மூச்சிலிறந்தார்
நடையிற்காவி பூண்டுமே நாட்டி லலைந்திட்டரே (நடுத்)

3. நித்யபரி பூரணந்தனி னினைவு தட்டும்படியிருநீ
சத்யமுறை வேதமிதோ தங்குவா ரொருவரில்லைப்
பத்தியபாகந்தனிலிருந்தாற் பரஞ்சுட ராவாய்நீயே (நடுத்)

4. நித்திரையைத் தள்ளியேநில்லு நிறைந்தமதி குறைந்துபோகு
முத்திரைக் கம்பத்தினின்று பத்திசெய்துமே பணிந்தாற்
சுத்தின்மதிள் கோபுரமுஞ் சுந்தர நடராஜன்வீதி (நடுத்)

5. வெட்டியெறி சுத்தவாளினல் மெய்சிறந்து கைமுறையா
லெட்டிச் சிதம்பரம்பிடி கிட்டிடுங்கிட்டாதுசொன்னேன்
பட்டிமதியைப் பிடித்தாற் கிட்டி வருகும்மேதில்லை (நடுத்)

6. நாதமணிகீதம் பாடும்பார் நயனவிடைகொள்ளனந்தேடு
மாதம்பத்து நாளுஞ்சென்றாற் போதம்வந்து வாய்க்குங்கண்டாய்
பாதம்பணி தேசிகன்பாற் சாதனை யறிந்துநன்றாய். (நடுத்)

எழுசீர்க் கெழிநெடி லாசிரிய விருத்தம்.

அந்தரங்க மாயுதித் தகத்தினுள்ளே யறிந்தவரைச்
சொல்லுகிறே னுத்தாள் கேளு
சுந்தரமாஞ் சோதிமுனை பிடித்தே யேறிச்
சுழிதிறந் தேகநெருப் பாறுகண்டேன்
அந்தரியாஞ் சிவகாமி ரூபவல்லி யருகிருந்த
மேடையதுஞ் சமாதி கொண்டேன்
சொந்த மெனுந் தில்லையரு ணின்றெனக்குத்
துரியநிலை கடந்துவெளி செல்லுவேனே.

இராகம்—கியாநடா—தாளம்—ரூபகம்

பல்லவி.

இதுதானேசிதம்பரவிதி யித்தனைதவஞ்செய்து பெற்றேனே

அநுபல்லவி.

அதுதானென்றுசொல்லவு மறிவுதானுகிப்போச்சே
யிதுதான்போவாயென்று மென்னையுமழைக்குதே (இது)

சரணங்கள்.

1. கலைதானேகைலாசமாகுதே கருணைநிறைதங்குஞ்சோதியே
மலையோன்மகளேநீயும் வந்துவரங்கொடம்மா
தலையிலிருக்குந்தாயே சங்கரிமனேண்மணியே (இது

2. அம்மையேயிதுபொம்மைபோலாடுதே யானந்தபைரவிமறந் [தாயோ
வம்மைவரிசையுண்டோ வாங்கிக்கொள்ளடியம்மா
வெம்மையைநீதந்துமே பொம்மையைகாட்டியிழு (இது)

3. அறியாயோ யம்பலத்தாடியையநீயே தெரியாதவனின்று [தேடினேனே
வெறிகொண்டுநானின்றேனே வேடிக்கைபார்க்கின்றாயோ
குறியிலிருந்துகண்டு கொடும்பாலமுர்தந்தாயே (இது)

4. கோளடிகுறத்தியானமகளே கொஞ்சத்தபசனென்றுநினைந் [தாயோ
கேளடியென்றன்ருயே கௌனரசமணியே
ஆளடியானுனக்கு மடிமைமணியேதாயே (இது)

5. வாலையேவயதுனக்குக் கொஞ்சமோ மதனைப்பருவ
[மெப்போது முனக்கில்லையோ
சேலைகட்டுமாதரைத் தெருவிலலையவிட்டாய்
மாலைகட்டியேநின்றேன் மதிரவியாலேயான். (இது)

கலித்துறை.

நடத்தும் பெருந் தில்லை யம்பலவாண னடனசபை
மடத்துக் குரிய மடந்தா னிதற்குணீ மதிசுரக்கு
மிடத்துக் குரிய விடமலவோ வின்பந் தங்குநிலை
வடத்துக் குரிய மகனுகிவந்து வணங்கி நில்லே.

இராகம்—ஆனந்தபைரவி—தாளம்—சாபு

பல்லவி.

சிதம்பர வீதியிதுபாராய் தில்லைக்குப்போக
சிதம்பரவீதி யிதுபாராய்

அநுபல்லவி.

சிதம்பரவீதிபாராய் தில்லையின்கோவில்நேராய்
பதம்பெறமதியோகம் பார்த்துக்கண்ணுற்றிராய் (சிதம்)

சரணங்கள்.

1. சந்திரனைவிடலாகா சமயமறி
இந்திரனெளிகண்டவ ரெமனுடவர்க்கில்லையாஞ்
சுந்தரக்குருவினிடந் தோன்றுமுக்குணமறிவாய் (சிதம்)

2. நாளைப்போவது மில்லையே நமனுளாவாய்
வேளையிதுசமயம் வேதமருந்துசொன்னேன்
காளையகப்படாது கண்ணின்மதியேற்றுவாயே (சிதம்)

3. காலைவீசிக்கங்கையது தாண்டி கரையேறிப்போய்
வாலையவள்வந்துநின்று காலைத்தருவாளேபோநீ
சோலையொளிவீசிநின்று சுந்தரஞானப்பூமியாஞ் (சிதம்)

4. இருள்வெடித்துமின்னலொளிகாணு மெங்கும்வெளியா
யருமறைவேதமுணர்ந்தெ மம்பிகைநடனந்தங்கு
குருமுறையென்றேதிவிட்டேன் கூச்சமற்றுப்பாரும்
[பாருஞ் (சிதம்)

5. சாத்திரமுட்டையிதற்கொவ்வாது சந்திரகாந்தம்
க்ஷேத்திரத்துக்குண்ணுழைந்தாற்சாத்திரம்வெளிப்படுமே
நேத்திரத்தாலேற்றிப்பார்த்தால் க்ஷேத்திரமுநீயே।
[யாவாய் (சிதம்)

6. தேருதெரிவதைப்பார்நேரு தெருவீதியுடன்
பாருமுன்னுக்குளறி தேருந்திருக்கூத்துட
னீருநெருப்பாறுடனே நித்தியபரிபூரணனே. (சிதம்)

எழுசீர்க் கெழினெடி லாசிரிய விருத்தம்.

கணக்கறியா மாந்தரிதைக் காணார் தானே
கண்டுகளித் திட்டவர்க்குக் கதைதான்ரொம்ப
இணக்கமுறு மனப்பெருக்கு மெடுத்துச் சொல்வோ
மிதையறியாப் பாவிகட்கு நரகமெய்துங்
குணக்கெடுக்க நாய்வாலைக் கூடுமோ தான்
கூற்றுவனுக் கிரையாகப் போகா மற்றுன்
வணக்கமுறு மகனேநீ வந்து நின்று
மலரடியைப் பணிந்துமிக மதியைக்காணே.

இராகம்—கமாஸ்—தாளம்—ஆதி

பல்லவி.

வாராய்வாராயோ தில்லைக்கு வந்தாலேமோனம் (வாராய்)

அநுபல்லவி.

பாராய்ரவிமதியைப் பார்த்துமுனைவிற்றிருந்து
நீராயோவல்வினையைத் தில்லைப்பராபரத்தில் (வாராய்)

சரணங்கள்.

1. இந்தாத்தெரியுந்தில்லைக் கேமாந்துநீர்போனீர்
சந்தேகமேன்வந்தது சாமியருளுனக்கிருக்கப்
பந்தமதைநீக்கிவிடுமே பரவெளியாகுமே (வாராய்)

2. அப்புமுப்புமறியவே யறிந்துரைப்பே
னுப்புமென்பதும்ரவி யப்புவென்பதும்மதி
மூப்புமுடிந்ததுவா முப்பொருளுமதாம் (வாராய்)

3. அண்ணாக்கையுண்ணாக்கிலே விடவுற்றுநீபாரு
கிண்ணாரவோசைமணி கிண்கணீர்தம்பூருவீணை
வண்ணான்வெளுத்தவெளுப்பாய்மாறுதுகண்டாய் (வாரா)

4. வாலைவயதினிற்றேடு மதனையாவாய்
சேலையுடுத்துமாதர் தெருக்கள்குறுக்கிடாதீர்
கோலமிட்டுநீறுபூசியே குருவடிதேடாய் (வாராய்)

5. பார்த்துவிட்டிடலாகாதே பசியாலினை
சோற்றுத்துருத்தியைநீ தூறுதுதூறச்செய்து
சேற்றினட்டகம்பமலவோ தெரிந்திலையோ (வாராய்)

6. இடைநடுவாகவேயோட யிருத்திமதி
படையில்ராசாளிபூந்த பாவனைபோலவுநீயு
நடையைநிறுத்தி நடுவேநயனம்பாரு. (வாராய்)

அறுசீர்க் கெழிநெடி லாசிரிய விருத்தம்.

அன்பினு லுருகி யானு மருளடி பணிந்து போற்றி
துன்பங்க ளகன்று போகச் சுத்தமாம் வெளியே யோதி
யின்பத்தி லழுந்தி நின்றே யிருளொளி யெல்லாம் போக்கி
வன்பினல் வழக் கறுத்து வாழ்பதி தன்னி னின்றேன்.

இராகம்—கியாநடா—தாளம்—ஆதி

பல்லவி.

சிவயநமவென்று சிந்திக்கபேர்க்குச் சிதம்பரமுக்தியாமே

அநுபல்லவி.

அபயவாதிகளை யடக்கிடவேண்டு
மறிந்துகலைமதியை தெரிந்திடவேண்டு
முபயவாசிதன்னை யுகாத்திலேற்றவேண்டு
முற்றுப்பார்க்கவது யகாமதுவாய்தோன்றுஞ் (சிவய)

சரணங்கள்.

1. தடமுலைமாதரை தள்ளியேவிடுத்து
சஞ்சலத்தின்மனம் புகுதாமற்றடுத்து
சடமதுக்குள்ளே தனியொளிதீபஞ்
சஞ்சலமெல்லா மொழிந்துதேலாபம்

வடமதுபிடித்து மதிமுகந்தொடுத்து
மங்கையபிராமியின் சன்னதிபடுத்து
திடமுளஞானிகள் சென்றதுமிதுவே
சிதம்பரரகசியங் கடந்ததுமதுவே (சிவய)

2. எத்தனைசென்ம மெடுத்தாயோமோச
மிச்சென்மந்தவ்றின லப்பாரீநாசம்
பித்தனுருவெடுத்தாற் பேரின்பவாசம்
பிரட்டுப்பயல்களுக்கு மிகப்பிரயாசங்
கர்த்தனைத்தெரிந்தாலே யதுகைலாசங்
கண்டவர்கண்ணுக்கே யத்விதநேச
மித்தனையுமறந்தா லீலையாங்காச
மீயாதபாவிகட்கு நரககதியேதேசஞ் (சிவய)

3. கதிர்மதிரெண்டுங்கட்டி கண்மதிதன்னிற்சேர்த்து
கலந்துகொள்வது வுபாயங்
காலைத்தூக்கிவெளி மேலைத்தாக்கிநின்று
கணக்கறிந்தவரே சகாயம்
மதிவிளக்கேற்றிய மலரடிபணியாமல்
வனவாசமாய்த்திரிவ தபாயம்
மாறிமாறிக்கலையை சாரிவலமாயோட்ட
வாசிப்பழக்கமிது நேசமாய்கண்டுகொள்ளு. (சிவய)

வெண்பா.

கண்டபொருளைத்தேடிக் காணு திருளறையிற்
சென்றவிடத் தைக்கருதித் தேடாயோ—கண்டபொருள்
தானகியே நின்று தாயார் மடிமீதின்
மானகி யோடியாடு மாம்.

இராகம்—பலஹரி—தாளம்—ஆதி

பல்லவி.

பெருகுநதி யருகில்வந்தேனே பெற்றதாய் பெற்றவனைக்காண

அநுபல்லவி.

வருகும்வினையொடுக்கி மயிர்முனைத்துவாரம்புக்கித்
திருகுகத்தரிவாசற் றிறக்கமதிநிலவாச்சே (பெரு)

சரணங்கள்.

1. கொள்ளையென்றுமதி வெள்ளம்பெருகுதே
கோழை மதியாலே சீதளங்காணுதே
வெள்ளைவெளுத்துமே தில்லையைக்காட்டுதே
மெள்ளமெள்ளக்கையைக் காட்டியிழுக்குதே (பெரு)

2. நித்திரைதட்டி நினைவுமெய்யாச்சுது
சுத்தசமாதியிற் சோருதேயென்மனம்
பத்தியிழுக்கநீ பார்வைதானில்லையோ
பார்க்கபார்க்கக்கண் கூசுதேயென்செய்வேன் (பெரு)

3. ஆணிப்பொன்னம்பல மக்கரைதன்னிலே
சுக்கானைத்திருப்பத் தோணிமுன்னுச்சுது
மாணிக்கத்தாலே வைத்தேயிழைத்ததோர்
வாசலுங்கோபுரம் வைகைகடந்தேனே (பெரு)

4. கதிர்மதிசெண்டையுங் கட்டிக்காவல்வைத்துக்
காலைத்தூக்கிவைத்து மேலேதாக்கிநின்றேன்
மதிபாலமுதத்தை ரவியால்வாங்கியுண்ண
வைகைகடக்க மதியினிடையிற்சென்றேன் (பெரு)

5. தன்னையறிய தாயாருடைய
சன்னதிமண்டபந் தன்னையுங்கண்டேனே
பின்னையறிய வன்னையுடன்போய்
பேசுவமென்றூற் பெருமைதெரியேனே (பெரு)

அறுசீர்க் கெழிலெடி லாசிரிய விருத்தம்.

பெருகுநதி தனைக்கண்டு பேரின்பத் துட்புகுந்து
பேணிப் போற்றிக்
கருவிகளைச் சுட்டறுத்துக் கசடறவே யான்கடலை
கடக்க வேதான்
திருகுமயிர்ப் பாலமதிற் சென்றுகரை யேறியபின்
சிலம்பு கொஞ்சும்
வருகும்வினை தனைவிலக்க மன்றுளா டியபரனை
வணங்கி னேனே.

இராகம்—நாதநாமக்கிரியை—தாளம்—சாபு

பல்லவி.

கரையேறினேனே தில்லைக்குப்போக கரையேறினேனே

அநுபல்லவி.

கரையேறிப்போகவுங் காலைப்படுத்திருக்கு
பரையேறிப்போகயான் பாதைதெரியவில்லை (கரை)

சரணங்கள்.

1. கோபுரமேலே யதிலிருக்குந் தாபரவேலை
தீவிரதத்துடன் செய்திடும்வேலையோ
காவலரில்லையோ கண்ணொளிவீசுதே (கரை)

2. எத்தனைமாற்றோ மாடந்தனிற் சுற்றதுவாத்தோ
பத்தரைமாற்றுள்ள பசும்பொன்னாலமைத்ததோ
முத்தர்கள்கூடியே சித்தர்க்கமைத்ததோ (கரை)

3. தெரியுதேபாரு தில்லைவெளியில் வருகுதேதேரு
வெரியுந்திபவொளியி லிந்தத்தேரடிநின்று
தெரிசித்தாலும்போது மதியில்லாமற்போச்சு (கரை)

4. சித்தர்கள்கூட்ட மெங்கும்பார்த்தாலு முத்தர்களாட்ட
மித்தனையுமறைத்தே யெருதுபடுத்திருக்கு
சுத்தசைதன்யமுள்ள சுந்தரேசன்சபையிற் (கரை)

5. மதியினால்வந்தசின் முத்திரையின்கதி யிதுவாமோ
வீதியில்லாமற்போகுமோ மதியிலகப்பட்டேனே
கதிதருவாய்நின் பதிராசயோகனே. (கரை)

கலித்துறை.

நாடுந் தில்லை யாசுக் குரியநன் னாயகனே
தேடிடுந் தில்லைச் சிவமதி பூசைத் தினமறவேன்
காடுங் கடந்து கரையேறி வந்ததைக் காண்கிலேயோ
வீடு மெனக்குள் ளொளிகாட்டு வித்திட்ட வித்தகனே.

இராகம்—தோடி—தாளம்—ஆதி.

பல்லவி.

இதோ பேரதிசயமுள்ள வொருமாடே
யேறிமுனைபிடித்து மாறிப்போகும்வழியில் (இதோ)

அநுபல்லவி.

இதோவோரதிசய மின்பதுன்பங்கள்போகு
மதோதில்லையருகி லானந்தமாய்நந்திபீடம் (இதோ)

சரணங்கள்.

1. கலைமாணிக்கத்தால்வந்து காலைமடித்துப்படுத்தே
மலைபோலுருவமதா யலையில்லாதவெளியில் (இதோ)

2. சோதிப்பிரகாசத்துட ஞதித்தெருநடுவே
பாதிப்பிறைமுடித்த பரமனருளானந்தமே (இதோ)

3. இந்தவெள்ளையுருவ மெந்தவிடமுமில்லை
யந்தங்காட்டிநிற்குதே சொந்தமதியாலாச்சுதே (இதோ)

4. வாயாற்றழுவுதல்போன் மவுனங்காட்டியேநின்றே
யோயாப்பிறவியெல்லா மூரைவிட்டோட்டும்படி (இதோ)

5. பொங்குமதியமுத மெங்குநாதத்தொனியுஞ்
சங்காசுயம்புவென்று தழுவிமதிதொழுதேன் (இதோ)

6. வெள்ளிமலைபோலுருவம் வேடிக்கைகாட்டுமிடத்தே
மெள்ளநாக்கைமடித்து விழித்துப்பார்க்குதேயென்னை ()

7. துள்ளுமெருதோயிது துஷ்டர்களைவேறுத்துத்
துரியநிலைகடக்கத் தூத்திப்பிடிக்குமோதான் (இதோ)

8. வாவென்றுகூவுமோதான் வாய்பேசாமோன்மிதோ
தாவிப்பிடிக்கவுநான் தனித்தாலகப்படுமோ. (இதோ)

அறுசீர்க் கெழினெடி லாசிரிய விருத்தம்.

இத்தனை பெரிய மாடே யெங்குமே கண்ட தில்லைப்
பித்தனைப் போவ தற்குப் பேரின்ப மாடு தானே
அத்தனே யுனக்கு நானு மன்புள்ள மகனே யானாற்
சுத்தனே வந்து நின்று சுழிமுனை நடனஞ் செய்வாய்.

இராகம்—எதுகுலகாம்போதி—தாளம்—சாபு.

பல்லவி.

இந்தத்தில்லையருகி னந்திவாகனமிதோ
யென்னைமறித்துமே வழிபடுத்தே.

அநுபல்லவி.

வந்ததில்லையேயாமி தென்றனுக்குப்புதிதோ வழிமறித்துமே
யொரு மாடுபடுத்திருக்குதே
தொந்தோந்தொந்தோமென்று தொனிகள்கேட்குதேயப்பாற்
சோதிப்பிரகாசத்துடன் வீதியைமறைக்குதோ (இந்த)

சரணங்கள்.

1. நதியைத்தாண்டிவந்தோமே நமனனுகாமற்போக
நந்திவாகனத்தின லெந்தவிதமறியேன்
பதியிலிருக்குந்தில்லைக் கதிகிடைக்கத்தப்பாதோ
பார்க்கப்பார்க்கச்சற்றே விலகாதோ (இந்த)

2. வாசற்படிதிறந்து கோபுரந்தெரியுதே
வருங்குருவுபதேச மகிமையிதுவோவையா
தேசமெல்லாஞ்சுற்றியுந் தில்லையைப்போலில்லையென்று
சென்றவர்சொன்ன வேதமும்பொய்போமோ (இந்த)

3. விழித்திருக்கவுமேயான் வெளியொளிகாணுதே
மெள்ளமெள்ளநடக்க வழிதெரியுதேயிப்போ
யழுத்திப்பிடிக்கமதி திருத்தமாய்ப்போகுதே
யானந்தத்திலாடிநின்று தாந்தாந்தானென்குதே (இந்த)

4. சங்குமுழங்குந்தொனி யெங்கும்பிரசித்தமாக
சபாமண்டபத்திலே கெண்டாமணியடிக்கப்
பொங்குமதிரவியும் பொருந்தியொன்ருய்க்கூடியே
பொன்னம்பலத்திற்றீபங் காட்டியேநிற்குதே. (இந்த)

அறுசீர்க் கெழிநெடி லாசிரிய விருத்தம்.

வாசியா லுண்ணு மைந்து வைகையுங் கடந்தே யப்பா
லூசியின் முனையி லேறி யுள்ளறைக் குள்ளே சென்றேன்
தேசியைக் கண்டு போற்றத் தில்லை யம்பலத்தி லேதான்
மாசிலா மணியின் வாசல் மலரடி வணங்கி னேனே.

இராகம்—கேதாரகௌளை—தாளம்—ஆதி.

பல்லவி.

சிதம்பர தெரிசனஞ் செய்யாமற்போவேனோ சென்ம
முத்தியில்லாம லிருப்பேனோ (சிதம்)

அநுபல்லவி.

பதம்பெறுமற்போவேனோ பக்குவப்படுத்துமையா
நிதம்பெறவுனைத்தேடி நினைவிலெடுத்தேனே
நெருக்கியேயுள்ளேசுருக்கியே யுனைப்பெருக்கியேநின்றேன்
றில்லைக்குட்புகுந்தேன் வல்லையோவையா (சிதம்)

சரணங்கள்.

1. சொந்தத்தில்லையென்றுமே வந்தேன்வினையைப்போக்கு
மெந்தவிடங்களிலுமிந்த க்ஷேத்திரங்காணேன்
வந்தமதியைப்பிடித்துந் தன்னிடத்தினின்றேன்
வாங்கிவந்தவரத்தைத் தாங்கிக்கொள்ளுமையா
வாட்டுதேமனமூட்டுதே யுனைக்காட்டுதேகண்டேன்
றில்லைக்குட்புகுந்தேன் வல்லையோவையா (சிதம்)

2. மூலப்பதியில்வந்து சோரம்போவதுமுண்டோ
முத்தியென்றுசொல்வது சத்தியமில்லையோ
பாலமதிலேறினேன் பரஞ்சுடரேநீவாவா
பார்க்கமனமுனக்கு மேற்கவில்லையோசொல்லும்
பற்றினேனுனைச்சுற்றினேனீ வெற்றியெனைக்கொளுந்
தில்லைக்குட்புகுந்தேன் வல்லையோவையா (சிதம்)

3. உள்ளேயிருந்தவனீ யோங்காரமானவனீ
யுற்றுப்பார்க்கவொரு வெளியில்வந்தவனுநீ
வெள்ளைவெளுத்திருக்கக் கள்ளமேதுக்குச்செய்தாய்
கொள்ளையென்றுசொல்லியே கொளுத்திவெளிப்படுவேன்
கோலமோயென்னசாலமோ நீர்சிலம்பொழியுமே
தில்லைக்குட்புகுந்தேன் வல்லையோவையா (சிதம்)

கலித்துறை.

நாட்டந் தனித்து நடனத்தி லாடிடு நாயகனே
யாட்டத்தை விட்டே யருடதுதந்து யகம் புகுந்தாற் [லாம்
கூட்டத்தை நீக்கிக் குதிப்பேன் வெளியிலென் கொடுமையெல்
வாட்டத்தி லோடி மதியா விளைக்க வரும்வெளியே.

இராகம்—சகனு—தாளம்—ஆதி.

பல்லவி.

தெரியுதே தில்லைப்பதித்தெரு சிதம்பாரகசிய மிதுதானே.

அநுபல்லவி.

தெரியுதே தில்லைப்பதி யறியாமற் போவேனே
பரியேறியே வந்துநான் பாராம லிருப்பேனே (தெரி)

சரணங்கள்.

1. ஆனந்த மானவெளி யறியப்பிர மானந்தமே
ஞானந் தனிலேவந்த நானில்லை யென்பதானே
வானந் தனிலேறியே வந்த மதியின்கூறே
மோனந் தானேவிது முத்திரையால் வந்ததிதோ (தெரி)

2. எரியுந் தீபவொளியா லிது சிதம்பரமென்று
மரியயனு மேயமைத்த வரண்மனை யிதுவாமோ
கரிமுக னருளினாற் கணபதி கோவிலென்றுஞ்
சரியை கிரியையோகந் தானென்ற ஞானந்தானே (தெரி)

3. சத்ய நித்யவஸ்து சார்ந்த பேருக்குச்சொந்த
நித்ய நிர்விகற்பமுற் பாதியினி னின்றுதே
சித்திசெய்து வந்தோர்க்கு முத்திதருமேதில்லை
வெற்றிபெற்றவர்சொன்ன பத்தி வீணாகப்போமோ (தெரி)

4. வெளியே யொளிபரப்பி விண்ணொளி யென்கண்ணிலேதா
வழியா வரத்தைப்பெற்ற வரனேயென்னன்பினீவா
பழிபவங்கள் விலக்கிப் பரப்பி வெளிவிடுத்தாற்
சுழியான் மூலத்திலேற்றித் தூணோரமாய் நிற்பனே (தெரி)

வெண்பா.

செல்லுவேன் றில்லைச் சிதம்பரநா தன்னருளை
வெல்லுவேன் காலமதி மேலுண்ண—நல்லவகேள்
காட்டிக் கதிரை கருணைமலர் பொழிந்து
ஆட்டி வைத்தேயென்னை யறி.

இராகம்—சங்கராபரணம்—தாளம்—சாபு.

பல்லவி.

இதோதெரியுதுபார் தில்லை யெமனில்லாவிடமிது

அநுபல்லவி.

இதோதெரியுந்தில்லை யித்தனைநாள்சென்றதோ
அதோவிதோவென்று மறிந்தபின்றெரிந்ததே (இதோ)

சரணங்கள்.

1. பாருங்காலைப்பிடித்து நின்றேன்பரதேசியைப்போற்
றீரும்வினையறுக்குஞ் செஞ்சடைக்குஞ்சரதேவா
காருங்கடைக்கண்ணாலே கண்மதியிலாடிநின்றே (இதோ)

2. ஆடுந்திருக்கூத்திலானந்த மறிந்துகண்டவனுநீ
பாடும்பதியோருக்குப் பரமளித்தாயேநீயே
நாடுந்தில்லைநகர்க்கு நாட்டுக்கதிபதியே (இதோ)

3. இடம்வலஞ்சுற்றியதேவா விந்துநிலையிலேவந்த
திடமுளஞானிகட்குத் தீவிரதமளித்தாய்
மடம்புகுந்துமேவந்தேன் மதியைரவியால்வாங்கே(இதோ)

4. நதிபெருகுந்தில்லையருகே நந்தியின்பீடமுங்கண்டேன்
விதியில்லாமல்வந்தேனே மதிவசப்படுத்துமையா
பதியிலழுந்திநின்ற பாப்பிரமரூபனே (இதோ)

5. சுழிதிறந்துமேமுத்தியில்லையோ சுருதிசொல்லுமோசொல்லு
மழியாவரத்தைப்பெற்ற வமராபதிவாசனே
பழிபாவங்களொழியப் பத்திமுத்திநீதாராய் (இதோ)

6. கத்தரிக்கோன்மாறல்விட்டேனே கனகசபையைக்
[கண்டேனே
பத்தனைப்போவதற்குப் பாவந்துலைப்பாய்நீயே
சித்தனெனைச்சார்ந்துமே திருவிளக்கேற்றுவாயே (இதோ)

எழுசீர்க் கெழினெடி லாசிரிய விருத்தம்.

அடிமுடியு நடுவான வம்பலத்தி லாடியதோர்
திருக்கூத்தி னடக்க மெல்லாம்
வடிவுள்ள செகசோதி வட்டத் துள்ளே
வளர்பிறையுந் தேய்பிறையு மலருங்கண்டு
படியேறித் திருவருளைப் பணிந்து போற்றிப்
பரப்பிரமந் தன்னையுமே கண்டுதேறக்
கொடியேறிப் பதிதனிலே போய்ப் புகுந்து
கூற்றுவனு ரற்றவிடங் குடிகொண்டேனே.

இராகம்–பியாக்கடை–தாளம்–சாபு.

பல்லவி.

இந்தத்தில்லைப் பதியைப்போ லெங்குங்கண்டதில்லை.

அநுபல்லவி.

இந்தத் தில்லைப்பதிபோ லெங்குங் கண்டதுமில்லை
யந்தக்கரணமொடுங்கி யறிவினிலுருவதாய்சிறுவாசற்புகுதுதே

சரணங்கள். (இந்த)

1. கலையி லிருக்குஞ்சோதி கண்திறந்து பார்க்கவுமே
பலகலையு மொடுங்கி பதிநிதி மதியினால்
விதிபெருகியோடுதே (இந்த)

2. கண்ணைக் கட்டிமுடியே விண்ணிலாடியே நின்றேன்
பண்ணே பதிநிதியும் பரைநிறை குறையது
நரைதிரையு மாற்றுதே (இந்த)

3. சிறந்ததில்லை யிதுவே திறந்துவெளி காட்டுதே
மறந்து மிருளொளியின் மதியமு துணர்வித்து
வதிபதி யாகுதே (இந்த)

4. ஆடும்பம்பரம் போலே பம்பிகை நடனமது
தேடிப் பிடித்தேன்யானுந் திருவருண் மதியொளி
கதிரொளியுங் காணுதே (இந்த)

5. சித்திரம் போலவுநடை யத்தனரு ளானவுடை
பத்திசெய்து பணிந்தேன் பாருல கினிலிலை
சீர்பெறுஞ் சிதம்பரம் (இந்த)

6. தேடியலைந்தாலுந் தில்லை செகத்திற் கிடைக்குமோதான்
மாடி யறைக்குள்ளேசெல்ல மணியொளி வெளியிலே
தனியொளி தீபமே. (இந்த)

எழுசீர்க் கெழினெடி லாசிரிய விருத்தம்.

எரிகின்ற தீபவொளி யெனைமயக்கி யிதுதில்லை
யென்றுசொல்லி யெனைக்கை காட்டி
பரியேறிக் குறிதெரிந்து பழகிவந்த பாலகனே
படியேறி வருவாய் நீயுந்
திரியமர்த்திப் பரியறுத்துத் தில்லை தாண்டத்
திடமான மோனமிது மேவாயென்று
கரியுரித்தோ னெனக்குவந்து கனவிற் காட்சி
கண்டுகளித் தானந்தக் கதைசொல்வேனே.

இராகம்-முகாரி-தாளம்-சாபு.

பல்லவி.

கண்டுகொண்டு தொண்ட னருள்புரிந்தேனே தில்லைக்
கனகசபாபதி தனை யெனையுநீ நினையே. (கண்டு)

அநுபல்லவி.

கண்டுகொண்டு தெண்டனிட்டேன் கனக சபாபதியே
மண்டல மெல்லாம்போற்று மறைமுத னிறையரு
[ணிதியதிற் பதியே. (கண்டு)

சரணங்கள்.

1. முத்தி யிதுவென்றுமே பத்தி சிறந்துநின்றேன்
முறை தவறுமல்வந்தேன் கரியுரித்தோனின் சேயே

நித்தி யானந்தத்திலே மதியற் றிருந்தவனே
நிறைபரி பூரணமா யிருளொளி வெளியிலே யருளி
விருந்தவனே (கண்டு)

2. நாசியிட மாகவந்த தேசிக சிதம்பரேசா
வாசியி னுருவாய்நின்ற சோதிலிங் கேஸ்வரனே
வீசி வெளியேறியே பாசிபட றொட்டாம
லூசி முனைபிடித்தே வாசியோக நீயமைந்தாய்
மாசிலாமணி நீயே (கண்டு)

3. கொட்டு மேளத்துடனே கூற்றுவன் வருவானுளே
கூக்குரலிட் டழுதாலும் பார்க்கப் போருயோகாலே
கெட்டுப் போகுமுனமே கட்டிடுங் காலைநீதாவா
வெட்டவெளி யேறியே யஷ்டதிக்குமே கடந்து
பட்டணச்சாமி நீவாவா (கண்டு)

4. தொங்தோங்தரி கிடகிடதக துலங்குமத்தள தாளங்கள்போடத்
தங்தோங் கின்னரி தம்பூருவீணை சதங்கை கிண்கிணி சங்குமுழங்க
திங்தோங் திடுங்கடப்பணிமாலை தில்லையி லெங்குமொலிகலித்திடவே
விங்தோ ரொங்தே வந்தேயுருகிய வெளியினி லானந்தத்தைக்
காட்டிநின்றாடுவோனே. (கண்டு)

அறுசீர்க் கெழிநெடி லாசிரிய விருத்தம்.

சங்கையொன் றில்லாத்தில்லை தலைவனே யரனேபோற்றி
பங்கயா சனர்கள்போற்றும் பசுபதி பாச னேயான்
றிங்களை நினைத்துநின்றேன் றினகர னருளைத்தந்து
மங்கள மாகவோதி மதிரவி யிடையில்வையே.

இராகம்-அடாணு-தாளம்-ஆதி.

பல்லவி.

சிதம்பரசபாபதியே தெரிசனைதா சிதம்பர சபாபதியே.

அநுபல்லவி.

சிதம்பர சபாபதி தினகர னுல்வந்த
நிதம்பணியு மன்பர்கள் நினைவிலுரு வானவனே. (சிதம்)

சரணங்கள்.

1. ஆங்கார கோபமடக்கி யைம்புலனைச் சுட்டெரித்துத்
தூங்காச் சுழிமுனையிற் சுத்தவெளி யாக்குவாயே(சிதம்)

2. ஆசைக ளெல்லாமொடுங்க வகத்தி லிருத்துங்கண்ணே
பாசவினை பந்தமெல்லாம் பறந்துநின் னுருவாவேன்(சிதம்)

3. மலைக்குள் ளிருந்தவுன்னை மதியாற் பிடித்திழுத்தேன்
கலைக்குள் வெளியினின்று கைலாச மாகவில்லையோ(சிதம்)

4. எண்சாண் டேகத்தினுள்ளே யிருக்கும் பனங்கள்ளைநீ
யஞ்சாமலே யெடுத்தே யமுதமுண்டிடச்செய்வாய்(சிதம்)

5. மாறிவரும் பாதைகண்டே யேறியகாலைத் தொட்டேனே
கூறிய மதியுங்கண்டு குறைப்பிறையு மாச்சுதே(சிதம்)

6. என்னைப்போ லுருவெடுக்க வெத்தனை நாளோவுனக்கே
யன்னைக்கு ளென்னைவெளி தன்னைப்போலாக்குவாயே(சிதம்)

7. நாதா வுனக்கடிமை நீதா னெனக்குகதி
மாதா பிதாவுநீயே. தோதா வெனக்கமையே(சிதம்)

எழுசீர்க்கெழினெடிலாசிரிய விருத்தம்.

ஆதிதெரு நடுவான வம்பலத்தி லருடில்லை
பதிசெல்லச் சென்றேன் யானுஞ்
சோதிமதி தனிலேறத் தூலசூக்கும சுரூபநிலை
கடந் தப்பாலே சென்றேன்
பாதிபிறை சூடியதோர் பரமன் றானும்
பலவேஷப் பரியாய மிகவேசெய்து
சேதியது சொல்வே னென்றெனை யுணர்த்தித்
தெருவில்விட்டு போனகதை சொல்வேன்கேளே.

பியாக்கு—ஆதிதாளம்—இந்துஸ்தானி.

பல்லவி.

நடராஜபதியே நானுனக்குக் கதியே.

அநுபல்லவி.

திடராஜ யோகத்தைச் செய்தாற் புண்யமில்லையோ
படராமலே பவங்கள் பார்க்க விலகிடாதோ.(நட)

சரணங்கள்.

1. கல்லோ வுன்மனதறியேன் கடையேனுக்குத் தெரியேன்
வல்லோர் நெஞ்சகத்திலே வந்துமெய் காட்டினுயே
யெல்லோர் கண்களினு மிருந்த தறிந்தார்களோ(நட)

2. சித்திரம் போன்றவனே தில்லை வளரய்யனே
முத்திரையைத் தந்துமே நித்திரை யில்லாச்செய்யுமே
பத்தரை மாற்றுவந்து சித்திபெறவே வையுமே(நடஜா)

3. ஆதவனே நிதியே யென்னறிவிலிருக்குஞ் சோதியே
பாதமலர் தொழுதேன் பாராயென் கண்ணொளியே
சிதமதியுந் தோய்ந்து தில்லைக்குள் வந்துநின்றேன்(நடரு)

4. முந்தித் தவமில்லையோ முத்திரையைக் காராயோநீயும்
பிந்திவர நாளில்லை பேசா மோனக்குருவே
சிந்திக்கவு மில்லையோ சிறந்தவெது சொலும்(நடரு)

5. அன்னையேநீ சொன்னையோ வானந்த பைரவியே
முன்னே துதித்தேனம்மா வன்னையே கோபமென்ன
பின்னே வரச்சொன்னது மென்னை மறந்திட்டாயோ (நட)

6. வாசனைக்குரியதாய் வந்தாயே பாச முனக்கில்லையோ
தேசமெல்லாஞ் சுற்றினேன் தில்லையைக் காண்போரில்லை
பாசம் பிடித்துநின்றேன் பார்த்தே யிரங்குவாயே.(நடரு)

வெண்பா.

மந்திரத்துக் கெட்டா மதித்துநின்ற வான்பொருளின்
தந்திரத்தால் வந்த தயாபரனே—யந்திரத்திற்
காற்றூடியாகிக் கலந்துள்ளம் பொங்கிவந்து
கூத்தாடி யாக்கிக் கொடு.

இராகம்—சாவேரி—தாளம்—சாபு.

பல்லவி.

ஐயா யுமக்கடிமை யுமையண்டி வந்தேனென்னை
யாதரிப்பா ராருமில்லை.

அநுபல்லவி.

பொய்யா கையா மெய்யா தபவாசா
தையா ளுடைய சாமி நடேசா. (ஐயா)

சரணங்கள்.

1. உள்ளே யுற்றுநோக்க வொருவொளி யதுகாட்டியே
யுள்ளிருந் தமுத்திட்டாயே
தெள்ளே யமுதே தித்திக்குஞ் செங்கரும்பே
கள்ளே குடித்துநீயுங் கலங்கி மயங்கிட்டாயோ(ஐயா)

2. மதியே யுனக்கிலையோ வந்தமதி யிருந்தாலெனக்குப்
பாகதி கிடைக்குமே
விதியிலையோ வென்றால் விண்ணொளி கண்ணிலேன்வந்தாய்
பதிவே றுனக்குளதோ பரப்பிரம ரூபனே(ஐயா)

3. நாட்டம் வேறே யுனக்கோ திரு நடனக்கூத்
தாடினதாலே மறந்தாயோ
வாட்டமுனக் கேன்வீணே யம்பலவாணனே மெய்யா
தேட்டமில்லாதிடத்திற் றிருந்தச்செய்வாயே கையா(ஐயா)

4. எனக்குள் ளிருந்தவனே யெந்தனை விட்டுப்பிரிந்து
சிந்தனை மறந்திட்டாயோ
தனக்குள் வெளியேநின்று தன்னருளைக் காட்டிநிற்பா
யுனக்கு மெனக்கு மிரு விடுதி வேறுமுளதோ(ஐயா)

5. தோலோ மாமிச நரம்போ விந்தத் தொண்ணூற்றாறு
தத்துவங்கள் கடந்தவ னீயலவோ
மாலோன் வயதுனக்கு மதிரவி யற்றவனே
சாலோ யானுடைந்தாற் சாயுச்சிய மெப்படியுண்டு(ஐயா)

6. தென்றிசையோன் வருவான் வெகுதிருடன் பொல்லாத
வன்முரடன் விடவுமாட்டான்
மன்றிலாடும் பொருளே மாதவ சிரோன்மணியே
கன்றிழந்த பசுவைப்போற் கலங்கித் தவிக்கின்றேனே.(ஐயா)

வெண்பா.

வரமெனக்குத் தந்தாளோ வாய்பேசா மோனஞ்
சரம்பார்த்து மேனோக்கந் தந்தாள்—பரமெனக்குக்
கைதனிலே வாங்கிக் கண்புருவ மத்தியிலே
மெய்தனிலே கட்டிருக்கும் வீடு.

இராகம்—சுருட்டி—தாளம்—ஆதி.

பல்லவி.

கண்டே னானந்தங் கொண்டேன் கனக சபாபதி தனையே.

அநுபல்லவி.

கண்டே னானந்தங் கொண்டேன் மண்டலந் தனிலுமில்லை
தொண்டருக் கன்புதந்த துரைராச யோகனே.(கண்டே)

சரணங்கள்.

1. எட்டுத் திசையுங்காணேன் கட்டிய சிதம்பரம்போற்
கட்டுப்படா வாசியை யொட்டிமுனை சுட்டிநின்று(கண்டே)

2. அருளானந்த மென்று மம்பிகை நடனத்தோடுங்
குருவரானந்தத்தி னின்று கூப்பிட் டழைத்திட்டிதோ (கண்)

3. விந்துவுரு வானநேரம் விட்டகுறையிற் றொட்டேனே
வந்தங்காட்டியே நிற்குதே சொந்தமதியால் வந்துதே(கண்)

4. ஆசைவினைக ளொடுங்கி யந்தரங்கந் தனிற்பாய்ந்தே
யோசை யொடுங்கிவெளி யோங்காரமாகநிற்குதே(கண்டே)

5. திருட ருறவுவேண்டேன் றில்லை யம்பலங்கொண்டேன்
கரடுமுர டில்லாமற் கனகசபை நின்றேனே(கண்டே)

6. கரையி லடங்காதது கங்குல்பக லற்றதுவாய்
திரைகடந்து மப்பாலே திறந்தவெளியிலேதானாய்.(கண்டே)

வெண்பா.

பெற்றாளோ வன்னை யெனைப் பேரின்ப வீடுகட்டி
வைத்தாளோ சோணகிரி வள்ளலே—செத்தாளோ
தூங்காமற் றூங்கிச் சுடரொளியிலே நிறைந்து
வாங்காமல் வாங்கும் வரம்.

இராகம்–மத்யமாவதி–தாளம்–சாபு.

பல்லவி.

இதோ வோர் யந்திரத்தா லெழுந்ததீப
மெந்த னகத்தி லிருந்து சொந்த மதியால் வந்துதே.

அநுபல்லவி.

இதோ யிந்தத்தீபமே யதுவாகியே நிற்குதே
வதோ பதியினின்று விதிபெருகிப் போகுதே.(இதோ)

சரணங்கள்.

1. எங்கு மொருபொருளாய்க் கங்குல்பக லற்றதுவாய்
திங்கள்கதிரோனாய்ப்போய் மங்களம்பாடிநிற்குதே(இதோ)

2. வருந்தி மகனேயென்றே யெழுந்திராமற் போவென்றே
யிருந்து மூலப்பதியி லருந்தும்படி செய்யுதே(இதோ

3. கலையி லுருவாகியே யுலைமெழுகா யுருகி
யலையு மனதைப்பிடித்து விலைப்படுத்திப் போகுதே(இதோ)

4. வாசி வன்னிக்கதிரா யூசிமுனை தன்னினின்று
வீசி வெளியேறியே மாசிலா மணியைப்போலே(இதோ)

5. காலைமாலை தொழுத வேளை தெரியாமலே
நாலைப் பிடித்துமெல்லப் பாலைக் குடிக்குதிப்போ(இதோ)

6. தொந்த மெனக்குமுண்டோ சுட்டிமுனை கிட்டிநின்று
பந்தம் விலகிற்றென்று பார்த்திருநீ பேய்மனமே(இதோ)

திருவிருத்தம்.

மந்திரமிலாததுவாய் மறைமுதலாய்ப் பொருளதுவாய்வழங்குஞ் சோதி, தந்திரமதாயெழுந்தசன்மார்க்க முத்திநெறிதங்கிநின்ற, சுந்திரமாய்ச்சுயம்பதுவாய்த்தூண்டுதற்கு மரிதானசுடராய்த்தோன்றிச், சந்திரபுஷ்கரணியுமாய்ச்சதாநிஷ்டை யாய்நின்றுதங்குங்கோவே. (1)

வட்டமதாய்வளர்மதியாய் மணிவாசலைத்திறந்து வளர்ந்துநின்ற, நிட்டையிலுமுள்ளதுவாய் நின்னடியார்க் குகந்ததுவாய்நிறைவாயெங்கும், பொட்டலிலேநின்றதுவாய்ப் பொருந்தாதபேர்களுக்குப் பொருந்தும்வேதங், கட்டையிலுமுள்ளதுவாய்க் கலந்துருகியொன்றாகக் கலந்தகோவே. (2)

மாணிக்கத்தூணாகி மணிவிளக்காய்வினையகல வாக்குக்கெட்டா, வாணிப்பொன்னம்பலமா யரும்பொருளாயன்பர்பணி யாற்றுந்தேவா, தோணிக்கேயிடைநடுவாய்த் தூயமணிவிளக்காகித் தூண்டாநின்ற, காணிக்கைக்கைப்பொருளாய்க் கங்குல்பகலற்றதுவாய்க்கலந்தகோவே.

நாசியிடைநடுவாய்நடுவணையாய் நயனத்தினுள்வழியாய் நயந்துநின்ற, வூசிமுனைத்துவாரமுமா யோடுதற்கொருகாலா யொளிவாய்த்தோன்றி, தேசிகனுலேசமைந்த தெவிட்டாததெள்ளமுர்தே தேனேபாகே, பாசிபடர்ந்ததுவெல்லாம் பரவெளியாய்த்தான்தோன்ற படைத்தகோவே. (4)

சித்தாகியுருவாகிச் சிதம்பரத்தின்கண்ணுருவாய்த் தேடிக்காண, முத்தாகிப்பவளமுமாய் மூன்றுலகமாய்நிறைந்த முடிவின்பாதம், வித்தாகிமுளைக்கவொரு விளைவுநிலமாவதற்கு வீடுண்டாக்கி, யெத்தாகியெனைவளர்த்துயென்மனையிற் குடியிருக்கயிசைந்தகோவே. (5)

சென்றறிவா யென்மனத்தைச் சேர்த்தமுத்தியேபிடித்துற் றெளிய வோதிக், கண்டறிவாய் காட்சியெந்தன் கண்ணொளியிலேவந்து கலந்துகொண்டு, கொண்டறிவாயே கூத்துக் கூர்முனையிலேதங்கிக் குதிகொண்டேவா, நின்றறிவாயென்னுளத்தில் நினைவுமறந் திருந்திடத்தே நின்றகோவே. (6)

தீபமணிவிளக்கே சித்திரத்தின் கூத்தே சேர்ந்தவின்பக் கனியே தேனேநீயே, பாபவினை தனையகற்றும் பரவெளியே பரவெளியிலே நின்ற பரமயோகா, கோபமிலா வெனையாளாய்க் கொண்டணையே கொடுங்கனலைக் கொடுத்தாள்வாயே, சாபவிமோ சனமெனது சற்குருவே தையலபிராமியுடன் றந்தகோவே. (7)

எட்டாப்பொருளே யெல்லைவெளி நின்றவனே யெனைமறந்துமே யிருக்கவிடமுளதோ, யட்டாங்க யோகமதி லடங்குமறிவுருவே யானந் தப்போரொளியே யறிவுகந்து, கட்டாயங் கட்டிக்கண் புருவமத்தியிலே கலந்துருவ மானால்யான் காண்கின்றேனே, வட்டாரம்போட்டு மணி மேடையுச்சியினில் வாழ்பதியிலேநின்று வளர்ந்தகோவே. (8)

செற்றிறந்தாலும்விடேன் சோரமலுமடியேனீ தெரிந்திலையோ
கற்றிருந்தென்னபலன் கண்ணிருந்தாலுமுனைக் கலந்திடுவேன்
சுற்றிருந்தவர்களொடு சுகமுளதோ சூழுமதியாற் றோன்றுஞ்சுந்தரனே
யற்றிருந்தாலெனக் காண்மாவிலேயுதிக்கு மனந்தகோவே. (9)

நாயேன்குணக்கறியே னாடுதற்கு வூரறியேன் நவிலக்கேளு
பேயேன் பிணக்கறியேன் பேசுதற்கு வாயறியேன் பிதற்றுமென்னை
யோயேனுனையறிய வொருகாலை நீதந்து வுகந்தளித்தாற்
சேயேனுனையாள்வேன் சென்றவிடமெல்லா னின்றகோவே. (10)

திருந்துமனதறியேன் சேவடியைப் போற்றத் திடமறியேன், பொருந்தும்வேதாந்தப் பொருளறியேன் போற்றித்திருவடியி னின்றறியே, னிருந்துமறியேன் யெனைமறந்து யெல்லைவெளியை யான்கண்டுகொண்டேன், வருந்தும்படியழைத்து வாவாவென்றேகூவி வழங்குங்கோவே. (11)

சாற்றியேநின்றறியேன் றனிவெளியிலே செல்லச் சாமறியேன்
மாற்றிப்பிடிக்க மருந்தறியேன் மனமடங்காதுன்னைக் காற்றூலறிந்து
போற்றியறியேன் புனலறியேன் பூரணகும்பத்தினிடம் பூர்த்திசெய்தா
லேற்றியதீபத்தினொளி யிடைவிடா தென்னுளத்தி லிருக்குங்கோவே.

மதியிருந்த விடமறியேன் மன்றுளாடிச்சென்ற மாலறியேன்
நதியிருந்ததுமறியே னல்லவரோடுங்கூடி நடந்தறியேன் [தாற்
விதியிருந்து போராடு மெய்யறியேன் மெய்யறிவிலேயிருந்த கையறிக்
கெதியிருந்திட மெனக்குக் கேவலந்துரியமது கிடைக்குங்கோவே. (13)

மணமிலாகல்லெனக்கு வாய்த்த பரம்பொருளே மணியாட்டித் தீபமொடு வழங்கிநின்ற, குணமிலா நெஞ்சகத்தைக் கூட்டியமுதளிக்குங் கோதிலாமணிமுடியிற் கூச்சமற்று, பிணமதாய்ப் போவதற்குப் பெற்றநாள்போராதோ பிதற்றியலைகின்ற பேயனைநீ, பணமிலாத் தனமதையே பார்த்துமுகம் வீற்றிருக்கப் படையுங்கோவே. (14)

காலைப்பிடித்தறியேன் கடுங்காவலிற்செல்லக் கருத்தறியேன்
கோலைப்பிடித்துக் கொடுங்கனலை மூட்டுதற்குக் குறிப்பறியேன்
நாலைப்பிடித்து நடப்பதற்கு யென்னறிவில் நாடிச்சென்றால்
மாலைப்பொழுதிலொரு மணிவிளக்காய் நின்றுவிளை யாடுங்கோவே. ()

எட்டிரண்டுமுள்ளதுவா யேகப்பெருவெளியா யெங்குந்தானாய்
கட்டுப்படும்படியாய் காணுலுமுள்ளதுவாய்க் கலந்திருந்தும்
நட்டும்பயிரதுவாய் நமனிலையில்லாததுவாய் நாடாயெங்கும்
மட்டுப்படும்படியாய் மதிரவியால்நீவந்து வாய்த்தகோவே. (16)

சாமனிலையறிந்துஞ் சரம்பார்த்து மேனோக்கந் தனிவெளியாய்ச்
சோமனிலையதுவாய்ச் சுந்தரனே குருமூர்த்திச் சுயம்புலிங்கா
காமனிலையறுத்துக் கண்ணொளியிலேநின்று கலந்துகொண்டால்
வாமத்துக்குள்ளிருந்து வந்துவெளி புறப்படுமே மணியேகோவே. (17)

கண்ணின்வழியிற் கலந்திருப்பேன் கடுங்காவலிற்சென் றுணர்ந்திருப்பேன், மண்ணின்வழிநடக்க மறந்திருப்பேன் மாருதமியானமதையறிந்திலையோ, விண்ணின்வழிசென்று மேனோக்கம்பார்வை விழித்திருந்த நாளெல்லாம் வீணாயிற்றென், பொன்னின்மணி மண்டபத்திற் புகுந்தருளக் குடிகொள்ளும் புனிதகோவே. (18)

மடிபிடிப்பேன்வரம்படிப்பேன் வந்துவெளிகடந்துனையே யுணர்ந்திருப்பே, னடிபிடிப்பேனரன்முடிப்பே னகமெனுமோங்காரக் கோட்டைக்குள் படிபிடித்துக், கொடிபிடிப்பேன் கூற்றனெனையணுகாமற் காக்கவுன் கடமையல்லாற் குறைவேறில்லை, முடிபிடிப்பேன்முகம் பார்ப்பேன் முத்தமிட்டுன்கையாலே கட்டியெனைக்காப்பதற்கு முகம் பாராயோ. (19)

தன்னையறியத் தலம்வேறுண்டோ சாரிவலமேனோக்கம் பார்வையுண்டோ, பின்னையொருவிமதியைப்பிடிப்பதுண்டோ பேய்மதியாற் சாதித்தபேருமுண்டோ, சொன்னமொழியொன்றன்றி யிரண்டில்லை காண் சுருதியதற்கொப்பாமோ சொல்லாவில்லை, சன்னல்வழியைத் திறக்கத் தமர்பூட்டுண்டோ தானாகிநின்றதுவே பிரமந்தானே. (20)

மனனினைவுதானுமல்ல மாறிவருங்காலல்ல மதிதானல்ல, றள தனிற்கண்டதல்லக் கருதிப்பார்த்ததுமல்லக் கருத்துமல்ல, சுனைகல வுந்தாண்டியப்பாற் சொர்ணமயமாய்நிறைந்தசோதியல்ல, வினவுமிரு தானுமல்லவீடுமல்ல வெளியதுவாய்நின்றதுவே பிரமந்தானே. (21)

உள்ளுக்குநின்றதல்ல வுற்றுணர்ந்துபார்த்ததல்லவொளிவுமல்ல, தெள்ளமுர்தப்பாலுண்டு நின்றதல்லதிரையேழுந் தானுமல்லசெபங்களல்ல, வள்ளலருட்டில்லைவனம் வந்ததல்லவரம்பெற்று நின்றதல்ல மதியுமல்ல, கள்ளமில்லா நெஞ்சகத்தைக் கருவறுத்துக்கண்டுவெளி கடந்ததுவே பிரமந்தானே. (22)

சாத்திரத்தால்வந்ததல்ல சதுர்முறைவேதங்களல்ல சமயமல்ல, வீற்றிருந்துகார்த்ததல்ல வித்தாகிநின்றதொரு விளைவுமல்ல, சூத்திரத்திலேறிநின்ற சுற்றுசக்கரமுமல்ல சொரூபமல்ல, நேத்திரத்தாற் பார்த்திருந்தநிலையுமல்ல நிரந்தரமாயொன்றாக நின்றதாமே. (23)

விடையசுகந்தனையழித்து வித்தாகிநின்றதொரு விளைவுமல்ல, மடைவாயிற்கொக்கதுபோல் வழிபார்த்துணர்ந்ததல்ல வாசியல்ல, படைமிரட்டியாடுகின்ற பாம்பையுமே கொன்றதல்லப் படிகமல்ல, கடையதுவாயெங்குமொன்றாய்க் கடந்துவெளிசென்றதுவே பிரமந் தானே. (24)

தங்கும்பொருளதுவாய்ச் சதாநிஷ்டையாய்ச்செய்த சமாதியல்ல, திங்களொடுகதிரோனுஞ் சேர்ந்துவொன்றாய் வந்ததல்லத்தினமுமல்ல, வெங்கள்குடியானிருந்த விடமுமல்ல விறையுமல்ல பிறையுமல்ல விருளுமல்ல, கங்குல்பகலற்றதுவாய்க் கலந்துருகியொன்றாகக் கலந்த வாழ்வே. (25)

மோனானந்த மதியோக பூரணதீபம்

ஸம்பூர்ணம்.